
காமமே காதலாகி
இ.தியாகலிங்கம்

காமமே காதலாகி

இ. தியாகலிங்கம்

Kamamaa Kaathalaaki

(A new Novel from Norway)

First Edition

September 2016

ISBN:978-1-326-80433-6

Publication Editor

Thiagalingam Ratnam

Vetlandsveien 117

0686 Oslo

Norway

Pages: 253

என்னுரை

காதலுக்குக் கண்ணில்லை என்பார்கள். காதலுக்குக் கண்மட்டுமல்ல எந்தப் பொறியும் கிடையாது என்கின்ற தரிசனத்தை அன்றாட வாழ்வில் காணமுடியும். காதல் செய்யும் பொழுது மூளையில் ஒருவகை ஹோர்மோன் சுரக்கிறது. அது போதைப் பொருளைவிட மேலாக மனிதரை ஆட்டிப்படைக்கிறது. புரிந்தும் புணர்வை நீக்க முடியாத இயற்கையின் கட்டளை அது. இதை நவீன ஆராய்ச்சிகள் இன்று நிரூபிக்கிறன. இதற்கு நான் ஆராய்ச்சியே தேவையில்லை என்பேன். அன்றாட வாழ்வில் நாம் காணும் கல்வெட்டுப் பதிவுகள் அவை. காதல் பித்து ஏறிவிட்டால் அன்றாட வாழ்வில் கற்பனை செய்யவே பயப்படும் செயல்கள்கூடச் செயல் ஆகிவிடும். காதலுக்காக, காமத்திற்காக, கொலைகள் நடப்பதுகூட ஒன்றும் புதுமையில்லை. சமுதாய வரம்புகள், சட்டங்கள், என்பன பற்றிய திரைகள் காதல் போதையில் தொலைந்து போய்விடும். காதல் பித்தாக்குவது மட்டுமல்ல பேதைமையும் அடையச் செய்கிறது. அறிவாளிகூட காதல் வசப்படும் போது மூடனைப் போல அலங்கோலப்படுகிறான். அது அவனல்ல. அவன் போதை. இதற்கு வயது, கௌரவம், பால், என்கின்ற பிரிவுகள் தடையாக நிற்பதில்லை.

சாப்பிட முன்பும் போதை ஏற்றிக் கொள்ளலாம், சாப்பிட்ட பின்பும் போதை ஏற்றிக் கொள்ளலாம் என்பது போன்றதே காமமாகும். காதல் என்கின்ற இணைவு காமத்தை தீர்த்து, சந்ததி பெருக்கி, இருப்பை உறுதிப்படுத்தும் இயற்கை மனிதனுக்குக் கொடுத்த பணியாகும். அதில் சிலருக்குச் சிறிய சாந்தியும் கிட்டுவது உண்டு. காதல் வந்தும் காமம் கழியலாம். காமத்திற்காகப் புறப்பட்டும் காதல் வயப்படலாம். இயற்கையின் ஒரே குறிக்கோள் சந்ததி பெருக்கல். அதைக் காக்க ஆணுக்கும் பெண்ணுக்குமான இயற்கையின் அழகான சரசங்களில் இருந்து அந்த ஜீவராசிகள் தப்ப முடிவதில்லை.

காதலில் இருவர் சம்பந்தப்பட்டாலே பலவித இரணங்களைத் தோற்றுவிக்கும். அதில் மூன்றாவது நபர் அல்லது ஒரு குடும்பம் சம்பந்தப்பட்டால் அங்கு நரகம் ஒன்று உருவாகும். சந்ததி பெருக்கல் சில வேளை சந்ததிகளையும் சிதைக்கும்.

காதல் அதற்காக அனைத்தையும் இழக்கச் சொல்லும். அனைத்தையும் இழந்தும் போதையில் அதைப் பற்றித் தெய்வீகம் என்கின்ற கற்பனை வளரும். புறவுலகு மறுத்துத் தம்முலகு ஒன்று சமைக்க வைக்கும். அதுதான் உண்மை உலகென்றே அது வலுவாக நம்ப வைக்கும். வரம்புமுறையற்று வரும் காதல் அனேக ஏமாற்றங்களைத் தருவதாகவும் இருக்கும்.

காதலே மூச்சு என்கின்ற கற்பனையில் மிதக்கும் ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்கு அந்தக் காதலே பொய், அவன் அல்லது அவள் காதலித்தவர் பொய்யின் உருவம் என்பது தெரிகிறபோது அவர்கள் மனதில் தோன்றும் உணர்வுகளுக்கு இந்தப் பிரபஞ்சத்தின் எல்லையைத் தாண்டியும் சொற் கொண்டுவர முடியாது.

காதல் போதை. அதுவே தோல்வி அடையும்போது அவனைத் தற்கொலை செய்யத் துண்டும் காலனின் பாசக்கயிறாகிறது. காதல் வயப்படாதவனுக்கு இவன் ஏன் தற்கொலை செய்தான் என்றிருக்கும். அந்தப் போதையில் அகப்பட்டவனுக்கு இனி ஏன் வாழ்வான் என்றிருக்கும். பலர் காதல் கைகூடாத போது ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பதற்கு இந்தக் கதாநாயகனோடு பயணிக்கும்போது ஓரளவு புரிதல் உண்டாகும். அதற்காக அதுவே வழியென்று யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. காதலின் காயத்திற்கும் காலம் மருந்து தரும்.

காதல், ஏமாற்று, துரோகம், கோபம், துக்கம், இயலாமை, அதீத நம்பிக்கை என்கின்ற உணர்ச்சிகளில் கொந்தளித்து, தனது வாழ்வை அழித்துக் கொண்ட ஒருவனை இந்த நாவலில் நீங்கள் பார்க்கலாம். மீதி உங்கள் சுவைப்பிற்கு.

என் இலக்கியப் பயணத்திற்கு உலகம் எங்கிருந்தும் ஆதரவு தரும் வாசகர்களாகிய உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

அன்புடன்

இ.தியாகலிங்கம்

http://www.karainagaran.com

ratnamt67@gmail.com

1

சீழ் பிடித்து மனைந்த புண்ணாக மனதின் காயம் ஆறாது வலித்தது. இனி அதற்கு மீட்சி இல்லை என்பது அன்னாருக்குப் புரிந்தது. அனாதையாகத் தெருவில் நிற்பதான உணர்வு அவனை உயிரோடு மலைப்பாம்பாக விழுங்க முயன்றது. இன்று போல் சில வருடங்களுக்கு முன்பு தெருவில் இப்படி நின்றிருந்தால் அவனை இராணுவம் அள்ளிப் போயிருக்கும். அது வரலாறாக, இவன் வரலாறு தொடங்கியது. இப்படியும் நடக்கும் என்கின்ற கற்பனை கவிதைக்கண்ணனின் கவிதைகளில்கூட வந்தது கிடையாது. அவள் அமுதாய் இருந்து, நஞ்சாய் மாறிய உண்மை நினைவுகளாக இன்னும் மனதை அனலாய் எரிக்கிறது. புண்ணான மனதை வேதனை இரும்புக் கை கொண்டு மீண்டும் மீண்டும் வக்கிரமாகப் பிசைகிறது. அந்த வேதனை இதயத்தை மூர்க்கமாக இறுக்கி நிறுத்துவதாய் நெஞ்சை அடைக்கிறது.

அவனுக்கு மூளை குழம்பிப் பைத்தியம் பிடித்தது. நம்ப முடியாதது இன்று நடந்தேறியதை உள்ளம் ஏற்க மறுத்துத் தவித்தது. 'இதற்குப் பின்பும் அவள் உன்னை நேசிப்பதாய் நினைக்கிறாயா?' என அவனது மனது அவனையே குறுக்கு விசாரணை செய்தது. ஆசை அந்த விசாரணையைக் கிடப்பில் போடு என்றது. அவனது உள்ளத்தின் உளைச்சல் ஒரு பக்கம், இப்போது அனாதையாகத் தெருவில் நிற்பது இன்னொரு பக்கமாக அவனை ஆறா வெறுப்பு வீறு கொண்ட கறையானாக அரித்தது.

பச்சைநாடு விடுதிக்குக் காலை வருவேன் என்று கவிதைக்கண்ணன் அலைபேசியில் ஏற்கனவே கூறியிருந்தான். மறந்து போய்விட்டார்கள் போலும். ஞாயிற்றுக்கிழமை என்பதால் இறுக்கிப் போர்த்துக் கொண்டு படுக்கிறார்கள் போலும். கவிதைக்கண்ணன் படலைக்கு வெளியே தனது 'Suitcase' பெட்டியோடு நின்றான். படலையில் இருந்த பூட்டுக் கொழுவும் கொளுவியால் நன்றாகச் சத்தம் செய்து பார்த்துவிட்டான். எந்த அசைவும் உள்ளே தெரியவில்லை. அலைபேசியை எடுத்து அழைப்பை ஏற்படுத்திப் பார்த்தான். உள்ளே தொலை பேசி ஒலிக்கிறது. மனிதர்கள் எங்கோ தொலைந்து போனார்கள். எவரும் வரவில்லை. எந்தப் பிராணியும் அசையவில்லை. நாட்டிற்கே அடிக்கடி பழக்கப்பட்ட ஊரடங்குச் சட்டமான அமைதி உள்ளே. அது முடிவில்லாது நீடித்தது.

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையில் ஓடும் பேருந்துகள் தெருவில் நிற்கும் எருமை மாட்டிற்கு மேல் ஏற்றாமல் இருந்தால் பாதைகள் திருத்தத் திருத்த தமது பயண நேரத்தை சுருக்கிக் கொள்கின்றன. நான்கரை மணிக்கு அவர்கள் அவனை வம்பலப்பிட்டியில் இறக்கி விட்டார்கள். கவிதைக்கண்ணன் அந்த விடுதிக்கு முன்பு ஆதவன் விழித்து அழுமூஞ்சிகளை எழுப்பும் வரையும் கால் கடுக்கக் காத்து நின்றான்.

உள்ளே இருந்து யாரும் வரவில்லை. நேரத்திற்கும் எமது இயக்கத்திற்கும் சம்பந்தம் உண்டு. இயக்கம் அற்று இருக்கும் போது நேரமும் அசையாத தோற்றம் பெறுவதுண்டு. நினைவுகள் அவனை மூச்சு எடுக்க விடாது கொன்றன. கொல்கின்றன. கொல்லும். காலிரோட்டில் சில ஆட்கள் சிங்களத்தில் ஏதோ கதைத்த வண்ணம் நின்றார்கள். கவிதைக்கண்ணனுக்குத் தான் அறியாச் சிங்களம் தன் பிடிரிக்குச் சேதம் என்கின்ற தமிழ் மட்டும்தான் தெரியும்.

கவிதைக்கண்ணனுக்குக் கோபம் வந்தது. அழுமூஞ்சிகள் என்று சபித்தவன் அருகில் இருந்த விடுதிக்குச் சென்று வாடகைக்கு அறை கிடைக்குமா என்று கேட்டான். அவர்களிடம் அறை இல்லை என்றார்கள். 'பாவிகள் போகும் இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்' என்கின்ற சலிப்போடு மீண்டும் பச்சைநாடு விடுதிக்கு முன் வந்து ஒற்றைக் காலைத் தூக்கித் தவம் செய்யத் தொடங்கினான்.

காலிரோட்டில் பேருந்துகள் சத்தமாக இரைந்து, கரியாகப் புகைவிட்டு, காற்றை அசுத்தம் செய்து போயின. அந்தப் பேருந்துகளில் பயணிகள் நிறைய இருந்தார்கள். இந்த அழுமூஞ்சிகளுக்கு மாத்திரம் இன்னும் விடியவில்லை என்கின்ற சலிப்பு கவிதைக்கண்ணனை வாட்டியது.

அவள் இப்படி மாறுவாள் என்பதோ, அல்லது அவளே பொய்மை என்பதோ கற்பனைக்கும் எட்டாத கற்பனையாகக் கவிதைக்கண்ணனை மலைக்க வைத்தன. காமத்தின் வழி தானா அல்லது அவளா? அவன் கரைந்த சித்தம் மேலும் கரைந்தது. மனதெல்லாம் வலி விசமாய்ப் பரவியது. அவனுக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. போன முறை இதே விடுதிக்கு வந்தபோது அவள் கவிதைக்கண்ணனோடு வந்தாள். பேருந்தில் வரும்போதே சாதுவான உரசல். கவிதைக்கண்ணன் முருகண்டியில் இறங்கி வெளியே போய்விட்டு வரும்போது குறும் தகவல் பார்த்தாள். அவனைக் கண்டவுடன் அவசரமாய் அதை மறைத்தாள். அலைபேசியைத் தனது கைப்பையில் ஒரு அவசரத்தோடு திணித்தாள். கவிதைக்கண்ணனைப் பார்த்து சங்கடமாய் விழித்தாள். கவிதைக்கண்ணனுக்கு அப்போது ஒன்றும் புரியவில்லை. தன்னைக் கண்டவுடன்

எதற்காக அதை மறைக்க வேண்டும்? தாலிகட்டித் தாம்பத்தியம் நடத்திய பின்பு மறைக்க வேண்டிய செய்திகள் அவள் அலைபேசியில் வருமா? பிடிக்காததைப் பிடித்தவர்கள் செய்கின்ற போது மனது நெருப்பில் விழுந்த புழுவாகத் துடிக்கிறது. அதனால் ஏற்பட்ட வேதனை, கோப அக்கினியாய் மனதில் கனன்றது. ‘தாடி’ என்று அதிகாரமாக அதைப் பறித்துப் பார்த்திருக்க வேண்டும். கவிதைக்கண்ணன் மனிதப் பண்பை மேன்மையாக நேசித்தான். நம்பிக்கைத் துரோகம் அதில் இருக்கும் என்று அவன் அப்போது கனவிலும் நினைக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு வந்த பேருந்தில் முன் ஆசனத்தில் ஒரு இளைஞன் இருந்தான். அந்த இருக்கையின் மேலால் அவள் தனது கையைப் போட்டிருந்தாள். அந்தக் கைகள் வளைந்து அவன் தலையில் அளைவது போலத் தொட்டும் தொடாமலும் தொங்கியது. கைகளை அவள் அப்படி வைத்திருப்பதைக் கவிதைக்கண்ணன் பார்த்த வண்ணம் வந்தான். கையை எடு என்று சொல்ல வேண்டும் போல் அவனுக்குப் பற்றிக்கொண்டு வந்தது. அவள் தனக்கே உரியவள். தூசிகூட அவளை உராய்வதோ, அல்லது அவள் தூசியை உராய்வதோ அவனுக்குப் பிடிக்காது. அப்படிச் சொல்லுவது அநாகரிகமாக, சந்தேகமாகப் பார்க்கப்படும் என்பது அவன் பயம். அதுவும் ஆட்களுக்குள் அப்படிச் சொல்வதைக் கவிதைக்கண்ணன் விரும்பவில்லை. அவனுக்கு அவள் அப்படிச் செய்தது சுத்தமாகப் பிடிக்கவில்லை. பேருந்தால் இறங்கி இதே விடுதிக்குக் காலிரோட்டில் இருவரும் நடந்து வந்த நேரம். கவிதைக்கண்ணனின் ஒரு மாத விசா முடிந்து அதைப் புதுப்பிக்க கொழும்புக்கு வந்த அலுவல். கவிதை கண்ணனுக்கு ஆத்திரம் பொங்கியது. இதுவரை மனதில் அடக்கி வைத்திருந்த எண்ணங்கள் எல்லாம் திடீரென வெளியே வந்திற்று.

‘உனக்கு முன்சீற்றில ஆம்பிளை இருந்தது தெரியேல்லையே? அவன்ர தலையிக்க குடைஞ்சு கொண்டு இருக்கிறா?’ என்று கோபமாகக் கத்தினான்.

‘அது பெம்பிளை மாதிரித் தெரிஞ்சுதப்பா.’ என்று அவள் சொன்னாள். கவிதைக்கண்ணனால் அந்தளவு மட்டமாக அவளை நினைக்க முடியவில்லை. அவள் பொய் சொல்வதாகக்கூட அவனால் நிதானிக்க முடியவில்லை.

‘உனக்குக் கண் என்ன பெட்டையே?’

‘இப்பிடிக் கதைச்சியள் எண்டா நான் திரும்பிப் போயிடுவன்.’ என்றாள் அவள்.

‘ஓ இவ திரும்பிப் போனா நான் செத்துப் போயிடுவன். போ… நான் இப்பிடியே நோர்வேக்குப் போறன். பெட்டியும் வேண்டாம், நீயும் வேண்டாம். நீ எங்கையெண்டாலும் போய்ச் சேர்.’ என்று கோபத்தில் கவிதைக்கண்ணன் கத்திவிட்டு எட்டி நடந்தான். அவள்

‘இந்தாங்க… இதைக் கொண்டு போங்க.’ என்று அவனைப் பார்த்துச் சத்தமாகக் கூறினாள். கவிதைக்கண்ணன் நின்றான். அது என்ன என்று திரும்பிப் பார்த்தான். கையில் தண்ணிப் போத்தல் வைத்திருந்தாள்.

‘ஓ உது பெரிய முதிசகம் தானே? உது இல்லாட்டி என்ர சொத்தெல்லாம் அழிஞ்சு போயிடும். கொண்டு போய்ப் பெட்டியில பூட்டிவைக்கக் கொண்டா அதை.’

என்று கூறிய கவிதைக்கண்ணன் அவள் பின்தொடர்ந்து வருவதை எதிர்பார்க்காத தோரணையில் நடந்தான். இடையில் அவள் பின்னே வராது வேறு எங்காவது சென்றுவிட்டால் என்கின்ற நடுக்கம் உண்டானது. ‘ஒற்றை ரோட்டு, எதுவும் செய்யும்.’ என்கின்ற பயம் அவனிடம் தலைகாட்டியது. திரும்பிச் சாதுவாகப் பார்த்தான். அவள் இடைவெளி விட்டு அவன் பின்னே வந்தாள். கவிதைக்கண்ணன் அந்த உசாரில் இன்னும் எட்டி நடந்தான்.

அன்று வரும் போது விடிந்து விட்டது. விடுதி திறந்து இருந்தது. இருவரும் பதிவு செய்துவிட்டு அறைக்குப் போனார்கள். பதிவு செய்யும் போது ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை. பதிவு செய்த பின்பு அறைக்குச் சென்றார்கள். அறைக் கதவு சாத்தியதும் கட்டிலில் எதிர்ப்பக்கம் பார்த்த வண்ணம் அவள் படுத்தாள். அவள் விசும்புவது கவிதைக்கண்ணனுக்குக் கேட்டது. அவனால் அவள் விசும்புவதைத் தாங்க முடியவில்லை. அவன் தானும் கட்டிலில் படுத்தான். மெதுவாக அவளைப் பின்பக்கமாக அணைத்தான்.

‘சொறி செல்லம். கோவத்தில அப்பிடி பேசிப்போட்டன். சொறி செல்லம்.’ எனக் கெஞ்சிய வண்ணம் அவளைத் தன்னை நோக்கித் திருப்பினான். அவளுக்கு அது அப்போது தேவைப்பட்டது. அந்த அணைப்பும் ஆறுதலும் அமைதி தந்தது. அவனும் அவளும் ஓருடல் ஆகினர். ஆசைக் காதலர்களின் ஆனந்தச் சங்கமம் அரங்கேறி, ஆடி அடங்கியது. சாந்தம் நிலவியதாக கவிதைக்கண்ணன் எண்ணினான். இல்லாதது இருப்பதான அவன் கண்மூடித்தனமான கற்பனை அது.

இன்று அணைப்பதற்கோ அல்லது சினந்து கொள்வதற்கோ பக்கத்தில் அவள் இல்லை. பக்கமல்ல தூரத்தில் நின்று பார்ப்பதற்கே அவள் வரமுடியாது என்றுவிட்டாள். கடவுளின் வரத்தினாலேயே கவிதைக்கண்ணன் அவளுக்குக் கிடைத்தான் என்றவள் இன்று கடவுள் இருக்கிறாரா என்று கேட்கிறாள். கவிதைக்கண்ணனால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. கோயிலில் சந்திப்பதைக்கூட சந்தேகிக்கும் மனிதர்கள் உண்டா? கன்னி கழியாத இருவருக்கான முதல் சந்திப்பா இது? தாலிகட்டி தாம்பத்தியம் நடத்தியவனைக் கோயிலில் சந்திக்கக் கூடாது என்கின்ற மனிதர்களும் உண்டா? கடவுள் சந்நிதானத்திற்கே கணவனைச் சந்திக்க வரமாட்டாள் என்கின்ற போது கவிதைக்கண்ணனுக்கு கவிதை வரவில்லை. முருகா என்று நா உச்சரிக்க ஆற்றாமையில் கண்ணீர் வந்தது. ஒரு காலத்தில் கல் என்ற அவன் இன்று சொல் இன்றி உருகினான். கந்தனை எண்ணிக் கரைந்தான். ஆலயத்தில் நின்று முருகா முருகா என்று மனதில் ஜெபித்தான். கணவனுக்குப் பணிவிடை செய்வதே முதன்மையானது. அதை மாமுனிவராலும் வெல்ல முடியாது என்கின்ற கதையின் சுருக்கம் கொக்கென்று என்னையும் நினைத்தாயா என்கின்ற பதத்தில் அடங்கிக் கிடக்கிறது. அந்தப் பெண்ணின் பதி பக்தி எங்கே? இந்தப் பெண்ணின் மதி யுக்தி எங்கே? புரியாத புதிரான இவளோடு நீ ஏன் இணைந்தாய்? புணர்ந்தாய்? வாழ்ந்தாய்? இதை விதி என்பதா? அல்லது உன் வினை என்பதா? எனக் கவிதைக்கண்ணன் எண்ணி எண்ணிக் கலங்கினான்.

கவிதைக்கண்ணனுக்கு எதுவும் புரியவில்லை. நேரம் போகவில்லை. படலை திறக்கவில்லை. அவள் எதை நம்பினாள்? கட்டிய தாலியை நம்பினாளா? கணவனின் சொல்லை நம்பினாளா? குங்குமப் பொட்டை நம்பினாளா? எதையும் நம்பாதவளை நீ ஏன் நம்பினாய்? என்கின்ற கேள்வி கவிதைக்கண்ணனிடம் முதன் முதல் பிறந்தது. 'அட முருகா' அவன் அரற்றினான்.

கவிதைக்கண்ணன் முன்பு கடும் நாத்திகன். கவிதைக்கண்ணன் காதலை நம்பாதவன். இவளைப் பார்த்த பின்பு அவன் கொள்கைகள் தலைகீழாக மாறின. காதலை நம்பினான். கடவுளை நம்பினான். காதல் நிறைவேற வேண்டும் என்பதற்காகக் கடவுளுக்கு நேர்த்தி வைத்தான். முருகன்கூடக் கவிதைக்கண்ணனின் காதலை நிறைவேற்றவில்லை. காமத்தின் மாயை அறுக்காதே, நீ அற்ப மனிதன் என்று திருப்பி அனுப்பிவிட்டான். அவள் கோயிலுக்கே சந்திக்க வரமுடியாது என்ற போது இவன் காதல் காயப்பட்டது. இரத்தம் சிந்தி இரண வேதனைப்பட்டது. தோல்விதான். நம்பிக்கைத் துரோகம்தான். தாலிகட்டிய எவனும் எதிர்பார்க்காத அவமானம்தான். இருந்தும் அவள் ஒரு நாள் வருவாள். இந்த உறவு நீடிக்கும் என்கின்ற அழியாத நம்பிக்கை. அதனால் அமைதி அடைந்த அவன் மனது.

பச்சைநாடு விடுதிக்குள் அசைவுகள் தெரிந்தன. யாரோ படலையை நோக்கி வந்தார்கள். சோம்பேறிகளுக்கும் விடிவதுண்டு. நன்றாக விடிந்துதான் விட்டது.

2

கவிதைக்கண்ணன் அந்த விடுதியின் முப்பத்தியோராம் எண் அறைக்குள் புகுந்தான். இரண்டு கட்டில்கள் உள்ள அறையது. போன முறை வந்த போது ஈருடல் ஓருடல் ஆகாத போது, அவளுக்கு ஒரு கட்டில், அவனுக்கு ஒரு கட்டில். இம்முறை ஈருடல் கிடையாது. ஓருடல் ஓர் உடலாகவே ஒதுங்கிக் கிடக்க வேண்டியதுதான். இம்முறை அவனுக்கே இரண்டு கட்டிலும் உரித்தாகிற்று. என்றாலும் ஒரு கட்டிலை அனாதையாக விட்டான். அதைப் பார்த்தால் அவளைப் பார்ப்பது போல் இருந்தது. அவள் இல்லாத தனிமை அவனை நரம் புசிக்கும் அரக்கனாய் உயிரோடு உண்டது. அது மனதை அறுத்து நினைவைக் குருதியாக ஓடவிட்டது. அவள் அவன் அருகில் இருந்திருக்க வேண்டும். எல்லாமே மாறியதாக இரும்பாக முகத்தை வைத்துக்கொண்டாள். கவிதைக்கண்ணன் உடுப்புகளைக் களைந்தான். சாறத்தைக் கட்டினான். மின்விசிறியை இயக்கிவிட்டு அதன் தழுவலில் படுத்தான். அவள் தழுவி இருக்க வேண்டும். ஆலிங்கனமாகி அதன் களைப்பில் உறங்கி இருக்க வேண்டும். அதை நினைக்க அவன் கண்களில் இருந்து வைர முத்துக்கள் இமை விட்டுப் பிரிந்தன. அவன் பேருக்காக அவளைக் காதலிக்கவில்லை. அவளது ஒரு ரோமம் உதிர்ந்தாலும் தான் வேதனையால் துடிப்பேன் என்கின்ற சத்தியத்தோடு காதலித்தான். அவன் துடித்தான். அவள் கவிதைக்கண்ணன் நடிப்பதாய் நினைத்தாள். இன்று எல்லாமே அர்த்தமற்றதான ஒரு வெறுமை. என்றாலும் மாமியின் அந்த வார்த்தைகளை நம்பி அவன் திரும்பி வந்து விட்டான். மாமியே ஒரு மாயம் என்பதுகூட அவனுக்கு விளங்கவில்லை. விளக்கமில்லை.

மின்விசிறி நின்றுவிடாத இதயம் போல் ஓய்ந்து விடாது சுழன்றது. நினைவுகளும் அப்படியே. கவிதைக்கண்ணன் கவிதையில் பாண்டித்தியம் பெற்று வாழ்க்கையில் கோட்டைவிட்டான். புலன்கள் அவன்

வசப்படாத புரவியாகத் திமிறி ஓடியது. காமம் என்கின்ற பெண்ணாசை. பொல்லாத அந்த இச்சையை அவனால் வெல்ல முடியாது போயிற்று. சிறுவயதில் இருந்தே அவனுக்குப் பெண்ணின் மீது மோகம்தான். அந்த ஜீவராசிகளின், அழகு, மென்மை, வாசம், நளினம், பேச்சு, ஜாடை என்பதாக… மன்மதக் கணைகளிடம் மண்டியிட்ட வாழ்வு. மனதின் கோணலா அல்லது இயற்கையின் சாபமா என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. கூச்ச சுபாவம் அவன் மனதெல்லாம் மண்டிக்கிடந்தது. பெண்களை நேரே பார்த்துக் கதைக்கும் துணிவு அவனிடம் இருந்ததில்லை. அதற்கு எதிராகக் கற்பனையில் அவன் காமம் கரையில்லாது பரந்து விரியும். தனக்கு விருப்பமான பெண்ணோடு காதலித்துக் குடும்பம் நடத்தும்.

சிறுவயதில் பெண்களோடு ஒளித்துப் பிடித்து விளையாடுவான். அப்போது அபாரத் துணிவு வந்துவிடும். ஒளித்துப் பிடித்து விளையாடும் பொழுது தன்னோடு ஒளிக்கும் பெண்ணை ஆலிங்கனம் செய்ய முயன்றிருக்கிறான். சிலவேளை அது வாய்த்தது உண்டு. சிலவேளை ஆணைவிடப் பெண் முதிர்ந்தவள் என்பதை அவன் அனுபவித்தது உண்டு. அடங்காத மோகம். ஏன் இந்த மோகம் என்பது அவனுக்குப் புரியவில்லை. எங்கே என்ன நடந்ததால் வந்த வினை அது என்பது அவிழாத முடிச்சாக.

விளையாடும் போது ஆலிங்கனம் செய்த காலம் ஒன்று. அதைவிட மேலாக கொய்யாப் பற்றைகளுக்குள் கூட்டிச்சென்ற காலமும் உண்டு. உமாவை இன்னும் அவனுக்கு ஞாபகம் உண்டு. அவளோடு கொய்யாப்பற்றைக்குள் சல்லாபித்ததை இன்றும் அவனால் ஞாபகப்படுத்த முடியும். அது பூரணமற்ற உறவு. என்றாலும் மெட்டுப் பூவாகப் போகும் வேதனை அதில். அவள் மாம்பழ மேனியின் வனப்பை அணைத்து, முகர்ந்து அனுபவித்த நினைவு என்றும் சாகாவரம் பெற்றதாய். உமா… அவள் வாசம்… அவள் நினைவு… அவை முற்றுப்பெறாத உறவு. அணைப்போடு அல்லது உரசலோடு அடங்கிவிட்ட சல்லாபம். களங்கமற்ற காமப் பயில்வு. அந்த முற்றுப்பெறாத உறவுகள் முழுமையான உடலுறவோடு முற்றுப் பெற்றுவிடும் என்று கவிதைக்கண்ணன் எண்ணினான். காலத்தை வீணடிக்காது கலவி இன்பம் கண்டு, மானிட முக்தி பெறவேண்டும் என்று துடித்தான். ஊரோடு ஒத்து ஓடுபவன் அல்ல கவிதைக்கண்ணன். தன்வழி தனிவழி என்று துணிந்து நிற்பவன். அதில் வரும் மான அவமானங்களைப் பற்றி அவன் கவலைப்பட்டதில்லை. ஞானியா? சுயநலமா? இந்தக் கணத்தில் உள்ள வாழ்வுதான் நிஜம் என்பதைப் புரிந்துகொண்டதின் தெளிவா? அவன் தான் நினைத்ததைச் செய்ததுண்டு. தனியனாய் வாழ்ந்ததுண்டு.

அவன் விரைவாகத் திருமணம் செய்தான். காமம் அடங்கும் வரை கலவி செய்து பார்த்தான். கலவி நடந்தது. காமம் அடங்காது தறிகெட்டு ஓடியது. எல்லா அம்சங்களும் சரியாக அமைந்தும் அவன் மனது ஆத்ம திருப்தியை எங்கோ தேடியது. எங்கோ ஒரு மூலையில் ஏதோ கிடைக்காத தவுனம் என்றும் தணியாமல். என்னை இவள் புரிந்துகொள்ளவில்லை என்கின்ற ஏக்கம் வேறு. கலவியால் மாத்திரம் உறவு பூரணமாகாது என்கின்ற புது ஞானம். கலவியோடு சேர்ந்து அன்பு, ஆத்ம அலசல்… இரண்டு உள்ளங்களும் ஒன்றோடு ஒன்று கலந்து, கரைந்து போகும் ஒருவித நெகிழ்ச்சி… அவனது கவிதையை இரசிக்கும் ரசிகை… அவளே மனைவியான பாக்கியம்… என்பதான கற்பனைகளின் தொடர்ச்சியாக அவன் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை. எதிர்பார்த்தது கிடைக்காத போது மீண்டும் தேடல் ஆரம்பமாகிறது. அவன் இருப்பு, கௌரவம் என்பவற்றையும் மீறி அந்தத் தேடல் வெறியாகப் பற்றிக் கொண்டது.

அவனின் பெண்… தன்னோடு காமத்தில், கலவியில், இலக்கியத்தில், இசைந்து… ஆத்மாக்களின் கலவியாக முதிர்ந்து, கரைந்து, சிற்றின்பத்தின் பேரின்பத்தை சிறப்பாக அனுபவித்து, அதுவே பேரின்பத்தின் வாசலைத் திறப்பதாக… உலகத்தில் அப்படியான உறவு யாருக்கும் வாய்த்ததுண்டோ தெரியவில்லை.
கவிதைக்கண்ணனின் கற்பனை நிறைவேற வேண்டும் என்பதில் அவன் பிடிவாதமான பித்தனானான்.

காலம் புரவியாக மனிதர்களின்மேல் வயதென்னும் சுவடுகளை விட்டெறிந்து செல்லுகின்றது.
கவிதைக்கண்ணனுக்கும் சுவடுகளும், வாரிசும் உருவாகின. எல்லாம் அவனைச்சுற்றி இருந்தும் எதுவும் இல்லை என்கின்ற தனிமை அவனைப் பிணைத்திருப்பதாய் அந்தரித்தான். அதில் இருந்து தப்பிக்க, என்ன வழியுண்டு என்கின்ற அவதி தொடர்ந்தது.

இணையம். அது கணினிகளை இணைக்க இராணுவத்திற்காக உருவாக்கப்பட்டது. இன்று முகம் தெரியாத மனிதர்களை இணைப்பதில் எப்படி உதவுகிறது என்பதில் கவிதைக்கண்ணனுக்குப் பிரமிப்பு உண்டு.
அவனும் அந்த இணையத்தில் முகம் தெரியாத மனிதர்களிடம் காதல் மனங்களைத் தேடத் தொடங்கினான்.

அவன் இணையத்தில் தன்னை பற்றிய தகவல்களைப் பதிவு செய்தான். அப்போதுதான் அந்தப் பெண்ணின் விளம்பரம் அவன் கண்ணில் பட்டது. அது அவள் தங்கையால் கொடுக்கப்பட்ட விளம்பரம். அவனைவிட அவளுக்குப் பத்து வயது குறைவு. அதில் அவள் விவாகரத்துப் பெற்றவள் என்ற தகவல் கொடுக்கப்பட்டிருந்தது. அவன் தன்னோடு அவளை ஒப்பிட்டுப் பார்த்தான். சாதி, சமயம், படிப்பு, என்பதாகப் பலவும் ஒத்து வந்தன. ஒரு பிள்ளை இருக்கிறது. பருவாய் இல்லை. தனக்கும் பிள்ளை இருக்கின்றது என்பதாக எண்ணினான். அது அவனுக்கு ஒரு பிரச்சனையாகவும் தோன்றவில்லை. அந்த விளம்பரத்தைக் கொடுத்த அவள் சகோதரி அந்தப் பெண்ணைப் பற்றி, அவள் மிகவும் மென்மையானவள் என்றும், பயந்த சுபாவம் கொண்டவள் என்றும் விவரித்திருந்தாள்.

கவிதைக்கண்ணனுக்கு மென்மையான சுபாவம் கொண்டவள் என்பது பிடித்தது. அந்த விளம்பரத்தில் இருந்த மின்னஞ்சலுக்குத் தொடர்பு கொண்டான். பதில் வந்தது. தன்னுடன் அல்லது தனது கணவனுடன் கதைக்குமாறு கேட்டிருந்தாள். கவிதைக்கண்ணன் இலங்கையில் இருக்கும் அவள் சகோதரியிடமே நேரடியாகக் கதைப்பதாகக் கூறி, அவளது அலைபேசி எண்ணைக் கேட்டான். அலைபேசி எண் கிடைத்தது.

இனி… எப்போதும் இனிக்கும் என்று நினைத்தான்.

3

இத்தினை களைப்பிருந்தும் நித்திரை தொலைந்ததால் நினைவுகள் என்னும் அவஸ்தையின் தொடர் முடியாத படச்சுருளாக. இனிய அனுபவங்களுக்கு இவ்வளவு சிறிய ஆயுளா என்பதைக் கவிதைக்கண்ணனால் நம்ப முடியாத தவிப்பு. இந்த யதார்த்த மறுப்பின் பிழிவில் வேதனை வழிந்தோடியது. எப்பொழுதும் அவளுடன் சேர்ந்துதான் கவிதைக்கண்ணன் யாழ்ப்பாணம், கொழும்பு பயணம் செய்ததுண்டு. இம்முறை தனியே கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்று, அதைவிட அவசரமாக ஒற்றையாகக் கொழும்பிற்குத் திரும்பி வந்தான். என்னதான் சகோதரமாய் இருந்தாலும் ஒரு நாளைக்கு மேல் அவர்களோடு தங்கி நிற்பது அவர்களைக் கடமைப்படுத்துவதான உணர்வை அவனுக்கு உண்டுபண்ணி விடும். கவிதைக்கண்ணன் யாரோடும் ஒரு நாளைக்கு மேல் தங்கி நிற்பதில்லை. அதற்கெல்லாம் விதிவிலக்காக அவளோடு நிரந்தரமாகத் தங்கி வாழவேண்டும் என்கின்ற பேரவா அவனுக்கு. அந்த எண்ணம், அவா இன்று அடி வாங்கிக் குற்றுயிராய்க் கிடந்து பரிதாபமாகத் துடிக்கிறது. அதை எண்ண எண்ண அவன் மனது சுண்டி வலித்தது. கண்கள் காரணம் சொல்லாது அடிக்கடி திரையிட்டுக் கொண்டன. காதல் இவ்வளவு வேதனையாக இருக்கும் என்று அவன் கனவுகூடக் கண்டதில்லை. காதல் என்பது அவனுக்கு வேதனையாகவும், நம்பிக்கை என்பது அவனுக்குச் சோதனையாகவும் அமைந்துவிட்டது. அதில் இருந்து அவனால் மீள முடியவில்லை. கவிதைக்கண்ணன் பனித்த கண்களைத் துடைக்க மறந்தான். நினைவுகள் அவனைத் திரைப்படங்களில் வரும் மூர்க்கம் கொண்ட ஆவிகளாகப் பின்னோக்கி வேகமாக இழுத்துச்சென்றன.

அவளது தங்கையிடம் இருந்து அலைபேசி எண்ணை வேண்டிய பின்பு கவிதைக்கண்ணன் தங்கையுடனான தொடர்பை நிறுத்திக்கொண்டான். அவள் தனது கணவனோடு அல்லது தன்னோடு கதைக்குமாறு கேட்டிருந்தாள். கவிதைக்கண்ணன் அதைப் பொருட்படுத்தவில்லை. அதற்கு அவசியமும் அவனுக்கு இருக்கவில்லை. அவன் தான் பெற்ற இலங்கை அலைபேசி எண்ணிற்குக் கதைக்கும் அவாவோடு காலம் பார்த்துக் காத்திருந்தான்.

நோர்வேயில் புதிதாக ஒரு அலைபேசி நிறுவனம் இலங்கைக்கு ஒரு குரோணிற்கு ஒரு நிமிடம் கதைக்கும் வசதி செய்திருந்தது. தொடக்கக் காலங்களில் எல்லாரும் செய்யும் வித்தையில் ஒன்றையே இவர்களும் செய்தார்கள். கவிதைக்கண்ணனுக்கு மலிவு சம்பாசனை கிடைக்கும் புளுகு. அலைபேசியில் இருந்து அலைபேசிக்குக் கதைத்தால் சம்பாசனை தெளிவாக இருக்கும். அதற்குப் பதிலாக தொலைபேசி அட்டைகள் வாங்கிக் கதைக்கலாம். அவை மிகவும் மலிவானவை. அதற்கேற்ப தரத்திலும் குறைவிருக்கும். அத்தோடு வீட்டில் இருந்தும் கதைக்க வேண்டும். அது கவிதைக்கண்ணனுக்கு ஒத்துவராத காரியம். வெளியில் நின்றுதான் கவிதைக்கண்ணனால் எதையும் கதைக்க முடியும். அப்படிக் கதைப்பது தெளிவாக இருக்க வேண்டும் என்றும் அவன் விரும்பினான். அத்தால் அவன் அலைபேசியைப் பயன்படுத்த உத்தேசித்தான்.

கவிதைக்கண்ணனின் வீட்டிற்கு அருகில் நடை பயிலக்கூடிய காட்டுப்பகுதி இருக்கிறது. அதற்குள் கிழமைக்கு ஒரு தரம் நடை பயிலுவது அவனது வழக்கம். அதுவே தனது உடல் நலத்தைப் பாதுகாத்து கொள்வதோடு, இயற்கையோடு உறவாடும் ஒருவித திருப்தியையும் தருகிறது என்பதான எண்ணம். ஏற்கனவே கற்பனை நிறைந்த அவன் மனதில் அந்தக் காட்டுப் பகுதியால் செல்லும் பொழுது இன்னும் அதிகமாகக் கற்பனை ஊற்றெடுக்கும். நிஜத்திற்கும் கற்பனைக்குமான எல்லை சிலவேளை இழுபாட்டில் அகப்படும். பல மனிதர்களுக்கு ஏதாவது ஒரு நேரத்தில் அல்லது இடத்தில் நிஜத்திற்கும் கற்பனைக்குமான எல்லைகள் நழுவிப் போகின்றன. கவிதைக்கண்ணனுக்குப் பெண் விடயத்தில் எல்லை அழிந்து கரைந்து போக, அவன் மோகம் என்னும் புரவி ஏறி, மாது என்னும் வேட்டையாடத் தொடங்கினான்.

கவிதைக்கண்ணன் தனது பிரத்தியேக அலைபேசியை எடுத்துக்கொண்டான். வீட்டைவிட்டு வெளியே வந்தான். வெள்ளைப் பட்டு உடுத்திய பூமாதேவியின் கொள்ளை அழகு அவனை மயக்கியது. மல்லிகைப்பூவாக விழும் பனியில் நனைவது அவனுக்கு ஆனந்தம் தந்தது. ஒரு பெண்ணோடு கதைக்கப் போகும் கிளு கிளுப்பில் அவன் நடையில் புகுந்த துள்ளல். நல்ல மனிதர்களுக்குள் இருக்கும் சின்னத்தனமா என்கின்ற அலசல் எழுந்தது. அவன் அந்த அலசலைத் தள்ளி வைத்தான். அழகாகப் பனி கொட்டிப் பல அசிங்கங்களை மூடிவிடுகிறது. சுகமான நினைவுகளுக்காக, சுயநலத்திற்காக, அவன் தான் செய்யும் அசிங்கத்திற்கு நியாயம் கற்பித்தான். மற்றவர் அறியாது அதை மறைத்தான்.

கவிதைக்கண்ணனின் நெஞ்சாங்கூட்டிற்குள் இதயம் வளமைக்கு மாறாக எட்டி எட்டித் துள்ளித் துள்ளி ஆனந்தக் கழிப்போடு அடித்தது. ஆனந்தத்தில் வெளியே வந்துவிடும் அவசரம் அதற்கு. காரணம் இல்லாது வயிற்றைப் பினைந்தது. மாற்றுப் பெண்ணோடு கதைப்பதே அவஸ்தை. அதுவும் மன்மத நினைவுகளைச் சுமந்து கதைப்பது இன்பமான அவஸ்தையாகிற்று. இது சமுக எல்லைகள் மீறும் சல்லாபம் என்பது புரிந்தாலும், மனம் அவன் வயப்படாது கட்டறுந்து ஓடியது. விதியென்னும் புரவி சிலவேளை மதியென்னும் பார்வையை கெடுத்து விடுகிறது. பார்வை கெட்ட பின்பு குருட்டு போக்கில் போபவனாக அவனது செய்கை ஆகிற்று.

கவிதைக்கண்ணன் அந்தக் காட்டுப் பகுதிக்குள் இறங்கினான். போக்குவரத்து சத்தம் ஓயுமளவு தூரம் போனதும் ஒரு மலைப்பாறை பார்த்து அமர்ந்தான். புத்தருக்குப் போதி மரம் அவன் காமத்திற்கு அந்தக் கல். தனது அலைபேசியை எடுத்தான். அவளின் எண்ணை ஏற்கனவே சேமித்து வைத்திருந்ததால் அவனுக்கு அதை ஞாபகம் வைத்திருக்க வேண்டிய அவஸ்தை இருக்கவில்லை.

அவள் பெயர் என்ன வென்று அவனுக்குத் தெரியாது. அவள் தங்கையிடம் அதைப் பற்றி எல்லாம் அவன் விபரமாகக் கேட்கவில்லை. அவள் ஒரு கணக்காளர். இந்தத் தகவலை அவளது விளம்பரத்தில் பார்த்தான். அவளது உருவமோ, குரலோ அவனுக்குத் தெரியாது. இன்று தெரிந்துவிடும். குரல் எப்படி இருக்கும் என்பதைக் கேட்டு விடலாம். அவள் மென்மையானவள் என்கின்ற வசனம் அவன் பெற்றிராததைப் பெறப் போவதான உந்துதல் தந்தது.

கவிதைக்கண்ணனுக்குப் பெண் என்றால் அவள் மென்மையின் மறு உருவமாக இருக்க வேண்டும். அவன் தாயிடம் இருந்து பெற்ற மென்மையைத் தேடி அலைந்தான். ஒவ்வொரு மனிதனும் தேடி அலைவது இதைத்தானா? அது அவனுக்கு எங்கும் கிடைக்கவில்லை. அவளிடம் கிடைக்குமா என்கின்ற பெரும் எதிர்பார்ப்பு அவனிடம்.

மனதின் பாதாளத்தில் புதைந்து கிடக்கும் மெல்லிய உணர்வுகளைச் சிலவேளைகளில் அந்தக் கூண்டின் சொந்தக்காரனே புரிந்து கொள்ள முடியாது போய்விடுகிறது. அவை பதுங்கிக்கிடக்கும் சில அணைந்துவிடாத எண்ணங்கள். அவற்றிற்காகத் தாம் ஏங்குவதையே அறியாது வாழும் ஆயிரம் ஆயிரம் மனிதர்கள். கிடைக்காதது பற்றி ஏங்கும் ஆழ்மனதின் அணையா அக்கினிகள்.

கவிதைக்கண்ணன் மனதில் மென்மையும், அறிவும் சேர்ந்த பெண்மைக்கான தேடலின் தொடர். அந்த ஏக்கம் அவன் மனதில் ஆழப் புதைந்து அவனை ஏமாற்றியது. அது, காலம் பார்த்துக் காத்திருந்தது. அவன் அறியாத அந்த அவனின் ஆழ்மனதிடம் அவன் தோற்றுப் போகும் நாள் நெருங்கி வந்திற்று.

கவிதைக்கண்ணன் ஒரு முறை மூச்சை இழுத்து விட்டான். இதயத்தின் இந்த அவசர படபடப்பிற்கு என்ன செய்ய முடியும்? அவனுக்கு விடை தெரியவில்லை. ஆசை, அந்தப் பெண்ணோடு கதைத்திடென அவனை மீண்டும் மீண்டும் உந்திற்று.

கவிதைக்கண்ணன் பரபரப்போடு அந்த எண்களை அழுத்தினான். மறுமுனை உயிர் பெற்றது. அவன் உயிர் போய் வந்தது.

'கலோ நான் கண்ணன் நோர்வேயில இருந்து கதைக்கிறன். உங்கடை தங்கச்சி இந்த நம்பர் தந்தவா. அவ உங்களோடை கதைக்கச் சொன்னவா.'

'அப்பிடியா?'

'ம்... உங்கடை பெயர் என்ன?'

'என்ர பெயர் சுமதா. தங்கச்சி உங்களிட்ட என்ன சொன்னவா? எப்பிடி உங்களுக்கு அவளைத் தெரியும்?'

'அதுவா. நெற்றில விளம்பரம் குடுத்திருந்தா. அதில நீங்கள் டிவோர்ஸ் எண்டும் எழுதி இருந்தா. நான் அவவுக்கு மெயில் பண்ணி இருந்தன். அவ உங்களுக்குச் சொல்லேல்லையா?'

'இல்ல. போன் இன்னும் எடுக்கேல்லை. வேற என்ன உங்களுக்குத் தெரியும்?'

'ம்... உங்களுக்கு ஒரு பிள்ளை இருக்கெண்டு தெரியும். நீங்கள் சரியான சொவ்ற்றான ஆள் எண்டும் தெரியும். அதோடை முதல் வாழ்க்கையில நீங்கள் நிறைய கஸ்ரப்பட்டியள் எண்டு அவ எழுதி இருக்கிறா.'

'நீங்கள் கலியாணம் செய்தனியளா?'

'இல்லை.'

மனது அறிந்து, மனிதாபிமானம் இழந்து, ஆசை வயப்பட்டு, ஆழ் மனதின் ஆட்டத்திற்கு இணங்கி, கவிதைக்கண்ணன் பொய் சொல்லத் தொடங்கினான். உண்மை சொல்பவனுக்கு ஒரு வசனம் தேவைப்படுகிறது. பொய் சொல்பவனுக்கு ஆயிரம் வசனம் தேவைப்படுகிறது. அந்த உண்மையான அவஸ்தையை கவிதைக்கண்ணன் அனுபவித்தான். நிரந்தரமற்ற பொய்களோடு நீச்சலடிக்கும் அவஸ்தை ஆரம்பமாகியது. ஆசையால் பெண் சிலந்தியின் வலையில் மாட்டிக்கொண்டதான அவன் அறியாத அவன் விதி. உறவு முடிந்ததும் இதன் முடிவு? எதுவுமே புரியாத மன்மத நினைவுகளில் கவிதைக்கண்ணன் பலி உணவாக.

அவனது இதயம் இப்போது உலக்கைகொண்டு நெஞ்சாங் கூட்டை உடைக்க உடைக்க, உள்ளம் கை வியர்க்க வியர்க்க, அவன் பொய் பேசினான். பொய் சொல்லுவது, அதை சொல்லத் தெரிந்தவர்களுக்கு மேதாவித்தனமாகவும் தெரியாதவர்களுக்குப் போராட்டமாகவும் இருக்கும். எதைச் சொல்லுவது, எதை விடுவது என்பது பெரும் தடுமாற்றம் ஆகும். அந்தத் தடுமாற்றத்திலேயே எதிராளிக்குச் சந்தேகம் வந்துவிடும். கவிதைக்கண்ணன் அலைபேசியில் அதிகம் கதைக்கக்கூடாது என்று எண்ணினான். அப்படிக் கதைத்தால் தான் உளறிவிடுவேன் என்கின்ற பீதி அவனிடம். ஆனாலும் ஆசை அவளோடு கதையென்றது.

'இன்னும் கலியாணம் செய்யேல்லையா?' அவள் சந்தேகப்பட்டுவிட்டாளா என்கின்ற பதைபதைப்பு அவனிடம்.

'நான் கலியாணம் செய்யாமல் இங்க ஒரு நோர்வேஜின் கேளோட சேர்ந்து இருந்தன்.' சமாளித்தான்.

'ஓ… பிறகு?'

'அது முடிஞ்சு போச்சுது. அதைவிடுங்க…'

'ஓ அப்பிடியா…?'

'ம்… நீங்கள் இப்ப எங்க இருக்கிறியள்?'

'வவுனியாவில. சொந்தக்காரர் வீட்டில இருக்கிறம். இதுகளோடை இருந்து நிம்மதியா கதைக்க முடியாது? வேவு பாக்குங்கள்.'

'ஏன்?'

'அதைவிடுங்க. பிறகு சொல்லுறன்.'

'சரி நீங்கள் ஏன் டிவோர்ஸ் ஆகினீங்கள்?'

'அது பெரிய கதை. அவன் ஒரு கூடாத மனிசன். ஒரு சைக்கோ. எனக்கு அடிப்பான். ஏன் அடிப்பான் எண்டே தெரியாது. அதை நான் உங்களுக்கு எப்பிடிச் சொல்லுறது? அவன் அடிக்கிறது கொலை செய்யிறத்துக்கே அடிக்கிறமாதிரி இருக்கும். நான் அவன் அடிக்கிற அடியில மயங்கி விழுந்திருக்கிறன் எண்டா யோசிச்சுப் பாருங்க… அடிவயித்தில குறிபார்த்து அடிப்பான். அதை நினைச்சா இப்பவும் எனக்கு நடுங்குது. பிளீஸ் அதை கேட்காதையுங்க. அதைக் கதைச்சா எனக்கு தலையிடிக்கத் தொடங்கீடும்.'

'ஓகே… ஓகே… உமக்குப் பிடிக்காட்டி நான் அதைப்பற்றிக் கேட்கேல்லை.'

'தாங்ஸ்…'

'சரி நான் இன்னொரு நாளைக்கு எடுக்கிறன்.'

'ஏன் நாளைக்கு எடுக்க மாட்டியளா?'

'நாளைக்குமா?'

'ஏன் உங்களுக்கு ஏதும் அலுவல் இருக்குதா?'

'இல்லை.'

'அப்ப எடுக்கலாம்தானே?'

'சரி நான் எடுக்கிறன். உம்மட ஈமெயில் அட்றெஸ் தங்கச்சி தந்திருக்கிறா. அதுக்கு மெயில் போடுறன், றிப்பளை பண்ணுங்க.'

'ம்... பண்ணுறன்.'

'ஓகே... வாய்.'

'வாய்.'

அதன் பின்பும் அவள் அலைபேசியைத் துண்டிக்காது வைத்திருந்ததைக் கவிதைக்கண்ணனால் கேட்க முடிந்தது. அவனுக்கு அவள் அப்படிச் செய்தது பிடித்துக் கொண்டது. அதனால் அவள் நினைப்பு அவனைப் பித்துக் கொள்ள வைத்தது. அவனும் மனம் இல்லாதவனாக அலைபேசியைத் துண்டித்தான்.

4

முகட்டில் தொங்கிய மின்விசிறி கழன்று விடுவேன் என்பது போல வேகமாகச் சுற்றியது. இருந்தும் வியர்வை அங்கங்கு பொங்கி அரிகண்டத்தோடு வழிவதைத் தடுக்க முடியாது மின்விசிறி தோல்வியுற்றது.

'AC' அறை எடுத்திருக்கலாம். அங்கும் குளிரில் வாழ்ந்துவிட்டு வருமிடத்திலும் குளிருக்குள்

படுத்திருப்பதா என்கின்ற எண்ணம் கவிதைக்கண்ணனுக்கு. 'AC' இல்லாத அறையின் வெக்கை மனப் புழுக்கத்தோடு சேர்ந்து கொள்ளச் சுண்ணாம்பு அறையில் பூட்டி வைக்கப்பட்ட அப்பரின் பரிதவிப்பு. அப்பருக்கு ஆண்டவர் ஆலமாக்கினார். இவனுக்கு இப்போது அவள் அனலாக்கினாள். இந்த உடல் வதைகளையும் புறக்கணித்து, அவன் மனது அவளின் ஞாபகங்களில் மூழ்கியது.

அவளுடன் கதைக்க முதல் கவிதைக்கண்ணனுக்குக் காதல் என்கின்ற நுண்ணுணர்வில் நம்பிக்கை கிடையாது. காதல் என்பது காமத்தை நிறைவேற்றிக் கொள்ளும் ஆணுக்கும் பெண்ணுக்குமான ஆரம்ப நடனம் என்பதாக அவன் ஒரு வரைபிலக்கணம் கண்டிருந்தான். சரசத்திற்குப் புனிதம் சேர்ப்பது காதல் என்கின்ற சொல் என்பது அவனது மறு புரிதல். அதில் அவனுக்கு ஏகப்பட்ட உறுதி. இவளோடு என்ன கதைத்தாலும், எவ்வளவு காலம் சென்றாலும், சாந்தி என்பது இவளை அனுபவிப்பதிலேயே உண்டாகும் என்கின்ற அசையா நம்பிக்கையோடு அவன் நடனத்திற்குத் தயாராகினான்.

காதல் என்னும் நுண்ணுணர்வு அந்த நடனத்தை ஆட முதல் பொய்யாகத் தோன்றலாம். சிவனின் நர்த்தனத்தை ஆடத் தொடங்கினால் அவனின் பாதம் எண்ணாமல் இருக்க முடியுமா? முடியும் என்கின்ற வீராப்போடு கவிதைக்கண்ணன் காரிகையோடு காதல் நடனமாடத் தயாராகினான்.

கவிதைக்கண்ணனுக்குப் பிரிந்து வாழ்பவர்கள் மீது பெரும் மதிப்புக் கிடையாது. சகிப்புத் தன்மை இல்லாதவர்கள்தான் பிரிந்து வாழ்பவர்கள் என்பது அவன் எண்ணம். முதற் கணவன் அவளை மிகவும் கொடுமையாகத் தாக்கியதால்தான் அவள் பிரிந்து வாழ வேண்டி வந்தது என்பது கவிதைக்கண்ணனுக்குத் தெரியும். அதை அவன் முழுமையாக ஏற்றான். பெண்களை, குழந்தைகளை அடிப்பது அவனுக்குப் பிடிக்காது. அது ஒரு காட்டுமிராண்டித் தனமான காரியம் என்பது அவனுடைய அவிப்பிராயம். அப்படியான ஒரு காட்டுமிராண்டித் தாக்குதலில் இருந்து தப்பவே அவள் பிரிந்து வாழ்கிறாள் என்பது அவனுக்குத் தகுந்த காரணமாக, அது அவனுக்கு ஆறுதலையும், அவள்மேல் நம்பிக்கையையும் உண்டு பண்ணியது.

கவிதைக்கண்ணன் கணினியோடு அதிகம் வாழ்ந்து விட்டவன். இணையம் அவனது இன்னொரு இணைபிரியாத் தோழி. கடிதம் போய் மின்னஞ்சல் வந்த காலம் அது. கவிதைக்கண்ணன் அவளுக்கு மின்னஞ்சல் அனுப்ப உத்தேசித்தான்.

முதலில் மெதுவாகத் தொடங்க வேண்டும். அதிகமாக அலட்டக் கூடாது. அதிகமாக அலட்டுவது ஆபத்து என்பது அவனுக்குத் தெரியும். கதைப்பதைவிட எழுதுவது பாதுகாப்பு. எழுதும் போது யோசித்து எழுதலாம். எதிர்க்கேள்வியும் உடனே வராது. அதற்காகத் தடுமாற வேண்டிய அவசியம் இருக்காது. வீட்டில் உள்ள கணினியில் அதிக சுதந்திரமாக இருந்து எழுத முடியாது. எப்போதும் எல்லாவற்றிலும் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். என்தான் கண்ணும் கருத்துமாய் இருந்தாலும் யாரவது அவன் சொல்வதற்கு எதிராய்ப் பிரட்டி கேட்டால் மறுமொழி சொல்லக் கவிதைக்கண்ணனுக்குத் தெரியாது. உளறத் தொடங்கி விடுவேன் என்கின்ற பயம் அவனை எப்போதும் வாட்டும். ஏன் இப்படி எனக்குச் சுற்றி வளைத்துக் கதைக்கத் தெரியாது என்கின்ற எரிச்சல் அவனுக்கு அடிக்கடி உண்டாகும். மறைப்பின் மறைப்பாகக் கதைக்கும் தந்திரம் அவனுக்குக் கைகூடுவதில்லை. உண்மையைச் சொல்லிவிட்டால் வரும் நிம்மதி எதிலும் வருவதில்லை. அந்த நிம்மதியைத் தனது ஆசைக்கும், காமத்திற்கும் அடகுவைத்து அவஸ்தைப்படத் தொடங்கினான் அவன்.

ஆத்ம நிம்மதியைவிடக் காமம் விசுக்காகப் போராடியது. அது நிம்மதி அழிந்தாலும் பெண்ணின் சுகம் முக்கியம் என்றது. அதற்கு ஞானத் தேடல் என்கின்ற முலாம் வசதியாகப் பூசியது. கவிதைக்கண்ணனிடம் கவிதைக்கான கருக் காணும் சிறிய ஞானத் தேடல் உண்டு. அது அவன் மனதின் ஓரத்தில் ஒளிந்து கிடந்தது. ஞான சூனியமாக அவனுக்கு மனைவி கிடைத்தது, அவன் துர்ரதிஸ்ரமாகும். அதுவே முழுமையான காரணமாய் இருந்தால் அவன் ஒரு கவிஞ்ஞையைத் தேடிப் போயிருக்க வேண்டும். ஐரோப்பிய நாட்டில் வாழ்பவன் ஞானத் தேடலுக்காகத் தமிழ்க் கவிஞ்ஞைக்கு எங்கே போவான்? இணையத்தின் உதவி அவனுக்கு ஒரு பெண்ணை தந்தது. இப்போது ஞானம் இல்லாவிட்டாலும் காமம் தீரட்டும் என்று எண்ணினான். அவள் கல்வித் தகமை, சில ஞானக் கணங்களையும் தரலாம் என்கின்ற தப்பான எதிர்பார்ப்பு அவனிடம் வளர்ந்தது.

உண்மை பேசாத போது, தன்னைக் கவிஞன் என்று அறிமுகப்படுத்த அவன் விரும்பவில்லை. கவிஞன் என்று அறிமுகம் செய்தால் பொய் சொல்லி ஏமாற்றுவது அவமானம் என்பது அவன் எண்ணம். விலாங்கு மீன் போன்ற கவிஞர்களும் உண்டு என்பது அவன் அனுபவம். இருந்தும் கவிதைக்கண்ணன் ஈற்றில் ஞானத்தைத் தள்ளி வைத்தான். காமத்திற்கான தேடலுக்கு முதன்மை கொடுத்தான்.

கவிதைக்கண்ணன் பரபரப்போடு கணினியை இயக்கி மின்னஞ்சல் எழுதத் தொடங்கினான். இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டு மார்கழி மாதம் கவிதைக்கண்ணன் அவளுக்கு முதல் மின்னஞ்சலை எழுதினான். அவளுடன் ஒருமுறை கதைத்த பின்பு பொறுக்க முடியாத அவசரம் அவனுக்கு. அதில் 'உங்களுடன் கதைத்ததில் மகிழ்ச்சி. அத்தோடு உங்களுடைய குரல் மிகவும் இனிமையாக இருந்தது. விரைவாக உங்களைப் பார்க்க வேண்டும். அதற்காகத் தங்கள் புகைப்படத்தை மறு மின்னஞ்சலில் அனுப்பி வைக்கவும்.' என எழுதினான்.

அவள் அதற்கு அடுத்த நாள் பதில் போட்டாள். அதில் அடுத்த கிழமை புகைப்படம் அனுப்பி வைப்பதாயும், கவிதைக்கண்ணனின் மென்மையான கதை தனக்குப் பிடித்துக்கொண்டதாயும் எழுதினாள். முடிவில் உங்களுடைய அன்பான தோழி என்று முடித்து விட்டாள். தனக்கு இணையாகவே அவளும் அக்கறை கொள்வதை இட்டுக் கவிதைக்கண்ணன் மிகவும் மகிழ்வு கொண்டான். அவன் அடுத்த நாள் அவளுடன் அலைபேசியில் தொடர்பு கொண்டு கதைக்கும் போது புகைப்படம் பார்க்க முதலே உன்னை எனக்குப் பிடித்து இருக்கிறது என்று கதையளந்தான். அவள் அதற்கு 'ஏன் பிடித்துக் கொண்டது?' என்று கேட்டாள். அவன் அதற்கு 'உனது மென்மையான குரலால், நீ பண்பாகப் பேசும் விதத்தால் உன்னை எனக்குப் பிடித்துக் கொண்டது.' என்றான். 'அழகு முக்கியம் இல்லைக் குணம்தானே முக்கியம்.' என்று மேலும் ஒரு பொய் விளக்கம் கொடுத்தான்.

அவளும் போட்டிக்குப் பதில் சொல்வது போல பதில் சொன்னாள். கவிதைக்கண்ணன் அவள் பல்கலைக்கழகத்தில் படித்ததால் கிராமத்துப் பெண்கள் போல நெளிந்து கொண்டு நிற்கமாட்டாள் எனவும், பதிலுக்குப் பதில் சொல்லுவாள் எனவும் எண்ணினான். படித்த பெண்ணே ஞானத்தின் கண்ணாவாள் என்கின்ற கற்பனை அவனிடம் வளர்ந்தது. படித்த பெண்கள் சுதந்திரமாக, துணிவாக இருப்பார்கள் என்பது அவனது கற்பனையாகியது. படித்த மேதையில் கிடைத்த படிதாண்டாப் பத்தினியில் ஒருத்தி என்கின்ற மாயையில் அவன் மிதந்தான்.

மின்னஞ்சல் அவளிடம் இருந்து ஆற்று நீராகத் தொடர்ந்து வந்தது.

கவிதைக்கண்ணனும் கண்ணும் கருத்துமாக அதற்குப் பதிலளித்தான். மீண்டும் வந்த மின்னஞ்சலுக்குப் பதில் எழுதும் பொழுது நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று துணிந்து கவிதைக்கண்ணன் எழுதிவிட்டான். அது உலக சாதனைதான். எழுதிய பின்பு சிலவேளை இத்தோடு அவள் எழுதுவதை நிறுத்தி விடுவாளோ என்கின்ற பயம் அவனை உலுப்பியது.

அவள் அனுப்பிய ஒவ்வொரு மின்னஞ்சலிலும் கவிதைக்கண்ணனை அலைபேசி எடுக்குமாறு கெஞ்சியதில் அந்தப் பயம் கானல் நீராகத் தொலைந்து போயிற்று. மாஜிக் கணவனுக்குப் பயந்து அவள் தாயுடனும்,

அவளது பிள்ளையுடனும் சொந்தக்காரர் வீட்டில் அடைக்கலம் புகுந்திருந்தாள். அங்கு பொலிசில் உள்ளவர்கள் கொடுத்த தயிரியத்தில் இப்போது அவன்மேல் இருந்த பயம் மெல்லச் சூடு விடுகிறது. அதையும் அவளே கவிதைக்கண்ணனுக்குக் கூறினாள்.

எத்தனைச் சுற்றத்தோடு இருந்தாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் அந்தரங்கமான, அன்னியோன்னியமான தனிமை தேவைப்படுகிறது. இயற்கை போட்டு வைத்திருக்கும் அந்த முடிச்சைச் சாமானியனால் வென்றுவிட முடிவதில்லை. வென்ற சிலர் ஆணை ஆணும், பெண்ணைப் பெண்ணும் தேடிக்கொள்கிறார்கள்? அது புறநடை. மனிதனுக்கு ஒற்றையாக வாழ்வது பெரும் சவாலாகவே அமைகிறது. அதற்காகச் சேர்ந்து வாழும் சோடிகள் எல்லாம் புரிந்து வாழ்வதாயும் அர்த்தம் ஆகாது. இயற்கையின் விதியை இவளால் மட்டும் எப்படி வென்றுவிடமுடியும்? என்பது கவிதைக்கண்ணனின் வாதமாகியது.

கவிதைக்கண்ணனுக்குத் தேனான செய்தி ஒன்று அடுத்த மின்னஞ்சலில் வந்தது. 'நான் நன்றாக உள்ளேன் அதுபோல் நீங்களும் நன்றாக வாழக் கடவுளை பிரார்த்திக்கிறேன். அத்தோடு உங்களை நான் அடிக்கடி நினைத்துக்கொள்கிறேன். அத்துடன் உங்களுக்கு எனது புதுவருட வாழ்த்துக்கள். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக. இப்படிக்கு தங்கள் அன்புக் காதலி…' என்று அதை அவள் முடித்திருந்தாள்.

கவிதைக்கண்ணன் இதை எதிர்பார்க்கவில்லை. அவனுக்குச் சந்தோஷத்தில் தலை கால் புரியவில்லை. இணையத்திற்கு வந்தாலும் எம்மவர் உயர்வு தாழ்வு என்பதைக் கடந்து தங்கள் சொந்தச் சாதி பார்க்கிறார்கள். அல்லது மேல் சாதியில் பார்க்கிறார்கள். அதில் எந்த விட்டுக்கொடுப்பும் யாரும் காட்டுவதில்லை. கவிதைக்கண்ணன் சாதி பார்த்துப் பழகுவதில்லை. தனக்கான துணையை தேடும் போது சாதி பார்க்காது பெருந்தன்மை காட்டும் உயர்வையும் அவன் அடையவில்லை. அவளும் சைவவேளாளர் என்றே அவளது தங்கை விளம்பரம் செய்திருந்தாள். அவள் சொந்த இடம் தீவுப்பகுதி என்பதும் கவிதைக் கண்ணனுக்குத் தெரியும். அவளின் தீவும் கவிதைக்கண்ணனுக்குத் தெரிந்த தீவுதான். அவன் அவள் ஊருக்குப் போனதாக ஞாபகம் இல்லை. பக்கத்து ஊரில் நடந்த ஒரு கலியாணவீட்டிற்குச் சென்றிருக்கிறான். கிறிஸ்தவ நண்பர்களுடன் அவர்களுக்கு மாட்டிறைச்சி வாங்கச் சந்தைக்குப் போயிருக்கிறான்.

அவள் சைவவேளாளர் என்று சொல்லி இருந்தாலும் அவளில் கிறிஸ்தவ வாடை அடிப்பதை எண்ணிக் கவிதைக்கண்ணனுக்குக் குழப்பமாகிற்று. கவிதைக்கண்ணன் மதவெறியன் இல்லை. அதற்காகச் சொந்த மதத்தைப் பழித்துக் கொண்டு மாற்று மதத்திற்குத் துதிபாடுபவனும் அல்ல. சைவம் என்கின்ற இவளில் எதற்காக இந்தக் கிறிஸ்தவ வாடை என்பது அவனுக்குப் புரியவில்லை.

கவிதைக்கண்ணன் இடைக்கிடை வெளியே உலாப் போகும் பொழுது அல்லது வீட்டில் வசதி கிடைக்கும் பொழுது அவளோடு அலைபேசியில் தொடர்பு கொள்வான். ஒவ்வொரு நாளும் தவறாது மின்னஞ்சல் அனுப்புவான். அப்படி அலைபேசி எடுக்கும் பொழுது அவள் அவனிடம் தனது பழைய வாழ்க்கையைப் பற்றிச் சிறிது சிறிதாய்க் கூறுவாள். அவன் மிகவும் கொடுமைப்படுத்தினான் என்றும், தன்னை அடிப்பதோடு குழந்தைப் பிள்ளை என்று பாராது தன் பிள்ளையையும் அடிப்பான் என்றும் கூறுவாள். அவன் ஒரு

கிறிஸ்தவனாய் வாழ்ந்தான் என்றும், அதனால் தன்னிடமும் அது ஒட்டிக்கொண்டதாயும் அவனுக்கு விளக்கம் கூறினாள். கவிதைக்கண்ணனுக்கு இதையெல்லாம் கேட்க மிகவும் மனவருத்தமாய் இருக்கும். அவன் அவளுக்கு ஆறுதல் சொல்லுவான். ஒவ்வொரு முறையும் நடக்கும் சம்பாசனையில், இருவருக்கும் இடையில் இருந்த தூரம் தொலைந்ததாக நினைத்துப் பூரித்தான்.

சிறிது காலத்தில் அவள் தனது புகைப்படத்தை மின்னஞ்சலில் கவிதைக்கண்ணனுக்கு அனுப்பி வைத்தாள். அவள் பழுப்பு பச்சை நிறத்தில் வெள்ளையும் சாதுவான சிவப்புமாகப் பூ வண்ணம் போட்ட ஒரு சேலை கட்டிய தோற்றம் அதில். நோய் வந்த கோழி போலத் தொங்கிய உடல். கழுத்தில் ஒரு மெல்லிய தங்கச் சங்கிலி… காதில் கல்லற்ற தோடு… வலக்கையில் வளையல்… இடக்கையில் ஏகப்பட்ட நூல்கள்… அத்தோடு கறுப்பு பட்டியுடைய கடிகாரம்… நெற்றியில் குங்குமப் பொட்டு… கண்களில் இன்னும் மறையாத பயம்… மொத்தத்தில் பாவியா, அப்பாவியா என்கின்ற அவளின் நிரந்தரமற்ற தோற்றம்.

கவிதைக்கண்ணன் பேரழகியைக் கற்பனை செய்து காதல் தேவதையாக அவளை மனதில் இருத்தி வைத்திருந்தான். அந்தப் படத்தைப் பார்த்த பொழுது அழகியும் அல்ல அசிங்கமும் அல்ல என்பதான ஒரு தோற்றம். கவிதை கண்ணனுக்கு அவள்மேல் இருந்த வெறியில் அரைவாசி அந்தப் படத்தைப் பார்த்ததோடு ஊசி பட்ட பலூனாக இறங்கிவிட்டது. தான் இவளுக்காத் தவண்டை அடிக்கத் தேவையில்லை என்கின்ற மெத்தனம் புகுந்து கொண்டது. தேவதை அகப்படும் வரையும் கதைப்பதற்கு, இளமையின் கிளுகிளுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதற்கு அவளுடனான நட்பை அவன் தொடர்வதாக முடிவு செய்தான். எழுதுபவன் கை எழுதி எழுதி மேற் செல்லும் என்பது புரியாத அற்பனாக நடைபோட்டான்.

அன்று அவனுக்கு ஒரு மின்னஞ்சல் வந்திருந்தது. அதில் தனக்கு அவசரமாகப் பணம் தேவை என்றும் பணம் உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அவள் எழுதினாள். கவிதைக்கண்ணன் அதை எதிர்பார்க்கவில்லை. அடிவாங்கித் துன்பப்பட்டவள் என்கின்ற எண்ணத்தில் அவள் சொல்வதைச் சந்தேகத்தோடு அவன் பார்ப்பதில்லை. அவன் அதற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்றும், அதைத் தான் எப்படி அனுப்புவது என்றும் கேட்டு எழுதினான். அவள் அதற்கு விரைவாகவே பதில் அனுப்பினாள். தானும் தனது தோழி ஒருத்தியும் பந்தயம் கட்டியதாயும், அதில் தான் வென்று விட்டதாகவும், அதற்கு உண்மையாக உதவியதிற்குக் கவிதைக்கண்ணனுக்கு நன்றிகள் என்றும் எழுதினாள்.

தனது நம்பிக்கை பந்தயமாக்கப்பட்டது கவிதைக்கண்ணனுக்கு ஒருவித அதிர்ச்சியைத் தந்தது. பின்பு தான் செய்யும் நம்பிக்கைத் துரோகத்தை எண்ணிப் பார்த்து அதை விளையாட்டாகவே அவன் எடுத்தான். துரோகங்கள்கூட கைபிடியற்ற கத்தியாகலாம் என்பதை அன்று அவன் எண்ணத் தவறினான்.

மீண்டும் கவிதைக்கண்ணன் வழமை போல அவளுக்கு அலைபேசி எடுத்தான். இடைக்கிடை அவளோடு கதைப்பதில் அவனுக்கு ஒருவித மகிழ்வு. அப்படிக் கதைக்கும் பொழுது, தான் அந்த வீட்டில் அலைபேசி சுதந்திரமாகக் கதைக்க முடியாது என்றும், தான் இருக்கும் வீட்டில் ஒட்டுக்கேட்கும் ஒரு கிழவி இருப்பதாயும் திரும்பத் திரும்ப அவள் கூறினாள்.

கவிதைக்கண்ணன் ‘நீ அம்மாவையே சொல்லுறா.’ என்று மொக்குத்தனமாய் கேட்டான். அதற்கு அம்மா அப்படி இல்லை என்றும், அத்தோடு அம்மாவிற்கு அதிகம் காது கேட்காது என்றும் அவள் கூறினாள்.

'அப்படி எண்டா ஆர் அது?' என்று கவிதைக்கண்ணன் தொடர்ந்தும் கேட்டான். 'அதா? அது இந்தவீட்டுச் சொந்தக்காரிதான்.' என்றாள் அவள்.

அடைக்கலம் கொடுத்தவர்களைப் பற்றி அவள் அப்படிக் கதைத்தது கவிதைக்கண்ணனுக்கு ஒருவித கலக்கத்தை உண்டு பண்ணியது. அவன் அதைப்பற்றி மேற்கொண்டு எதுவும் கதைக்கவில்லை. காமம் அவன் சிந்தனை தின்று ஆசை என்னும் பயிராகக் கொழுத்தது.

பின்பு 'உனது பிள்ளை எப்படி இருக்கிறான்? ' என்று கவிதைக்கண்ணன் கேட்டான். அவள் அதற்கு 'ஓ மகளா?' என்றாள். கவிதைக் கண்ணனுக்கு பிள்ளை இருக்கிறது என்பது மட்டும் தெரியும். அது மகளா அல்லது மகனா என்பதை அவள் தெளிவாக முதலில் சொல்லவில்லை. கவிதைக்கண்ணனும் அதைப்பற்றிக் கேட்கவில்லை. மகனா அல்லது மகளா என்பது அவனுக்கு ஒரு பொருட்டும் இல்லை. அவள் அனுப்பிய படத்தைப் பார்த்து, அதில் பிள்ளைக்குத் தலைமுடி கட்டையாக வெட்டி இருந்ததை வைத்து, மகன் என்று நினைத்தான். அது மகன் அல்ல மகள் என்பதை இப்போதுதான் அறிந்தான்.

இவளோடான உறவு கவிதைக்கண்ணனைப் பொறுத்தவரை ஒரு சந்திப்போடு முடிந்து போகும் அத்தியாயம். அவளுக்கு மகள் இருந்தால் என்ன மகன் இருந்தால் என்ன என்று எண்ணினான். அதைவிட அவள் அடுத்துச் சொல்லிய விடயம் அவளைப் பற்றி அதிகம் சிந்திக்க வைத்தது. தனது மகளை அக்காவிடம் தத்துக் கொடுத்து வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டு, தான் கவிதைக்கண்ணனிடம் தனியே வரமுடியும் என்று கூறினாள். கவிதைக்கண்ணனுக்கு அது பெரும் அதிர்ச்சியைத் தந்தது. அவள்மீது சிறிது அருவருப்பை உண்டு பண்ணியது. தன் பிள்ளையைத் தத்துக் கொடுத்துவிட்டு, புதிய உறவு தேடும் பெண்ணா இவள் என்கின்ற எண்ணம் ஏற்பட்டது.

கவிதைக்கண்ணனுக்கு அவளை ஒரு முறை சந்திப்பது மட்டுமே அப்போதைய குறிக்கோளாகிற்று. என்றாலும் அவள் தனது சொந்தப் பிள்ளை மீது கொண்டிருந்த பாசத்தின் எல்லை அவனை வியப்பில் ஆழ்த்தியது. உயிரே போனாலும் எந்தத் தாய் தனது உறவுக்காகச் சொந்தப் பிள்ளையுடனான உறவை விட்டுக் கொடுப்பாள்? அவள் விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தது அகலாத அதிருப்தியை அவனுக்குத் தந்தது.

பிள்ளையில்லாது போனால்தான் மறுமணம் செய்து கொள்வார்கள் என்று நினைத்திருக்க வேண்டும். அதுவே சராசரியுமாகும். ஆனால் கவிதைக்கண்ணனுக்குப் பிள்ளை இருந்தது. அதன் மீது உள்ள பாசம் என்ன என்பது அவனுக்குத்தெரியும். அதை அறுத்துக் கொள்வது அல்லது தொலைத்து விடுவது என்பதை அவன் கற்பனைகூடச் செய்ய முடியாது. அவள் தனது பிள்ளையைத் தத்துக் கொடுத்து விட்டு என்றாலும் மறுமணம் செய்வதுபற்றி நிஜமாகவே கதைத்தாள். கவிதைக்கண்ணனுக்கு அது பெரும் வியப்பை உண்டு பண்ணியது.

அவளின் வாழ்பனுபவங்கள், வேதனைகள் சிலவேளை அவளை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்து இருக்கலாம் என்று பின்பு தன்னைத் தானே சமாதானப்படுத்தினான்.

'பிள்ளையையும் யாரும் விட்டுக்கொடுப்பினமோ?' என்று அவளோடு மீண்டும் கதைத்தபோது அவன் கேட்டான். அவளுக்கு அப்போதுதான் தனது பிழை புரிந்து இருக்க வேண்டும். அவள் விரைவாகச் சமாளித்து கொள்வாள். அப்பாவி போலப் புரட்டிப் போடுவதில் அவள் கில்லாடி என்பது அவனுக்கு அப்போதும் புரியவில்லை. 'இல்ல சிலருக்கு பிள்ளையோட எண்டா விருப்பம் இருக்காது… உங்களுக்கு எப்பிடி எண்டுதான்…' என்று இழுத்தாள். 'நான் மனிதம் உள்ள மனிதன்.' என்று கவிதைக்கண்ணன் வசனம் பேசினான். முக்கியமானதை முற்றுமாய்க் கோட்டைவிட்டான்.

'பிள்ளையைச் சொந்த அக்கா எண்டாலும் குடுக்க முடியுமோ?' என்று திருப்பிக் கேட்டான். 'கஸ்ரம்தான். வேற வழி இல்லையெண்டா என்ன செய்யிறது?' என்று அவள் சமாளித்தாள்.

என்னதான் அவள் சமாதானம் சொன்னாலும் இந்த விடையம் அவள்மீது இருந்த மதிப்பில் சூத்தை ஒன்றை ஏற்படுத்தியது. கவிதைக்கண்ணன் அதைப்பற்றித் தொடர்ந்தும் ஆழமாகச் சிந்திக்கவில்லை. அவளுடன் வைத்திருக்கும் இந்த உறவே மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கும்பொழுது, எதற்காகத் தேவை இல்லாத விடயத்திற்கு மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ள வேண்டுமென எண்ணினான்.

நாட்களின் நகர்வில் நங்கையோடான பழக்கம் இறுக்கமாகிற்று. கவிதைக்கண்ணன் அவளோடு சல்லாபிப்பதில் இன்பம் கண்டான். அவன் அவளுக்கு அலைபேசியில் முத்தம் கொடுத்தான். அவள் திருப்பித் தரமாட்டாள் என்கின்ற அவனது கணக்கு தப்புக் கணக்காகியது. அந்தத் தப்புக்கணக்கு அவன் மனதிற்கு மிகவும் இதம் தந்தது. அவளின் இந்த அபார வளைந்து கொடுப்பு, துணிவு, கவிதைக்கண்ணனைப் பைத்தியம் ஆக்கியது.

இலங்கையில் இறுதி யுத்தம் மும்மரமாக நடந்த காலம் அது. இலங்கைக்குச் செல்ல முடியாது. அது அவனது நோக்கமும் இல்லை. கவிதைக்கண்ணன் அவளை இந்தியாவுக்கு அழைத்து, அங்கே சந்திக்க, சல்லாபிக்க விரும்பினான். அதுவே தனக்குப் பாதுகாப்பு என்பது அவன் கணிப்பு. அவன் தனது திட்டத்திற்கு அடிக்கல் நாட்ட எண்ணினான். அப்பொழுதுதான் அவள் தான் வெளிநாடு ஒன்றிற்கு வருவதாயும், அங்கு வந்த பின்பு தன்னை வந்து சந்திக்குமாறும் கவிதைக்கண்ணனுக்கு எழுதினாள்.

கவிதைக்கண்ணனுக்கு இந்த மாற்றத்தில் ஒருவித நடுக்கம். இதை எப்படிச் சமாளிப்பது என்கின்ற தெண்டாட்டம். ஐரோப்பாவிற்கு வந்தால் அவள் கடந்தகாலம் என்று எண்ணினான். அவளிடம் கவிதைக்கண்ணனின் இரண்டாவது அலைபேசி எண்ணைத்தவிர வேறெதுவும் இல்லை என்கின்ற துணிவு. அப்படி ஐரோப்பாவிற்கு வந்தால் அவளைத் தான் சென்று சிலவேளை அந்த நாட்டில் பார்க்கலாம் என்றும் முதலில் எண்ணினான். பின்பு அப்படிப் போய்ப் பார்ப்பதுகூட தனக்குச் சங்கடத்தை உண்டுபண்ணுமென

முடிவு செய்தான். சரி எதற்கும் அவள் முதலில் அங்கு வரட்டும். வந்த பின்பு பார்க்கலாமெனக் காத்திருந்தான்.

அவளுக்கு ஐரோப்பா வருவதற்கான 'செங்கன் விசா' கிடைக்கவில்லை. அவள் விசாவுக்கான விசாரணையில் என்ன சொன்னாள், எதை ஆதாரமாய்க் காட்டினாள் என்று கவிதைக்கண்ணன் கேட்கவில்லை. அது அவனுக்கு அவசியமாகப் படவில்லை. அவளை இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ சந்திப்பதுதான் தனக்குப் பாதுகாப்பெனக் கவிதைக்கண்ணன் மீண்டும் நினைத்தான்.

இந்தியாவுக்கு வருமாறு அவளை அடிக்கடி கேட்டான். அவள் முதலில் வருகிறேன் வருகிறேன் என்று கூறிவிட்டு, பின்பு நாட்டுப்பிரச்சனையால் வரமுடியாது என்றுவிட்டாள். கவிதைக்கண்ணனும் சலிக்காது கேட்டுப் பார்த்தான். அவளும் சளைக்காது நாட்டுப்பிரச்சனையைக் காரணம் காட்டினாள். கவிதைக்கண்ணனுக்கு அவள் கடத்துகிறாள் என்பது புரிந்திற்று. அதன் பின்பு அவன் அவளுக்கு மின்னஞ்சல் அனுப்புவதைக் குறைத்தான். அதற்கு அவள் ஒரு மின்னஞ்சல் அனுப்பினாள். அதில் கவிதைக்கண்ணனைக் கோபமா என்று கேட்டதோடு, தயவு செய்து என்னைப் புரிந்து கொள்ளுங்கள் என்றும், நாட்டு நிலைமையால் தான் வரமுடியவில்லை என்றும் எழுதினாள். அவனிடம் அவள் கெஞ்சினாள். 'தயவு செய்து என்னைப் புரிந்து கொள்ளுங்கள்…' என்பதை வாசித்த போது அன்று அவன் மனது மெழுகாகக் கரைந்தது. இன்று அதை எண்ணிய போது கவிதைக்கண்ணனின் நெஞ்சு இரணமாக வலித்தது.

கவிதைக்கண்ணனுக்குக் கோபம் குறையவில்லை. எட்டாப் பழம் புளிக்கும் என்கின்ற மனநிலையில் அவன். அலைபேசி எடுப்பதையும் மிகவும் குறைத்தான். அப்படி எடுத்தாலும் 'எப்படி இருக்கிறீர்?' என்பது போன்ற சில வசனங்களோடு அந்த சம்பாசனையை முடிப்பான். அதுவரை பேசிய கிளுகிளுப்பு வசனங்கள் அர்த்தம் இழந்து போயின. அவளைச் சந்திக்காதவரை அந்த உறவு சூல்கொள்ளாத கரு என்பது அவனுக்குப் புரிந்தது. அவளைச் சந்திக்க வேண்டும் என்கின்ற அடங்காத ஆசை ஒருபக்கம், அந்தச் சந்திப்பை யாரும் அறிந்தால் உண்டாகும் விளைவு எப்படி இருக்கும் என்கின்ற பயம் மறுபக்கமாக அவன் அல்லாட்டம் தொடர்ந்தது. அது அவனின் ஆசையைத் தாமதப்படுத்தியது. இந்தத் தயக்கம் எவ்வளவு காலம் என்கின்ற கேள்வியோடு இருந்த அவன்மீது அக்கறை கொள்ளாது காலம் நகர்ந்தது. அவள் இந்தியா வராததால் தொடர்புகளைக் குறைத்துக் கொண்டாலும் கவிதைக்கண்ணன் அதை முற்றுமாக விட்டுவிடவில்லை. எப்போதாவது அலைபேசி எடுத்து அவளுடன் கதைப்பான்.

இறுதி யுத்தம் முடிந்து யாழ் கொழும்பு பாதை திறக்கப்பட்டது. அவள் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது உறவினர் வீட்டிற்குச் சென்றுவிட்டாள். கவிதைக்கண்ணனுக்கு அது தெரியாது. அவன் சில மாதங்களாகவே அவளோடு கதைக்கவில்லை. அவள் தனது இழுப்புக்கு வரவில்லை என்கின்ற கோபம் அவன் மனதில் கனன்று கொண்டே இருந்தது. பயனற்ற பசப்பு வார்த்தை பகர்பவள் என்று முடிவுசெய்தான். அந்த முடிவை அவன் வேதமாக எடுத்துக்கொள்ள வில்லை. கொண்டிருந்தால் அவன் வாழ்க்கையில் வென்றிருப்பான்.

5

பசி மறந்து போயிருக்கலாம். சுவாசம் நின்று போயிருக்கலாம். துன்பம் முடிந்து போயிருக்கலாம். வேதனை நிறைந்த வாழ்வு தொலைந்து போயிருக்கலாம். அப்படி எதுவும் நிச்சயமாக நடக்கவில்லை. துக்கம் வாழ்வின் தவிர்க்க முடியாத ஒரு பகுதி. அது சில நாளில் கடந்து போகும். சில மாதங்களில் கடந்து போகும். சில வருடங்களில் மறந்து போகும். சில நேரம் என்றும் அழியாது மனித ஆத்மாவோடும் ஒட்டிக்கொள்ளும். மதியச்சாப்பாடு முடித்துவிட்டு வந்த கவிதைக்கண்ணனுக்குத் தனது துக்கம் பாவ புண்ணியம் போல ஆத்மாவோடு ஒட்டிக் கொண்டதான அவஸ்தையாக இருந்தது. அவன் உடைகளைக் களைந்தான். படுக்கையில் வீழ்ந்தான். அவள் நினைவுகள் அவனை நோக்கி 'இன்று போய் நாளை வா' என்று கூறாது இடையறாது யுத்தம் செய்யப் புறப்பட்டன.

விதியைக் கவிதைக்கண்ணன் நம்பியது கிடையாது. விதி தன்னை நம்பவைக்கக் கவிதைக்கண்ணனை இலங்கைக்கு இழுத்தது. இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு கோடைக் காலத்தில் கவிதைக்கண்ணன் தனது ஊருக்குச் சென்றான். அப்படிச் செல்ல முதலே அவளைப் பற்றிய ஞாபகம் மீண்டும் அவனை அலைக்கழித்தது. போவதற்கு முதல் அலைபேசியில் அவளோடு தொடர்பு கொள்ள நினைத்தான். பின்பு சிலவேளை அது தேவையில்லாத பிரச்சனைகளை உண்டுபண்ணும் என்கின்ற குழப்பத்தில் அதைத் தவிர்த்தான்.

கவிதைக்கண்ணன் ஊருக்குச் சென்றான். அவளது எண்ணுக்குத் தொடர்பு கொள்ள வேண்டும் என்கின்ற பரபரப்பு அவனுக்கு. நினைத்தவுடன் செய்ய முடியாத இடையூறுகள். அவன் தனது ஊரில் இருந்த 'Telecom' இற்குச் சென்றான். அவனை யாரும் அடையாளம் காணமாட்டார்கள் என்கின்ற துணிவு. அங்கிருந்து தொலைபேசியில் அவளை அழைத்தான். மறுமுனையில் அவளுக்கு ஆனந்த அதிர்ச்சி. அவள் நம்ப முடியாது தவித்ததை அவனால் உணர முடிந்தது. கதைத்து முடியும் பொழுது தான் அவளைச் சந்திக்க வேண்டும் என்கின்ற ஆசையைக் கவிதைக்கண்ணன் எந்தத் தயக்கமும் இல்லாமல் அவளிடம் அன்று கூறினான். அவள் அதற்கு எங்கே சந்திப்பது என்று கேட்டாள். கவிதைக்கண்ணன் கொழும்பில் என்று கூறினான். அவள் யாழ்ப்பாணத்தில் சந்திக்க முடியாதா என்று கேட்டாள். எடுத்த எடுப்பிலேயே கொழும்பு வருவதற்குத் தயங்குகிறாளோ என்கின்ற பதட்டம் கவிதைக்கண்ணனிடம். என்றாலும் யாழ்ப்பாணத்தில் வேண்டாம் என்று கவிதைக்கண்ணன் திட்டவட்டமாக மறுத்தான். அவனுக்கு அது பாதுகாப்பாய் தோன்றவில்லை. அவள் தான் யோசித்துவிட்டு பதில் சொல்வதாய் கூறினாள். மறக்காமல் மீண்டும் அலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கவிதைக்கண்ணனைக் கேட்டுக்கொண்டாள். கவிதைக்கண்ணன் அப்படியே செய்வதாகக் கூறிவிட்டு தொலைபேசியைத் துண்டித்தான். யாழ்ப்பாணத்துப் பெண்கள் அன்னியன் ஒருவனை நம்பிக் கொழும்புக்குத் தனியே வருவார்களா என்கின்ற சிறிய விடயத்தைக்கூட கவிதைக்கண்ணன் யோசிக்கவில்லை.

‘Telecom’ இற்குச் சென்று போன் செய்வது சௌகரியமாக அவனுக்குத் தோன்றவில்லை.

கவிதைக்கண்ணன் தனது உறவினரிடம் ‘SIM Card’ஐ வாங்கித் தனது அலைபேசியில் போட்டான். அதன் பின்பு அவளோடு தொடர்பு கொள்வதில் அவனுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை.

அடுத்தமுறை தொடர்பு கொண்டு கேட்டபோது அவள் கொழும்பிற்கு வருவதற்கு இசைந்தாள். கவிதைக்கண்ணனுக்கு எதிர்பாராத இன்ப அதிர்ச்சி. அவனுக்குச் சொர்கத்தைச் சந்திக்கப் போவதான சந்தோஷம். அவன் இன்ப அதிர்ச்சியில் செயலற்றுப் போனான். விதியை நம்பாத கவிதைக்கண்ணனின் வாழ்க்கையில் முதன்முதல் விதி விளையாடியதை அவன் அப்போது உணரவில்லை.

கொழும்பிற்குப் போவதற்கு இரண்டு பேருந்துப் பயணச்சீட்டுக்கள் எடுத்தான். அவளை அலைபேசியில் அழைத்துத் தான் எந்தப் பேருந்தில் போவதற்கான பயணச்சீட்டை எடுத்திருக்கிறேன் என்பதைக் கூறி, அவளையும் அந்தப் பேருந்திற்கு வருமாறு அழைத்தான். அவளும் வருவதாக ஒப்புக்கொண்டாள்.

இரவு ஏழுமணிக்குப் பயணம். பகல் ஒருமணியளவில் கவிதைக்கண்ணனுக்குக் காய்ச்சல் நெருப்பாகக் காய்ந்தது. அவனுக்கு அது நீ பயணம் போகாதே, அவளைச் சந்திக்காதே என்று மன்றாடிச் சொல்லியது போல் ஆகிற்று. அவனுக்கு அந்தச் சமிக்கை ஒரு வகையில் புரிந்தது. அந்தச் சமிக்கையை ஏற்று அவளைச் சந்திக்காது நோர்வேக்கு சென்று விடுவோமா என்று முதலில் யோசித்தான்.

கவிதைக்கண்ணன் அவளைத் தொடர்புகொண்டு தனக்கு வருத்தம் காரணமாக கொழும்பிற்கு வரமுடியாது என்று அவளிடம் சொன்னான். சில நாட்கள் கழித்து மீண்டும் தான் அழைப்பதாக அவளிற்குக் கூறினான்.

வருத்தம் சில நாட்களில் கலவை மருந்தோடும், குளிசைகளோடும் விடைபெற்றது. கவிதைக்கண்ணனின் ஆசையும், காமமும் மீண்டும் மூர்க்கமாக உயிர் பெற்றன. சமிக்கைகள் பற்றி மறந்தான். அதெல்லாம் மூடநம்பிக்கை என்று மறு விளக்கம் கண்டான்.

கவிதைக்கண்ணன் மீண்டும் கொழும்பிற்குப் புறப்பட்டபோது பல உறவினர்கள் அவனுடன் சேர்ந்து கொண்டார்கள். அதனால் கவிதைக்கண்ணன் அவளைத் தொடர்பு கொள்ளாது கொழும்பிற்குச் சென்றான்.

மீண்டும் மீண்டும் தடங்கல்கள் ஏற்படுவது அவனுக்கு ஏதோ ஒரு சமிக்கை காட்டியது. அவன் அதைப் புரிந்துகொள்ள விரும்பவில்லை. விரும்பிய சமிக்கை கிடைக்காதவரை, கிடைக்கும் சமிக்கைபற்றிப் புரிந்து கொள்ளாது இருக்க அவன் ஆழ்மனம் கட்டளை இட்டது. மீண்டும் மீண்டும் ஆசையும், மோகமும் ஆரூடங்களில் இருந்து அவனை கண்மூடிக் கொள்ளச் சொல்லியது. அவள் எப்படி இருப்பாள்? அவளைப் பார்த்துவிட வேண்டும் என்கின்ற அவா அவனை ஆட்டிப் படைத்தது. பெண்ணும் போதைதான். எண்ணிவிட்டால் விலக்க இயலாத போதைதான். கவிதைக்கண்ணன் அவள் பற்றிய போதையில் பேதைமையானான்.

உறவினர்கள் தங்கள் அலுவல்களுக்காக வேறு வேறு இடங்களுக்குச் சென்ற கையுடன் கவிதைக்கண்ணன் அவளை அலைபேசியில் தொடர்புகொண்டான். அவள் அவனிடம் கேட்ட முதல் கேள்வி 'நீங்கள் எங்க நிற்கிறியள்?' என்பதுதான். கவிதைக்கண்ணன் தான் கொழும்பில் நிற்பதாயும், கொழும்பிற்கு வந்தால் கண்டி செல்லலாம் என்றும் கூறினான். அவள் தான் வருவேன் என்றும், ஒரு நாள் மட்டுமே அவனுடன் தங்குவேன் என்றும் கூறினாள். அவள் முதலில் வரட்டும், வந்த பின்பு ஒரு நாளைப் பல நாட்கள் ஆக்கலாம் என்பது கவிதைக்கண்ணனின் ஆனந்த நினைப்பாகியது.

கவிதைக்கண்ணன் அவள் தனியே கொழும்பிற்கு வரமாட்டாள் என்று நினைத்திருந்தான். இருந்தாலும் ஒரு முறை முயற்சிப்போம் என்றே முயற்சித்தான். அவன் முயற்சி எளிதாகக் கைகூடியது. அவனின் நினைப்புப் பொய்யாகிற்று. அவள் வருவேன் என்று கூறியதை முதலில் அவனால் நம்ப முடியவில்லை. தமிழ்ப் பெண்கள் அதிகம் பழக்கமல்லாத ஒரு அன்னியனுடன் தனியே ஒரு இடத்திற்குப் போவதற்கு சம்மதிக்கமாட்டார்கள். அதுவும் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெண்கள் சிறிதளவும் விட்டுக்கொடுக்கமாட்டார்கள் என்கின்ற கற்பனை கவிதைக்கண்ணனுக்கு இருந்தது. அந்தக் காலம் மாறியது புரியாது வெளிநாட்டில் வாழ்ந்தவர்களில் இவனும் ஒருவன். எந்த ஒப்பந்தமும் இல்லாமல் கவிதைக்கண்ணனோடு வந்து நிற்கிறேன் என்று அவள் கூறியதைப் பற்றி அவன் உடனே கிரகிக்கவில்லை. அவன் தனது ஆசை, காமம், ஆகிய உழைவுகள் ஒரு புதிய பெண்ணுடன் கழிவதில் மகிழ்வு கொண்டான். யாழ்ப்பாணத்துப் பெண்கள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் வரமாட்டார்கள் என்கின்ற கவிதைக்கண்ணனின் கற்பனை அன்று நொறுங்கியது. அந்த நினைப்பையே நொறுக்குபவளின் பின்புலம் எப்படி இருக்கும் என்று அவன் சிந்திக்கவில்லை. அவனால் சிந்திக்க முடியவில்லை. வரம்பு முறைகள் பற்றிக் கவிதைக்கண்ணன் கவலைப்படவில்லை. வந்தவரை சந்தோஷம் என்பதில் கவிதைக்கண்ணனுக்குக் குசியான தடுமாற்றம். அவளுடன் கதைத்த பின்பு கண்டிக்குப் போவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதில் அவன் மும்மரமானான்.

அவள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு வந்து பேருந்தால் இறங்கும் பொழுது கவிதைக்கண்ணன் காருடன் தயாராகக் காலிரோட்டில் உள்ள சைக்கிள் கடை ஒன்றின் முன்பு நிற்பதாயும், அதற்கேற்ப அவளை அங்கு இறங்குமாறும் அவன் அலைபேசியில் கூறினான்.

அடுத்த நாள் காலை ஐந்து மணிக்கே தான் தங்கி இருந்த பச்சைநாடு விடுதியைக் காலி செய்துவிட்டுக் கவிதைக்கண்ணன் புறப்பட்டான். விடுதிக்கு வெளியே வந்தவனுக்குச் சிறிது அதிர்ச்சி காத்திருந்தது.

'Car' வரும் என்று எதிர்பார்த்தவனுக்கு 'Van' வந்தது சலிப்பைத் தந்தது. பொழுது இன்னும் முழுமையாக விடியவில்லை. காலிரோட்டில் போக்குவரத்துக் களைக்கட்டத் தொடங்கிவிட்டது. பெட்டியோடு வேறு வாகனம் தேட முடியாது. எப்படி என்றாலும் அந்த வாகனத்தில் போக வேண்டிய கட்டாயம் என்பதாக தனக்குத் தானே அவன் சமாதானம் சொன்னான். அவன் தனது வெப்பியாரத்தை காட்டிக் கொள்ளாது வானில் ஏறி உட்கார்ந்து ஆங்கிலத்தில் சாரதியோடு கதைக்கத் தொடங்கினான். கொழும்பு என்றால் சாரதி சிங்களவனாய் இருப்பான் என்பதே அவனது எண்ணம். அது தலைகீழ் என்பது சட்டெனப் புரிந்தது. சாரதி தமிழில் கதைத்தான். தான் மட்டக்களப்பு என்றும் அறிமுகம் செய்தான். அதுவும் வசதியெனக் கவிதைக்கண்ணன் எண்ணினான்.

கவிதைக்கண்ணன் வான்காரனுடன் சைக்கிள் கடைக்கு முன்பு காத்திருந்தான். இடையில் அவளோடு அலைபேசியில் தொடர்புகொண்டு தாங்கள் காத்திருப்பதை அவளுக்குக் கூறினான். நேரம் போனதே தவிர எந்தப் பேருந்தும் சைக்கிள் கடைக்கு முன்பு நிற்கவில்லை. கவிதை கண்ணன் மீண்டும் அவளைத் தொடர்பு கொண்டான். அவள் தான் கடைசி நேரத்தில் கண்ணயர்ந்து விட்டதால் வெள்ளவத்தையில் இறங்கி நிற்பதாயும், அங்கு அவர்களை வருமாறும் கூறினாள்.

கவிதைக்கண்ணனுக்கு எங்கு நிற்கிறாள் என்பது சரியாகப் புரியவில்லை. அவன் அலைபேசியைச் சாரதியிடம் கொடுத்தான். அவன் கதைத்துவிட்டு வாகனத்தை நகர்த்தத் தொடங்கினான்.

வாகனம் நகர்ந்தது. அவளைப் புகைப்படத்தில் மட்டும்தான் கவிதைக்கண்ணன் பார்த்திருக்கிறான். முதன் முதலில் அவளை நேரடியாகச் சந்திக்கும் கணம் வரப்போவதில் மகிழ்ச்சி கலந்த பரபரப்பான அவதி அவனிடம். வாகனம் போக்குவரத்துக் குறைவான நேரமாதலால் விரைவாகவே நகர்ந்தது. வாகனம் வெள்ளவத்தையில் உள்ள ஜும்மாப் பள்ளிவாசலுக்கு எதிர்ப் பக்கமாகத் தனது வேகத்தைக் குறைத்தது. சாரதி கவிதைக்கண்ணனைப் பார்த்து ‘இதுதான் இடம், ஆள் நிற்கிறாரா எண்டு பாருங்க.’ என்று கூறினான். கவிதைக்கண்ணன் அவளை இதுவரையும் நேரே பார்த்தது கிடையாது. அது சாரதிக்குத் தெரியாது. அதை ஒத்துக்கொள்ளும் நேர்மையும் கவிதைக்கண்ணனிடம் இல்லை. பேருந்திற்காகப் பலர் நின்றார்கள். எப்படி அவளை அடையாளம் காண்பது என்று முதலில் அவனுக்குப் புரியவில்லை. எதற்கும் அலைபேசியில் தொடர்பு கொள்வதே சாலச் சிறந்தது என்பதாக எண்ணியவன் அப்படியே செய்தான்.

அலைபேசி யாரிடம் ஒலிக்கிறது என்கின்ற எதிர்பார்ப்போடு கவிதைக்கண்ணன் காதைக் கூர்மையாக்கினான். சாலையின் ஓரத்தில் யார் தன்னை நோக்கி வருகிறார்கள் என்றும் பார்வையால் அவன் துழாவினான். அலைபேசி அடித்ததும் அதை எடுத்தவண்ணம் சிரித்துக்கொண்டு அவனை நோக்கி அவள் வந்தாள். அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள் என்கின்ற கம்பனின் அடிகளைப் பிரபஞ்சத்தின் நீள அகலத்தில் கவிதைக்கண்ணன் முழுமையாக அக்கணத்தில் அனுபவித்தான். அந்த இலக்கியச் சுவை பற்றி அவன் அதற்கு முன்பு அதிக அக்கறை கொண்டவனல்ல. காமத்தால் கவிதையைக் கைவிட்ட கவிதைக்கண்ணன் இப்போது சுயத்தையும் இழந்தான். தன் இதயத்தை அந்த மாயப் பெண்ணிடம் இழப்பது தெரியாது இழந்து நின்றான். அந்தக் கணத்திலேயே மூளை துறந்து முண்டமாகக் காதல் அடிமையானான். மனித உணர்வுகளின் மாயைக்குள் எழமுடியாது சிலந்தி வலையில் அகப்பட்ட ஈ போல விழுந்தான். பெண் சிலந்தியிடம் தனது மோட்சம் கேட்டு மண்டியிட்ட ஆண் சிலந்தியானான். விதி வலிது என்பது புரியாது விதியின் கையில் விளையாட்டுப் பொம்மையானான். மீட்சி கிடையாது என்கின்ற காட்சிக்கு அவன் மீண்டும் மீண்டும் சாட்சியானான்.

கவிதைக்கண்ணன் பல பெண்களை வாழ்க்கையில் சந்தித்துவிட்டான். எந்தப் பெண்ணின் பார்வையும் அவன் இதயம் வரை சென்றதில்லை. இந்தப் பெண்ணின் பார்வை இதயத்தையும் தாண்டிச் சென்றதாக அவன் உணர்ந்தான். இனி உனக்கு மீள்வு இல்லை என்று விதி விசமத்தோடு நகைப்பதை அறியாது

நங்கையைப் பார்த்தான். யாதும் நீயே என்று உருகி நின்றான். உளம் கசிந்தான். தலைமேல் கைவைத்து தாள் பணிந்தால் பைத்தியம் என்பார்கள் என்று அதைத் தவிர்த்தான்.

அவள் சிரித்தாள். அவளின் அழகின் இரகசியமான தெத்துப் பல் அப்போது பளிச்சிட்டது. மிகுதி முத்துக்கள் போன்று வரிசையானவை. அவளின் சிரிப்பு மன்மதனையும் மயக்கும் என்பதை இந்த மானிடன் கண்டுகொண்டான். அது பேரழகு என்பதாய் அவன் மருவினான். பேரழகே தேவையில்லை, இதயத்தைக் கிள்ளும் பெண்ணழகுதான் தேவை என்பது புரிந்தது. அவளின் அந்த அழகு அவன் இதயத்தை மீண்டும் மீண்டும் கிள்ளியது. அவள் கண்களின் ஒளி அவன் நெஞ்சை அறுத்து இதயத்திற்குள் பாய்ந்தது. அந்த வேதனையே மன்மத சுகம் தந்தது.

அவளின் சிரிப்பின் நளினத்தைப் பார்த்த போது இவள்தான் என் தேவதை என்பதாக அவனுக்கு மனப்பாடம் செய்யத் தோன்றியது. அதுவே அவன் தாரக மந்திரமாகியது. கவிதைக்கண்ணன் தடுமாறிப் போய்விட்டான். தனது உயர்ந்த வாழ்விலிருந்து தடம்மாறிப் போய்விட்டான்.

அவனுக்கு அப்படி இருந்தாலும் அவள் பேரழகி அல்லள். அவனுக்குப் பிடித்த அழகில் அவள். பழுப்பு பச்சையில் றேசிங்கவுணோடும், பிள்ளையோடும் எடுத்து அனுப்பிய அன்றைய புகைப்படத்திற்கும், எதிரே நிற்பவளுக்கும் சம்பந்தமே இல்லை என்பதாக அவன் மனம் உறுதியாகக் கூறிற்று. கவிதைக்கண்ணனுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. எதாவது சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

'வாங்க… வந்து வானில ஏறுங்க.' என்றான். அவள் தயங்காது வந்து 'Van'இல் ஏறினாள். அவள் ஒரு கரையில் யன்னல் பக்கமாக அமர்ந்தாள். கவிதைக்கண்ணன் தனது கைப்பையை மடியில் வைத்துக் கொண்டு மறுகரையில் கதவுப் பக்கமாகத் தள்ளி அமர்ந்தான். ஆசையிருந்தாலும் ஆணுக்கும் நாணம் என்பது அவன் நிலை. அவள் கூச்சப்படவில்லை. வித்தியாசமானவள் என்று கவிதைக்கண்ணன் எண்ணினான். சாரதி மெதுவாக வாகனத்தை நகர்த்தினான்.

சாரதி தமிழாய் இருந்தது கவிதைக்கண்ணனுக்கு இப்பொழுது அசௌகரியமாயிற்று. இல்லாவிட்டால் சுதந்திரமாய் இப்பொழுதே அவளோடு கதைத்திருக்கலாம் என்கின்ற ஏக்கம் அவனிடம். இவள் தனக்கு இவ்வளவிற்கு விருப்பமானவளாய் அமைவாள் என்று கவிதைக்கண்ணன் கற்பனை செய்தவன் அல்ல. அவள் குள்ளமாக இருந்தாலும் மறுபடி எந்தக் குறையும் இல்லாது தனக்கு பொருந்தியதாகவே அவனுக்குத் தோன்றியது. அவளை நேரே பார்க்காது புகைப்படத்தில் பார்த்ததின்படி, இவள் பெரிய அளவிற்கு ஒன்றும் தன்னில் பாதிப்பை ஏற்படுத்தமாட்டாள் என்கின்ற எண்ணம் தவிடுபொடியாகியது. தனது ஆசைகள் முடிய அவள் பற்றிய நினைவுகளும் தொலைந்து போய்விடும் என்பது தொலைந்து போனது. அனைத்தும் அவள் சிரிப்பில் தலைகீழானது. தான் அவளுக்கு மறைத்தவற்றைச் சொன்னால் அல்லது அவள் கண்டுபிடித்தால் அவள் தன்னை வெறுத்துவிடுவாளோ என்கின்ற அச்சம் அவன் மனதை அந்தக் கணத்தில் இருந்து வாட்டத் தொடங்கியது. உண்மையைச் சொல்லாமல் விடலாம். அதுவும் அவனால் முடியாத காரியம். யாரும் பிரட்டிக் கேட்டால் அவதிப்படவேண்டும். பொய்கள் அவன் வாயில் அடுக்கடுக்காய் வர மறுத்துவிடும். மாட்டிக்கொண்டு முழிப்பது அவமானம். அதனால் அவன் இயன்ற மட்டும் உண்மையே

சொல்வது உண்டு. இன்று உண்மை சொன்னால்... வாழ்வில் முதன் முதல் இதயத்தைத் தொட்ட பெண் உன்னை வெறுத்து ஒதுங்கிக் கொண்டால்? அந்த எண்ணத்தை அவனால் தாங்க முடியவில்லை.

'என்ன கடுமையா யோசிக்கிறியள்?' கவிதைக்கண்ணன் இதை எதிர்பார்க்கவில்லை. ஒருகணம் அவன் தடுமாறிவிட்டான். பின்பு சமாளித்துக் கொண்டு,

'இல்ல என்ன நடந்தது? ஏன் அங்க இறங்கேல்லை?' என்று கதையை மாற்றினான்.

'அதுக்கா இவ்வளவு யோசிச்சியள்? கடைசி நேரத்தில நித்திரை வந்திட்டுது.' என்றாள் அவள் சாதாரணமாக.

அவள் கறுப்பும் வெள்ளையுமாக 'Skirt and Blouse' அணிந்திருந்தாள். அவை அவளுக்குக் கச்சிதமாய் பொருந்தி இருந்தன. அவளது நடுத்தர உடம்பிற்கு ஆடைகள் கச்சிதமாய் பொருந்தி இருப்பது கவிதைக்கண்ணனுக்கு ஒருவித கிரக்கத்தை உண்டு பண்ணியது. காலுக்கு மேல் கால் போட்டு இருந்தவள் எந்தத் தயக்கமும் இன்றி அவன் கண்களைப் பார்த்துக் கதைத்தாள்.

கவிதைக்கண்ணனுக்கு நடந்த முதல் திருமணம் பேசிச் செய்யப்பட்டது. பெண்வீட்டாரை அவன் இந்தியாவுக்குக் கூப்பிட்டு அங்கு ஆடம்பரமாகத்தான் திருமணம் செய்தான். அப்படி திருமணத்திற்கு வந்து நிற்கும் போது அவளை ஒரு நாள் சரவணபவனுக்குச் சாப்பிடுவதற்குத் தனியே அழைத்துச் சென்றான். அவள் பல அடி பின்னால் நடந்து வந்தாள். அவளுக்கா அவன் சில அடி நடப்பதும் நிற்பதுமாய் தெருவில் அவஸ்த்தைப்பட்டான். சாப்பாட்டு மேசையில் இருந்து கவிதைக்கண்ணனின் கண்ணையோ அல்ல முகத்தையோ பார்ப்பதற்கு முடியாது அவள் வெட்கப்பட்டு நெளிந்த நெளியலில் சாப்பாடு பரிமாறியவன் சிரித்த வண்ணம், 'என்னங்க... புது சோடிங்களா சார்?' என்று கேட்டான்.

தன் கண்களை ஒரு பெண் பார்ப்பது ஆணுக்குக் கிரக்கம்தான். ஐரோப்பிய மாதுகள் கண்ணைப் பார்த்துத்தான் கதைப்பார்கள். தமிழில் தலைகீழான அர்த்தம். அறிமுகமாகும் அன்னியனின் கண்களைப் பார்ப்பது எல்லோருக்கும் கைவராத கலை. அவளுக்கு அது லாவகமாகக் கைவந்திருந்தது. கவிதைக்கண்ணனின் பார்வை ஒரு முறை அவளின் உடலை மேய்ந்தது. அவளது முகத்தின் வசிகரமே அவளின் அதிசயம். அந்த முகத்தின் வசீகரம் முதலில் பார்க்கும் பொழுது தெரிவதில்லை. அவள் சிரிக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த முகத்தின் உச்ச ஈர்ப்பு எதுவரை பாய்கிறது என்று பார்க்கலாம். கவிதைக்கண்ணனுக்கு அது இதயம்வரை மீண்டும் மீண்டும் பாய்ந்தது. அவன் அவளிடம் மன்மத யுத்தத்தில் தோற்றான். கரும்பும், மலரும் அவனுக்குத் தேவைப்படவில்லை. உருபில்லாதவனும் அவள் கண்களைக் கண்டால் தனக்கு உருபு வேண்டும் என்றிருப்பான். பெண்ணிடம் ஆண் மன்மத யுத்தத்தில் தோற்பது தவறில்லை. தோற்க முடியாத ஆடல் நாயகன் நெற்றிக்கண்ணைத் திறந்தான்.

அந்த முகத்தின் வசீகரம் இல்லாவிட்டால் அவளிடம் சொல்லிக்கொள்ள எதுவும் பேரழகு கிடையாது. மார்புகள் தொலைந்து போனதான தோற்றம். அவள் உயரம் குள்ளம் என்பதற்கான அழிக்கமுடியாத சாட்சியம். அவளுக்குக் கால்கள் வாழைத்தண்டாக மொத்தமாய் இருந்தன. அது ஒருவித அழகு என்று கவிதைக்கண்ணன் எண்ணினான். அவன் ஐரோப்பிய நகரங்களில் மொத்த காலுடைய பெண்கள் ஆடை அணிந்து செல்லும் போது எடுப்பாய் இருப்பதைப் பார்த்து வழிந்திருக்கிறான். இவளும் அப்படிச்சென்றால் இவள் கால்களும் நன்றாக இருக்கும் என்கின்ற கற்பனை அவனுக்குள் எழுந்தது. தனது காம நினைவை நிறுத்தி, அவளைப் பார்த்து,

‘எப்படிப் பயணம் இருந்திச்சுது…?’ என்றான்.

‘தூங்கித் தூங்கி வந்து சேர்ந்திட்டன்.’ என்றாள் அவள்.

அவள் ஜெவர்த்தனாபுரப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகத்துறையில் பட்டம் பெற்றிருந்தாள் என்பது கவிதைக்கண்ணனுக்குத் தெரியும். அவனுக்குப் பல்கலைக்கழகத்தில் படித்த பெண்ணோடான நட்போ, உறவோ, முதலில் இருந்தது கிடையாது. அவளது ஒவ்வொரு அசைவிலும், கதையிலும் படித்தவர்கள் இப்படித்தான் துணிவாக இருப்பார்களா என்கின்ற நினைப்பு அவனை ஆக்கிரமித்தது. இவள் மிகவும் பயந்த சுபாவம் உள்ளவள் என்று இவளது தங்கை விவரித்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. அவள் கூறியது போல இவள் ஒன்றும் பயந்தாங்கொள்ளி கிடையாது என்கின்ற உண்மை அவனுக்கு உறைத்தது. எங்கே அந்தப்பயம்? எதற்காக அவள் அப்படி விவரித்து இருந்தாள்? என்பதாக மீண்டும் அவன் சிந்தனையில்.

‘என்ன பேசாமல் இருக்கிறியள்?’

கவிதைக்கண்ணனைப் பார்த்து அவள் மீண்டும் கேட்டாள். கவிதை கண்ணனுக்கு நிறையப் பேசவேண்டும் போல் இருந்தது. இரண்டு காரணங்கள் அவனைத் தடுத்தன. ஒன்று சாரதிக்குத் தமிழ் தெரியும் என்பது. இரண்டாவது பேசத்தொடங்கித் தான் ஏதும் உளறிவிட்டால் இடையில் கோபித்துக்கொண்டு சென்று விடுவாளோ என்கின்ற பயம். அவள் கவிதைக்கண்ணனின் பயத்தைப் பற்றி அறியாது கலகலப்பாகக் கதைத்தாள்.

‘இல்ல என்ன பேசவேணும்? கேளுங்க சொல்லுறன்.’ என்று அசடு வழிந்து சமாளித்தான்.

‘நான் முருகண்டியில ரொயிலெற்றுக்குப் போகேல்லை. யூரீன் பாஸ் பண்ண வேணும். நல்ல ரொயிலெற் உள்ள இடமாப் பாத்து வானை நிப்பாட்டச் சொல்லுங்கோ.’ என்றாள்.

கவிதைக்கண்ணன் எள்ளென்றால் எண்ணெய்யாகப் பாய்ந்தான். சாரதியிடம் அடுத்து வரும் நல்ல விடுதியைப் பார்த்து நிறுத்தச்சொன்னான். கவிதைக்கண்ணன் அவளுடன் மீண்டும் கதைக்கத் தொடங்கினான். அவன் அவளின் படிப்பைப் பற்றிக் கேட்டான். அவள் தனது பட்டப் படிப்பை ஏன்

ஜெவர்த்தனாபுரப் பல்கலைக்கழகத்தில் படிக்க வேண்டி வந்தது என்பது பற்றிக் கூறினாள். அந்த விபத்தே அவளது வாழ்க்கையின் விபத்தாகிற்று என்றாள். தனக்குச் சட்டம் பயில மிகவும் விருப்பம் இருந்தது என்றும், சட்டத்தரணியான அப்பா கிறுக்கு வேலை செய்துவிட்டு, குடும்பத்தை நடுத்தெருவில் நிறுத்திவிட்டுப் போனதால், வீட்டில் சட்டம் படிப்பதற்குத் தன்னை அனுமதிக்கவில்லை என்றும் கவிதைக்கண்ணனிடம் கூறினாள்.

சாரதி வாகனத்தை நிறுத்துவதாய்த் தோன்றவில்லை. அவள் வேதனையில் முகத்தைச் சுளித்த வண்ணம் கவிதைக்கண்ணனைப் பார்த்தாள். பின்பு பொறுக்க முடியாது 'நிப்பாட்டச் சொல்லுங்கோ.' என்றாள். கவிதைக்கண்ணன் சாரதியிடம் மீண்டும் கதைத்தான். ஒருவாறு சாரதி வாகனத்தை ஒரு விடுதியில் நிறுத்தினான்.

கவிதைக்கண்ணனுக்குச் சிறுநீர் கழிக்கவேண்டிய அவஸ்தை இல்லாவிட்டாலும் அவளின் பாதுகாப்பிற்காய் அவளோடு சென்றான். அவளைத் தனது சொந்தம் என்பதாக அவன் எப்போது நினைத்தான்? அவள் பாதுகாப்பிற்குத் தானே பொறுப்பு என்பதாய் அவன் உணர்ந்தான். அவள் அலுவல் முடிந்த பின்பு வெளியே வந்தாள். உள்ளே அவ்வளவு துப்பரவு இல்லை என்று அவனிடம் குறைபட்டாள்.

கவிதைக்கண்ணன் அவளைக் காலைச்சாப்பாடு சாப்பிடச்சொல்லிக் கட்டாயப்படுத்தினான். அவள் அதற்கு மறுத்துவிட்டாள். அதற்குப் பதிலாக தேநீர் அருந்துவதாக ஒத்துக்கொண்டாள். இருவரும் அங்கே தேநீர் அருந்தினார்கள். இரவு அவள் சாப்பிடவில்லை என்பதை ஞாபகம் வைத்தே கவிதைக்கண்ணன் அவள் ஏதாவது சாப்பிட வேண்டும் என்று எதிர்பார்த்தான். அவளோ பயணம் செய்யும் போது தான் அதிகம் சாப்பிடுவதில்லை என்றும், எப்போதும் வீட்டிற்குச் சென்றுதான் சாப்பிடுவது வழக்கம் என்றும் அவனிடம் கூறினாள். நல்ல வழக்கம் என்ற வண்ணம் கவிதைக்கண்ணன் தலையை ஆட்டினான். அவள் உடலை அழகாக வைத்திருப்பதற்கும் சாப்பாட்டைக் குறைத்துக்கொள்வாள் என்பது அப்போது அவனுக்குத் தெரியாது.

கொழும்பில் இருந்து கண்டிக்கான பயணம் நினைத்தது போல் இலகுவாக இருக்கவில்லை. வாகனம் மலைப்பாதையில் சுற்றிச் சுற்றி ஓடினாலும் தூரம் ஏதோ கழிவதாக இல்லை. கவிதைக்கண்ணன் அவளுடன் தனிமையில் இருக்கும் கணங்களுக்காய்த் துடித்தான். கவிதைக்கண்ணன் தனது மணவாழ்வு, குடும்பம் ஆகிய இரண்டும் பற்றிய சில பொய்களை அவளிடம் ஏற்கனவே சொல்லி வைத்திருந்தான். அவள் அதைப் பற்றிக் கதை எடுத்த போதெல்லாம் அவனுக்கு மனதெல்லாம் திகிலாகப் பயம் பரவிக்கொள்ளும். நல்ல வேளையாக அவள் அதிகம் நோண்டவில்லை. அவள் மற்றவர்களை அதிகம் நோண்டுவது இல்லை. தன்னை நோண்டுபவர்களுக்குப் பதில் சொல்வதும் இல்லை. இதைப் பின்னாளில் அவன் புரிந்து கொண்டான். மௌனம் கனகராசி என்பார்கள். அது களவின் பாசையாகி விடுவதும் உண்டு. மேலோட்டமாகக் கதைத்ததால் ஒன்றிற்கு ஒன்று முரணாக கவிதைக்கண்ணன் கதைப்பதாக அவள் குற்றம் கண்டுபிடிக்கவில்லை.

கண்டி கொழும்பு நெடுஞ்சாலையில் பயணித்த போது இடையில் பொலிசார் வாகனத்தை மறித்தனர். அவர்கள் சாரதியை அழைத்துச் சென்றார்கள். அரை மணித்தியாலத்திற்குப் பின்பு ஏதோ தண்டப்பணம் கட்ட வேண்டும் என்கின்ற எரிச்சலோடு சாரதி மீண்டும் வந்தான். பின்பு பிரயாணம் கண்டியை நோக்கித் தொடர்ந்தது.

கவிதைக்கண்ணன் தனது கைப்பையைக் குரங்கு குட்டியை வைத்திருப்பது போல் மடியில் வைத்திருந்தான். அதைப் பார்த்த அவள் ,

'உதென்ன பிள்ளையா... கைவிட மாட்டியளா? பேசாமா இப்பிடி வையுங்க.' என்று பறித்து இரண்டு பேருக்கும் நடுவே வைத்தாள்.

அவள் அப்படி உரிமை எடுத்துக் கொண்டது அவனுக்குப் பிடித்திருந்தது. அவளை இப்போது துணிவாக அடிக்கடி பார்த்தான். ஆலிங்கனம் செய்ய வேண்டும் என்கின்ற ஆசை மனதில் பேயாகக் கூத்தாடியது. மனித நாகரிகம் பேய்க் கூத்திற்குப் பிடரி தட்டியது. வாகனம் கண்டி நோக்கி விரைந்தது. கவிதைக்கண்ணன் சொர்க்கத்தைத் தொடமுடியாத தவிப்போடு பார்த்துப் பார்த்து வழிந்தான். கைக்கெட்டியது இன்னும் வாய்க்கெட்டவில்லை என்கின்ற தவுனம் அவனிடம்.

வாகனம் கண்டியை அடைந்ததும் எந்த விடுதிக்குப் போவது என்பதில் தடுமாற்றம். கவிதைக்கண்ணனுக்குக் கண்டி புதிது. அவன் எந்த விடுதியிலும் முற்பதிவு செய்துவிட்டு வரவில்லை. சாரதியும் புதிய இடம் போல் தடுமாறினான். பின்பு பாதையால் சென்றவர்களிடம் உதவி கேட்டான். கண்டி நகருக்குள் உள்ள குன்றின் உச்சியில் ஒரு நட்சத்திர விடுதி இருப்பதாய் அவர்கள் கூறினார்கள். 'அங்க போய் பாப்பம்.' என்றுவிட்டுக் கவிதைக்கண்ணனைப் பார்த்தான். கவிதைக்கண்ணனுக்கு இப்பொழுது வேண்டியது அவளுடனான தனிமை. அதற்காக அவன் எவ்வளவு பணத்தையும் செலவிடத் தயார். ஆகவே கவிதைக்கண்ணனின் அனுமதியோடு வாகனம் அந்தக் குன்றின் உச்சியை நோக்கிப் பயணித்தது.

அந்தக் குன்றின் உச்சியில் வைரக் கிரீடம் போல் அழகான நட்சத்திர விடுதி. மிகவும் துப்பரவாக, நவீனமாகத் தோன்றியது. வாகனத்தை நிறுத்திய உடனேயே பணியாள் வந்து வரவேற்றான். வாகனத்தின் கதவைத் திறந்து விட்டுச் சலாம் வைத்தான். வரவேற்பிடத்தில் இருந்தவளிடம் அறையுள்ளதா என்று கேட்க அவள் ஏழாயிரம் ரூபாய் என்பதாக அறையின் வாடகையைச் சொன்னாள். கவிதைக்கண்ணன் அது பிரச்சனை இல்லை என்றுவிட்டு அவளைப் பார்த்து அவளின் அடையாள அட்டையைக் கொடுத்துப் பதியுமாறு கேட்டான். தனது கடவுச்சீட்டைக் காட்டினால் நிறையப் பத்திரங்கள் நிரப்ப வேண்டும் என்கின்ற சலிப்பு அவனுக்கு. அப்படி இருந்தும் ஒரு பத்திரத்தில் அவள் கையெழுத்திட வேண்டியதாகிற்று. அவள் அதில் தகப்பனின் பெயரை கையெழுத்தாய்ப் போட்டது போல் இருந்தது. அவனால் அதை ஒழுங்காகப் பார்க்க முடியவில்லை. எதற்காக என்பதும் அவனுக்கு அப்போது புரியவில்லை.

வரவேற்பறையில் அலுவல்கள் முடிந்ததும் அறைச் சாவி தரப்பட்டது. பெட்டியை இழுத்த வண்ணம் ஒரு சிற்பந்தி அவர்களோடு கூட வந்ததால் கவிதைக்கண்ணனாற் சிலுமிசம் செய்ய முடியவில்லை. அவன் நல்ல பிள்ளையாக அவளோடு நடந்து சென்றான். இப்பொழுது அவளும் அவனோடு நெருக்கமாக நடந்து வந்தாள். அவள் அவனை அடிக்கடி பார்த்ததில் கவிதைக்கண்ணனுக்கு அடங்காப் புளுகம்.

விடுதியின் அந்த அறை மிகவும் நவீனத்தோடு தூய்மையாகப் பளிச்சிட்டது. ஐரோப்பியத் தரத்தில் கட்டிலும் மெத்தையும். அதற்குப் பொருத்தமான மின் ஒழி. அது ஒரு மம்மலான மயக்கத்தை அவர்களுக்குத் தந்தது.

அறைக்கு வந்ததும் சிற்பந்திக்கு ஒரு தாளைக் கொடுத்து கலைத்துவிட்டுக் கவிதைக்கண்ணன் கதவைச் சாத்தினான். பின்பு யன்னல் திரைச்சீலைகளை இழுத்துவிட்டான்.

அறைக்குள் இருந்த மம்மலான இருட்டும் ஒளியும் அவனுக்குப் பிடித்தது. அவள் தலை குழம்பி இருந்ததால் தலைவாரினாள். சிக்குப்பட்டால் அதை எடுத்துவிட வேண்டும். எடுக்காவிட்டால் திரண்டுவிடும் என்று அவனுக்குக் கூறினாள். கவிதைக்கண்ணன் பொறுத்திருந்தான். நித்திரைக்களை என்றாலும் அவள் நித்திரை கொள்ள விரும்புவதாய்த் தோன்றவில்லை. கவிதைக்கண்ணன் மெதுவாக அவளோடு பேசத் தொடங்கினான். பெண்ணுடன் தனிமை கிடைத்தால் வாள்கொண்ட அரசன் போன்ற துணிவு அவனுக்கு வந்துவிடும். அவள் முதற் கணவனால் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டவள் என்பதால் அவளோடு மென்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவன் அடிக்கடி ஞாபகம் செய்தான்.

'என்னைப் பிடிச்சிருக்கா? ' என்று அசட்டுத்தனமாக முதலில் கேட்டான்.

'உங்களைப் பிடிக்காமல் இவ்வளவு துாரம் வருவனா? என்ன கேள்வி இது இப்ப? ' அவள் திருப்பிக் கேட்டாள்.

வாயைக் கொடுத்து எதையோ புண்ணாக்கிய வருத்தத்தோடு கவிதைக்கண்ணன் வழிந்தான். இடக்கு முடக்காக யாராவது கதைத்தால் கவிதைக்கண்ணனுக்கு உடனே பதில் வராது. மூளை நரம்புகளில் மின்னோட்டத்தின் வேகம் அவனுக்குப் போதாது என்பது கவிதைக்கண்ணனின் அங்கலாயிப்பு. அவன் அதை யாரிடமும் சொல்வதில்லை. அடித்துப் பிடித்துக் கதைக்க முடியாதவனும் இந்தச் சமுதாயத்தில் மாற்றுத்திறனாளியாக வாழ வேண்டும் என்பது கவிதைக்கண்ணனின் அனுபவம். கவிதைக்கண்ணன் தன்னைச் சமாளித்துக்கொண்டு,

'எனக்கு உம்மை மொஸ்க்கில பார்த்த உடனேயே எங்கயோ பார்த்த ஞாபகம். என்ரை இதயத்துக்குள்ள நீர் புகுந்த மாதிரி ஒரு புது அனுபவம்.' என்றான் தனக்குத் தெரிந்த மொழி கலந்து.

'நல்லாக் கதை விடுறியள். அதோடை கவிதையும் விடுறியள். ' என்றாள் அவள் அதற்கும் மேலாக.

'இல்லை. உண்மையாகவே அப்படி நாங்கள் பழகின மாதிரி ஒரு உணர்வு. என்னால அப்படித்தான் உணர முடியுது. காதலை நான் நம்புறது இல்லை. எங்களுக்குள்ள இருக்கிறதும் காதல் இல்லை. இது ஒருவித அறிமுகம். இன்ரநெற்றால வந்த நட்பு. இண்டைக்கு என்ரை இதயத்துக்கு என்ன நடந்தது எண்டு எனக்குத் தெரியேல்லை.' என்றான்.

'ம்… காதல? ஏன் நீங்க அதை நம்புறேல்லை?' என்று அவள் கேட்டாள்.

'காதல் எண்டு ஏதாவது உண்மையாகவே இருக்குதா?' கவிதைக்கண்ணனின் அகராதியில் இதுவரை இருந்ததில்லை.

'அப்ப? நான் நம்புறன். அது தெய்வீக உணர்வு. ஆணையும் பெண்ணையும் இணைக்கும் அபூர்வமான சக்தி.' என்றாள் அவள் உணர்ச்சிவசமாக.

'ஓ அவ்வளவு நம்பிக்கையா? நான் அப்பிடி நினைக்கேல்லை.' என்றான் கவிதைக்கண்ணன்.

'அப்ப எப்பிடி நினைக்கிறியள்? நான் காதல் எண்டு ஒரு புனிதமான உணர்வு இருக்கு எண்டுறதை நம்பிறன். அதைமாதிரி கடவுளையும் நம்புறன்.' என்றாள் அவள்.

'ம்... காதல் எண்டுறது காமத்தை அடையப் பாசையாலும், பாவத்தாலும் ஆணும் பெண்ணும் ஆடும் நர்த்தனம். எல்லா உயிரினங்களும் புணர்வுக்கு முன் ஆடும் அதே ஆட்டத்தை... நாகரிகத்தையும், மொழியையும், அதீத உணர்வையும், கலந்து மனிதன் ஆடும் மட்டமான நடனம். அதைக் காதலாய், தெய்வீக உணர்வாய் மாற்றியது தந்திரமான மனித மூளை. அதுதான் காதல்... காதல்... காதல்... என்னைப் பொறுத்தவரை காமத்தைத் தீர்த்து, சந்ததியைப் பெருக்க ஆணும் பெண்ணும் சங்கமித்து இருக்க வேண்டிய கட்டாயத்திற்காக இயற்கை மனிதனுக்குக் கொடுத்த ஒரு உணர்வு காமம் அதன் திரிபு காதல்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'உங்களுக்குக் காதல்ல வெறுப்பா? எண்டாலும் நீங்கள் சொல்லுறது எல்லாம் சரி எண்டு இல்லை. காதல் இல்லாட்டி ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழேலாது. பிரிஞ்சு போயிடுவினம். உங்களுக்குக் கவிதை தத்துவம் எல்லாம் வரும் போல இருக்குது. ஆனாக் காதலையும் காமத்தையும் பிரிக்கத் தெரியேல்லையே?' என்றாள் அவள்.

'எனக்குக் காதலைப் பற்றிப் புரிந்தது அதுதான். அது சரி எனக்குத் தமிழ் தெரியாது எண்டு நினைச்சீரா?' என்றான் கவிதைக்கண்ணன்.

'சீ... நான் அப்படி நினைப்பனா, நீங்கள் ஒரு வித்துவான் இல்லையா? ' என்றாள் எள்ளலாக. கவிதைக்கண்ணனுக்கு அது விளங்கவில்லை.

'சரி. எனக்கு உம்மைப் பார்த்த உடனேயே இவ்வளவு பிடிக்கும் எண்டு நான் எதிர்பார்க்கேல்லை. பார்த்த கணத்தில இருந்தே காந்தமும் இரும்பும் மாதிரி. எனக்கே அதிசயமா இருக்குது.' என்றான் அவன். அவளை மோகத்தோடு பார்த்தான்.

'நானும் யாரோடும் இப்பிடி ஒட்டுறேல்ல. உங்களோடை பழகேக்க புறத்தி எண்ட மாதிரியே ஒரு நினைப்பு வரேல்லை.' என்றாள் அவள்.

'நாங்கள் ரெலிபோன்ல நிறையக் கதைச்சிருக்கிறம்தானே, அதால இருக்கலாம். முதன் முதல் இண்டைக்குப் பார்த்தாலும் ரெலிபோன்ல குட்டிக் குடும்பம் நடத்தி இருக்கிறம்தானே? இல்லையா? ' என்றான் கவிதைக்கண்ணன்.

'அப்படியா?' என்று அவள் நளினம் காட்டினாள்.

'அப்படி இல்லையா?' என்று அவன் வழிந்தான்.

'அப்பிடிக் குட்டிக் குடும்பம் நடத்துற அளவுக்கு நாங்கள் என்ன செய்தம்?' அவள் வேண்டும் என்றே கிளறினாள்.

'அடிப் பாவி, முத்தம் முத்தமா தந்திட்டு... இப்ப அப்பிடி என்ன செய்தம் எண்டா கேட்கிறாய்?' என்றான் கவிதைக்கண்ணன் ஒருமையில்.

'ஆ... அது முத்தமில்லை.' என்றாள் அவள்.

'அப்ப?' என்று புரியாது விழித்தான் கவிதைக்கண்ணன்.

'அது... அலுமேனியப் பேப்பர் கசக்கிற சத்தம்.' என்றாள் சுமதா.

'நான் என்ன பேயனா? நான் போன் பண்ணுவன் எண்டு நீ அலுமேனியப் பேப்பர் கொண்டு அலைவியா?' என்று கேட்க வேண்டும் போல் நாவெழுந்தது கவிதைக்கண்ணனுக்கு. அவனோடு மனித உறவுகள் பொதுவாக நீண்டகாலம் நிலைத்து நிற்பது குறைவு. வருவதும் போவதுமான உறவுகள் பற்றி அவனுக்கு நிறைய அனுபவம் உண்டு. இவளது உறவு சாகும் வரைக்கும் நிலைக்க வேண்டும் என்பது அவன் அவாவாகிற்று. அதற்காகச் சிலவேளை விளங்குவதையும் விளங்காததாய்க் காட்டிக்கொள்ள வேண்டும் என்று அவன் முடிவு செய்தான். அதற்காக, 'உண்மையாகவா?' என்று வழிந்தான்.

'ம்...'

'எப்பிடியோ நான் அதை முத்தம் எண்டுதான் நினைச்சன். நீ எனக்கு நிறையத் தந்திருக்கிறாய்.' என்றான் தோல்வியோடு.

'ம்.. ஈயப்பேப்பர்.... அதைக் கசக்கேக்க வாற சத்தத்தை ரேப்பண்ணீட்டுப் பிளைபண்ணினா உங்களுக்கு நிறைய முத்தம் கிடைக்கும்.' கூறிவிட்டு அவள் கண்ணைச் சிமிட்டினாள்.

கவிதைக்கண்ணனுக்குக் காமம் வெறியாகியது. அதை அடக்கிக் கொண்டு,

'நம்பிக்கைத் துரோகம். இப்ப உன்னிட்ட ஈயப்பேப்பர் இருக்கா?' என்று கேட்டான்.

'நம்பிக்கைத் துரோகம் எண்டு சொல்லாதேங்க. உங்கட வாயில இருந்து அதைக் கேட்க ஒரு மாதிரி இருக்குது. அப்பிடி ஒரு சந்தர்ப்பமே எங்களுக்குள்ள வரக்கூடாது.' அவள் பதை பதைத்தாள். கண் கலங்கினாள்.

'சரி அதைவிடும்... சும்மாதானே சொன்னனான். இப்ப உன்னிட்ட ஈயப்பேப்பர் இருக்கா? எனக்கு இப்ப நீ முத்தம் தரோணுமே?' என்று கவிதைக்கண்ணன் சமாளித்துக் கதையை மாற்றினான்.

கவிதைக்கண்ணன் அவள் அருகே நகர்ந்து உட்கார்ந்தான். அவள் வதனத்தை தன் இரு கைகளாலும் ஏந்தினான். அவள் எதுவும் சொல்லவில்லை. அவன் கண்களைப் பார்த்தாள். அவளில் ஒரு மயக்க நிலை. அதிக காலம் அன்பான ஆண் ஸ்பரிசம் படாத தவுனத்தின் ஊமத்தம் போல... உன்னைச் சரணடைந்தேன் என்கின்ற பெண்மையாக... ஆள ஊடுருவிய அவன் பார்வையோடு அவள் கன்னங்களை மென்மையாக விரல்களால் வருடினான். வீணை நரம்பை அதற்கு நோகாது மீட்டுவதான பக்குவம் அதில். பின்பு,

'நீ ரெலிபோனில தந்ததை இப்ப எனக்கு நேர தரோணும்.' என்றான்.

'ம்…' அவள் இராகம் இழுத்தாள். தொடர்ந்தும் கவிதைக்கண்ணனின் கண்களைப் பார்த்தாள். அதில் ஒருவித தவுனம். தாவென்று சொல்வதான பார்வை. இப்படியும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஈர்ப்பு ஏற்படுமா என்கின்ற மலைப்புக் கவிதைக்கண்னை முழுமையாக விழுங்க, அவன் அவள் நெற்றியில் விழுந்த கேசத்தை ஆள்காட்டி விரலால் வாரி மேலே தள்ளினான். அவளைத் தன்னோடு நெருக்கி அணைத்தான். சில பெண்களுக்கு அருகே சென்றாலே ஏதாவது பூசிய வாசம் வரும். சிலவேளை அது வாசமாக இருக்கும். சிலவேளை அது வயிற்றைப் பிரட்டும். சில பெண்களிடம் ஒவ்வா நாற்றம் வரும். அவளிடம் இருந்து எந்த வாசமும் வரவில்லை. இதழுக்கு எந்தச் சாயமும் அவள் பூசிக்கொள்ளவில்லை.

கவிதைக்கண்ணன் மெதுவாக அவள் கன்னங்களை தனது கையால் தொடர்ந்தும் வருடிய வண்ணம், அவள் கண்களையே பார்த்தான். 'கள்வெறி கொள்ளுதடி கண்ணே… மனம் உன்னோடு கரைந்து போகுதடி.' என்றான்.

'ஏன்?' அவள் கேட்டாள்.

அவன் பதில் சொல்லவில்லை. அவள் இதழை தன் விரலால் தொட்டுப் பார்த்தான். அது பூப்போல மென்மை காட்டியது. அவள் இதழை நோக்கி தனது இதழைக் கொண்டு சென்றான். கண்ணை மூடுவாளா? அல்லது தனது கைகளை இரு இதழ்களுக்கும் இடையில் கொண்டு வருவாளா என்கின்ற கேள்வியோடு அவன் இன்னும் நெருங்கினான். அவள் இன்ப வேதனையோடு கண்ணை மூடினாள்.

கவிதைக்கண்ணன் மெதுவாக, மென்மையாக அவள் இதழ் மீது முத்தம் வைத்தான். அவள் மென்மையானவள் என்று அவளது தங்கை சொன்னதை அவன் எப்போதும் வேத வாக்காய் எடுத்திருந்தான். அவள் கண்ணை மூடியவண்ணம் அவன் முத்தத்திற்கு ஈடுகொடுத்தாள். மெது, மெதுவாக அவள் அவன் இழுப்பிற்கு அடிபணிந்தாள். ஆழமான முத்தத்தில் ஆளையாள் மறந்து பாம்புகளாய்ப் பிணைந்தனர். ஊனோடு ஊன் கலந்தனர். இரண்டு இல்லாதாகினர்.

அவள் வேண்டாம் என்று சொல்லவில்லை. இவனும் பண்பிற்காகவும் விட்டுவிடவில்லை. முத்தம் ஏற்றிய சூட்டில் கவிதைக்கண்ணன் மெதுவாக மென்மையான அங்கத்தில் கைவைத்தான். அது மென்மையாக இருக்கவில்லை. அவன் எதிர்பார்த்ததைவிட வன்மையாக இருந்தது. அவள் எதுவும் சொல்லவில்லை. பின்பு சிறிது நேரத்தில் தன்னை மெதுவாக விடுவித்துக் கட்டிலில் சாய்ந்தாள்.

கவிதைக்கண்ணனும் அவளோடு ஒட்டியபடி படுத்தான். இப்போது கவிதைக்கண்ணனுக்கு அதிக துணிவு வந்துவிட்டது. படுத்திருந்தவள் மேலே மெதுவாகப் பரந்து அவளுக்கு முத்தம் கொடுத்தான். அவள் மயக்கத்தில் கண்ணை மூடினாள். ஏக்கத்தில் தவித்தாள். மறுப்பதை மறந்து மன்மத கலைக்குத் தயாரானாள். பின்பு தன்னை மீண்டும் மெதுவாக விடுவித்து,

'எனக்கு இப்பிடி இருக்கிறது இதுதான் முதல்தடவை.' என்றாள்.

'என்ன சொல்லுறீர்? நீர் கலியாணம் செய்து இப்ப டிவோர்ஸ்தானே?' என்றான் கவிதைக்கண்ணன்.

'ம்… ஆனா இப்பிடி இருக்கிறது இதுதான் முதல்தடவை எண்டு சொல்லுறன்.' என்றாள் அவள்.

'விளங்கேல்லை.'

'இப்பிடி முத்தம் குடுக்கிறது முதல்தடவை எண்டுறன்.' என்றாள் மீண்டும்.

'அப்ப முத்தம் கொடுக்காமல் பிள்ளையா?' என்றான் கவிதைக்கண்ணன்.

'ஐயோ…'

'அப்ப?'

'எங்களுக்குள்ள அது நடந்ததே ஒரே ஒரு முறைதான். அதுவும் முதல் நாள் வலோக்காரமா நடந்தது. அதுக்குப் பிறகு அவன் என்னைத் தொட்டதே இல்லை. நான் அதுக்கு இடம் குடுக்கேல்லை.' என்றாள் சுமதா.

'ஓ…' என்றான் கவிதைக்கண்ணன்.

தாம்பத்தியத்தைப் பற்றி யாராவது சொன்னால் அவர்கள் சொல்வதை அப்படியே நம்புவதைத்தவிர வேறு வழியில்லை. இத்தினை வருடம் ஒன்றாக இருந்தும் ஒரு தரத்தைத் தவிர மறுமுறை உறவே வைத்துக் கொள்ளவில்லை என்பது அதிசயம்தான். ஒரு தரம் நடந்த உறவிலேயே கற்பமானதும் அதைவிட அதிசயம்தான். அதிசயமாக இருந்தாலும் நடக்கமுடியாத அபூர்வம் என்றும் இல்லை. அவள் மார்பின் கடுமை ஏதோ ஒன்றைச் சொல்லாமல் சொல்லுவதாகவே கவிதைக்கண்ணனுக்குத் தோன்றியது. கவிதைக்கண்ணன் அவள் எதைச் சொன்னாலும் காமமயக்கத்தில் நம்பத் தயாராக இருந்தான்.

'சரி அந்தக் கெட்ட வாழ்க்கையை மறந்திடும். நானும் நீரும் இனிமேல் சந்தோசமா இருப்பம்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'ம்…' என்றாள் அவள்.

கவிதைக்கண்ணன் மீண்டும் சுமதாவை முத்தமிடத் தொடங்கினான். அவள் கண்களை மூடினாள். கவிதைக்கண்ணன் இப்போது மிகவும் ஆழமாக முத்தமிட்டான்.

★

சில வருடங்களுக்கு முன்பு சுவீடனில் இருந்த ஒரு பெண்ணோடு கவிதைக்கண்ணனுக்குப் பழக்கம் உண்டானது. அவள் விவாகரத்துச் செய்திருந்தாள். அவளது கணவனும் அண்ணியும் கூடிக்கொண்டு போய்விட அவள் சைவக் கடவுள்கள் ஏமாற்றி விட்டதாய் தேவாலயங்கள் தேடியலைந்தாள். மறுமணம் செய்ய உத்தேசம் எடுத்திருந்தாள். அப்போதுதான் சுவீடனுக்கு வகுப்பு ஒன்றிற்குச் சென்ற கவிதைக்கண்ணனைச் சந்தித்தாள். தற்செயலாக நடந்த சந்திப்பு அது. அவளும் பெரிய அழகியல்ல. கட்டையான உருவம். பொது நிறம். கருகருவென சுருண்ட அடர்த்தியான கூந்தல்.

கவிதைக்கண்ணனைக் கண்டது தொடக்கம் அவள் ஓய்வில்லாது அவனோடு கதைத்தாள். அவள் தன்னைப்பற்றிய உண்மைகளைக் கூச்சமில்லாது உளறினாள். கவிதைக்கண்ணன் தான் திருமணம் செய்து மனைவியோடு வாழ்வது பற்றி பெண்களிடம் பிரஸ்தாபிப்பவன் அல்ல. எல்லாவற்றிலும் உண்மையாக இருக்க வேண்டும் என்று எண்ணுபவன் இந்த விடயத்தில் மாத்திரம் ஒரு போதும் உண்மையாக இருந்தது கிடையாது. அவளுக்கும் அவன் அதைச் சொல்லவில்லை. உன்னைமாதிரி நானும் விவாகரத்துப் பெற்றவன் என்று கதைவிட்டான். அவள் அதிகம் படித்திருக்கவில்லை. மனிதர் சொல்வதை இன்னும் நம்பும் புனிதமான மனிசியாக இருந்தாள்.

அவள் அன்று தனது வீட்டிற்குக் கவிதைக்கண்ணனை அழைத்துச் சென்று கோழிப்புக்கை சமைத்துக் கொடுத்தாள். அவர்கள் ஊரில் அது பிரபலமாம். அவளது அலைபேசி எண்ணை அவன் கேட்காமலே கொடுத்து அனுப்பிவைத்தாள்.

சிலகாலம் அந்தத் தொடர்பு நீடித்தது. கவிதைக்கண்ணனுக்கு அவளை அடைந்துவிட வேண்டும் என்கின்ற எண்ணம். அவளிடம் மீண்டும் வரவேண்டும் என்று நச்சரித்தான். அவளும் சம்மதித்தாள். கவிதைக்கண்ணன் அவளிடம் சென்றான். அந்த முறை அவளோடு ஒரு பகல் முழுவதும் தங்கினான். அவளது பிள்ளைகளோடு வெளியே சென்று விளையாடினான். இரவு பிள்ளைகள் படுத்த பின்பு கீழே இருந்த அவளது படுக்கையறைக்குள்ளே புகுந்தான். அவளுக்கு கவிதைக்கண்ணனைப் பிடித்திருந்தது. முத்தம் கொடுக்கப் பதில் முத்தம் தந்தாள். நிறைய நேரம் முத்தம் கொடுத்துக் களைத்த போது கவிதைக்கண்ணன் எல்லை மீற முயன்றான். அவள் தடுத்தாள். தேவாலயத்தில் திருமணம் செய்த பின்புதான் இது எல்லாம் என்று உறுதியாகத் தடுத்தாள். கவிதைக்கண்ணன் அதைக் கேளாது தொடர்ந்தான். அவள் கவிதைக்கண்ணனை வெளியே தள்ளிவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு படுத்தாள். கவிதைக்கண்ணனுக்குப் பெரும் அதிர்ச்சி. கவிதைக்கண்ணன் கோலில் கிடந்த சோபாவில் படுத்தான். அடுத்த நாள் காலை சொல்லாமற் கொள்ளாமல் அவசரமாக நோர்வேக்குப் புறப்பட்டு வந்தான்.

அன்றில் இருந்து பெண்களை அடைவது என்பது மயிரைக்கட்டி மலையை இழுப்பது என்று அவன் எண்ணினான். அவனது அந்த எண்ணம் இங்கு ஆட்டம் கண்டுவிட்டது.

இவள் தவுனத்தில் தவித்தாள். கவிதைக்கண்ணனின் மன்மத வார்த்தைகளின் கிரக்கத்தில் தன்னை முழுமையாக இழந்தாள். விவாகரத்துப் பெற்ற பெண்கள் எல்லாரும் இப்படி வந்துவிடமாட்டார்கள் என்பது கவிதைக்கண்ணனின் ஐரோப்பிய அனுபவம். இவளோடான அனுபவம் அதை தலைகீழாய்ப் புரட்டிப் போட்டது. அன்பிற்கு ஏங்கியவள் அதைக் கண்டதால் எதையும் இளக்கத் துணிந்தாள் என்று கவிதைக்கண்ணன் எண்ணினான். வழி தவறும் போது வரம்புமுறை தடையாகாது என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை.

இனிய சங்கமம் அங்கு இசைந்தது... களைப்போடு அது முடிந்தது. உறவு என்னும் மாயவலை விரிந்தது. ஒவ்வொரு அடியாக வலைக்கு உள்ளே செல்லும் மீனாகக் கவிதைக்கண்ணனின் பரிதாப வாழ்க்கை. பெண் பற்றி அவன் புரிந்து கொண்டது சொற்பம் என்கின்ற உண்மை புரியாது, மன்மத நினைவில் மயங்கி, மதுவுண்ட வண்டாகக் கிடந்தான். பிணைந்தான்.

6

கவிதைக்கண்ணனுக்கு எங்கும் போக விருப்பமில்லை. எதுவும் செய்யத் தோன்றவில்லை. அவள் நோர்வேக்கு வந்து தன்னோடு வாழுவாள் என்கின்ற நம்பிக்கையும் ஆசையும் இன்னும் சாகாது அடம்பிடித்த வண்ணம் மனதின் ஓரத்தில் அவலமாகச் சேடமிழுக்கிறது. சாப்பிடாமல் படுக்க முடியாது என்று எண்ணியவன் பச்சைநாடு விடுதியில் இருந்த உணவகத்திற்குச் சென்று பால்த்தேநீர் அருந்தினான். ஒரு பெரிய கண்ணாடிக் குவளையில் தேநீர் கொடுத்தார்கள். கவிதைக்கண்ணனுக்கு அது பழக்கமான ஒன்று. அதைக் குடித்து முடித்தால் ஓரளவுக்கு அவனுக்குப் பசி அடங்கிவிடும். மாது இல்லாத குறையை மதுவிலாவது தீர்த்துக் கொள்வோம் என்கின்ற தவிப்பு அவனுக்கு. பச்சைநாட்டில் அசைவம் கிடையாது. மதுவுக்கு அசைவம் இல்லாது தித்திக்காது. அது அவன் சம்பூரண அனுபவம்.

வரும்போது வாங்கி வந்த 'Blacklabel' கன்னி கழியாது அவனுக்காகக் காத்திருந்தது. அவன் புறப்பட்டு வெளியே சென்றான். காலிரோட்டில் உள்ள முஸ்லீம் கடையொன்றில் கொத்துரொட்டி போடத் துவங்கியிருந்தனர். அவன் அங்கே சென்றான். இறைச்சிக் கொத்துச் சாப்பிட்டால் வயிற்றுக் கோளாறு உண்டாகும் என்கின்ற பயம். இலங்கைக்கு அல்லது இந்தியாவுக்குச் சென்றால் வயிறு சில நாட்களின் பின்பு குளப்படி செய்யத் தொடங்கிவிடும். என்னதான் பார்த்துப் பார்த்துச் சாப்பிட்டாலும் அதில் இருந்து தப்ப முடிவதில்லை. அடிக்கடி உளையும் அவஸ்தையாக அது நீளும். அதற்காக அவன் குளிசைகள் பாவிப்பான். அதுவும் கால் உழைவு போன்ற பின்விளைவுகளை உண்டு பண்ணுவதாய் எண்ணினான்.

காலிரோட்டில் இருந்த அந்த முஸ்லீம் கடையில் முட்டைக்கொத்துக்குச் சொல்லிவிட்டுத் தெருவால் போய் வருபவர்களைப் பராக்குப் பார்த்த வண்ணம் நின்றான். என்ன அதிசயம்? அவளா இல்லை அவளைப் போல் ஒருத்தியா? தனது மகனின் கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு அவனை நோக்கி வந்தாள். அவள் சிங்களத்தில் அந்தப் பிள்ளையோடு ஏதோ கதைத்த வண்ணம் வந்தாள். அவள் கண்களை கவிதைக்கண்ணன் ஆர்வமாகப் பார்த்தான். அவளும் ஒருமுறை அவனைப் பார்த்தாள். பின்பு தனது மகனைப் பார்த்துச் சிரித்த வண்ணம் ஏதோ கதைத்துக்கொண்டு சென்றாள். அவளுக்கும் இவளுக்கும் இடையில் சிறிது வித்தியாசம் காண்பதே கவிதைக்கண்ணனுக்குப் பெரும்பாடாகிற்று. உடுப்புக்கூட அவளின் இரசனை இவள் கொண்டிருந்தாள். அவள் தமிழ். இவள் சிங்களம். இருவரையும் படைத்த பிரமா தான் ஒருத்தன் என்பதைக் காட்டி இருக்கிறான். இவளைப் பார்த்ததால் அடங்கிக் கிடந்த அவள் நினைவு கவிதைக்கண்ணனிடம் வீறுகொண்டது.

கவிதைக்கண்ணனால் அதன் பின்பு அங்கே நிம்மதியாக நிற்க முடியவில்லை. முதலில் கொத்துரொட்டியை இங்கு வாங்கிவிட்டு மிக்சரை சரஸ்வதியில் வாங்கலாம் என்று நினைத்தான். அவளைப் பார்த்த பின்பு அந்த எண்ணத்தை மாற்றினான். எவ்வளவு கெதியாக விடுதிக்குச் செல்லலாமோ அவ்வளவு கெதியாக விடுதிக்குச் செல்லத் துடித்தான்.

அவள் தன்னோடு வந்திருக்க வேண்டும். தான் கட்டிய தாலிக்கு மதிப்பிருந்தால் தன்னை தவிக்க விட்டிருக்கக் கூடாது. அவள் எதையும் மதிப்பதில்லை. இருக்கும் அறிவை நேரிய வழியில் பயன்படுத்துவதில்லை. யாரது மதிப்பும் அவளுக்குப் புரிவதில்லை. ஏன் என்பது அவனுக்குப் புரியவில்லை. அவன் அவளின் நினைவில் புழுங்கினான். வெந்து பொசுங்கினான்.

கவிதைக்கண்ணன் அந்தக் கடையிலேயே ஒரு 'மிக்சர்' பொதியும் குடிநீர்ப் போத்தலும் வாங்கினான். பின்பு யாரையும் பாராது அவசரமாய் விடுதியை நோக்கி நடந்தான். அவனை நினைவுகள் சாட்டையால் அடித்து விரட்டுவதான அவதி. அதில் இருந்து தப்பி ஓடவேண்டும் என்கிற அவஸ்தை. உலகை மறந்துவிட வேண்டும், நினைவுகளைத் தொலைத்திட வேண்டும் என்கின்ற அவனது இந்த அடங்காத துடிப்பும், அவஸ்தையும், விடாப்பிடியாகத் தொடர்ந்தன. மனதை உடலில் இருந்து பிரிக்க முடியும் என்றால் அவன் வேற்றுக் கிரகத்திற்கும் போவதற்குத் தயாராக இருந்தான். அப்படிச் செய்ய முடியாது என்கின்ற உண்மை அவனுக்குக் கோபத்தைத் தந்தது. அவன் விடுதியை நோக்கி ஆவேசமாக விரைந்தான்.

விடுதிக்கு வந்ததும், இன்று இனி வெளியே போக வேண்டியது இல்லை என்று முடிவு செய்தான். இலங்கையில் இருந்தவரை காலையில் நீராடுவது வழக்கம். அது நாளையளவில் மதியத்தில் நீராடுவதாய் மாறியது. நோர்வேக்கு போன பின்பு படுக்க முதலே நீராடுவது வழமையாகிவிட்டது.

அவன் நீராடினான். சாகும்வரை நிலைத்துப் போகும் நினைவுகள் என எண்ணும் போது அவனை அறியாது பெருமூச்சு ஒன்று அவனைவிட்டுப் பிரிந்திற்று. கண்கள் கட்டுப்படுத்த முடியாமல் பனித்தன. விதி என்று இப்போது நம்பினான். எது நடக்கக்கூடாது என்று எண்ணினானோ அதுவே நடந்திட்ட அவஸ்தை. வேதனை. வெறுப்பு. எதை அவள் சொல்லக்கூடாது என்று நினைத்தானோ அதையே அவள் சொன்ன போது துடித்த துடிப்பு.

மறக்க வேண்டியதை வலுவில் நினைவுபடுத்திக் கொண்டாலும் கொள்ளலாம், மனதில் நிரந்தரமாக நிலைத்ததை மறந்துவிட முடியாதெனக் கவிதைக்கண்ணனுக்குத் தோன்றியது. கவிதைக்கண்ணன் வளமையாக 'Ice' போட்டே மது அருந்துவான். மதுவோடு வேற்றுத் திரவங்களைக் கலக்காது அருந்துவதுதான் அவனுக்குப் பிடிக்கும். அப்படி அருந்திவிட்டு வாய்க் கசப்புப் போக நீர் அருந்துவான். மது அருந்தும் பொழுது தாராளமாய் நீர் அருந்தவேண்டும் என்பதை அவன் வழுவாது கடைப்பிடிப்பது உண்டு.

இந்த விடுதியில் 'Ice' வாங்குவது பற்றி அவன் எண்ணவில்லை. அதை அவர்களிடம் கேட்பதற்கும் அவனுக்கு மனது இல்லை. இன்னும் கூச்சமிருக்கிறது. வெட்கம் இருக்கிறது. நல்ல மனிதனாக வாழவேண்டும் என்கின்ற ஆசை இருக்கிறது. ஆனால் பெண்கள் மீது அதீத மோகம் பிறக்கிறது. அதுவே அவனை அலைக்கழிக்கிறது. அழிவுக்கான பாதையாகிறது.

மோகத்தைக் கொன்றுவிடு – அல்லா லென்றன்

மூச்சை நிறுத்திவிடு

தேகத்தைச் சாய்த்துவிடு – அல்லா லதில்

சிந்தனை மாய்த்துவிடு

யோகத் திருத்திவிடு – அல்லா லென்றன்

ஊனைச் சிதைத்துவிடு

என்ற பாரதியை நினைத்தான். ம் எதுவும் நடக்கவில்லை. கவிதைக்கண்ணன் காலி நீர்ப்போத்தல் ஒன்றை எடுத்தான். அதற்குள் கால்வாசிக்கு மேலே வரும் வரை மதுவை ஊற்றினான். பின்பு நீரை விட்டு நிரப்பி அதன் மூடியால் மூடிவிட்டு அதைக் குலுக்கினான். மிக்சரையும் குடிப்பதற்கு நீரையும் மேசையில் வைத்துவிட்டுக் கதிரையை ஒட்ட இழுத்துப் போட்டான்.

புத்தகம் ஒன்று மேசையில் கிடந்தது. அதைத் தொடுவதற்கு மனம் ஏகவில்லை. அவன் நினைவுகள் மீண்டும் கண்டி நகரத்தின் மலையுச்சியில் இருந்த அந்த விடுதியில் போய் நின்றது.

★

இருவரும் மீண்டும் விழித்த பொழுது பிற்பகல் மூன்றுமணி இருக்கும். கவிதைக்கண்ணன் குளித்தான். அவளும் குளித்தாள். பின்பு இருவரும் புறப்பட்டு வெளியே சென்றார்கள். ஏதாவது சாப்பிட வேண்டும் என்பது கவிதைக்கண்ணனின் எண்ணம். அதை அவளிடமும் கூறினான். அவளுக்கும் பசிக்கத் தொடங்கியிருப்பதாய் அவனிடம் கூறினாள்.

கதவைப் பூட்டிவிட்டு நடக்கத் தொடங்கவே அவள் கவிதைக்கண்ணனின் முழங்கைக்கு உள்ளே தனது கையைக் கோர்த்துப் பிடித்த வண்ணம் நடந்து வந்தாள். கவிதைக்கண்ணனைச் சொந்த மனைவி அப்படிப் பிடித்து நடந்தது கிடையாது. அது வேறு உலகம். சுவீடனில் சந்தித்த பெண்ணும் இப்படித்தான் கையைக் கோர்த்து நடந்தாள். அவள் ஆசைப்பட்ட அளவிற்கு அதற்கு ஆயுள் இருக்கவில்லை. கவிதைக்கண்ணனுக்கு அப்படிக் கண்டியில் பிடிப்பதில் ஒருவித அசௌகரியம். யாராவது கண்டுவிட்டால் என்கின்ற அச்சம். சுவீடனில் அந்தப் பயம் பெரிதாக இருக்கவில்லை. கவிதைக்கண்ணன் ஏதும் சொல்லாது அவளோடு நடந்தான். அவள் அவனது கையை விடுவதாக இல்லை. அவனாகவும் அதை இழுத்துக்கொள்ள விரும்பவில்லை. அப்படிச் செய்தால் அவள் தப்பாக எண்ணி விடுவாளோ என்கின்ற பயம் அவனுக்கு.

குன்றில் இருந்து கீழே இறங்கி வரும்போது சில சிங்கள இளைஞர்கள் இவர்களைப் பார்த்து அறிமுகமாகச் சிரித்தார்கள். அவள் சிரித்தாள். கவிதைக்கண்ணனுக்கு அவள் கையைப் பிடித்து இருந்ததில் ஒருவித அழுத்தம். அவனுக்குச் சிரிப்பு வரவில்லை. அதை அவள் கவனித்துவிட்டாள்.

'சிரிச்சா என்ன முத்தா கொட்டிண்டிடும்?' என்று அவனைப் பார்த்துக் கேட்டாள்.

'ச்... நான் முறைக்கிற மாதிரி இருக்கா?'

'நீங்க சிரிச்சாத்தான் நல்லா இருக்கும். சிரியுங்க.' என்றாள் மீண்டும்.

'சரி... சிரிக்கிறன்.' என்றான் கவிதைக்கண்ணன்.

சிரிப்பு இயற்கையாக இருக்க வேண்டும். நட்பாக இருக்க வேண்டும். சிரிப்பு விதியை மாற்றுவதாக அமையக்கூடாது. கவிதைக்கண்ணன் அவள் சிரிப்புத் தன்விதியை மாற்றிவிட்டதாக எண்ணினான்.

ஒருவாறு சமாளித்த வண்ணம் கவிதைக்கண்ணன் அவளோடு நடந்தான். அவள் தனது கையை விட்டால் தனக்குச் சௌகரியமாய் இருக்குமென அவனுக்குத் தோன்றியது. அவளோ கையை விடுவதாய் இல்லை. எப்படி விடுவிப்பது என்கின்ற யோசனையோடு அவன் நடந்தான். இந்த உறவின் ஆயுள் எவ்வளவு என்பதும் அவனுக்குப் புரியவில்லை. அது அழியாது இருக்க வேண்டும் என்கின்ற ஆசை பலமாக முளை விட்டு வேரூன்றியதை அவன் உணர்ந்தான்.

கண்டி நகரப்பகுதி வாகனங்களாலும், மனிதர்களாலும் நெருங்கிப் பிதுங்கியது. அந்த நெரிசலுக்குள் அதிக தூரம் கையைக் கோர்த்துப் பிடித்த வண்ணம் அணைந்து செல்ல முடியவில்லை. இதுதான் சந்தர்ப்பமென கவிதைக்கண்ணன் அவளது கையை நழுவவிட்டு முன்னுக்கு நடக்கத் தொடங்கினான்.

சிறிது தூரம் சென்ற பின்பு அவள் பின்னுக்கு வந்ததால் கவிதைக்கண்ணன் ஒரு இடத்தில் ஒதுங்கி நின்றான். அவள் அவனிடம் வந்து சேர்ந்தாள். பின்பு அவனைப் பார்த்து,

'பயப்பிடுறியளா?' என்றாள். கவிதைக்கண்ணனுக்கு கையும் களவுமாய்ப் பிடிபட்ட கள்ளனின் நிலை. சமாளித்த வண்ணம்,

'என்னத்துக்கு? ' என்றான்.

'எனக்குத் தெரியுமா? கையப் பிடிச்சுகொண்டு வரப் பயமா? இல்லாட்டிக் கூச்சமா?'என்றாள்.

'பயம் இல்லை... கூச்சம்தான்.' என்றான். அவனுக்கு விழுந்தாலும் மீசையில் மண்ணொட்டவில்லை என்கின்ற நினைப்பு.

‘வெளிநாட்டில இவ்வளவு காலம் இருந்தபிறகும் உங்களுக்குக் கூச்சமா?’ என்றாள் அவள்.

‘வெளிநாடெண்ணடா எல்லாரும் அவுட்டுப் போட்டா திரியினம்?’ என்று கேட்டான் கவிதைக்கண்ணன்.

‘சீ என்ன கதை இது?’ என்றாள் அவள்.

‘பிறகென்ன? அவங்களும் மனிசர்தானே?’

கவிதைக்கண்ணன் திசையை ஒருவாறு மாற்றியதாகத் திருப்திப்பட்டான்.

‘சரி கையப்பிடியுங்க. கொஞ்சம் கொஞ்சமாய்க் கூச்சம் தெளிஞ்சிடும்.’ என்றாள் அவள்.

‘அப்படியா?’

‘ம்…’

கவிதைக்கண்ணன் இப்பொழுது அவளது விரல்களுக்குள் தனது விரல்களைக் கோர்த்துக் கொண்டான். அவள் அவனை இழுத்து நிறுத்தினாள். அங்கே ஒரு சாப்பாட்டுக்கடை இருந்தது. இருவரும் உள்ளே சென்றார்கள்.

மதியச் சாப்பாடு சாப்பிட்ட பின்பு கடைக்கு வெளியே வந்த கவிதைக்கண்ணனுக்கு இரவுச் சாப்பாட்டிற்கு ஏதாவது வாங்கிச் சென்றால் மீண்டும் மலையுச்சியில் இருந்து கீழே இறங்கி வரவேண்டிய அவசியம் இல்லை என்பது புரிந்தது. தேவையில்லாதவற்றிற்கு நேரத்தை விரயமாக்க அவன் தயாராக இல்லை. ஒரு கடையில் கறிரொட்டி செய்தார்கள். கவிதைக்கண்ணன் அவளைப் பார்த்து,

‘இரவைக்குச் சாப்பிட ஏதாவது வாங்கிக்கொண்டு போவமா?’ என்றான்.

‘உங்கட விருப்பம்’ என்றாள் அவள்.

‘அப்ப திரும்பி இரவைக்கு வருவம்’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘நான் சும்மா அப்பா. வாங்க ரொட்டி வாங்கிக்கொண்டு போவம். திரும்பி உந்த மலையில ஏறி இறங்கேலாது. எனக்கு இப்பவே சாதுவாக் கால் வலிக்குது. நல்லா றெஸ்ற் எடுக்கோணும்.’ என்றாள்.

‘அப்பிடியா? எடுப்பம் எடுப்பம்.’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘ம்…’ என்ற வண்ணம் அவள் கவிதைக்கண்ணனின் கையில் நுள்ளிவிட்டு, அவனை இழுத்துக் கொண்டு அந்தக் கடைக்குள்ளே சென்றாள்.

மீண்டும் அறைக்கு வந்ததும் கவிதைக்கண்ணன் அவளைக் மோகத்தோடு இறுக்கி அணைத்தான்.

‘அறையிக்க மாத்திரம் எந்தக் கூச்சமும் இல்லை உங்களுக்கு.’ என்றாள் அவள். ‘அப்பிடி இல்லை. உன்னப் பார்க்கிற நேரம் எல்லாம் என்ரை மனசுக்க பொங்கிற கள்வெறி உனக்குத் தெரியாது. அந்த அவஸ்தை

எனக்கு மட்டும்தான் தெரியும். எப்படி இருந்தாலும் மற்றைய மனிசருக்கு முன்னால கூச்சமாகத்தானே இருக்கும்? இருக்குது. அதுதானே நாகரிகம்? இப்ப தனிமை. நானும் நீயும் மட்டுமான நாலுசுவர்களாலான எங்கடை உலகம். எதுக்கு நான் தயங்கோணும்? சொல்லடி என் மாயப் பெண்ணே? ' என்றான். அவள் மாயம் புரியாது இவன் மருவினான்.

'இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்கிற மாதிரி உங்கட பௌவியம். தனிமையில நிறையக் கவிதையும் வருகுது.' என்றாள் அவள்.

'பூனைதான் நல்லாய் பால் குடிக்கும். கண்ணை மூடிக்கொண்டு உலகம் இருண்டு போச்சுது எண்டு நினைச்சுக் குடிக்கும்? அதைவிட மனசுக்குப் பிடிச்ச பெண்ணோட இருந்தா எல்லாருக்கும் கவிதை வரும். புற உலகு இருண்டு போயிடும். இருண்டு போகட்டுமே.' என்றான் கவிதைக்கண்ணன்.

'உண்மையாவா? என்ன உங்கடை மனசுக்குப் பிடிச்சிருக்கா?' என்றாள் ஆச்சரியமாகத் தனது முகத்தை வைத்துக்கொண்டு.

'எனக்குச் செருப்பால அடிக்கோணும். அதுல வேற சந்தேகமா? சர்வசத்தியமாகச் சொல்லுறன்... என்ரை இதயத்தின் முழுத் துடிப்பை ஆட்கொண்ட முதல் சீவன் நீ ஒருத்தி மட்டும்தான்.' என்றான் கவிதைக்கண்ணன். அவன் உள்ளம் அப்படித்தான் கரைந்தது.

அதைக்கேட்ட அவள் அவன் கைகளோடு தன்கைகளைக் கோர்த்தாள். இதழில் அழுத்தமாக முத்தம் கொடுத்தாள். அவன் அவளை கெட்டியாகப் பிடித்தான். மூச்சை அடக்கி ஆழமான முத்தங்கள் பொழிந்தான். அந்த முத்தப் பொளிவில் இரத்தம் சூடாகி... மௌனமான சூழலில், இயக்கமாகச் சிலகணங்கள் இயற்கையின் நியதிக்கு அமைய, முடிந்த பின்பு... கவிதைக்கண்ணன் அவள் எழுந்து இருந்த போது நெற்றியில் வழிந்த கூந்தலை விரல்களால் கோர்த்துப் பின்னே தள்ளினான். மேல் நெற்றியில், உச்சி பிரியும் இடத்தில், ஆழமான அழியாத வடு ஒன்றைக் கண்டான். அதை அவன் தனது விரல்களால் ஸ்பரிசித்தான். அவள் அவன் கைகளைப் பிடித்தாள்.

'என்ன இது?' என்றான்.

'அவன் அடிச்சதில வந்த காயம்.' என்றாள் அவள்.

'அவன் நிறையக் கொடுமைப்படுத்தினவனே?'

'ம்... நிறைய... அதை நினைச்சாலே தலையிடிக்கும்.'

'பொலிசில பிடிச்சுக் குடுத்திருக்கோணும்.' என்றான் அவன் கோபமாக.

'அப்பிடிச் செய்யமுடியாத நிலை. நாட்டில பிரச்சனையான நேரம். அவன் புலியெண்டு சொல்லி எங்களை மாட்டிவிட்டிருப்பான். அதைவிட நாங்கள் யாருக்கும் எந்தத் துன்பமும் செய்யாமல் வாழ வேணும் எண்டுறதுதான் என்ரை உயிர்மூச்சு. அவன் செய்யிறது அவனுக்கு. நான் நல்ல மனிசியா வாழ வேணும். அதுதான் என்ரை விருப்பம்.' என்றாள் அவள்.

அவளது மனமே ஒரு குறுக்கெழுத்து போட்டியாக அவள் சொற்கள் தலைகீழாக வருவதுபற்றிக் கவிதைக்கண்ணனுக்கு என்ன புரியும்? பொய்யும் காமத்தில் மெய்யாகும், புரிந்து கொள்ள முடியாத போதையே காதலாகும். உயர்ந்த உள்ளத்தின் கருத்துகளாய் ஒளித்திருந்த பசப்பை அவனறியான் அன்று.

'உண்மையிலேயே நீ ஒரு அற்புதமான பெண்.

இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண

நன்னயஞ் செய்து விடல்

எண்டு வள்ளுவன் சொன்ன மாதிரியான பெண்.' என்று உரைத்து அவளை மோகத்தோடும், பெருமிதத்தோடும் பார்த்தான்.

'தாங்ஸ்.'

'உனக்கு முதல் இப்பிடியான உள்ளம் படைச்ச யாரையும் நான் சந்திச்சது கிடையாது. அப்பிடிப்பட்ட நட்புக் கிடைச்சிருந்தா சிலவேளை நான் உன்னை சந்திச்சிருக்கவே மாட்டன். ஆனா நான் இப்பதான் அதிஸ்ரசாலி எண்டு நினைக்கிறன். உன் நட்பு... உன் உறவு... நான் சாகிறவரைக்கும் பறிபோயிடக் கூடாது. அதுக்காக நான் எதுவும் செய்வன்.' அவன் அதை அழுத்தி மனதில் இருத்தியே சொன்னான்.

'உங்களுக்கு அது நிச்சயமாக் கிடைக்கும். நான் யாருக்கும் கெடுதல் நினைக்கிறேல்லை. எங்கடை குடும்பமும் அப்பிடிதான். அப்பா விட்டிட்டுப் போனபிறகு நாங்கள் கஸ்ரப்பட்டுத்தான் வாழ்ந்தம். அப்பிடி இருந்தும் அம்மா எங்களை எந்தக் குறையும் இல்லாமல்தான் வளர்த்தவா. அதுவும் எனக்குச் செல்லம்கூட. அதுக்குத்தான் கடைசியில நான் அவனிட்ட நிறையக் கஸ்ரப்பட வேண்டியதாய்ப் போயிட்டுது.' என்றாள் அவள்.

'சரி. கவலைப்படாத. இனி உனக்குச் சந்தோஷமான வாழ்க்கை கிடைக்கும். இல்ல கிடைச்சிட்டுது.'

'தாங்ஸ்.' என்ற வண்ணம் நன்றியோடு பார்த்தாள். அவன் மோகத்தோடு அவளை மீண்டும் இழுத்து இறுக்கி அணைத்தான்.

காதலிக்கும் இரு சீவன்கள் தங்களைப் போல யாரும் இதற்கு முதல் உயிருக்கு உயிராகக் காதலித்து இருக்கமாட்டார்கள் என்றே எண்ணுவார்கள். அப்படியே கவிதைக்கண்ணனும் எண்ணினான்.

★

அடுத்த நாள் காலைச்சாப்பாட்டை விடுதியிலேயே சாப்பிட்டார்கள். கவிதைக்கண்ணனுக்கு இன்னும் சில நாட்கள் அங்கே தங்க வேண்டும் என்கின்ற ஆசை. காலைச் சாப்பாடு முடித்துவிட்டு வரும்போது அவன்

தனது விருப்பைத் தெரிவித்தான். அதற்கு அவள் அம்மாவிற்குத் தான் பரீட்சை எழுதப் போவதாகப் பொய் சொல்லிவிட்டு வந்ததாகவும், தான் நாளைக் கட்டாயம் போய்ச் சேரவேண்டும் எனவும் கூறி மறுத்துவிட்டாள். அதைக்கேட்டுக் கவிதைக்கண்ணனுக்கு இதயம் பிரிவதான வலி. அவளை எடுத்த எடுப்பிலேயே கட்டாயப்படுத்த முடியாது என்கின்ற யதார்த்தம். அவன் அதற்குமேல் அவளை வற்புறுத்த விரும்பவில்லை. அவனது மனது மாத்திரம் இவளோடு காலம் பூராகவும், ஒரு கணம்கூடப் பிரியாது இருக்க வேண்டும் என்று யதார்த்தம் மறந்து, தவம் செய்தது.

அவளின் முடிவை மாற்ற முடியாது என்பதை அறிந்த பின்பு கவிதைக்கண்ணன் வரவேற்பறையில் இருந்த பெண்ணிடமே ஒரு வாடகை வண்டி ஒழுங்கு செய்து தரும்படி கேட்டான். வரவேற்பறையில் இருந்த சிங்களப் பெண் மிகுந்த இன்முகத்தோடு அதை ஒழுங்கு செய்து கொடுத்தாள். வாடகை வண்டி எட்டுமணி போல் விடுதிக்கு வந்தது. அது குளிரூட்டப்பட்ட வாகனமாக இருந்ததில் கவிதைக்கண்ணனுக்கு ஒருவித சௌகரியம். அதைவிடச் சௌகரியம் சாரதி சிங்களவனாய் இருந்தது. தமிழில் தான் நினைத்ததை அவளோடு கதைத்து வரலாம் என்கின்ற ஆறுதல் அவனுக்கு.

இருவரும் பின்னாசனத்தில் அமர்ந்தார்கள். அவள் கவிகைத்கண்ணனை நோக்கி அமர்ந்தாள். கவிதைக்கண்ணனும் அவளைநோக்கி அமர்ந்த வண்ணம் அவளது கண்ணையே பார்த்தான்.

மனது அவளிடம் மண்டியிடுவதை அவனால் உணரமுடிந்தது. இவள் எப்படியான பெண் என்பதை அவனால் இந்தக் குறுகிய காலத்திற்குள் அறியமுடியாவிட்டாலும் இவள் இல்லாது இனி வாழ முடியாது என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. அவள் நல்லவள் என்பதை அவன் முழுமையாக நம்பினான். இவளைச் சந்திக்காமல் போயிருக்கலாம். விடுபட முடியாத இந்த தொடுப்பிற்குள் விழுந்திருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. அப்படிப் போயிருந்தால் விலை மதிக்க முடியாத இந்த வாழ்பனுபவம் கிட்டாமலே போயிருக்கும். அதேவேளை இவளைச் சந்தித்து இருக்காவிட்டால் இவளைப்பிரிய வேண்டும் என்கின்ற கவலையும் தோன்றி இருக்காதெனக் கவிதைக்கண்ணன் எண்ணினான். வாழ்க்கை என்பது ஒருமுறை மட்டும் வருவது. இந்த அனுபவமும் ஒரே ஒருமுறையானது. அவன் திருப்தியுடன் சிரித்தான்.

தனது திருமண வாழ்வு, தனது குடும்பம் பற்றிய உண்மைகளை கவிதைக்கண்ணன் அவளிடம் கூறாது முழுமையாக மறைத்துவிட்டான். அது தெரியவந்தால் என்கின்ற பயம் அவனை இடைவிடாது குழப்பியது. அதை எப்போது உளறுவேன் என்கின்ற பயமும் பதட்டமும் அவனை அடிக்கடி ஊமையாக்கின.

கவிதைக்கண்ணன் தனது குடும்பம் பற்றி அவளுக்குச் சொல்லும் போது தனக்கு ஒருவரும் தற்போது இலங்கையில் இல்லை என்று கூறிவிட்டான். தேவையில்லா நோண்டல்களைத் தவிர்ப்பதற்காக அவன் இருந்த உறவுகளை இல்லை என்று சொல்லி வைத்தான். இப்போது அதை நினைக்கத் தான் எல்லாவற்றையும் சொதப்பி வைத்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது. சொதப்பாவிட்டாலும் இப்படி ஒரு நட்பு கிடைத்திருக்காது என்கின்ற உண்மையும் புரிந்தது. பொய்யால் வந்த உறவு பொய்த்துப் போகுமோ என்கின்ற கவலை அவன் கலகலப்பை விழுங்கியது. அவன் அவள் கண்களை மோகத்தோடு பார்த்தாலும் அவன் யோசனைகள் எங்கோ அலைமோதின.

அவனது இருந்தும் இல்லாத இருப்பை அவள் கவனித்து வந்தாள்.

வாகனம் கண்டியைப் பிரிய மனம் இல்லாது பிரிந்து கொழும்பை நோக்கி விரைந்தது.

'என்னப்பா எப்ப பாத்தாலும் யோசிச்சுக் கொண்டே இருக்கிறியள்?' என்றாள் அவள்.

'சீ அப்பிடி ஒண்டும் இல்லை.' என்று கவிதைக்கண்ணன் அவசரமாகச் சமாளித்தான்.

'ஏதோ கடுமையா யோசிக்கிறியள். சரி அதை விடுங்க. உங்களுக்குச் சொந்தக்காரர் எண்டாலும் கலியாணம் செய்யது வைக்க மாட்டினமே?' என்றாள் அவள் கவிதைக்கண்ணனைப் பார்த்து.

'நான் அவையோட அவ்வளவு குளோசா இதையெல்லாம் கதைக்கிறேல்லை.' என்று கூறிக் கவிதைக்கண்ணன் சமாளித்தான்.

'அப்ப தனிக் கட்டை மாதிரி...?'

'ம்... அப்பிடிதான்...' என்றான்.

'ஒருவகையில நீங்கள் பாவம். எனக்குத் தங்கச்சி எண்டா உயிர். நானும் அவளும் ஒட்டிப் பிறந்த மாதிரி. அடிக்கடி கதைப்பம். அம்மா எண்டாலும் அப்பிடிதான்.' என்றாள் அவள் கவிதைக்கண்ணனைப் பார்த்து.

'நீர் குடுத்து வைச்சநீர்.' என்றான் அவன்.

'ம்... நீங்கள் ஏன் வேறயாரையும் கலியாணம் செய்யக்கூடாது?' என்று திடீரெனக் கவிதைக்கண்ணனைப் பார்த்துக் கேட்டாள்.

'என்ன சொல்லுறீர்?' என்று அவன் அதிர்ந்தான்.

'நான் கலியாணம் செய்து பிள்ளையும் பெத்தவள். நீங்கள் ஒண்டா இருந்தாலும் உங்களுக்குப் பிள்ளையள் இல்லைத்தானே. அதால நீங்கள் கலியாணம் செய்யாத பெம்பிளையாப் பார்த்துக் கலியாணம் செய்யலாம்தானே?' என்றுகூறி அவள் அவனை ஆழம் பார்த்தாள்.

'அப்படி என்றால் இந்த இரவுக்கு, இந்த உறவுக்கு இவள் என்ன அர்த்தம் வைத்திருக்கிறாள்?'

கவிதைக்கண்ணனுக்குச் சிலகணங்கள் தன்னையே நம்ப முடியவில்லை. ஐரோப்பிய பெண்களே இந்த மாதிரி எண்ணுவார்களோ தெரியாது. இவள் தன்னோடு ஒரு இரவையும் பல உறவையும் கழித்த பின்பு ஞானம் பிறந்ததாய் நீங்கள் ஏன் கன்னிகழியாத பெண்ணைத் திருமணம் செய்யக்கூடாது என்று கேட்கிறாள் என்பது அவனைக் குழப்பியது. அவனுக்குத் தான் சொல்லிய பொய்கள் வயிற்றைப் பிரட்டியது. அந்தப் பொய்களே இவளை இப்படிக் கேட்க வைத்தது என்கின்ற மனவுறுத்தல் இன்னும் அதிகமாகியது. தான் செய்த குற்றத்தின் விளைவை அவன் உணரத் தொடங்கினான்.

'என்ன அடிக்கடி ஏதோ யோசினையில இருக்கிறியள்?' மீண்டும் திடீரெனக் கேட்டாள். கவிதைக்கண்ணன் தடுமாறிப் போய்விட்டான். பின்பு சமாளித்த வண்ணம்,

'இல்ல எனக்கு நீயே போதும்.' என்றான்.

'அப்பிடி இல்லை. நீங்கள் கலியாணம் செய்யேல்லைத்தானே? எங்கட சொந்தத்தில நல்ல நிறமா சுருண்ட முடியோட ஒரு பெம்பிளை இருக்குது. நானே வேணும் எண்டாக் கேட்டுச் சொல்லுறன்.' என்றாள் சுமதா.

'நீர் என்ன கதைக்கிறீர்? அப்ப இந்த இரவுக்கு என்ன அர்த்தம்? எங்கட உறவுக்கு என்ன அர்த்தம்? உமக்கு என்னில விருப்பம் இல்லையா? என்னோடை தயவுசெய்து இப்பிடிக் கதைக்க வேண்டாம். உமக்கு வேண்டாம் எண்டா வேண்டாம் எண்டு சொல்லும். அதுக்காக நீர் எனக்குக் கலியாணம் பேசுறன் எண்டு தியாகம் செய்யிறதா நினைக்காதீர். இவ்வளவுக்குப் பிறகும் நீர் இப்பிடிக் கதைக்கக்கூடாது. அது ஒருத்தருக்கும் அழகில்லை.' என்றான் கவிதைக்கண்ணன். விட்டால் அவன் அழத்தொடங்கிவிடுவான் என்கின்ற நிலைமை.

'ஏதோ சலனம் நடந்திட்டுது. அதை நான் நடக்கேல்லை எண்டே நினைக்கிறன். அதுக்காக உங்களை என்னோடையே வாழச் சொல்லிக் கேட்க முடியுமா? என் வாழ்க்கை முடிஞ்சு போச்சுது. உங்கட வாழ்க்கை இன்னும் தொடங்கவே இல்லை.' என்று அவள் தியாகச் செம்மல் போல் தொடர்ந்தாள்.

'தயவு செய்து என்னோடை இப்பிடிக் கதைக்க வேண்டாம். எனக்கு நீதான் வேணும். நல்லா விளங்கிக் கொள்ளும், நீர் மட்டும்தான் வேணும்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'அப்ப இதுக்கு முதல் எப்பிடி?' என்றாள் சுமதா கண்ணைச் சிமிட்டியபடி.

'அது எப்பிடியோ போச்சுது. போனது போகட்டும். இனி வருங்காலத்தைப் பற்றிக் கதைப்பம். அந்த வருங்காலத்தில எனக்கு நீ மட்டும்தான் வேணும். உனக்கு எப்பிடி?' என்றான் கவிதைக்கண்ணன்.

'எனக்கும் நீங்கள்தான் வேணும்.' என்றாள் அவள்.

'அப்பேன் அப்பிடிக் கதைச்சநீர்?' என்றான் கவிதைக்கண்ணன் பரிதாபமாக.

'இறந்தகாலத்தைப் பற்றி இப்பதானே கதைக்க வேண்டாம் எண்டு சொன்னனீங்கள். பிறகு நீங்களே மீறக் கூடாது.' என்று அவள் அவனை அதைப்பற்றிக் கதைக்கவிடாது மடக்கினாள்.

அவள் கதையால் மடக்குவாள் என்பதும் கவிதைக்கண்ணனுக்குப் புரிந்தது.

'சரி நான் மீறேல்லை.' என்றான்.

7

நினைவுகள் அவன் நிம்மதியைக் கொன்றன. அதில் இருந்து தப்பிப்பதற்கு என்ன வழி என்கின்ற இடைவிடாத தவிப்பும், தேடலும் ஓயாத அலையாக அவனிடம். 'Majestic City' என்கின்ற 'MC' அவன் நினைவில் வந்தது. அங்கே பல திரையரங்குகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு படம் பார்த்தால் அந்த நேரத்திலாவது இந்த வேதனையை மறந்து இருக்கலாமென அவனுக்குத் தோன்றியது. அவன் அதை நடைமுறைப்படுத்தினான்.

கவிதைக்கண்ணன் மூன்று மணிக்கே அங்கே சென்றுவிட்டான். மொழி, இனம், கலாச்சாரம் என்கின்ற எல்லைக் கோடுகளை மறந்து, ஆயிரம் ஆயிரம் பெண்களும் ஆண்களும் கொள்முதலுக்காய், பொழுது போக்குவதற்காய், வட்டமிட்டார்கள். வட்டமிடும் சிட்டுக்குருவிகளை பார்க்கும் மனநிலையில் அவன் இப்போது இல்லை. முதலில் தொடங்கும் படத்தின் பெயர் 'ஜயப் தாக் காய் யான்' என்றும் அது ஒரு இந்திப் படம் என்பதையும் கேட்டு அறிந்தான். தற்போதைக்கு ஏதாவது ஒரு இடத்தில் போய் அமைதியாய் இருந்தால் போதும் என்கின்ற நினைப்பு அவனுக்கு. அனுமதிச்சீட்டை வாங்கிக் கொண்டு அரங்கத்திற்குள் பிரவேசித்தான். அது ஒரு காதல் படம். சோடி சோடியான இளசுகளின் பிரசன்னம் அங்கே. கவிதைக்கண்ணனுக்கு ஏக்கம் பேய்க் கோலம் கொண்டது. இங்கு அவளோடு சோடியாக வந்து இருக்க வேண்டும். இன்று தனிமையாக... என அவன் எண்ணம் தீயாகப் பற்ற, மனது வெந்தது. திரும்பிப் போய்விடுவோமோ என்பதாக ஒரு கணம் அவன் நினைத்தான். தனிமையாக அறையில் இருந்தாலும் அவள் நினைவுதானே துரத்தப் போகிறது? என்பதை உணர்ந்தவன் சற்று ஒதுக்கமான இடம் பார்த்து அமர்ந்தான். நினைவுகள் உயிருக்குள் கலந்துவிட்டதான ஒரு ஆற்றாமை.

அந்தப்படம் உண்மைக் காதலுக்காய் எத்தனை தியாகத்தைக் காதலி செய்கிறாள் என்கின்ற கதை. கவிதைக்கண்ணனுக்கு தனது காதலியை இப்போது எண்ணக் கோபம் வந்தது. பின்பு அது சோகமானது. நினைவுகள் அவனை மீறி அவளிடம் போய் நின்றன.

★

வாகனம் கொழும்பை வந்தடைந்தது. அவள் தான் யாழ்ப்பாணம் போவதற்குப் பேருந்துப் பயணச்சீட்டை வெள்ளவத்தையில் வாங்க வேண்டும் என்று கேட்டாள். அதற்காக வாகனம் வெள்ளவத்தைக்குச் சென்றது. அங்கு பேருந்துப் பயணச்சீட்டு வாங்கிய பின்பு ஒரு நல்ல விடுதிக்குப் போகுமாறு சாரதியிடம் கவிதைக்கண்ணன் கூறினான். அவன் அவர்களை 'Global Towers' என்கின்ற விடுதிக்கு அழைத்துச்சென்றான்.

அந்த விடுதி இந்து சமுத்திரத்தின் கரையில் இருக்கும் வெளிச்சவீடு போல உயர்ந்து நின்றது. அதன் வரவேற்பறை மிகவும் அழகாய்க் காட்சிதந்தது. கவிதைக்கண்ணன் அறை கேட்டவுடனேயே அதற்கு எவ்வளவு ஆகும் என்பதைப்பற்றி அங்கு நின்ற பெண் பிரஸ்தாபித்தாள். இலங்கையர்கள் இங்கே தங்கமுடியாது அல்லது தங்கமாட்டார்கள் என்கின்ற நினைப்பு அவளுக்கெனக் கவிதைக்கண்ணன்

எண்ணினான். அங்கே மத்தியகிழக்கில் இருந்து வந்தவர்களும் ஐரோப்பியர்களுமே அதிகமாக நின்றார்கள். அதுவும் ஒரு காரணமாய் இருக்கலாம் என்பது அவனுக்குப் புரிந்தது.

கவிதைக்கண்ணனுக்கு அவள் அருகில் இருக்கும் குசியில் பணம் பெரிதாகப்படவில்லை. அங்கு அறை கிடைத்தது. இதே விடுதிக்கு வருவதற்குத்தான் கவிதைக்கண்ணன் முதலில் யாழ்ப்பாணத்தில் இருந்து அறை இணையத்தின்மூலம் பதிவு செய்தான். கடைசியில் அந்த நாளிற்கு அவனால் வரமுடியாமல் போனதால் அந்தப் பணம் வீண் விரயமாகிப் போயிற்று. எதையும் பற்றி கவிதைக்கண்ணன் கவலைப்படும் நிலையில் இன்று இல்லை. எல்லாவற்றையும் மீறி அவள் அருகில் இருக்கும் சந்தோஷம் அவனைக் கனவுலகில் மிதக்க வைத்தது. அந்தக் கனவுலகைத் தானே நாசமாக்கி விடுவேனோ என்கின்ற பயமும் அடிக்கடி எட்டிப் பார்த்தது. தனது சொற்களை எப்படித் தெரிவு செய்வது என்கின்ற குழப்பம் அவனிடம் தொடர்ந்தது. அதுவே அவன் பாரிய அவஸ்தையாகியது.

கவிதைக்கண்ணனுக்கு ஆறாவது மாடியில் அறை தரப்பட்டது. அங்கிருந்து பார்த்தபோது நீல வானம் இந்து சமுத்திரத்தை முத்தமிடும் காதல் கோலம் அவனை மயக்கியது. உள்ளே ஐரோப்பிய தரத்திற்கு குறைவின்றிய அறையின் தரம். அது ஒருவித மகிழ்வைக் கவிதைக்கண்ணனுக்கு உண்டுபண்ணியது. இவ்வளவு பணம் கொடுத்து இங்கே தங்க வேண்டுமா என்று அவள் கவலைப்பட்டாள். ஐரோப்பிய தரத்தில் இருந்தாலும் தொலைக்காட்சியை இயக்கிய போது அது ஒழுங்காக வேலை செய்யவில்லை. அதைப்பற்றிக் கவிதைக்கண்ணன் சலிப்போடு புகார் செய்தான். அவர்கள் உடனேயே வந்து பழுது பார்த்துவிட்டுச் சென்றார்கள்.

அதன் பின்பு கவிதைக்கண்ணன் மீண்டும் அவளை அழைத்தான். அவளும் அதை எதிர்பார்த்து இருந்திருக்க வேண்டும். ஈருடல் ஒருடலாகும் இனிய அந்தக்கணங்கள் முடிந்தது. கவிதைக்கண்ணனுக்குப் பசி வயிற்றைக் கிண்டியது. அவன் மதியச்சாப்பாடு வரவழைத்தான். அங்கே சாப்பாட்டின் விலையும் அதிகமாக இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். அதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாத அவன் மனநிலை.

கோழிக்கறி போன்ற ஒருவகைக் கறியோடு சோறும் 'Salad'ம் வைத்த சாப்பாடு வந்தது. அவளுக்கும் பசியாக இருந்திருக்க வேண்டும். எதுவும் சொல்லாது சாப்பிட்டாள்.

சாப்பிட்டுக்கொண்டிருந்த கவிதைக்கண்ணனுக்கு மனதிற்குள் போராட்டம் உக்கிரமாகியது. உண்மையைச் சொல்வதா அல்லது சொல்லாமல் நோர்வேக்குப் போய்ச் சேருவதா? சொன்னால் மட்டுமே மனதிற்கு நிம்மதி கிடைக்கும் என்பது அவனுக்குத் தெளிவாகிற்று. சொன்னால் உறவு நீடிக்குமா என்பது குழப்பமாகியது.

சாப்பிட்டு முடிந்த பின்பு இருவரும் படுத்தார்கள். அவள் கவிதைக்கண்ணனை அணைத்தபடி படுத்தாள். அவள் தனது முகத்தை உன்னிப்பாகக் கவனிப்பதை பார்க்காது கவிதைக்கண்ணன் சொல்வதா விடுவதா என்கின்ற மனப் போராட்டத்திற் கிடந்தான். அதைப்பார்த்த அவள்…

'என்ன நேடுக யோசிக்கிறியள்? நீங்கள் ஏதும் பொய் சொல்லுறியளா? உங்களுக்கு அங்க மனிசி இருக்கா?' அவள் திடீரென அதைக் கேட்டாள்.

கவிதைக்கண்ணன் அந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. அவனை முதல் பேரதிர்ச்சி தாக்கியது. வாய் பேச முடியாத ஊமையாகினான். பின்பு அவனுக்கு விம்மல் வந்தது. சர்வ நாசம் என்கின்ற அந்தரத்தோடு அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டான். எல்லாம் முடிந்தது என்கின்ற நினைப்பில் கண்ணீர் தன்பாட்டில் அனல் கண்ட மெழுகாகித் தலையணைக்குள் சங்கமமாகியது.

'சொல்லுங்க? அங்க உங்களுக்கு இன்னும் தொடர்பிருக்கா?'

'இப்ப நான் உண்மைச் சொல்ல வேணுமா இல்லையா? அப்பிடி உண்மைச் சொன்னா அதுக்குப் பிறகு நீ என்னோடை இருக்க மாட்டா?' என்றான் அவன்.

'அதைப்பற்றி பிறகு யோசிக்கலாம். இப்ப நீங்கள் உண்மையச் சொல்லுங்க.' என்று அவள் அவனை அவசரப்படுத்தினாள். கவிதைக்கண்ணன் உயிர் பிரியும் வேதனையோடு உண்மையைச் சொல்லத் தயாரானான்.

'சரி சொல்லுறன். அதை சொன்னாத்தான் எனக்கும் நிம்மதி கிடைக்கும். இப்பிடிப் பயந்து பயந்து வாழேலாது. பொய் கொல்லும் வியாதி. அனுபவிச்சது காணும்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'தெரியுதுதானே… அப்ப ஏன் பொய் சொன்னீங்கள்? அப்ப உங்களுக்கு மனிசி இருக்குது. இல்லையே?' என்றாள் எரிப்பது போல. கண்ணகிக்கு இருந்த சக்தி அவளின் கதையோடு முடிந்தது பலருக்கு வரமானது போல் தனக்கும் வரமானதாய் கவிதைக்கண்ணன் எண்ணிக் கொண்டான்.

'ஓம்… ஒரு பிள்ளையும் இருக்குது.' என்றான் அவன்.

'எல்லாம் பொய் சொல்லி இருக்கிறியள்.' என்றாள் அவள் கோபம் மாறாதவளாய்.

'ம்… பொய்தான். நான் சொன்னதெல்லாம் பொய்தான்.' கவிதைக்கண்ணன் தான் செய்ததை எண்ணி மனமுருகிக் கண்ணீர்விட்டான்.

அவள் கோபமாக எழுந்தாள். ஆடையில்லாது போர்வைக்குக் கீழே படுத்திருந்த உண்மை உறைக்க துவாய் ஒன்றை எடுத்து அவசரமாகச் சுற்றினாள். அதைத் தொடர்ந்து கவிதைக்கண்ணனும் எழுந்து சறத்தைக் கட்டினான். பின்பு கட்டிலின் ஒரு மூலையில் குனிந்த வண்ணம் இருந்தான். அவள் எழும் போது பார்த்த பார்வை கண்ணகியையும் எரித்துவிடும் கோபாக்கினி பொங்குவதாய் இருந்தது. அது அவனை உயிரோடு சாம்பலாக்கிய வேதனையைத் தந்தது. உருவம் இல்லாது அழிந்து போகும் பாக்கியம் இல்லாத தண்டனை. எல்லாமே பொய்த்து விட்டது. தனது பொய்யால் அழிந்து போய்விட்டது. பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது என்பது கவிதைக்கண்ணனுக்குப் புலனாகிற்று. அவனால் எதுவும் பேசமுடியவில்லை. அவன் குனிந்த வண்ணமே இருந்தான். அவமானத்தில் கூனிக் குறுகினான். அவளைப் பார்க்கும் துணிவில்லை அவனுக்கு. அவளுக்கு முன் அவன் குற்றவாளி. சமுதாயத்தின்முன் அவன் குற்றவாளி. அவள்

வதனத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. எப்படிச் சமாளிப்பது என்கின்ற எந்த நினைவும் அவனுக்கு இல்லை. அவனுக்கு எதுவும் புலப்படவில்லை. மனமார மன்னிப்பு கேட்டுவிடு என்று மட்டும் மனது மீண்டும் மீண்டும் சொல்லிற்று. அவன் அதைச் செய்தான்.

'என்ன மன்னிச்சிடு. நான் ஆசையில தப்புப் பண்ணீட்டன். தயவு செய்து மன்னிச்சிடு.' என்றான்.

'மன்னிக்கிற விஷயமா இது? ஏமாத்திக் கழுத்தறுத்துப்போட்டியள்.' என்று அவள் கோபம் மாறாது சொன்னாள். குளியல் அறைக்குள் மின்னலாகப் பாய்ந்து சென்று முகம் கழுவினாள். தலை சீவினாள்.

சரி… எல்லாம் முடிந்துவிட்டது. அவள் புறப்படுகிறாள். உண்மையைச் சொல்லாது இருந்தால் இன்னும் சிலகாலமாவது இழுத்து இருக்கலாம். அரிச்சந்திரன் போல உண்மை சொல்லப்போய் ஒன்றும் இல்லாது போய்விட்டது என்பதாக எண்ணினான் கவிதைக்கண்ணன். சிறிது நேரத்தில் உண்மைச் சொல்லாமல் ஒவ்வொரு கணமும் வேதனைப் படமுடியாது எனவும் அவனுக்குத் தோன்றியது.

அவள் என்ன நினைத்தாளோ தெரியவில்லை. மீண்டும் வந்து கட்டிலில் படுத்தாள்.

'என்னில இருக்கிற கோபம் மாற நான் என்ன செய்ய வேணும்?' என்றான். அவள் கோபமாகப் பார்த்தாள். பின்பு,

'ஒரு கணம் உங்களைக் கொலை செய்ய வேணும் போல இருந்திச்சுது. ம்… ஆம்பிளையளே இப்பிடித்தானோ எண்ட மாதிரி இருந்திச்சு. இப்ப கோவம் குறைஞ்சிட்டுது. நான் இப்பிடித்தான். உடன கோவப்படுவன். பிறகு உடனேயே மறந்தும் போயிடுவன். அதுவும் உங்களைப் பார்க்கப் பாவமா இருக்குது. கோவப்படக்கூட முழுசா மனசு வருகுதில்லை.' என்றாள் அவள். அது அவன் நினைத்திருந்ததைத் தலைகீழாய்ப் புரட்டிப் போட்டது.

'நீ ஒரு அற்புதமான பிறவி. நான் இந்த உலகத்தில கண்ட தேவதை. உன்னை நான் இழக்கிறதிலும் இறக்கிறது மேலாயிருக்கும்.'

'ம்… உதுக்கு மாத்திரம் குறையில்லை.'

என்று முகத்தைச் சுளிக்க கவிதைக்கண்ணன் அவளைத் தொடும் துணிவு அற்றவனாய் அசையாது கட்டிலின் விளிம்பில் இருந்தான். அவள் கட்டிலில் மீண்டும் படுத்து துவாயை அவிழ்த்துவிட்டு தனது நிர்வாண உடலைப் போர்வையால் போர்த்தினாள். கவிதைக்கண்ணன் அதைப் பார்த்தும் அசையத் துணிவில்லாது மரம் போல அப்படியே இருந்தான். அவனுக்கு அவளோடு போய் அணைய வேண்டும் போல் இருந்தது. அவள் என்ன சொல்லுவாள் என்கின்ற பயம் அவனை அசையவிடாது தடுத்தது.

'வேற ஏதும் பொய் சொன்னீங்களா?' என்றாள் அவள்.

‘இல்ல… வேற நான் என்ன பொய் சொல்ல இருக்குது?’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘அம்மாவுக்கு நீங்கள் சொன்னதையே சொல்லி வைச்சிருக்குது. அவவும் நம்பீட்டா. ஏன் இப்பிடிச் செய்த நீங்கள்?’ என்றாள் சுமதா கவிதைக்கண்ணனைப் பார்த்து.

‘ஏதோ… என் ஆழ்மனதின் ஏக்கம். உன்னப் போல ஒரு பெண்ணைச் சந்திக்காத தாகம். தப்பு செய்திட்டன்.’ என்றான் கவிதைக்கண்ணன் தன் பாணியில்.

‘ம்க்கும்… இப்படிக் கதைச்சுத்தான் ஏமாத்துவியளா?’ என்றாள் சுமதா.

‘இல்லை. எதுக்குக் கேட்கிறா?’ புரியாதவன் போலக் கேட்டான்.

‘உங்கட வசன ஜாலத்திற்கும் கவிதைக்குத்தான். அதை ஏமாத்துறத்துக்கும் பாவிப்பியளா?’ என்றாள் அவள்.

‘இல்லை’ என்றுவிட்டு வெட்கத்திலும் அவமானத்திலும் கவிதைக்கண்ணன் பேசாமல் இருந்தான். அவனுக்குச் செத்துப் போகலாம் போல் இருந்தது.

‘என்ன பேசாமல் இருக்கிறியள்?’ என்றாள் அவள்.

‘இனிமேல் நான் எதுக்காகவும் உன்னிட்ட பொய் சொல்ல மாட்டன். என் பிள்ளை மேல் சத்தியம். நீயும் எதுக்காகவும் பொய் சொல்லக் கூடாது. யாருக்கு யாராவது பொய் சொல்லுறது தெரிய வந்தாலும் அத்தோட எங்கட உறவு முறிஞ்சிடும். அது எந்த விஷயமாகவும் இருக்கலாம். சரியா? டீல்?’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘ஓகே… டீல். அப்ப வாங்க.’ என்று போர்வையை விலத்தி அவளது எண்ணை வழுவழுப்பான உடம்பைக்காட்டினாள்.

கவிதைக்கண்ணனுக்கு அதிசயமாகிற்று. இந்தத் துரோகத்தையும் மன்னிக்கும் மனிதர்கள் உண்டென்பதை அவன் இன்று கண்டாகிற்று. எதற்காக மன்னித்தாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. இத்தினை பெரிய மனம் கொண்டவளா இவள் என்பது அவனை வியப்பில் ஆழ்த்திற்று. இவள் என் தேவதை. நான் முற்பிறப்பில் செய்த தவத்தின் பயனிவள் என்பதாக அவன் எண்ணி மருவினான். அவள் பெருந்தன்மை அவன் ஆன்மாவைத் தொட்டது. அந்தக் கணத்தில் இருந்து அவளே உலகம் என்று அவனுக்கு ஆனது.

அப்படி அவன் உணர்ந்த போது அவள் போர்வையை மீண்டும் கிளப்பிக்காட்டி வருமாறு அழைத்தாள். அவளது வழுவழுப்பான நிர்வாண உடம்பு கவிதைக்கண்ணனின் கவலையை மறக்கடித்தது. பறிபோன உலகம் மீண்டும் கைக்கு வந்ததான நிம்மதி தந்தது. அவன் மெதுவாகப் போர்வைக்குள் புகுந்தான். பின்பு அவள்மேல் பாம்பு போல் படர்ந்தான். சொறி சொறி சொறி என்ற வண்ணம் அவளுக்கு எண்ணில்லா முத்தம் கொடுத்தான். பின்பு அவள் இதழை தன் இதழ் கொண்டு மூடி ஆழச் சுவைத்தான். ஆலிங்கனத்தில் அவன் ஆன்மாவும் உருகி அவளோடு சேர்ந்ததாக உணர்ந்தான். ஊனும் ஊனும் உருகி ஒன்றாகும் புணர்வு அங்கு நடந்தது.

சிலந்தி ஒன்று சுவரில் தன் வலை நோக்கிச் சென்றது. மனைவி இருக்கிறாள் என்பது தெரிந்தும் உறவு கொள்ள வரும் பெண்ணைப் பற்றி அவனிடம் எந்த அலசலும் அப்போது இருக்கவில்லை. அதற்கான பொறுமையோ, ஞானமோ அவனிற்கில்லை.

கண்டியில் இருந்து வரும் பொழுது வாங்கி வந்த றம்பிட்டான் பழத்தோடு அவள் அன்று இரவு ஏழுமணிக்கு யாழ்ப்பாணம் புறப்பட்டாள். கவிதைக்கண்ணனுக்கு இதயமே அறுந்து போவதான வேதனை. இந்த வேதனையை அவன் முன்பொருபோதும் அனுபவித்தது கிடையாது. அவளோடு இணைபிரியாது இருக்க வேண்டும் என்கின்ற அடங்காத பேரவாவில் அவன் துடித்தான். அவளைப் பார்த்து மீண்டும் இன்று போகத்தான் வேண்டுமா என்று பரிதாபமாய்க் கேட்டுப் பார்த்தான். போக வேண்டும் என்கின்ற அவளின் முடிவில் விட்டுக்கொடுப்பு இருக்கவில்லை. அம்மாவும் மகளும் தனியே இருப்பதாயும், அம்மாவிற்கு அடிக்கடி சுகம் இல்லாது வருவது உண்டு என்றும் கூறினாள். அதைவிடத் தான் பரீட்சைக்குப் போவதாய் கூறிவிட்டு வந்ததையும் ஞாபகப்படுத்தினாள். அதற்கு மேல் கவிதைக்கண்ணன் அவளை வற்புறுத்த விரும்பவில்லை.

இருவரும் ஏழுமணி போல் விடுதிக்கு வெளியே வந்து ஓட்டோ ஒன்றைப் பிடித்து 'See side' பிள்ளையார் கோயிலடிக்குச் சென்றார்கள். அப்பொழுது கொழும்பு யாழ்ப்பாணப் பேருந்துகள் அங்குதான் நிறுத்தப்படும். பேருந்தை அடையாளம் கண்டு ஆசனத்தைச் சரிபார்த்த பின்பு அவளையும் அழைத்துக் கொண்டு அருகில் இருந்த சாப்பாட்டுக் கடைக்குக் கவிதைக்கண்ணன் சென்றான். அவள் சாப்பிட மறுத்தாள். கவிதைக்கண்ணன் விடாப்பிடியாக அவளை சில இடியப்பம் சாப்பிட வைத்தான். பின்பு தேநீரும் பருகிவிட்டு மீண்டும் பேருந்து தரித்து நின்ற இடத்திற்கு வந்தார்கள்.

கவிதைக்கண்ணன் அவள் கைகளை பிடித்த வண்ணமே நின்றான். அவனுக்கு அதைவிட மனம் வரவில்லை. கண்டியில் அவள் கைகளைப் பிடிப்பதற்கே அவனுக்குக் கூச்சமாகிற்று. பயமாகிற்று. இங்கு அந்தக் கைகளை விடுவதை எண்ண இதயம் வெடித்துவிடும் போல நெஞ்சு நொந்தது. யாரும் கண்டால் என்கின்ற பயத்தை அவள்மேல் இருந்த காதல் காலால் எட்டி உதைத்தது. கடல் நானும் கரையைக் காதலிக்கிறேன் என்று சொல்வது போல இடைவிடாது ஆர்ப்பரித்தது. அந்த மூர்க்கத்தோடு அது கரையோடு மோதுவதாய், முத்தமிடுவதாய் உரக்கச் சொன்னது. நீ போகத்தான் வேணுமா? நீ போகத்தான் வேணுமா? என்கின்ற பரிதவிப்பைக் கவிதைக்கண்ணன் சொற்களில் வடிக்க முடியாத அவன் மனதின் அவல ஓலம் அவன் இதயத்தை நொறுக்குவதாக. அந்த ஓலத்திற்கு விடைகொடுப்பது போல,

'இன்னும் இரண்டுநாள் என்னோடை நிண்டு இருக்கலாம்' என்றான் மீண்டும்.

'எனக்கும் ஆசைதான். உங்களுக்கு வீட்டு நிலைமையைச் சொன்னான் தானே?' என்றாள் அவள். அவளது பார்வையில் இப்போது கனிவும், சாந்தமும், ஏக்கமும் இருப்பதைக் கவிதைக்கண்ணன் கண்டான்.

'ம்.... மனசு கேட்குதில்லை.' என்றான்.

'அப்பிடிதான் எனக்கும். என்ன செய்யிறது? சமாளிப்பம்.' என்றாள் அவள் அன்பு கனிய.

கவிதைக்கண்ணனுக்கு இப்போது நேரம் அவசரமாய் ஓடுவதான தவிப்பு. அவளுக்கும் அதே தவிப்புதான் என்பதை அவளது ஏக்கமான பார்வையும், கடிகாரத்தை அடிக்கடி பார்ப்பதும் காட்டிக் கொடுப்பதாய் நினைத்தான். அவள் இதுவரையிலும் இப்படி அன்பான ஆணோடு தாம்பத்திய வாழ்க்கை நடத்தியவள் அல்ல. அது கிடைத்த அந்தக் கணத்திலேயே பிரிந்து போக வேண்டி வந்ததை அவளால் தாங்க முடியவில்லை என்பதாகக் கவிதைக்கண்ணன் எண்ணினான். மனிதனாய் பிறந்தால் அவன் விரும்பியோ விரும்பாமலோ ஒரு சமுதாயத்திற்குள் வாழவேண்டும். அதன் கடமை, கட்டுப்பாடுகளுக்கு அடிபணிய வேண்டும். சிலவேளை சுய விருப்ப வெறுப்புகளை விட்டுக்கொடுக்க வேண்டும். தாங்களும் அதற்கு விதிவிலக்கு இல்லையெனக் கவிதைக்கண்ணன் தன்னைச் சமாதானம் செய்தான்.

பேருந்து புறப்பட்டது. அது புகையை பின்னே தள்ளி உடலை முன்னே நகர்த்தியது. புகையின் பின்னே கவிதைக்கண்ணன் கலங்கிய கண்களுடன் அதைப் பார்த்த வண்ணம் நின்றான். சிறிது நேரம் அப்படி நின்றவன் பின்பு உலக ஞானம் வந்தவனாய் ஓட்டோ ஒன்று பிடித்து விடுதிக்குச் சென்றான்.

இரவு நித்திரை முற்றாக வர மறுத்தது. நீண்ட நேரமாக அவள் நினைவு ஓயாது பிறாண்டி எடுத்தது. மனவுறுதி தொலைந்து போயிற்று. கவிதைக்கண்ணனின் கண்கள் அவளுக்காக இப்போது கலங்குவதான ஒருவித தோல்வி அவனை ஏறிமிதித்தது. அவன் புரண்டு புரண்டு படுத்தான். நேரம் கரைவதாக இல்லை. இரவு நீண்டதாகியது. இந்து சமுத்திரம் ஓயாது கரையை முத்தமிட்டது. எந்தன் மாதை முத்தமிட முடியவில்லையே என்கின்ற ஏக்கம் அவனை வாட்டியது. அந்த நீண்ட இரவுக்கும் தனது ஏக்கத்திற்கும் அவன் ஒரு வழிகண்டான்.

அடுத்த நாள் மாலை கவிதைக்கண்ணன் மீண்டும் யாழ்ப்பாணம் சென்றான். அவள் யாழ்ப்பாணம் பேருந்துத் தரிப்பிடத்திற்கு வந்தாள். துவிச்சக்கர வண்டியில் வந்த அவளை முதலில் கவிதைக்கண்ணன் கண்டுவிட்டான். கண்டதும் அடக்க முடியாத ஆவலில் கலோ என்றான். அதன் பின்புதான் அவள் கவிதைக்கண்ணனைக் கண்டாள். பின்பு துவிச்சக்கர வண்டியை ஆஸ்பத்திரிக்குள் நிறுத்திவிட்டு மீண்டும் வந்தாள். இருவரும் அங்கிருந்த சாப்பாட்டுக்கடையில் தேநீர் அருந்திய வண்ணம் அன்புப் பார்வைகளைப் பகிர்ந்தனர். கவிதைக்கண்ணன் ‘இதுக்குத்தானோ கொழும்பில இருந்து இங்க வந்தனான்? ‘ என்றான்.

அவள் ‘வேற என்ன செய்ய முடியும்? எல்லாம் காலம் கனியட்டும்.’ என்றாள்.

சிறிது நேரம் இருந்து கதைத்துவிட்டுக் கவிதைக்கண்ணன் தனது ஊருக்குச்சென்றான்.

ஊரில் இருந்து மீண்டும் கொழும்பிற்கு செல்வதற்கு முதல் கவிதைக்கண்ணன் அவளைச் சந்திக்க விரும்பினான். அதற்காக யாழ்நகருக்கு அவளை வருமாறு கேட்டிருந்தான். யாழ்நகரில் எங்கே சந்திப்பது என்பதை அவன் முடிவு செய்யவில்லை. அவள் வழமைபோல ஆஸ்பத்திரியில் துவிச்சக்கரவண்டியை நிறுத்தி வைத்துவிட்டு அவனைச் சந்திக்க வந்தாள்.

எங்கே போவது என்பதில் கவிதைக்கண்ணனுக்குக் குழப்பம். ஓட்டோவில் எங்காவது போகலாம் என்று விசாரித்த போது அவர்கள் குதிரை விலை சொன்னார்கள். அவள் இவ்வளவு பணம் கொடுத்து எதற்காக ஓட்டோவில் செல்ல வேண்டும் என்று கேட்டாள். அதுவும் சரி என்றுவிட்டு இருவரும் நடந்து சென்றார்கள். அப்படி நடந்து செல்லும் போது கவிதைக்கண்ணனுக்குத் திடீரென யாழ் நூல்நிலையத்தைப் பார்க்க வேண்டும் என்கின்ற ஆசை துள்ளி எழுந்தது. அவன் தனது ஆசையை அவளிடம் கூறினான். அவளும் அது நல்ல யோசனை என்று கூறினாள். இருவரும் யாழ் நூல்நிலையத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

யாழ் நூல்நிலையம் சுற்றுலா மையமாக மாறி இருந்த காலம். தெற்கில் இருந்து வரும் சிங்கள மக்கள் அது எரிந்து மீண்டும் எழுந்து நிற்பதைத் தவறாது பார்த்துச் சென்றார்கள். கட்டடம் எரிந்தால் மீண்டும் அது எழுந்து நிற்கலாம். அழிந்து போன நூல்களை எங்கே தேடுவது? என்கின்ற ஆதங்கம் கவிதைக்கண்ணனுக்கு. இதன் எரிப்பு ஈழத்தின் எரிப்பாகும் என்று கால்நடைப் பயணம் செய்த அரசியல்வாதி புரிந்தேசெய்தாரா?

யாழ் நூல்நிலையத்தில் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களுடைய படைப்புக்களை பார்ப்பதில் கவிதைக்கண்ணன் ஆர்வம் காட்டினான். அவளும் அதற்கு உதவினாள். புத்தகம் பார்க்கத் தொடங்கிய போது தனது 'Wallet'ஐ அங்கிருந்த மேசையில் அவள் வைத்தாள்.

புத்தகம் பார்த்து முடிய அவள் வேறு புத்தகங்கள் பார்க்கலாமென நூல் நிலையத்தின் மற்றைய பகுதிக்குச் சென்றாள். கவிதைக்கண்ணன் மேசையை திரும்பிப் பார்த்தான். அவளது 'Wallet' மேசையில் அனாதையாகக் கிடந்தது. அவன் அதை எடுத்துச் சென்றான். அவளிடம் சென்று,

'இதை மறந்திட்டியா...? இப்பிடிப் பேர்சை வைச்சா யாரும் எடுக்காயினமா?' என்று அவளைப்பார்த்துக் கேட்டான்.

'நம்பிக்கைதானே வாழ்க்கை? அப்பிடியும் பேர்சை எடுப்பினமா? நான் இப்பிடிதான் மறந்து வைச்சிட்டுப் போயிடுவன்.' என்றாள் அப்பாவியாக.

கவிதைக்கண்ணனுக்கு இவள் அப்பாவியா அல்லது அப்பாவியாய் நடிக்கிறாளா? என்பது புரியவில்லை. காதல் மோகம் அவள் அப்பாவி என்றே சொன்னது. கவிதைக்கண்ணன் அவள் கூறியதை அப்படியே நம்பினான்.

நூல் நிலையத்தின் கடைசி அலுமாரிகளின் பின்னே... யாரும் இல்லாத தனிமை. அவளை ஆலிங்கனம் செய்ய வேண்டும் என்கின்ற அவா. அப்படிச் செய்தால் தன்னைத் தப்பாக அவள் எண்ணுவாளோ என்கின்ற

பயம். ஆசைகளை அடக்கிப் போதிமைந்தனின் வாரிசாகக் கவிதைக்கண்ணன் பௌவியமாகச் சிறிது நேரம் நின்றான். பின்பு அவளின் கையை சிறிது நேரம் பிடித்திருந்தான். அவள் அதை விரும்பி இருக்க வேண்டும். எந்த மறுப்பும் சொல்லவில்லை என்பதில் அவனுக்கு ஏகப்பட்ட புழுகு. யாரும் பார்த்தால் மரியாதை இல்லை என்பதால் அவனாகவே அவளது கையை நழுவ விட்டான்.

பின்பு தன்னிடம் இருந்த கடன் அட்டை ஒன்றை அவளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான். அவளும் எந்த மறுப்பும் இல்லாது அதை வாங்கித் தனது 'Wallet'ற்க்குள் வைத்தாள்.

அன்று நூல்நிலையத்தைவிட்டு வெளியே வந்த போதுதான் அவளைப் புகைப்படம் பிடிக்க வேண்டும் என்கின்ற எண்ணம் முதன்முதல் அவனுக்குத் தோன்றியது. இரண்டு படங்கள் யாழ் நூல்நிலையத்திற்கு முன்பு வைத்து எடுத்தான். அவளைப் பிரியும் போது இதயம் மீண்டும் வலிப்பதான உணர்வு. இனி எப்போது என்கின்ற மனதின் தவிப்பு அப்போதே எழுந்தது. அவளும் அதே ஏக்கத்தோடு அவனைப் பார்ப்பதாக அவனுக்குத் தோன்றியது.

8

ஒவ்வொரு கணமும் வெல்லவோ, கொல்லவோ முடியாத அவள் நினைவு. அவள் நினைவுகளை வென்றுவிட முடியாத அவனது மற்றைய நினைவுகளின் படுதோல்வி. அவள் நினைவு அடைந்து கிடக்கும் மனதிற்குள் இன்னொரு நினைவு புகமுடியாத இறுக்கமான யதார்த்தம். வேதனைகூடச் சிலவேளை சுகமாகிவிடுகின்றது. மனதின் வேதனையை மீட்டுப் பார்ப்பதில், உடற் புண்ணைச் சொறியும் போது அனுபவிக்கும் வேதனையான இன்பம் போன்று அதிலும் வருவது உண்டு. கவிதைக்கண்ணனின் மனதும் அந்த வேதனையை இன்பமாக அனுபவித்தது. சொறியும் நினைவுகளில் இருந்து வழியும் வேதனையை அது தாங்கிச் சுகித்து, இரசித்தது. தற்போது அதைவிட வேறுவழி அவனுக்குத் தெரியவில்லை. உப்பு தின்றவன் தண்ணி குடிக்க வேண்டும். தப்பு செய்தவன் தண்டனை பெறவேண்டும். கவிதைக்கண்ணனுக்குத் தயவு தாட்சண்ணியம் இல்லாது தண்டனை கொடுக்கப்பட்டது. நம்பிக்கைத் துரோகம் அவன் மனதை வாள்கொண்டு கிழித்தது. கண்களில் இருந்து இரத்தக் கண்ணீர் இடையறாது வழிந்தது.

★

கவிதைக்கண்ணன் நோர்வேக்கு வந்துவிட்டான். அவன் தனது அலுவலகத்தை 'Basement'இல் வைத்திருந்தான். அது மூன்று தளங்களைக் கொண்ட வீடு. சமையலறையும் கோலும் நடுத் தளத்தில் இருக்கின்றன. படுக்கையறைகள் மேல் தளத்தில் இருக்கின்றன. அலுவலகத்தில் இருந்து கதைத்தால் மேலே யாருக்கும் கேட்காது. அது அவனுக்கு அவளோடு அலைபேசியில் கதைப்பதற்கு வசதியாகிற்று. மேலே அவனது குடும்பம் தூக்கத்திற்குப் போக இலங்கையில் விடியும் நேரம் ஆகிவிடும். அந்த நேரம் பார்த்து அலைபேசியில் அவளோடு தொடர்பு கொள்வான்.

அவள் நித்திரைத் தூக்கத்தில் எழும்பி இருந்து கதைப்பாள். அப்படிக் கதைப்பதில் ஏதும் பிரச்சனையா என்று கவிதைக்கண்ணன் அடிக்கடி கேட்பான். அவள் அதற்கு 'குடுவனும் அம்மாவும் நித்திரைகொள்ளூற நேரம்தான் நாங்கள் வசதியாகக் கதைக்கலாம்.' என்று அவனிடம் கூறுவாள். குடுவன் என்று சொல்வது அவளின் மகளை. சில வேளைக் கதைத்துக்கொண்டு இருக்கும் பொழுது தாய் ஏதாவது உதவி கேட்பது உண்டு. அப்போது கவிதைக்கண்ணன் காத்திருப்பான். அல்லது வைத்துவிட்டு மீண்டும் தொடர்பு கொள்வான்.

காதல் மோகத்தில் அடிக்கடி கவிதைக்கண்ணன் அலைபேசியில் அவளோடு கதைத்தான். காதல் வசனங்கள் பேசிமுடிய தாங்கள் எப்படி வாழ்வது என்கின்ற அலசலில் இருவரும் ஈடுபட்டார்கள். தான் வவுனியாவில் அல்லது கண்டியில் ஒரு வேலை தேடிக்கொள்வதாகவும், பின்பு அங்கே சென்று குடியிருப்பதாயும், அவனை வசதி வரும் பொழுது தங்களை வந்து பார்க்குமாறும் அவள் கேட்டாள்.

கவிதைக்கண்ணனால் முதல் அதை நம்பமுடியவில்லை. அந்த யோசனை தனக்கு வசதியாக இருந்தாலும் அவளுடன் மட்டும் எப்போதும் வாழமுடியாத அந்த யோசனை அவனுக்கு மனதில் இதம் தரவில்லை. அவன் தனது விருப்பமின்மையைக் கூறிய பொழுது அவள் அதுதான் உங்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கும் என்று அறிவுரை கூறினாள். பின்பு கவிதைக்கண்ணனுக்கும் அது சரியாகவே பட்டது. இடையில் அவளது அக்காள் அறிந்தால் கவிதைக்கண்ணனுக்கும் தனக்குமிடையில் இருக்கும் உறவு அறுந்து போய்விடும் என்று அவனுக்குக் கூறினாள். அது கவிதைக்கண்ணனை மேலும் அலைக்கழித்தது. அவனுக்கு அவளோடு என்றும் வாழ வேண்டும் என்கின்ற வெறி. அதற்கு என்ன செய்யலாம் என்கின்ற யோசனையே நித்தமும் அவன் மனதைக் குடைந்தது. உறவைப் பலப்படுத்திக்கொள்வதே உறவைப் பிரியாது பாதுகாத்துக் கொள்ளும் வழி என்பது கவிதைக்கண்ணனின் எண்ணம். அதை அவளிடம் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்தான்.

இதற்கிடையில் கவிதைக்கண்ணன் நோர்வேக்கு வந்த பின்பு அவளிடம் கொடுத்த கடன் அட்டையின் கணக்கின் அசைவை ஒரு முறை பார்த்தான். அவனுக்கு ஒரு வகையில் நம்ப முடியாமல் இருந்ததோடு அவளைப் பற்றிய எண்ணத்தில் கரும்புள்ளி ஒன்று விழுந்திற்று. காசைக் காணாதவர்கள் கண்டதைப் போன்ற நடத்தை அது. அவன் அதைச் சற்றும் அவளிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை.

கடன் அட்டையை அவனிடம் இருந்து வாங்கிய அன்று பிற்பகலே யாழ்ப்பாணத்தில் உள்ள ‘Food city’ இல் முதலில் பாவித்துள்ளாள். அது உண்மையான அட்டைதானா என்கின்ற பரிசோதனையாக இருக்க வேண்டும் என்பதைக் கவிதைக்கண்ணனால் அப்பொழுதும் ஏற்க முடியவில்லை. அடுத்த நாள் இருமுறை யாழ்ப்பாணத்தில் பணம் எடுத்திருக்கிறாள். அதுவும் ஒரு குறிப்பிட்ட அளவு சிறிய தொகை. அதற்காக வங்கி அறவிடும் கூலி பற்றி அவளுக்குத் தெரிந்து இருக்க நியாயம் இல்லை என்பது கவிதைக்கண்ணனின் சமாதானம்.

பின்பு கவிதைக்கண்ணன் அவளோடு அலைபேசியில் கதைக்கும் பொழுது அவள் வவுனியா மாமா வீட்டிற்குப் போவதாக அவனிடம் கூறினாள். அது கவிதைக்கண்ணனுக்குக் கல்வெட்டான ஞாபகம். அன்று அதே அட்டையை வவுனியாவில் பாவித்துப் பணம் எடுத்திருக்கிறாள். கவிதை கண்ணனுக்கு அவள் பணம் எடுத்தது பற்றி எந்தக் கவலையும் இல்லை. அது அவள் செலவு செய்வதற்குக் கொடுத்த பணமே. வவுனியாவிலும் பணம் எடுத்தாயா என்று கவிதைக்கண்ணன் அவளை அலைபேசியில் கேட்டபோது அவள் இல்லை என்று பொய் சொன்னாள். அந்தப் பொய்யோடு உறவு முறிந்து இருக்க வேண்டும். கவிதைக்கண்ணனின் ஒப்பந்தம் அதுதான். கவிதைக்கண்ணனால் அந்த உறவை எதற்காகவும் முறித்துக்கொள்ள முடியாது என்கின்ற உண்மை அப்போது புரிந்தது. ஆசையிலும், காமத்திலும் ஒப்பந்தம் காற்றுப் பட்ட கற்பூரமாகக் கரைந்து போயிற்று.

அப்படி என்றால் யார் வவுனியாவில் பணம் எடுத்தார்கள் என்று கவிதைக்கண்ணன் அவளைக் கேட்டான். யாழ்ப்பாணத்தில் தனது அட்டையை யாரோ பிரதி எடுத்துவிட்டார்களோ தெரியாது என்று அவள் கவிதைக்கண்ணனிடம் கூறினாள். கவிதைக்கண்ணன் அதை நம்பவில்லை. நூல்நிலையத்தில் நடந்த அந்தச் சம்பவத்தை நினைத்த பொழுது ஏமாந்தாளோ என்கின்ற சிறிய தடுமாற்றம். அதற்கு வவுனியாவில் அவள் சென்ற அன்று பணம் எடுத்திருக்கிறார்கள் என்பது ஒருவகையிலும் ஒத்துப் போகவில்லை. அவளை மீண்டும் உண்மையாகவா என்று கேட்டுப் பார்த்தான். ஆம் என்று அவள் திட்டவட்டமாகப் பதில் கூறினாள். அவள் தொடர்ந்தும் சாதித்தாள். அவள் தான் செய்யும் தவறுகளை ஒத்துக்கொள்பவள் அல்ல. கவிதைக்கண்ணன் எப்படியாவது அவள் வாயில் இருந்து உண்மையைப் பிடுங்கிவிடலாம் என்று நினைத்தான். அது நடக்கவில்லை. தான் அந்த அட்டையைத் தடை செய்வதாக அவளிடம் கூறினான். அப்போதாவது அவள் உண்மையை ஒப்புக் கொள்வாளோ என்கின்ற நப்பாசை. அப்போதும் அது நடக்கவில்லை. அவள் நெஞ்சழுத்தம் கவிதைக்கண்ணனுக்குப் புரிந்தது. பொய் சொல்லுவதில் அப்படி என்ன இன்பம் அவளுக்கு என்பது அவனுக்குப் புரியவில்லை. கோணல் மனதோடு தான் கொண்ட கோலம் மாறியதற்கு, கோணல் மனது கொண்டவர்களைக் கடவுள் பரிசாகக் கொடுத்திருப்பது தற்போது அவனுக்குப் புரிந்தது. அவள் பொய் மட்டுமே விளையாட்டாகச் சொல்வதாக அப்போதும் அவன் தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டான்.

கடன் அட்டையைத் தடை பண்ணுவதில் அவளுக்கு விருப்பம் இருக்கவில்லை. அவளது குரலின் இறக்கத்தை அவனால் உணர முடிந்தது. அவள் தனக்குப் பொய் சொல்கிறாள் என்கின்ற கோபத்தில் அன்றைய உரையாடல் முடிந்தது. அதன் பின்பு கடன் அட்டையைத் தடைசெய்ததோடு அந்தச் சம்பவத்தைக் கவிதைக்கண்ணன் மறந்து போய்விட்டான். கவிதைக்கண்ணனுக்கு என்றும் அவள்

இனியவளாக இருக்க வேண்டும் என்கின்ற பேராசை. அதைவிட அவன் எதையும் நம்ப விரும்பவில்லை. அவளைவிட்டால் என்கின்ற எண்ணமே அவன் இதயத்தை நிறுத்தும் வலுக்கொண்டதாக விஸ்வரூபம் எடுத்து நின்றது.

★

கவிதைக்கண்ணன் அன்று அலைபேசி மூலம் அவளோடு தொடர்புகொண்டான். அவள் அதை எடுக்கவில்லை. அவன் தொடர்புகொண்ட போது இலங்கையில் இரவு ஒன்பது மணி இருக்கும். எங்கே போய்விட்டாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. பல முறை முயற்சித்துவிட்டு, களைத்துப் போய் வைத்துவிட்டான். அடுத்த நாளும் அவன் அப்படி முயற்சித்தான். அவள் மீது உண்மையாகவே அவனுக்கு எரிச்சல் வந்தது. பேச வேண்டும் என்கின்ற அடங்காத கோபம் பூதமாய் மனதிற்குள் வளர்ந்தது. அவள் முதல் கணவனோடு பட்ட துன்பத்தை எண்ணிப் பேசக்கூடாது என்கின்ற இரக்கமும் அடிக்கடி எட்டிப்பார்க்கும். என்னவாக இருந்தாலும் ஒரு குறும்செய்தியாவது அனுப்பிவிட்டுப் போய் இருக்கலாமே என்கின்ற வெப்பியாரம் அவனிடம். கவிதைக்கண்ணன் கோபத்தோடு காத்திருந்தான்.

மூன்றாவது நாள் அவள் அலைபேசி எடுத்தாள். கவிதைக்கண்ணன் தனது கோபத்தை அடக்க முடியாதவனாய்,

'எங்க தொலைஞ்சு போனாய்?' என்று பாய்ந்தான்.

'நான் எங்கையும் தொலையேல்லை அப்பா. அம்மாவுக்குச் சுகமில்லை. ஆஸ்பத்திரியில வைச்சிருந்தன்.' என்று அவள் நாகாஸ்திரத்தைப் பாவித்தாள்.

'ஆஸ்பத்திரி என்றால் போன் எடுக்கக் கூடாதே?' என்று கவிதைக்கண்ணன் சரணடைந்து கேட்டான்.

'அங்க எடுத்தா நேஸ்மார் பேசுவினம்.' என்றாள் அவள்.

அவள் இந்தக் காரணத்தைப் பல முறை சொல்லி இருக்கிறாள். கவிதைக்கண்ணன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குள் போனதே கிடையாது. அதற்குள் அலைபேசி கதைக்கலாமா இல்லையா என்பது அவனுக்குத் தெரியாது. கவிதைக்கண்ணனின் மூளை நரம்புகள் காதலில் விறைத்துப் போயின. அவள் சொல்வதை நம்புவதைத் தவிர அவனுக்கு வேறு வழி தெரியவில்லை.

'வெளியால வந்து எடுக்கலாம்தானே?' என்று மீண்டும் அடங்காத ஆதங்கத்தோடு கேட்டான்.

‘அம்மா தனிய இருப்பாவெல்லே? நான் ஒரு நாள் இரண்டு நாள் போன் எடுக்காட்டி எனக்காகப் பொறுக்க மாட்டியளா?’ என்று அவள் புரட்டிக் கதைத்தாள்.

கவிதைக்கண்ணனுக்குச் சொற்கள் வராது திக்கியது. ஒட்டிய நாக்கை மலையாகப் புரட்டி, இல்லாமல் தொலைந்த காற்றை இழுத்துச் சொற்கள் வடித்தான்.

‘அதுக்கில்லை… திடீரெண்டு போன் எடுக்காட்டி உனக்கு என்ன நடந்ததோ ஏது நடந்ததோ எண்டுற பதைபதைப்பு. அதை நீ விளங்கிக்கொள்ளாமல் இப்பிடிச் சொல்லுறா?’

‘எனக்குத் தெரியும்… நீங்கள் கோவப்பட்டாலும் எனக்குச் சந்தோஷம்தான்.’

‘ஏன் அப்பிடி?’

‘நீங்கள் எத்தினைதரம் போன்பண்ணி இருக்கிறியள் எண்டதைப் பார்த்தனே. எனக்காக இப்பிடி ஒரு உயிர் இருக்கிறதுக்கு நான் குடுத்து வைச்சிருக்க வேணும்.’ என்றாள் சுமதா. கவிதைக்கண்ணனின் மனது காதலென்னும் அனல்பட்ட மெழுகாய் உருகி ஓடியது. அவனின் அந்த உருகலை அவள் வெகுவாக மனதிற்குள் இரசித்தாள்.

‘நீ குடுத்து வைச்சவள்தான். கடவுள் உனக்கு முதல் வாழ்க்கையில கஸ்ரம் தந்தாலும் இரண்டாவது வாழ்க்கையில நல்லா இரு எண்டு ஆசீர்வதிச்சிருக்கிறார். அதுதான் நான் உனக்கு கிடைச்சிருக்கிறன்.’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘அது உண்மைதான் அப்பா. உங்களோடை கதைக்கிற ஒவ்வொரு நொடியும் என்ர மனசுக்குக் கும்மாளம்தான். இந்த விதமான சந்தோஷம் இப்பதான் முதன்முறை எனக்கு கிடைச்சிருக்குது. இது இப்பிடியே வாழ்க்கை முழுவதும் இருக்க வேணும் எண்டுற பேராசை எனக்கு.’ என்றாள் அவள்.

‘அதெல்லாம் சரி செல்லம். நீ எங்க போறது எண்டாலும் எனக்குச் சொல்ல வேணும். அவசரமாப் போன ‘எஸ்.எம்.எஸ்’ எண்டாலும் போடு.’ என்றான் கவிதைக்கண்ணன் ஏக்கத்தோடு.

‘அவ்வளவு அன்பா?’ என்று கேட்டு அவள் கிளிக்கென்று சிரித்தாள்.

‘ம்… உன்னில இருந்து ஒரு முடி உதிர்ந்தாலும் எனக்கு இதயத்தை யாரோ பினையிற மாதிரி வேதனையா இருக்கும் செல்லம். உன்னுடைய ஒவ்வொரு மூச்சும் எனக்குத் தெரியோணும். உனக்கு என்ரை அன்பின் ஆழம் விளங்குதா? நான் ஏதோ ஒரு உலகத்தில வாழ்ந்தன். இப்ப நீதான் என்ரை உலகம். தயவு செய்து என்னைத் தவிக்க விடக்கூடாது.’ கவிதைக்கண்ணனால் அதற்குமேல் கதைக்க முடியவில்லை. தொண்டைக்குள் ஒரு கோளவடிவத்தில் ஏதோ விண்டுவிடாது தடைசெய்தது.

‘ம்… தாங்ஸ்…’ என்றாள் அவள்.

'எதுக்கு?' என்றான் கவிதைக்கண்ணன்.

'எனக்கு நீங்கள் கிடைச்சதுக்கு.' என்றாள் அவள்.

'சரி டிவோர்ஸ்க்கு அப்பிளை பண்ணியாச்சா?'

'இல்லை… அப்பாவைத் தெரிஞ்ச லேடி அற்வகேற் இங்க இருக்கிறா. அவ மூலம் அப்ளை பண்ணுறன்.'

'அதைக் கட்டாயம் செய்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'ஓ நிச்சயம் செய்யிறன். உண்மையில அவனைக் கோட்டுக்கு இழுக்கோணும். அதால எனக்கு என்ன ஆதாயம்? நான் ஒரு நல்ல மனிசியா இருப்பம் எண்டு நினைக்கிறன்.'

'ம்… இன்னா செய்தாரையும் ஒறுப்பது… உதுதான் உன்னில உள்ள மேன்மையான குணம். அது சரி… எதுக்கு அவனை நீ கோட்டுக்கு இழுத்திருக்கலாம் எண்டு சொல்லுறா?'

'பிறகென்ன? என்ன டிவோர்ஸ் பண்ணாமலே அவன் இன்னொரு கலியாணம் செய்திருக்கிறான். அதோட அக்காவின்ர வீட்டை விட்டிட்டு எழும்புறான் இல்லை.' என்றாள் அவள்.

'அப்பிடியே… இப்பிடியானவனைக் கோட்டுக்கு இழுத்து ஜீவனாம்சமும் கேட்டி எண்டாத்தான் வீட்டை வீட்டு வெளிக்கிடுவான்.' என்றான் கவிதைக்கண்ணன் தான் ஒரு புத்திசாலி என்கின்ற நினைப்பில்.

'உண்மைதான் அப்பா.' என்றாள் அவள் அப்பாவியாக.

'சரி எது எப்பிடி இருந்தாலும் முதல்ல டிவோர்சை எடும். டிவோர்ஸ் எடுத்தாத்தான் எதுவும் நாங்கள் சட்டப்படி செய்யலாம். இல்லாட்டி இந்த உறவும் கொச்சையாகத்தான் இருக்கும்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'எனக்கு விளங்குது. நான் அந்த லேடி அற்வகேற்றைப் பிடிச்சுக் கெதியா அப்பிளை பண்ணுறன்.' என்றாள் அவள்.

'பிரிஞ்சு வந்த காலத்துக்கு நீ அப்பிளை பண்ணி இருந்தா இப்ப டிவோர்ஸ் கிடைச்சிருக்கும்.' என்று அங்கலாயித்தான் கவிதைக்கண்ணன்.

'ஒருத்தரும் எனக்கு இதைப் பற்றிச் சொல்ல இல்லை. அதால அப்பிடியே விட்டிட்டன். உங்களை மாதிரி யாராவது புத்திமதி சொல்லி இருந்தா நான் ஏற்கனவே எடுத்திருப்பன். சரி இப்ப உங்களுக்கும் எனக்கும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில அது வரட்டும்.' என்றாள் அவள் கவிதைக்கண்ணனிடம்.

கவிதைக்கண்ணனை அறிவுரை கூறும் ஆசானாகச் சித்தரித்தது அவனுக்கு ஒருவித மமதையை உண்டு பண்ணியது. தான் குருவாக இருந்து புத்திமதி சொல்வதான நினைவில் அவன் மிதந்தான். அவள் என்ன சொன்னாள் என்பது அவனுக்குப் புரிந்ததாகப் புளகாங்கிதம் அடைந்தான். அவள் அவனை எண்ணி மனதிற்குள் சிரித்தாளா?

‘அதோட வாங் எக்கவுண்ட் திறந்தியெண்டா ஏதாவது அவசரம் எண்டாலும் காசு அனுப்பலாம்.’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘இப்ப திறக்கேலாது. டிவோர்ஸ் கிடைக்கவிட்டி என்ர பெயரில திறக்கிறன்.’ என்றாள் அவள்.

‘அதுக்கிடையில தேவைப்பட்டா?’

‘வெஸ்ரன் யூனியன் பாவிக்கலாம் இல்லையா. அப்பிடித்தான் அக்கா ஆட்கள் அனுப்பிறவை.’

‘ஓ அப்பிடியும் அனுப்பலாம். வாங் எக்கவுண்ட் எண்டா ஆறுதலா குறைஞ்ச செலவில வரும்.’

‘அப்பிடி அவசரம் எண்டா அம்மாவின்ர எக்கவுண்டுக்கு அனுப்பலாம்.’

‘சரி. இந்த முறை நாங்கள் சந்திக்கேக்க எங்களைப் பிரிக்க முடியாத மாதிரி எதாவது உருவாகோணும்.’ என்று ஆனந்தக் கனவிற்குள் குதித்தான் கவிதைக்கண்ணன்.

‘ம்…’

‘அதுக்கேத்த மாதிரி நான் வருவன். உனக்கு விளங்கும் தானே?’

‘எனக்குத் தெரியும். அதெல்லாம் சரியாய் வரும். நீங்க வாங்க.’ என்றாள் அவள்.

‘ம்… எப்ப உன்னச் சந்திக்கலாம் எண்டு துடிச்சுக்கொண்டு இருக்கிறன்.’

‘அது எனக்கும் தெரியும். அப்பிடித்தான் நானும். நீங்கள் ஊரில இருந்திருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும் எண்டு அடிக்கடி யோசிப்பன்.’

‘ஊரில நான் உன்னக் காணேல்லை.’

‘அதுதான் விதி.’ என்றாள் அவள்.

★

தொலைபேசி அல்லது அலைபேசி கதறக் கதற அடிக்கடி அவள் இரவில் காணாமல் போவது வழமையாகியது.

கவிதைக்கண்ணன் அவளோடு இதைவிடக் காதல் மயமான வசனங்கள் மணிக்கணக்கில் கதைத்ததுண்டு. நடுச்சாமத்தில் தொடர்பு கொண்டாலும் அவள் சிணுங்காமல் அலைபேசி எடுப்பாள். அவனோடு அன்புருகக் கதைப்பாள். காதல் வயப்பட்டால் ஒருவரின் குரலுக்காக மற்றவர்கள் ஏங்குவது எவ்வளவு உண்மையென கவிதைக்கண்ணன் எண்ணி மருகினான்.

கவிதைக்கண்ணனுக்கும் அவளுக்கும் இடையில் தொடக்கத்தில் காதல் வசனங்கள் தொடங்க அதிக நாட்கள் எடுக்கவில்லை. அவள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் வந்ததாகவே அவன் நினைவு. சில சமயங்களில் இவ்வளவு இலகுவாய் இருக்க முடியுமா என்பதை அவனால் நம்பமுடியாமல் இருந்திருக்கிறது.

எக்கணத்திலும் அவனால் அவளோடு கலவி கொண்ட சுகத்தையும், காதல் கொண்ட மனத்தையும் மாற்றவோ, மறக்கவோ முடியாது. கடமையின் கட்டாயத்திற்காய் நோர்வேக்குத் திரும்பி வந்தவனால் அவளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவன் மீண்டும் அவளைப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

நினைத்தவுடன் அவனால் புறப்பட்டு அங்கே செல்ல முடியாது. இம்முறை அவளைச் சந்திப்பது, அங்கே போவது எல்லாம் இரகசியமாய் இருக்க வேண்டியது கட்டாயமென முடிவெடுத்தான். கவிதைக்கண்ணன் தான் இலங்கைக்குப் போவதற்கு ஒரு காரணம் கண்டுபிடிக்க வேண்டியதாகிற்று. அவனுக்கு யாழ்ப்பாணத்தில் போய் நிற்பதற்கும் பிடிக்கவில்லை. கொழும்பு அல்லது கண்டியில் நிற்க வேண்டும் என்பதுதான் அவன் ஆசை. முதல் முறை கண்டிக்குச் சென்றதில் இருந்தே கண்டி நகரை அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது.

அதையடுத்து அவளோடு கதைக்கும் போது தான் கொழும்பிற்குத் தைமாதம் வருவேன் என்றும், கொழும்பில் அல்லது கண்டியில் வீடு பார்க்குமாறும் கூறினான். தானும் இணையத்தில் வீடு தேடினான்.

வீடு கிடைப்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. மவுண்ட்லெவினியாவில் ஒரு இடம் மாத வாடகைக்குக் கிடைக்கும் என்பதை இணையத்தில் பார்த்து அதன் முகவரியையும், அலைபேசி எண்ணையும் கவிதைக்கண்ணன் எடுத்து வைத்திருந்தான். அவள் அலைபேசியில் தொடர்புகொண்டு வேறு இடங்கள் கேட்டதாகவும், ஒரு இடமும் சரி வரவில்லை என்றும் அவனிடம் கூறினாள். அவள் அந்த அலுவலைத் தட்டிக்கழிக்கிறாளோ என்கின்ற ஒரு அசௌகரியமான எண்ணம் அவளின் கதையில் இருந்து கவிதைக்கண்ணனுக்கு உருவாகியது. இருந்தும் காதல் மயக்கத்தில் அப்படி இருக்காது என்கின்ற எப்போதும் உண்டாகும் சமாதானம் அதற்கும் உண்டானது.

எப்போது என்கின்ற எதிர்பார்ப்போடும், ஏக்கத்தோடும் காலம் கழிந்தது. ஒருவாறு தை பிறந்தது. கவிதைக்கண்ணன் வழி பிறந்தது என்கின்ற பூரிப்போடு இலங்கைக்குப் புறப்பட்டான்.

9

கவிதைக்கண்ணனால் வயிற்றுக் கோளாற்றைத் தாங்க முடியவில்லை. பாக்டிரியாக் குளிசைகள் காசிற்குத் தண்டமே தவிர உதவி செய்வதாகத் தெரியவில்லை. அந்தக் குளிசைகளை விழுங்கிய பின்பு அருந்தும் மதுவில் பாக்டிரியாக்கள் மறுபிறப்பெடுக்கப் போயிருக்க வேண்டுமென அவனுக்குத் தோன்றியது.

பச்சைநாட்டில் சாப்பிட்டாலோ அல்லது வேறு சாப்பாட்டுக்கடையில் சாப்பிட்டாலோ வயிற்றுக்குள் நல்ல கிருமிகளுக்கும் கெட்ட கிருமிகளுக்கும் போராட்டமாய்ப் போய்விடுகிறது. அதனால் கவிதைக்கண்ணன் 'MC'இல் இருக்கும் 'KFC'இல் மட்டும் சாப்பிடுவதாய் முடிவு செய்தான். அங்கே நல்லதுதான் கிடைக்கும் என்பது அவன் நம்பிக்கை. காற்றில், துளி நீரில் பரவும் நுண்கிருமிகளுக்கு கடைகளை மாற்றி? ஏமாற்றம் கவிதைக்கண்ணனுக்குத்தான்.

அப்படி 'MC'இல் சாப்பிடும் முடிவோடு நடந்து போகும் போதுதான் அவளை மீண்டும் அவன் கண்டான். அதே சிறுவனோடு அவனுக்கு முன்பு அவள் நளினமாக நடந்து சென்றாள். அவளை அறிமுகம் செய்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆர்வம் ஒரு கணம் அவனிடம் பொங்கியது. அடுத்த கணமே அந்த ஆர்வம் பொங்கும் பாலில் தண்ணீர் பட்டதாக அடங்கிப் போயிற்று. கவிதைக்கண்ணன் பெண்சுகம் தேடித் திரிந்தவன். அந்தச் சுகம் வலியாகவும் மாறும் என்கின்ற உண்மையை இப்போது விளங்கிக் கொண்டான். விளங்கிய பின்பும் சீண்டுவதற்கு அவன் மனம் ஏகவில்லை. சூடுகண்ட பூனையாக வாழ்வில் பெற்ற ஞானம் அவனைக் கட்டிப்போட்டது.

அவள் தனது மகனோடு அன்னப்பேடாய் நடந்தாள். அவளைக் கடந்து போகும் போது புன்னகைப்பதா அல்லது காணாதவன் போலச் செல்வதா? எப்படிச் சென்றால் என்ன? அவள் தனக்கு அறிமுகம் அற்றவள் அல்லவா என்பதாகக் கவிதைக்கண்ணன் எண்ணினான். அவளின் நடையைப் பின்புறம் நின்று பார்த்த போது மீண்டும் அவன் மனம் தறிகெட்டு ஓடியது. பிரமன் பிரதியடிக்கிறானா என்கின்ற மலைப்பு உண்டானது. இந்தப் பெண்ணை கடந்து செல்வதுதான் உத்தமமென அவனுக்குத் தோன்றியது. அவன் சிறிது வேகமாக நடந்தான். அவளைத்தாண்டும் பொழுது அவனையும் கேளாது அவன் கண்கள் அவள் கண்களைச் சந்தித்தன. அதில் களங்கம் இல்லாத ஒரு நட்பு இருப்பதாய் கவிதைக்கண்ணன் உணர்ந்தான்.

அவள் ஒரு புன்னகை புரிந்துவிட்டு மகனைப் பார்த்தாள். கவிதைக்கண்ணன் 'MC'யை நோக்கி ஞானம் மறக்காதவனாய் ஓடினான்.

அவன் மனதில் அவள் நினைவுகள் சூறாவளியாகச் சூல்கட்டி உயர உயர வளர்ந்து, உலகத்தையும் இழுத்துக்கொண்டு, அண்டத்தையும் அசைப்பதாக வீசத்தொடங்கியது.

★

சில காலங்களுக்கு முன்பு கவிதைக்கண்ணன் நோர்வேயில் இருந்து தனது கவிதைகளைத் திருத்தி அனுப்புவதற்கும், இணையத் தொடர்புகளை வைத்துக் கொள்வதற்கும் ஒரு வழிசெய்ய எண்ணினான். அவன் கணினி ஒன்றை வாங்கி அவளுக்கு அனுப்பிவைத்தான்.

இலங்கைக்கு ஒரு பொருள் அனுப்பினால் இவ்வளவு காலம் இழுபடுமா என்கின்ற சலிப்பு வந்த பின்னும் அவர்கள் அந்தப் பொதியைக் கொடுக்கவில்லை. அவள் யாழ்ப்பாணம் தலைமைத் தபால் அலுவலகத்தில் கவிதைக்கண்ணன் இணையம்மூலம் அனுப்பிவைத்த பற்றுச்சீட்டைக் கொண்டு சென்று காட்டி, அதன் தாற்பரியத்தைக் கேட்டிருக்கிறாள். அவர்கள் தேடிவிட்டு அது திருகோணமலைத் தபால் அலுவலகத்தில் இருப்பதாகவும், அங்கே சென்றுதான் எடுக்க வேண்டும் என்றும் கூறிவிட்டார்கள்.

அவள் சிலவேளை அசண்டையீனமாக இருப்பதாய் அவனுக்குத் தோன்றுவதுண்டு. அதன் உண்மை நிலை பற்றி அவன் ஒரு போதும் ஆராய்ந்தது கிடையாது. அவளை நோகடிக்கக் கூடாது என்பதான நினைப்பில் பலதையும் கவிதைக்கண்ணன் கண்டதாகக் காட்டிக்கொள்வதில்லை.

திருகோணமலைக்குக் காலைப் பேருந்தில் சென்று, தபால் அலுவலகத்தில் கணினி எடுத்த பின்பு திரும்பி திருகோணமலை நகரத்தில் உள்ள பேருந்து நிலையத்திற்கு வர மாலை நான்கு மணியாகிவிட்டது. திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்திற்குப் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்பு பேருந்து இருக்கவில்லை. அவள் அதை முழுமையாக விசாரித்துவிட்டுச் செல்லவில்லை. பேருந்து நிலையத்திலும் ஒழுங்கான தகவல் அவளுக்குக் கிடைக்கவில்லை.

திருகோணமலைக்குப் புறப்படும் போது கவிதைக்கண்ணனோடு அலைபேசியில் கதைத்தாள். கவிதைக்கண்ணன் மீண்டும் இலங்கை நேரம் பிற்பகல் நான்கு மணிக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டான். அலைபேசிக்கு மின்சாரம் போதாமையால் இனிக் கதைக்க முடியாது என்று கூறிவிட்டாள். அதன் சூட்சுமம் அதிக காலமாய் அவனுக்குப் புரியவே இல்லை. அன்று தபால் அலுவலகத்தில் கணினி எடுத்துவிட்டாள். இனி யாழ்ப்பாணம் போய்ச் சேருவதுதானே என்று கவிதைக்கண்ணனும் நினைத்திருந்தான்.

அடுத்த நாள் மாலை கவிதைக்கண்ணன் அவளுக்கு அலைபேசி எடுத்தான். அப்பொழுதுதான் அவள் அந்தக் கதையை அவனிடம் சொன்னாள்.

பிற்பகல் ஆறுமணி வரையும் திருகோணமலை நகரில் இருந்த பேருந்து நிலையத்தில் யாழ்ப்பாணம் செல்லும் பேருந்திற்காய் காத்திருந்திருக்கிறாள். யாழ்ப்பாணத்திற்குப் பேருந்து இல்லை என்பது அவளிற்குத் தெரிந்த போது இருட்டிவிட்டது. அவளிற்குத் திருகோணமலையில் யாரையும் தெரியாது. இவள் தனியே நிற்பதைப் பார்த்த தமிழ்ப் பொலிஸ் கதைத்துவிட்டு, அவளைத் தனது வீட்டிற்குக் கூட்டிச்சென்றார் என்றும் அவருக்கு ஒரு பிள்ளையும் மனைவியும் இருந்தார்கள் என்றும், அவர்கள் நன்கு உபசரித்தனர் என்றும் கவிதைக்கண்ணனுக்குக் கூறினாள். அத்தோடு அங்கு இரவு சாப்பிட்டுவிட்டு அவர்களோடு தூங்கிவிட்டு, காலை எழுந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததாய் அவனுக்குக் கூறினாள். கவிதைக்கண்ணனுக்கு முட்டாள்

போலப் போய் மாட்டுப்பட்டிருக்கிறாள் என்பதாகவே எண்ணத் தோன்றியது. அவனுக்கு அவளைப் பேசவேண்டும் போல் வாய் நமநமத்தது. ஏற்கனவே பலமுறை தன்னைப் பேசவேண்டாம் என்று பிச்சை கேட்பது போல் கேட்டிருக்கிறாள். அதை எண்ணியவன் அவளைப் பேசவில்லை. கெட்ட காலத்திலும் ஒரு நல்லகாலமென அவன் நினைத்தான். அந்தக் காலத்தில் திருகோணமலையில் இருந்து வவுனியாவிற்கு முதலில் வந்து அங்கிருந்துதான் யாழ்ப்பாணம் போகவேண்டும் என்பது அவனுக்குத் தெரியாது. இப்போது அதை எண்ணும் போதும் அவனுக்கு மனது வலித்தது. இறைவன் என்று ஒருவன் இருந்தால் அவனுக்குத்தான் எல்லாம் வெளிச்சம் என்பது புரிந்தது.

அந்தக் கணினி கிடைத்த பின்பு அவள் அதற்கு இணையத் தொடர்பு ஏற்படுத்தினாள். இருவரும் பின்பு இன்னும் அதிக நேரம் ‘Skype’இல் கைதைக்கும் வசதி கிடைத்தது. ‘Skype’இல் கதைப்பது பிரச்சனை என்றால் ‘Chat’ பண்ணித் தங்களது ஏக்கத்தைக் கழித்து, காதலைப் பெருக்கினர்.

கவிதைக்கண்ணன் தான் வேலைசெய்யும் நிறுவனம் தனது வேலை சம்பந்தமாக தன்னை இலங்கைக்கு அனுப்புவதாய் கதை அளந்து விட்டுக் கொழும்பிற்குப் புறப்பட்டான். அவன் அப்படி ஏற்கனவே சிலவேளைகளில் ஐரோப்பா போய் வந்திருக்கிறான். அந்த நம்பிக்கையில் கொழும்பிற்கு அனுப்புமளவிற்கு நிறுவனம் செலவு செய்யுமா என்கின்ற கேள்வி எழவில்லை. அவளுக்கு என்ன வாங்கிச் செல்வது என்பது அவனுக்குப் புரியவில்லை. அவள் மேக்கப் போட்டுக் கொள்பவள் அல்ல. அப்படி இருந்தும் அவன் அவளுக்கு ‘Perfumes’ ஒரு போத்தலும், ஒரு மணிக்கூடும் வாங்க விரும்பினான். பிள்ளைக்குச் சில பாடசாலையில் பாவிக்கக்கூடிய பொருட்கள் வாங்கிக்கொண்டு செல்வதாய் திட்டம் போட்டிருந்தான்.

இலண்டன் வரிச்சலுகைக் கடைகளில் அவள் விரும்பியது போன்று கறுப்பு நிறத் தோல் பட்டியுடனான தரமான கடிகாரம் கிடைக்கவில்லை. அங்கே கிடைத்த ஒன்றை வாங்கினான். அது விலையுயர்ந்தது அல்ல என்பதில் அவனுக்கு மனவருத்தம். அவன் அதைச் சரி பண்ணிக் கொள்ளும் விதமாய் விலையுயர்ந்த ‘Perfumes’ போத்தல் ஒன்று அவளுக்காக வாங்கினான். தனக்குப் பிடித்த மதுவில் ஒரு போத்தல் எடுத்தான். பொருட்கள் வாங்கி முடிந்த பின்பு இனி அவளைச் சந்திக்க வேண்டியதுதான் என்கின்ற ஏக்கத்தோடு அவன் பயணத்தைத் தொடர்ந்தான்.

கொழும்பில் இறங்கி வெளியே செல்லும் பொழுது பிற்பகல் நான்கு மணி ஆகிவிட்டது. அவளோடு அலைபேசியில் தொடர்புகொண்டு கதைத்த பொழுது வெளியே உள்ள தபால் நிலையத்திற்கு அருகில் நிற்பதாகக் கூறினாள். கவிதைக்கண்ணன் பெரும் பரபரப்போடு அவளைக்காணும் ஆசையைக் கட்டுப்படுத்த முடியாதவனாய் வெளியே சென்றான். வெளியே செல்லும் போதே அவள் கவிதைக்கண்ணனைக் கண்டுவிட்டு அவனை நோக்கி வந்தாள். அவளைப் பார்க்க அவனுக்குச் சொற்கத்தைப் பூமியில் கண்ட புழுகு முதலில் தட்டிற்று. பின்பு நிதானித்து அவளைப் பார்த்தான். அவள் அணிந்திருந்த உடை அவன் இரசனையைத் துாண்டவில்லை. அவள் அடங்காப்பிடாரி நாடகத்தில் வரும் கதாநாயகி போன்று ஒரு கட்டைப் பாவாடை அணிந்திருந்தாள். கட்டைப் பாவாடைகூட அவனுக்குப் பிரச்சனையில்லை. அந்தத் துணி அவனுக்குத் துப்பரவாகப் பிடிக்கவில்லை. அது பார்ப்பதற்கு அருவருப்பாக இருந்தது. அப்படிப்பட்ட துணியிலான

ஆடைகளைப் பொதுவாகத் தொழிலுக்குப் போகும் பெண்கள்தான் அணிவது வழக்கம் என்பது அவன் எண்ணம். இவள் ஏன் இதை அணிந்து வந்தாள் என்பது குழப்பமாகியது. கேட்டால் தனிமனித சுதந்திரத்தில் கைவைப்பதாக அவள் எடுத்துக் கொள்வாளோ என்று அவனுக்குப் பயமாகிற்று.

அவன் அதைப்பற்றி அப்பொழுது எதுவும் கதைக்கவில்லை. அப்படிக் கதைப்பது அவனுக்கு நாகரிகமாகவும் தோன்றவில்லை. அவளை எதற்காகவும் புண்படுத்த கூடாது என்பதில் அவன் மிகவும் கவனம் காட்டினான். அவள் மவுண்ட்லெவினியா போவதற்கு வண்டி ஏற்பாடு செய்திருந்தாள். அந்த வண்டியில்தான் அவள் விமான நிலையத்திற்கு வந்திருந்தாள். வண்டிக்குள் ஏறி இருந்ததும் சாரதியும், அவனோடு வந்தவனும் வயது குறைந்த இளைஞர்கள் என்பது கவிதைகண்ணனுக்குப் புரிந்தது. அவர்கள் அண்ணை அண்ணை என்று கவிதைக்கண்ணனிடம் வெளிநாட்டுப் புதினம் கேட்டார்கள். அவளை அக்கா அக்கா என்று விழித்தார்கள்.

அவள் அந்தக் கட்டைப் பாவாடையோடு காலுக்கு மேல் கால் போட்ட வண்ணம் வண்டிக்குள் இருந்தாள். சாரதி கண்ணாடியில் பார்த்தால் எப்படி இருக்கும் என்கின்ற மட்டமான அவஸ்தை கவிதைக்கண்ணனிடம். சில பெண்களுக்கு தங்களது தோலைக் காட்டுவதில் ஒருவித திருப்தி இருக்க வேண்டும் என்று கவிதைக்கண்ணன் நினைப்பதுண்டு. ஐரோப்பாவில் வாழ்ந்துவிட்டு இதைப் பற்றி கதைப்பது அநாகரிகம் என்பதாகக் கவிதைக்கண்ணன் அதைக் கண்டு கொள்ளாது அவளோடு நெருங்கி இருந்தான். அது நீ எப்படி இருந்தாலும் உன்னை நான் அங்கீகரிப்பேன் என்பது போல இருந்தது அவளுக்கு. என்றாலும் கவிதைக்கண்ணனின் மனதில் ஒரு அன்னியம். அவள் புயல்போல மாறுவதான தோற்றம். இருந்தும் அவள் போடும் தப்புத் தாளத்தில் தானும் சேர்ந்துகொண்டது அவனுக்கு அப்போது புரியவில்லை.

வண்டி மவுண்ட்லெவினியாவிற்குச் சென்றது. அந்த விடுதியைக் கண்டுபிடிப்பது சுலபமாக இருக்கவில்லை. ஒருவாறு சந்து பொந்துகள் தேடி அந்த முகவரியைக் கண்டு பிடித்தனர். இருவருமாக உள்ளே சென்று அறையைப் பார்த்தார்கள். அந்த அறையில் சமைப்பதற்கு எந்த வசதியும் இருக்கவில்லை. அதேசமயம் அந்த விடுதியைத் திருத்தும் வேலை நடந்து கொண்டிருந்தது. வீட்டுச் சொந்தக்காரர் இணையத்தில் தந்த தகவல் எல்லாமே பொய் என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரிந்தது. அவர்கள் மீண்டும் வாகனத்தில் வந்து

அமர்ந்தார்கள். வண்டி ஓட்டிவந்த இளைஞர்கள் 'See side'இல் தமிழ் ஆட்களுடைய நல்ல விடுதி இருப்பதாகக் கூறினார்கள். இருட்டிய பின்பு அலையாமல் அங்கு இன்று நின்றுவிட்டு, நாளை விசாரிப்போம் என்று கவிதைக்கண்ணனுக்கும் தோன்றியது. தங்களுக்குத் தெரிந்தவர்களிடம் கேட்டுவிட்டு போன்

செய்வதாக வண்டிக்காரர்களும் கூறினார்கள். முடிவில் 'See side' இருந்த அந்தத் தமிழ் விடுதிக்கு வந்து அறை பதிவு செய்தனர். கவிதைக் கண்ணனுக்கு எப்போது தனிமை கிடைக்கும் என்கின்ற எதிர்பார்ப்பு. அந்நிய மனிதர்களுக்கு முன்பு எதுவும் செய்ய முடியாத இக்கட்டு. அதைத் தனிமை கிடைக்கும்பொழுது தீர்த்துக்கொள்ளும் அவசரம்.

விடுதியின் அறைக்குள் வந்தார்கள். அந்த விடுதியின் அறை திருப்தி தருமளவிற்குத் துப்பரவாக இருந்தது. 'AC' வேலை செய்தது. துப்பரவான துவைத்த துணி கட்டிலுக்கு போட்டிருந்தனர். தலைகாணி இரண்டு இருந்தது. 'Toilet' ஒழுங்காக வேலை செய்தது. குளியல் அறையில் தண்ணி வந்தது. தொலைக்காட்சிப்

பெட்டியை 'Remote Control' ஆல் இயக்க முடிந்தது. உடுப்பு வைக்கும் அலுமாரியும் துப்பரவாக இருந்தது. பெட்டியோடு வந்த பையனுக்கு காசைக் கொடுத்து அவசரமாகக் கவிதைக்கண்ணன் கலைத்தான். கதவைத் தாழிட்ட உடனேயே அவளை அணைத்து ஆழச்சுவைத்தான். அவளுக்கும் அது வேண்டியதாகிற்று. சிறிது நேரம் இருவரும் உலகை மறந்து ஆழச் சுவைப்பதில் காலம் போக்கினர். பின்பு அவள் நிலைமையை உணர்ந்தவளாய் குளிக்க வேண்டும் என்று சொல்லி நழுவினாள். அவள் முதலில் குளித்தாள். கவிதைக்கண்ணனும் அதையடுத்துக் குளித்தான்.

அவன் குளித்துவிட்டு வரும் பொழுது அவள் தலைசீவி அலங்கரித்துத் தேவதை போல் காட்சி தந்தாள். கவிதைக்கண்ணன் அவளை மோகத்தோடு இழுத்து அணைத்தான். ஆழச் சுவைத்த வண்ணம் அவள் ஆடை களைந்தான். அவள் மறுப்புச் சொல்லவில்லை. அவளால் கவிதைக்கண்ணனுக்கு மறுப்பு சொல்ல முடிவதில்லையென அவன் நினைத்தான். அவன் கைகள் அவள் மார்பில் பதிந்தது. பாம்பு தீண்டியதான அதிர்ச்சி அவனுக்கு. அவை முன்பு கண்டியில் இருந்தது போல் அல்லாது நொய்ந்து நசிந்த பப்பாளிப் பழம் போல் தொங்கி ஆடின. போன முறை அவள் வீட்டிற்குத் திரும்பிச் செல்லும்வரை கல்லாய் இருந்தது. இம்முறை இப்படிக் கிடப்பதின் காரணம் என்ன என்பது அவனுக்குப் புரியவில்லை. சுய இன்பம் காரணமாக இருக்குமோ? அல்லது. அவன் அதற்குமேல் அவள் மீது சந்தேகப்பட விரும்பவில்லை. பின்பு சிறிது சிறிதாகக் காமத்தில் உலகை மறந்து, இச்சைக் கலவியை இனிதே ஆடி, அதன் களைப்பில் ஆள்மேல் ஆள் படுத்தவண்ணமே அயர்ந்து போயினர்.

இரண்டு மணித்தியாலத்தின் பின்புதான் தன்மீது படுத்திருந்த கவிதைக்கண்ணனை அவள் எழுப்பினாள். அப்பொழுதுதான் கவிதைக்கண்ணனுக்கு அவள் மேலேயே தான் அலுப்பில் உறங்கிப் போய்விட்டது புரிந்தது. இருவரும் எழ மனதில்லாது படுக்கையை விட்டு எழுந்தார்கள். காமத்தின் கறை கட்டிலில் பெரிதாக. கவிதைக்கண்ணன் அதைப் பார்த்துத் திருப்தியாகச் சிரித்தான். ஒரு உறவில் கருக்கொண்டவளிடம் பல நாள் சேமிப்புச் சங்கமமான திருப்தி அவனுக்கு. ஒரு உறவில் என்பது கதையா நிஜமா என்பது அவனைக் குழப்பியது.

பின்பு இருவரும் புறப்பட்டு வெளியே சென்றார்கள். மாலைச் சாப்பாடு ஒரு பிடி பிடிக்க வேண்டும் என்பது கவிதைக்கண்ணனின் திட்டம். காலிரோட்டில் இருந்த சாப்பாட்டுக்கடை சனத்தால் நிறைந்து வழிந்தது. உள்ளே இருந்து சாப்பிட முடியும் என்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. சிறிது நேரம் என்ன செய்வது என்கின்ற யோசனையோடு இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் முழித்துக்கொண்டு நின்றார்கள். பின்பு பொட்டலம் வாங்கிக் கொண்டு மீண்டும் விடுதிக்கு வந்தார்கள்.

கவிதைக்கண்ணன் ஒவ்வொரு கணத்தையும் அவளோடு தனிமையில் கழிக்க விரும்பியதற்கு அதுவும் வசதியாகிற்று.

மீண்டும் விடுதிக்கு வந்ததும் அவள் தாயை அலைபேசியில் தொடர்பு கொண்டு கவிதைக்கண்ணன் சுகமாக வந்துவிட்டதையும், தாங்கள் நலமாக இருப்பதையும் அறிவித்தாள். அத்தோடு மகளுடனும் கதைத்தாள். பின்பு வாங்கி வந்த சாப்பாட்டை இருவரும் சாப்பிட்டார்கள். பிரிந்த காதலர்கள் கூடினால்

விடிந்தும் வேள்வி நடக்கும் என்பதாக அவர்கள் சங்கமம் தொடர்ந்தது. இந்த வேள்வியிலே ஒரு வாரிசு உருவாகித் தங்கள் உறவு நிலைக்க வேண்டும் என்கின்ற எண்ணம் கவிதைக்கண்ணனுக்கு. அதைத்தான் அவளும் விரும்புகிறாளென அவன் நினைத்தான்.

★

தெகிவளையில் இருக்கும் ஒரு சிங்களக் குடும்பத்துடன் நோர்வேயில் இருந்தே கவிதைக்கண்ணன் அறை வாடகைக்கு எடுப்பது பற்றிக் கதைத்து வைத்திருந்தான். அந்த எண்ணை எடுத்துக் கொடுத்து அலைபேசியில் சிங்களத்தில் கதைக்குமாறு அடுத்த நாள் காலை அவளிடம் கேட்டான். அவள் கொழும்பில் பல வருடங்கள் இருந்ததால் சிங்களம் தட்டித் தட்டிக் கதைப்பாள். அதை கண்டிக்குப் போன போது அவன் கண்டு கொண்டான். விடுதியில் அறை எடுப்பதற்கு, சாப்பாட்டுக் கடையில் சாப்பாடு வாங்குவதற்கு எனப் பலவற்றிற்கும் உதவியாக இருப்பதெல்லாம் அவள் பேசும் சிங்களம்தான்.

அவள் அந்தச் சிங்களத் தம்பதிகளுடன் அவர்கள் மொழியில் கதைத்தாள். அவர்கள் தங்களை வீட்டிற்கு வந்து சந்திக்குமாறு கூறினார்கள்.

கவிதைக்கண்ணனுக்கு அது நல்ல சகுனமாய்ப் பட்டது. இருவரும் புறப்பட்டு தெகிவளைக்குச் சென்றார்கள். அவர்கள் வீடு தெகிவளைப் பாலம் கழிந்ததும் கடற்கரைப் பக்கமாக இருந்தது. சாப்பாட்டுக்கடை, பலசரைக்குக்கடையென நிறையக் கடைகள் உள்ள வசதியான இடம் அது. இந்த இடத்தில் வீடு கிடைத்தால் அதிஸ்ரம் என்பது கவிதைக்கண்ணனின் நினைப்பு.

இருவரும் அந்தச் சிங்களத் தம்பதிகளின் வீட்டிற்குள் சென்றார்கள். அவர்கள் அறுபது அல்லது அறுபத்து ஐந்து வயது மதிக்கத்தக்க முதிய தம்பதிகள். தாங்கள் கீழ்வீட்டில் வசித்த வண்ணம், மேல்வீட்டை இரண்டு சிறிய வீடுகளாக்கி வாடகைக்கு விடுகிறார்கள். மிகவும் மென்மையாகவும், பண்பாகவும் அவர்கள் கதைத்தது கவிதைக்கண்ணனுக்குப் பிடித்துக் கொண்டது. மொழி, இனம் என்கின்ற பாகுபாட்டில் என்ன இருக்கிறது? மனித குணத்தில்தானே எல்லாம் இருக்கிறதெனக் கவிதைக்கண்ணன் எண்ணினான்.

இவர்கள் இருவரையும் பற்றி அந்தத் தம்பதிகள் ஆர்வமாகக் கேட்டு அறிந்தார்கள். அதற்கு இவர்கள் தாங்கள் நோர்வேயில் இருந்து வருவதாகவும், சிலகாலம் கொழும்பில் தங்கப்போவதாகவும் கூறினார்கள்.

கவிதைக்கண்ணனையும் சுமதாவையும் அவர்கள் கணவன் மனைவியென்றே முழுமையாக நம்பிவிட்டார்கள் என்பதை அவர்கள் வீடு காட்டுவதில் எடுத்துக்கொண்ட அக்கறையை வைத்துக் கவிதைக்கண்ணன் அறிந்தான்.

ஒரு படுக்கையறை கொண்ட வீட்டை இவர்களுக்குக் காட்டினார்கள். அதற்கு ‘AC’ போட்டிருந்தனர். சமையல் அறையும் அத்தோடு குளியல் அறையும் வசதியாக இருந்தன. உடுப்பு துவைப்பதற்கு உடுப்புக் கழுவும் இயந்திரம் வெளியே வைத்திருந்தனர்.

அவர்கள் அந்த வீட்டிற்கு முதலில் இருபது ஆயிரம் என்று கூறினார்கள். பிள்ளைகள் அற்ற கணவன் மனைவி என்கின்ற வசதி அவர்களுக்கு. பின்பு

பதினான்கு ஆயிரத்திற்கு அந்த வீட்டைக் கவிதைக்கண்ணனுக்கு வாடகைக்கு தருவதற்குச் சம்மதித்தார்கள். கவிதைக்கண்ணன் உடனேயே பணத்தை கொடுத்தான். தாங்கள் போய் பெட்டிகளை எடுத்துவருவதாகக் கூறிவிட்டு மீண்டும் அவளோடு புறப்பட்டு விடுதிக்குச் சென்றான்.

அந்த வீடு கிடைத்ததில் இருவருக்கும் மிகையான சந்தோஷம். இனி அலைய வேண்டியது இல்லை என்கின்ற ஆறுதல். போனதும் வந்ததுமாக இருவரும் பெட்டிகளுடன் மீண்டும் வந்தார்கள்.

வீட்டிற்குள்ளே வந்து பெட்டிகளைக் கட்டிலுக்கு அருகில் வைத்தனர். அதன் பின்பு கவிதைக்கண்ணன் ஆர்வத்தோடு அவளை கட்டிப்பிடிக்கப் போனான். அவள் அவனைத் திடீரெனப் பயத்தோடு பார்த்தாள். பின்பு கவலை வழியும் வதனத்தோடு,

‘நீங்கள் என்னை அடிக்கமாட்டியள் தானே?’ என்று பரிதாபமாய் கேட்டாள்.

கவிதைக்கண்ணனால் ஒரு கணம் அவளின் அந்த வேதனையைத் தாங்கமுடியவில்லை. அவள் மனநிலை புரியவில்லை. அவனை எந்தப் பெண்ணும் இதுவரை இப்படிக் கேட்டதும் இல்லை. இவ்வளவு பழகிய பின்பும் தன்னைப் பார்த்து இவள் இப்படிக் கேட்கிறாளே என்பது பெரும் கவலையாகிற்று. அதைவிட இந்தப் பெண் எப்படிப்பட்ட ஒரு கொடுமையான வாழ்வை அனுபவித்திருந்தால் இப்படிக் கேட்டிருப்பாள் என்கின்ற பரிதாபம் அவனை நிலைகுலைய வைத்தது. அவன் தனது உணர்வுகளை அதிகம் காட்டிக்கொள்ளாது,

‘யாரோ ஒருத்தன் அடிச்சதுக்காக எல்லாரும் அடிப்பினமா? நீர் ஏன் அப்பிடி நினைக்கிறீர். உலகத்தில ஒரு சில ஆம்பிளையள்தான் கெட்டவங்களா இருப்பாங்கள். நிறைய நல்ல ஆம்பிளையளை இந்த உலகத்தில காணலாம். நான் உன்ன அடிக்கமாட்டன். உன்னில எனக்கு நிறையக் காதல் இருக்குது. கைநீட்டி அடிக்க வேண்டிய கோபம் இல்லை. அப்பிடி இருந்தாலும் பெம்பிளையள, குழந்தைப் பிள்ளையளக் கைநீட்டி அடிக்கிற அளவுக்கு நான் ஒண்டும் கூடாத ஆள் இல்லை. சோ நீ எதுக்கும் பயப்பிடாத. நான் உன்ன எதுக்கும் அடிக்கமாட்டன். நீ அதைத் தாராளமாய் நம்பலாம்.’ என்றான். அப்போது அவள் ஒருவனிடம் மட்டும்தான் அடி வாங்கியிருந்தாள் என்பது கவிதைக்கண்ணனின் நினைப்பு.

'ஓ..., நீங்கள் அடிக்கமாட்டியள் எண்டது எனக்கும் விளங்குது. அவன் என்னக் கனகாலம் கொடுமைப்படுத்தினதால என்னையறியாமலே ஒரு பயம். இன்னும் ஒருத்தரிட்ட அடிவேண்டுற அளவுக்கு என்னால இயலாது. அப்பிடி எண்டா நான் செத்துப் போயிடுவன்.' என்றாள் சுமதா.

'என்ன கதையிது. தயவு செய்து என்னோடை இப்பிடிக் கதையாத. நீ இனி யாருக்கும் பயப்பிடத் தேவையில்லை. இனிமேலைக்கு நீ ஆம்பிளையளைக் கண்டு பயப்பிடமாட்டா. ஆம்பிளையளும் மனிசர்தான். உன் அத்தான் மாதிரி, உன் மாமா மாதிரி... ம்... கவலை வேண்டாம். சரியோ?' என்றான் கவிதைக்கண்ணன்.

'ம்... தாங்ஸ்.'

அவள் அதன் பின்பு வழமைக்கு மாறினாள். கவிதைக்கண்ணன் அவளை அத்தோடு விட்டுவிட்டான். அவள் உடுப்பு மாற்றினாள். அடுத்ததாக வீடு துப்பரவு செய்யும் வேலை தொடங்கியது. கவிதைக்கண்ணன் அவளுக்கு ஒத்தாசை வழங்கினான்.

முன்வீட்டில் இருந்து தமிழ் கதைப்பது கேட்டது. அதுவும் யாழ்ப்பாணத் தமிழ் கதைத்தார்கள். கொழும்பு என்பது யாழ்ப்பாணத்தைவிடச் சௌகரியமாக இருந்தாலும் அவளைப் பொறுத்தவரை அது ஒருவித சிறையாக அமைந்தது. அவள் இப்பொழுதும் தனது மாஜிக் கணவனுக்குப் பயந்து பயந்தே கவிதைக்கண்ணனோடு வெளியே வருவாள். அப்படிப் பயப்படுவதற்கு காரணம் அவன் மிகவும் கபடமானவன் என்பது தனது அனுபவமாய் அமைந்ததே என்பாள். அதைக் கவிதைக்கண்ணன் முழுமையாக நம்பினான். அவனைப் பற்றிய முழுவிபரங்களும் கவிதைக்கண்ணனோடு கொழும்பில் தங்கி நிற்கும் பொழுது சொல்வதாய் ஏற்கனவே கூறியிருந்தாள். புகைப்படங்களும் கொண்டு வந்து காட்டுவதாய் கூறியிருந்தாள்.

அன்று பக்கத்தில் இருந்த கடையில் சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டார்கள். அதன் பின்பு மதியம் போல அருகில் இருந்த 'Food City'க்குச் சென்று பொருட்கள் வாங்கி வந்தனர். சமைத்துச் சாப்பிடுதலே உசிதம் என்பது இருவரதும் ஏகமனதான முடிவாகிற்று. பொழுது போக்கிற்கு காதலரிடம் இருப்பது கவிதைக்கண்ணனிடம் தாராளமாக, ஆட்டம் அலுக்காமல் தொடர் கதையாகியது. அதற்கு அவளும் நன்கு ஒத்துழைத்தாள். அதை விட்டால் சிறியதொரு தொலைக்காட்சிப்பெட்டியும் அதில் தெளிவில்லாத சில அலைவரிசைகளும் வாடகைக்குள் அடங்கும். அவள் கவிதைக்கண்ணன் அனுப்பி வைத்திருந்த கணினியை யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்து வந்திருந்தாள். இணையத்திற்கான இனைப்பை ஏற்படுத்தப் பாவிக்கும் 'Dongle'ளை வரும் வழியில் ஓமந்தையில் நடந்த இராணுவப் பரிசோதனையின் போது தொலைத்து விட்டதாகத் தனது உடுப்புப் பையைத் தேடிப் பார்த்துவிட்டுச் சோகமாகக் கூறினாள்.

அவையெல்லாம் அவனுக்கு ஒரு பொருட்டாகப்படவில்லை. கவிதைக்கண்ணனுக்கும் அவளுக்குமான நெருக்கம் இப்படியும் தம்பதிகள் இருப்பார்களா என்கின்ற நிஜத்தை மிஞ்சியதாக உணர்ந்து என்றும்

வாடாத் தாமரையாக அவன் பூரித்தான். கணம்கூடப் பிரியாத காந்தமாகக் கவிதைக்கண்ணன் அவளோடு பிணைக்கப்பட்டவன் ஆகினான். சமையல் செய்யும்போதுகூடக் கவிதைக்கண்ணன் சமையல் அறைக்குள் நிற்பான். அவளை விட்டுப் பிரிந்திருத்தல் என்பதை அவனால் ஏனோ எண்ண முடியவில்லை. திருமணம் செய்த தொடக்கத்தில் ஆணும் பெண்ணும் இப்படித்தான் இருப்பார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறான். காதலிப்பவர்களும் தொடக்கத்தில் இப்படித்தான் இருப்பார்கள் என்பது அவன் அனுபவமாயிற்று. அவனுக்கு அப்படி எல்லாம் மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாளென அது முடிந்து போய்விடும் என்று தோன்றவில்லை. வாழ்க்கை பூராகவும் எந்தக் கணமும் பிரியாது இவளோடே வாழவேண்டும் என்பது அவனது மூச்சாகியது. அது நடவாது போனால் மூச்சுக்காற்றே நின்று போதல் மேலானதென அவனுக்கு எண்ணத் தோன்றியது.

அவன் அவளை அடிக்கடி கரைகடந்த மோகத்தோடு அணைத்துக் கொள்வான். இந்த மென்மையான பைங்கிளி எனக்கே சொந்தம் என்று மனதில் ஓங்கி ஒலிக்கப் பெரும் கர்வம் கொள்வான். காதலோடு அவளை அடிக்கடி முத்தமிடுவான். கவிதைக்கண்ணன் வெளியே போவது என்றால் அவள் வாசலுக்கு வருவாள். முத்தம் தந்து அவனை வழியனுப்பி வைப்பாள். வீட்டிற்குத் திரும்பி வந்ததும் இருவரும் முத்தம் பரிமாறிக்கொள்வார்கள். இதுவல்லவா குடும்ப வாழ்க்கை என்கின்ற கர்வம் கவிதைக்கண்ணனிடம் மலையாக வளர்ந்திற்று.

கண்கள் பார்த்து, காதல் முத்தம் பகிர்ந்து, பிரிய மனம் இல்லாது பிரிந்து, கையசைத்துச் சென்றதாக அவன் கடந்தகாலக் குடும்ப வாழ்வு இருக்கவில்லை. அதன் ஏக்கம் தீர்ந்து, மனிதப் பிறப்பிற்கான முக்தியை அடைவதற்கு முதல் வழி திறந்ததாக அவன் எண்ணிக்கொண்டான்.

அன்று மதியம் இருவருமாக நடந்து 'Food City'க்குச் சென்றார்கள். அப்படி நடந்து செல்லும் போது அவள் தனது பழைய நினைவுகளில் சிலதைக் கவிதைக்கண்ணனோடு மீட்டாள். அவள் அவனோடு

இருக்கும் பொழுதும் 'Food City'யில்தான் பொருட்கள் வாங்குவது வழக்கமாக இருந்திருக்கிறது. அப்படி ஒரு நாள் பொருட்கள் வாங்கச் சென்ற இடத்தில் மகள் ஒரு பானத்தைக் கண்டுவிட்டு அதை வாங்கித் தருமாறு கேட்டு அடம்பிடித்திருக்கிறாள். இவளுக்கு அது என்ன என்பது புரியவில்லை. ஏதாவது பிள்ளைகள் குடிப்பதாய் இருக்கும் என்று வாங்கிக் கொடுத்துவிட்டாள். வீட்டிற்கு வந்ததும் மகள் அதை அருந்திவிட்டு வெறியில் பிரண்டு போய்ப் படுத்துவிட்டாள். அவள் ஏன் இப்படிப் படுத்திருக்கிறாள் என்பது இவளுக்குப் புரியவில்லை. மாஜிக் கணவன் வந்தும் எழும்பாது அவள் தொடர்ந்தும் நித்திரை கொண்டாள். வழமையாகப் பயத்தில் எங்காவது ஒளிந்து கொள்வது அவள் வழக்கம். தன்னைக்கண்டும் எழாத மகளின் ஆணவத்தைப் பார்த்து அருகே சென்ற மாஜிக் கணவன் அந்தப் பானத்தின் உறையைக் கண்டுவிட்டான். அவன் கோபம் அத்தோடு போக உறையைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு பெரிதாகச் சிரித்தானாம். என்பதாக கவிதைக்கண்ணனிடம் கடந்த வாழ்பனுபவம் சிலவற்றை அவள் அவுட்டு விட்டாள்.

'Food City'களில் மதுபானம் ஒரு குறிப்பிட்ட பகுதியில்தான் வைத்திருக்கிறார்கள். ஏன் அங்கே பிள்ளையை இழுத்துக் கொண்டு அவள் சென்றாளெனக் கவிதைக்கண்ணனுக்குக் கேட்கவேண்டும் போல்

நாக்கில் ஒரு நமநமப்பு. என்றாலும் அவன் அவள் மனம் நோந்துவிடுமோ என்றெண்ணி அதை மனதிற்குள் புதைத்தான்.

அவர்கள் இருவரும் 'Food City'யில் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கினார்கள். அங்கிருந்து திரும்பி வரும்பொழுது தங்கள் திருமணம் எப்படி நடந்தது என்பதுபற்றிக் கவிதைக்கண்ணனுக்கு அவள் கூறினாள். கவிதைக்கண்ணன் அதைக்கேட்ட வண்ணம் அவளோடு நடந்து வந்தான். வீட்டிற்குள் வரும்போது வீட்டுக்காரர் படலையடியில் நின்றார். இவர்கள் பொருட்களுடன் வருவதைக் கண்டுவிட்டுப் படலையைத் திறந்து வழி விட்டார். அவரது முகத்தில் இருந்த திருப்தியைக் கவிதைக்கண்ணன் கண்டு மகிழ்ச்சியாகச் சிரித்தான். அன்று இரவு அவள் முதல் முறையாக அவனுக்குத் தனது கையால் சமைத்துச் சாப்பாடு கொடுத்தாள். கவிதைக்கண்ணன் அவள் சாப்பாட்டை மிகவும் ருசித்துச் சாப்பிட்டான். கவிதைக்கண்ணனுக்கு அவன் மனைவி சமைப்பது தெரியும். அவள் ஒரு கணக்கில் கறிக்கு உப்புப் போடுவாள். அல்லது உப்பே போடாமல் கறி வைத்திருப்பாள். சாப்பாடு சாப்பிடும்பொழுது கவிதைக்கண்ணன் உப்பில்லை அல்லது கூடிவிட்டது என்று சொன்னால்தான் அவளுக்கு அது புரியும்.

அதுவரைக்கும் அவள் அதைத் தொட்டு வாயில் வைத்தே பார்த்திருக்கமாட்டாள். அப்படிச் சுவைத்துப் பார்ப்பதுதான் தான் உலகத்தில் செய்யும் மாகா பெரிய தவறு என்பது அவள் நினைப்பு. கவிதைக்கண்ணனுக்குச் சுவைக்காது சமைப்பது எப்படி என்று அவளிடம் கற்க வேண்டும் என்று ஆசை. கறுமம் இத்தினைக்குப் பின்பும் சமைப்பதா என்று எண்ணி அந்தப் பக்கம் செல்வதில்லை. அவளின் அந்த அக்கறைக்கும் ஒவ்வொரு உணவாக சுவைத்துப் பார்த்துச் சமைத்து பரிமாறியதற்கும் நிறையவே வித்தியாசம் இருப்பதாக அவன் எண்ணி மருகினான். காதலால் உருகினான். எல்லாவிதத்திலும் குறைவில்லாது பழகும் இவளை அவன் ஏன் வெறுத்தான்? ஏன் அடித்தான்? என்பது கவிதைக்கண்ணனுக்கு விளங்கவில்லை. அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆர்வம் அவனிடம். புரிந்துகொள்ள முடியுமா என்கின்ற மலைப்பு அதற்கும் மேல். மர்மமுடிச்சுக்களை அப்பாவி மனிதர்கள் புரிந்து கொள்ள முடியாது. ஏமாற்றப்படுவது புரியாது ஏமாறுவதை ஏமாறுபவர்கள் புரிந்துகொள்ள முடியாதது போல.

10

பச்சைநாடு விடுதியை விட்டுக் கவிதைக்கண்ணன் வெளியே வந்தான். அவன் 'காலிரோட்'டுப் பக்கம் போகாது எதிர்த்திசையில் நடந்தான். போனமுறை அவளோடு அப்படித்தான் நடந்து சென்றான். கடற்கரைப் பக்கமாக வரும் தெருவைத் தாண்டி கடலை நோக்கி நடந்தான். இடையில் தண்டவாளம் குறுக்கிட்டது. தூரத்தில் புகையிரதம் ஒன்று வந்தது. அப்படியே தண்டவாளத்தின் நடுவே அசையாது நின்றால் இந்த வேதனையில் இருந்து இந்தக் கணமே தப்பித்துக் கொள்ளலாம் என்கின்ற ஒரு நினைவு எழுந்தது. தற்கொலை செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் ஆயிரம் முறை வந்து போய்விட்டது. கவிஞனான நானே தற்கொலைக்கு உதாரணமாவதா என்கின்ற வாதம் மீண்டும் அவனை உலுக்கியது. அவன் அவாவை அடக்கியது. அவன் புகையிரதம் போகும் வரைக்கும் அசையாது நின்றான். அது போன பின்பு கடற்கரைக்குப் போனான். அவன் நின்ற கரை கடலின் அலைகள் சுனாமியாக வராவிட்டால் தொடமுடியாத

உயரமானவை. போனமுறை அவளோடு கடலைப் பார்த்த போது ஒரு ‘Wallet’ கடலுக்குள் மிதந்தது.

இப்போது அவளும் இல்லை அந்த ‘Wallet’றும் இல்லை. சிலவேளைகளில் வாழ்க்கையில் இருந்து பலவிடயங்கள் எதிர்பாராமல் தொலைந்து போய்விடுகின்றன. காதல் நினைவுகள் மட்டும் கல்வெட்டாய் என்றும் நெஞ்சில் பதிந்து விடுகின்றன. கவிதைக்கண்ணன் கண்ணை மூடினான். கடல் இரைந்தது. அதைவிடப் பலமாக அவள் நினைவுகள் மனதுள் இரைந்தன.

★

கவிதைக்கண்ணன் இவளே உயிர் என்கின்ற தியானத்தில் கணங்களை வீறாய் வளரும் ஆறாக் காதலோடு கழித்து வந்தான். அந்த உயிர் தனது உயிர் உள்ளவரையும் பிரியாது இருக்க வேண்டும் என்கின்ற வெறி அவனுக்கு. அதற்காக எது என்றாலும் செய்யலாம் என்கின்ற முடிவுக்கு அவன் வந்துவிட்டான். அவள் முன்பு சொன்னது போல வவுனியாவில் வீடு எடுத்துக் கொடுத்து அதில் குடிவைத்துவிட்டு வந்து போகலாம் என்பது அவனுக்கு இயலாத காரியமாகத் தோன்றியது. இவளை எப்படியாவது நோர்வேக்கு கூப்பிட்டால் மட்டுமே தன்னால் நிம்மதியாக வாழமுடியும் என்பது அவனுக்குப் புலப்படலாயிற்று. கவிதைக்கண்ணன் அதை எப்படி உறுதியாக்குவது என்பது பற்றி ஏற்கனவே அவளோடும் கதைத்திருந்தான். தான் இம்முறை வரும் பொழுது அவளுக்குக் கோயில் ஒன்றில் வைத்துத் தாலி கட்டுவதாய் அவன் கூறினான். அவள் அதற்குச் சரி என்று ஒப்புதல் அழித்தாள். மேற்கொண்டு அவள் அதைப் பற்றி வேறெதுவும் கதைக்கவில்லை. தாலி என்கின்ற கௌரவத்தை வேண்டாம் என்கின்ற பெண்கள் உண்டா என்பது கவிதைக்கண்ணனின் நினைப்பு. கொழும்பு வந்த மூன்றாம் நாள் இருவருமாகப் புறப்பட்டுத் தாலிக்கொடி வாங்குவதற்குச் செட்டித்தெருவுக்குச் சென்றார்கள்.

கவிதைக்கண்ணன் நோர்வேயில் இருந்து குரோனர்கள் கொண்டு வந்ததால் குரோனருக்கு என்ன விலை கொடுக்கிறார்கள் என்பதையும் விசாரித்த வண்ணம், தங்கம் என்ன விலை விற்கிறார்கள் என்பதையும் அறிந்தபடி சில கடைகள் ஏறி இறங்கினார்கள். அவள் திடீரெனக், ‘கடவுளே, கடவுளே அவன் என்னைப் பாக்கக் கூடாது.’ என்ற வண்ணம் கவிதைக்கண்ணனுக்குப் பின்னால் ஒளிந்தாள். அவர்கள் நின்ற பக்கத்திற்கு மறுபக்கம் பார்த்தே அவள் அப்படிப் பதறினாள். மறுபக்கத்தில் இவர்களைப் பார்த்துக்கொண்டு ஒரு குள்ளமான இளைஞன் நின்றான். அவனைப் பார்த்த கவிதைக்கண்ணன் அவளைப் பார்த்து,

‘யார்?’ என்றான்.

‘சூ பேசாமல் வாங்க. மச்சான் நிற்கிறான்.’ என்றாள் அவள். கவிதைக்கண்ணனுக்கு அது சங்கடமான சந்திப்பல்ல. அவளுக்கு அது எப்படி சங்கடமாய் இருக்கும் என்பதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

அந்த இளைஞன் இவர்களை நோக்கிக் கையசைத்து வருமாறு சைகை காட்டினான். வேறு வழி இல்லாமல் இருவரும் அவனது கடைக்குச் சென்றார்கள். அவனுக்கு இவர்கள் உறவு என்ன என்பது

தெரிவதில் அவளுக்கு எந்தப்பிரச்சனையும் இல்லை. அதை அவளது அக்காள் அறிந்துவிட்டால் என்பதுதான் அவளுக்குப் பெரிய சிக்கலைக் கொடுத்தது. அவள் ஏன் தனது அக்காளுக்கு இப்படிப் பயப்படுகிறாள் என்று கவிதைக்கண்ணன் அவளைக் கேட்டுப்பார்த்தான். அவள் அதிகம் படிக்காததால் காதல், மறுமணம் போன்ற சிக்கலான விடயங்களை அவளால் புரிந்துகொள்ள முடியாது என்றும், அதற்கு அவள் எதிர்ப்பு தெரிவிப்பாள் என்றும், அத்தால் தாங்கள் குடும்பமாகிப் பிள்ளைகள் பிறந்த பின்பு அறியட்டும் என்றும் அவனிடம் கூறினாள். அப்படி அறியும் போது அவளால் எதுவும் செய்ய முடியாது என்றும் கவிதைக்கண்ணனிடம் அவிப்பிராயம் தெரிவித்தாள். அக்காவிடம் இருந்து மறைப்பது கெட்டுவிடக்கூடாது என்பதே அவளது இந்தப் பதட்டத்திற்குக் காரணமெனக் கவிதைக்கண்ணன் நம்பினான். கவிதைக்கண்ணனுக்கும் அது சரியெனவே பட்டது. எல்லோராலும் இப்படியான உறவுகளைப் புரிந்து கொள்ள முடியாதென அவனும் நினைத்தான்.

காதல் என்பதே தவறு. அதுவும் பிரிந்தபின் காதல் என்பது மகா தவறு. வளைக்குள் வாளும் எலிகள் நாங்கள். வயல் வரப்பேறி சுதந்திரம் கேட்கக் கூடாது. கேட்டால் சமுதாய மரணம் இரணமாகத் தரப்படும். கவிதைக்கண்ணனுக்கு இந்தக் கருத்தை ஒரு புதுக்கவிதையாக்க வேண்டும் என்கின்ற உந்தல். கையில் பேனாவும் தாளும் இல்லாத அவஸ்தை. கல்லைக் கட்டிவைத்து நாயை அவுட்டு விட்டிருக்கிறார்கள் என்று கூறிய கவிஞனின் நிலை.

இருவரும் அவனது கடைக்குள்ச் சென்றார்கள். நல்லவேளை அவளது மச்சானுக்கு அவளின் மாஜிக் கணவனைத் தெரியாது. கொழும்பில் வாழ்ந்த காலத்தில் அவனோடு கொண்டாடியது இல்லை. அத்தால் அவன் கவிதைக்கண்ணனை அவளது கணவன் என்றே எண்ணிவிட்டான். அவன் மிகவும் பண்பாகப் பழகியதோடு இருவருக்கும் குடிப்பதற்குக் குளிர்பானமும் வழங்கினான். கவிதைக்கண்ணன் குளிர்பானத்தில் அதிக சீனி இருப்பதால் வழமையாகக் குடிப்பதில்லை. அவளது மச்சான் தருகிறானே என்பதால் ஒரு மரியாதைக்காக சில மிடறுகள் குடித்தான். பின்பு சிறிது நேரம் இருந்து கதைத்துவிட்டு இருவரும் புறப்பட்டு வெளியே வந்தார்கள்.

அவனது கடைக்குப் பக்கத்துக் கடையில் இனிச் சென்று விசாரிக்க முடியாது என்பது இருவருக்கும் புரிய அவர்கள் செட்டித்தெருவில் உள்ள தொங்கல் கடைக்குச் சென்றார்கள். அந்தக் கடையில் ஒரு தாலிக் கொடியும் தாலியும் வாங்கினார்கள். கவிதைக்கண்ணன் அவளுக்கு ஒரு சிறிய மோதிரமும் வாங்கினான்.

நகை வாங்கிக்கொண்டு வரும் போது அவளது கோலம் மாறிவிட்டது. தலையைக் கையில் பிடித்த வண்ணம் அவஸ்தைப்பட்டாள். தலையிடிப்பதாகக் கூறினாள். கவிதைக்கண்ணனுக்கு அவளைப் பார்க்க இதயம் நொந்தது. அவள் பல வேளைகள் கலகலப்பாகவும் அன்பாகவும் இருப்பாள். சில வேளை ஏதோ யோசனையோடு தலையிடிப்பதாய் கூறிக்கொண்டு படுத்துக் கொள்வாள். கவிதைக்கண்ணனுக்கு அவள் ஏன் அப்படிச் செய்கிறாள் என்பது முதலில் புரியவில்லை.

அவளிடம் அவன் எதற்காகத் திடீர் திடீர் என்று கலகலப்பை இழக்கிறாய் என்று வினாவினான். அவள் அதற்கு தனக்குப் பழைய நினைவுகள் வந்தால் தலை இடிக்கும் என்றும் அப்படியான நேரங்களில் தான் படுத்துக் கொள்வதாயும் கூறினாள். கவிதைக்கண்ணனுக்கு அதைக் கேட்கும் போது பரிதாபமாக இருக்கும்.

வாழ்க்கை பூராகவும் கவலைப்படும்படி ஒரு மனிதன் அவளைக் கொடுமைப்படுத்தி இருக்கிறானென எண்ணும் போது வேதனையாகும்.

அவள் தலையிடிக்கும் பொழுது 'Asprin' போட்டுக் கொள்வாள். அப்படி 'Asprin' பாவிப்பதால் வயிற்றில் புண் வந்துவிடுமே என்று கவிதைக்கண்ணனுக்குப் பயமாகியது. 'Asprin' என்ன செய்யும் என்கின்ற முழுமையான அறிவில்லாது துஸ்பிரயோகம் செய்வதாகக் கவிதைக்கண்ணன் நினைப்பான். தலையிடியின் வேதனையை அதை அனுபவிப்பவர்களைத் தவிர மற்றவர்கள் உணர முடியாது என்பதால் அவன் அவளைப் பேசுவதில்லை. சில வேளை பொறுக்க முடியாது புத்திமதியாகச் சொல்லிப்பார்ப்பான்.

★

கடையில் தாலிக்கொடி வாங்கி வந்தாயிற்று. அதைக் கோயிலுக்குச் சென்று கட்டிக்கொள்ள வேண்டும். கொழும்பு தெரிந்த அவள் அதற்கு வழிகாட்ட வேண்டும். அவள் கோயிலுக்குப் போய் தாலி கட்டிக்கொள்வதில் அக்கறைப்படவில்லை. அவள் அதைத் தட்டிக் கழிப்பதாய் கவிதைக்கண்ணனுக்குத் தோன்றியது. ஏன் என்று அவனுக்கு விளங்கவில்லை. கவிதைக்கண்ணனுக்கும் தன்னை அவளோடு யாராவது கண்டால் அசௌகரியமாய் இருக்கும் என்கின்ற மனநிலை. அவன் தன்னையோ அவளையோ வற்புறுத்தாது அறைக்கு உள்ளேயே தாலிகட்டிக் கொள்வோமா என்று அவளைக் கேட்டான். அவளும் அதற்கு உற்சாகமாய் ஒப்புக்கொண்டாள். கவிதைக்கண்ணன் அவளுக்கு அறைக்கு உள்ளேயே தாலிகட்டிக் குங்குமப்பொட்டும் வைத்தான். அத்தால் அவள் தன் மனைவி என்பதை முழுமையாக நம்பினான். அந்த உரிமையை எடுத்துக்கொள்ள விரும்பினான். அவள் சிலவேளைகளில் குழம்புவதற்குத் தாலி முற்றுப்புள்ளி வைக்கும் என்கின்ற நம்பிக்கை கவிதைக்கண்ணனிடம். தளும்பும் மனநிலையில் இருப்பவள் இனியாவது மனைவி என்கின்ற நினைப்பில் தளும்பாது இருக்கட்டும் என்கின்ற பிரார்த்தனை அவன் மனதில்.

அவர்கள் இருவரும் அந்த வீட்டில் தாலிகட்டி குடும்பம் நடத்தினார்கள். எலிகள் போல உறவு கொண்டார்கள்.

ஒரு உறவில் சூல்கொண்டவள். இப்போது ஒவ்வொருநாளும் உறவு கொண்டால்? நிச்சயம் எதாவது உருவாகும் என்கின்ற எதிர்பார்ப்பு இருவரிடமும் தளைத்திருந்தது. உருவானால் அக்காவின் வாய் அடைபடும் என்கின்ற ஒரு குருட்டு நம்பிக்கை கவிதைக்கண்ணனுக்கு. அக்காள் எதற்கு இவளைப் பேசுகிறாள்?

★

அன்று நாட்காட்டியில் ஆங்கிலத்திற்கு முதலாம் திகதி. அதை அவள் வீட்டில் மாதப்பிறப்பாய் கொண்டாடுவார்கள். கவிதைக்கண்ணன் ஊரில் இருந்த வரைக்கும் தமிழ் மாதப்பிறப்பைத்தான் அப்படிக் கொண்டாடுவது உண்டு. மாதப்பிறப்பை ஒட்டி அவள் அக்காள் போன் பண்ணினாலும் பண்ணுவாள் என்று கூறினாள். அவள் கூறியது பலித்தது. அக்காள் போன் செய்தாள். கவிதைக்கண்ணன் அவள் அருகில் இருந்தான். சம்பாசனை தொடங்கியது.

அவளது அக்காள் சிறிது நேரம் கதைத்துவிட்டு அம்மாவோடு கதைக்க வேண்டும் என்று கூறினாள். அதற்கு அவள் அம்மா நித்திரை கொள்வதாக மிகவும் லாவகமாக எந்தப் பதட்டமும் இல்லாது பதில் கூறினாள். இல்லைப் பொய் சொன்னாள். கவிதைக்கண்ணனிடம் அப்படி யாரும் கேட்டிருந்தாற் திகைத்திருப்பான். இப்படி எல்லாம் பொய்யை உண்மையாகச் சொல்லும் தகமை அவனிடம் இல்லை. பின்பு அவளின் அக்காள் மகளிடம் கதைக்கக் கொடு என்று கேட்டாள். அதற்கு மகள் வெளியே விளையாடுகிறாள் என்று கூறினாள். கொழும்பில் தனது அணைப்பில் இருந்து கொண்டு யாழ்ப்பாணத்தில் இருக்கும் அம்மாவுக்கும், மகளுக்குமாக அவள் அபாரமாகப் பதில் கூறினாள். அதற்கு வசதியாகத் தாயிடம் கொடுத்த அலைபேசி எண்ணை அவள் தமக்கைக்குக் கொடுக்கவில்லை. தமக்கை அலைபேசியில் தொடர்புகொண்டால் இவளோடு மட்டுமே தொடர்புகொள்ள வேண்டும். இவள் சொல்வதை மட்டுமே நம்ப வேண்டும். கவிதைக்கண்ணனுக்கு இது அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக இருந்தது. இந்த பிரித்தாளும் தந்திரம் அவனுக்குச் சுட்டுப் போட்டாலும் வராத கலை. அவளின் சாணக்கியம் அவனுக்கு முதலில் மலைப்பைத் தந்தது. பின்பு பயத்தைத் தந்தது. இருந்தும் காதலின் போதை அவன் சுயத்தைத் தின்றது. தப்புத் தாளத்தில் தானும் சேர்ந்து இசைத்தான்.

கவிதைக்கண்ணன் அவளைப் பிழை செய்கிறாய் என்று தட்டிக் கேட்கவில்லை. தங்கள் உறவு வாழவேண்டும் என்பதற்காக அவள் செய்யும் தியாகத்தை தன்னால் எப்படிப் பிழை சொல்ல முடியுமென மனதிற்குள் நினைத்தான். அவள்மீது அவனுக்கு மேலும் மோகம் உண்டாகிற்று. அவன் மூளை சுயநலத்தால், காதல் மோகத்தால் மந்தமாகப் போயிற்று.

சுமதாவுக்குக் கொழும்பில் ஒரு மாமா உள்ளார். அவள் அவரை மாமா என்பாள். உண்மையில் அவர் அவளுடைய தகப்பனின் ஒன்றுவிட்ட தம்பி. சிற்றப்பாவை மாமா என்கின்ற ஒருவித குழப்பம். இந்தக் குழப்பத்தைக் கவிதைக்கண்ணன் தனது வாழ்வில் முதன்முறையாகச் சந்தித்தான். எனினும் அவள் சொல்வதானால் அதில் குற்றம் எதுவும் இருக்காது என்பது அவன் முடிவு. அதைவிட அந்த மாமா அவளின் அப்பா வெளிநாட்டிற்கு ஓடிய பின்பு, மிகவும் உதவியாக இருந்தவர் என்றும் அவள் அவனுக்குக் கூறினாள். அவளது தாய்க்குச் சுகம் இல்லை என்றால் அவர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து உதவி செய்வாராம். அதைவிட அவர் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து தங்களையும் பார்த்துவிட்டு, ஊரில் இருக்கின்ற கடவுள் இல்லத்திற்கும் செல்வார் என்றும் அவள் விவரித்தாள். இப்படியும் ஒரு மாமாவா என்று கவிதைக்கண்ணனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

முதலில் மிகவும் மதிப்பாக மாமாவைப் பற்றி அவனோடு கதைத்தாள். அவள் கொழும்பில் கவிதைக்கண்ணனோடு இருக்கும் போது இவளோடு மாமா அடிக்கடி அலைபேசியில் தொடர்புகொண்டார்.

அதுவும் கவிதைக்கண்ணனின் அணைப்பில் இருக்கும் பொழுது தொடர்பு கொண்டு 'நீ எங்கே நிற்கிறாய்? ஏன் போன் எடுக்கிறாய் இல்லை?' என்று அக்கறையோடு கேட்டார். அவள் அதற்குப் பின்பு அவரது அலைபேசி அழைப்பு வந்தால் எடுக்காமல் துண்டிப்பாள். சில வேளைக் கோபத்தில் போனையே செயலிழக்கச் செய்து வைத்தாள். அவரைக் கடும் கோபமாகப் பேசினாள். கவிதைக்கண்ணன் அவளின் குணம் திடீரென அப்படி மாறும் என்று எதிர்பார்க்கவில்லை. அவனுக்கு மீண்டும் ஒரு அதிர்ச்சி. அதற்கும் காதல் தியாகம் என்கின்ற அவனது சமாதானம் தயாராக இருந்தது. காதல் மோகத்தில், காம மயக்கத்தில் மூளை கழுவப்பட்ட முண்டமாக அவன் புதுப்பிறவி எடுத்தான்.

இப்படித் தனக்கும் இவள் செய்யமாட்டாள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது என்று ஒரு முறை கவிதைக்கண்ணன் தவறுதலாக எண்ணிப்பார்த்தான். பின்பு 'மடையா எங்கள் காதலுக்காகத்தானே அவள் இத்தினை துன்பமும் அனுபவிக்கிறாள். அப்படி அவள் செய்யும் தியாகத்தை நீ இப்படி எண்ணலாமா? ' என்பதாக அதற்கு மறுப்பாகத் தர்க்கித்தான். அதன் பின்பு அவளைப் பற்றி அப்படித் தப்பாக எண்ணக்கூடாது என்று திடமாக முடிவு செய்தான். அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி காதலின் குருட்டுத்தனத்தில் கண்காணாமல் மறைந்து போயிற்று.

★

காலம் கானல் நீராக் கனவுகள் கனவுகளாகவே கலையும் பயமான அவதி பலருக்கு. அப்படியாகத் தனது பல கிழமைகள் கரைந்ததைக் கவிதைக்கண்ணனால் நம்ப முடியவில்லை. தனக்கு மாதவிடாய் வரும் நாள் தாமதித்துவிட்டதாகச் சுமதா கவிதைக்கண்ணனிடம் கூறினாள். கணக்கு இடித்தாலும் கனவு மெய்ப்பட்ட புளுகு அவனுக்கு. அவள் ஓ இரத்த வகையைச் சார்ந்தவள். தங்களைப் போன்ற பெண்கள் இலகுவாகக் கருத்தரிப்பார்கள் என்று யாரோ ஒரு மருத்துவர் கூறியதாக அவள் ஒரு முறை கூறியிருந்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. அதையேன் இவள் மருத்துவரிடம் கேட்டாள் என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை. அதைவிட ஒரு தரத்தோடு முதல் மகள் பிறந்ததும் கவிதைக்கண்ணன் நினைவில் நிலைத்து நின்ற சங்கதி. அத்தால் கவிதைக்கண்ணன் அதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்கின்ற உந்தலில் அவளை அழைத்துக் கொண்டு 'டெல்மென்' வைத்தியசாலைக்குச் சென்றான். 'டெல்மென்' வைத்தியசாலை தனியார் வைத்தியசாலை என்பதால் உள்ளே அரச வைத்திய சாலைகளில் இருந்து வரும் ஆஸ்பத்திரி வெக்கை அதிகம் இருக்கவில்லை. அந்த மணம் கவிதைக்கண்ணனுக்குச் சற்றும் பிடிப்பதில்லை. அந்த மணமே அவனுக்குத் தலைச்சுற்றை உண்டு பண்ணிவிடும்.

மருத்துவ மனையில் ஒரு பெண் மருத்துவர் இருவரோடும் கதைத்தார். பரிசோதனை செய்வதற்கு இன்னும் நாட்கள் இருப்பதாய் முதலில் அவிப்பிராயப்பட்டார். பின்பு தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டு மேலே இரண்டாவது மாடியில் கருத்தரித்திருக்கிறதா என்று பரிசோதனை செய்துவிட்டு வருமாறு கூறினார். இரண்டாவது மாடியில் தங்கள் பரிசோதனைபற்றி கூறிப் பதிந்த பின்பு அங்கே காத்திருந்தனர். சிறிது நேரம் சென்றதும் தாதிகள் அவளை அழைத்தார்கள். சிறுநீர் கொடுப்பதற்கு அதிக நேரம் செல்லவில்லை. அவள் மீண்டும் திரும்பி வந்தாள். அதன் பின்பு பதினைந்து நிமிடங்கள் காத்திருந்தார்கள்.

இரண்டு தாதியர் இவர்களைப் பார்த்துத் தங்களுக்குள் சிரித்துக் கதைத்துக்கொண்டு வந்தார்கள். பின்பு அவளது பெயரைக் கூப்பிட்டு அவளிடம் முடிவைச் சொன்னார்கள்.

கவிதைக்கண்ணன் ஆய்ந்து அறியாது மகிழ்ச்சியில் மட்டும் கூத்தாடினான். தனது அடுத்த வாரிசு என்கின்ற நினைவில் மிதக்கத் தொடங்கினான். புணர்ந்தவளுக்கு மட்டுமே பிறப்பது பற்றிய உண்மையும் தெரியும் என்பதை மறந்தான்.

11

சூரியன் பூமியைச் சிதையில் ஏற்றப் போவதாய் வெயில் நெருப்பாய்க் கொளுத்தியது. அனல் அலையெழும்பி நெளிந்து நெளிந்து அண்டத்தில் மோகங்கொண்டு மேலே பறந்தது. கவிதைக்கண்ணன் பேருந்தில் ஏறிப் பத்து ரூபாய்த் தாளைக் கொடுத்தான். பத்து ரூபாய்தான் மிகக்குறைந்த கட்டணமாய்ப் பேருந்தில் அறவிட்டார்கள். மூன்றாவது தரிப்பில் இறங்கி மறுகரைக்கு மாறினான். 'காலிரோட்டின்' மறுகரையில்தான் அந்த மசூதி இருக்கிறது. அதை மீண்டும் பார்க்கவேண்டும் என்கின்ற ஆசை அவனுக்குத் திடீரென்று வந்துவிட்டது. வெயில் வாட்டுவதைப் பற்றிக் கவலைப்படாமல் அவன் புறப்பட்டு விட்டான்.

கவிதைக்கண்ணன் நடந்து மசூதிக்கு அருகே வந்தான். பின்பு அதன் முன்பு நின்று வைத்தகண் வாங்காமல் அதைப் பார்த்தான். வெள்ளையடித்த மசூதி. இடுப்பில் பச்சை கட்டியதான மதில். நான்கு வீரர்கள் கற்பக்கிரகத்தைக் காப்பதான குடுமிகள். ஆணுறுப்பாக நிமிர்ந்து நின்ற சாளரங்கள். அயலில் ஓடும் கருமை நிறத்தில் காசான ஆறு. மசூதி அன்று போல் இன்றும். கவிதைக்கண்ணன் மனது என்றும் இல்லாத வலியில் இன்று. கவிதைக்கண்ணன் மசூதிக்கு உள்ளே போனது கிடையாது. மனது இரணமாகத் தொடர்ந்து வலித்தது. கண்கள் அவனையும் மீறிப் பனித்தன. கடவுளுக்காய்க் காதல் கொண்டாலும் கண்ணீர் வரும். காமத்திற்காய்க் காதல் கொண்டாலும் கண்ணீர் வரும். அவனுக்கு வந்தது. இதயம் நோக வேகமாக அடித்தது. இந்த வேதனைக்கு முடிவு என்ன என்கின்ற அடங்காத ஆதங்கம் பிறந்தது. இங்கு ஆரம்பமானது இப்படி அலங்கோலமாகும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. இன்று அவனால் அதைத் தாங்க முடியவில்லை.

சில வேளைகளில் அவள் செய்வதை அவனால் புரிந்து கொள்ள முடியாது. அவள் பைத்தியம் போல நடப்பதை எண்ணப் பயமாக இருக்கும். எதற்காக இவளைச் சந்தித்தேன் என்கின்ற சலிப்பு அவனுக்கு மேலிடும். விதி அல்ல அது காமம். இருந்தும் விதியை வெல்ல முடியாதெனக் கவிதைக்கண்ணன் தனக்கு தானே சமாதானம் சொல்லிக் கொள்வான்.

சிறிது நேரம் அங்கு நின்றுவிட்டுக் கவிதைக்கண்ணன் தொடர்ந்து நடந்தான். பொருட்கள் வாங்கிக் கொண்டு ஒரு தமிழ்த் தம்பதியினர் வந்தனர். கவிதைக்கண்ணன் பழைய நினைவுகளில் மூழ்கிய வண்ணம் தெருவோரத்தால் நடந்தான்.

★

அன்று அவளும் கவிதைக்கண்ணனும் தெகிவளைச் சந்திக்குச் சென்று சில பொருட்கள் கொள்முதல் செய்துகொண்டு திரும்பி வந்தார்கள். பாலத்தின் கீழால் வரும் பொழுது அவளின் கையைக் கெட்டியாகப் பிடித்த வண்ணம் கவிதைக்கண்ணன் நடந்தான். அவளுக்கு அது சந்தோஷமாய்ப் போயிற்று.

'என்னில உங்களுக்கு இவ்வளவு அக்கறையா?' என்று வியப்போடு அவனைப் பார்த்துக் கேட்டாள்.

'ம்… அதெல்லாம் ஒண்டும் இல்லை. நீ வாகனத்தில அடிபட்டா நானும் பொலிசுக்கு அலையோணும் எண்டுற அக்கறைதான். லூசு. உனக்கு இன்னும் என்னுடைய அன்பின்ர ஆழம் தெரியேல்லைப் போல இருக்குது? உன்ர ஒரு முடி உதிர்ந்தால்கூட நான் துடிச்சுப்போயிடுவன் எண்டு எத்தினைதரம் சொல்லியாச்சு? தயவு செய்து என்ன எதுக்காகவும் நீ காயப்படுத்திடாத? அது நீ எனக்குச் சாவையே பரிசாத் தாறமாதிரி இருக்கும்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'நிச்சயமா இல்லையப்பா. என்ரை உடம்பில உயிர் இருக்கிறவரைக்கும் நீங்கள்தான் என்ரை உயிர். அம்மா, அக்கா, தங்கச்சி எல்லாம் எனக்கு இனி இரண்டாம் பட்சம்தான். நீங்கள் எனக்கும் மகளுக்கும் உயிர்நாடி. நீங்களும் அப்பிடி இதில இருந்து மாறக்கூடாது.' என்றாள்.

'மாறினால்…' என்றான் கவிதைக்கண்ணன் வேண்டும் என்றே.

'நானும் மகளும் நஞ்சுகுடிச்சுச் சாவம். நீங்க நல்லா ஞாபகம் வச்சிருங்க.' என்றாள் கோபமாக.

'நான் உன்னை மறப்பேனா செல்லம். என்னுடைய உயிர் பிரிஞ்சாலும் ஆவிகூட உன்ரை பெயரைத்தான் சொல்லித் திரியும். அது எவ்வளவு காலம் எண்டாலும் காத்திருந்து நீயும் வரேக்கதான் சொர்க்கம் போகும்.' என்று கூறிக் கவிதைக்கண்ணன் உணர்ச்சிவசப்பட்டான்.

இருவரும் அப்படிக் கதைத்துக் கொண்டு வரும் போது வழியில் நின்ற சிங்கள இளைஞர்கள் அவளை விழுங்குவது போலப் பார்த்தார்கள். அவளைப் பார்ப்பவர்களுக்கு ஒருவித ஈர்ப்பு ஏற்படத்தான் செய்யும். கவிதைக்கண்ணனும் அவளும் அவர்களைக் கடந்து வந்ததும்,

'பெம்பிளையளக் காணாத மாதிரிப் பாக்குதுகள்.' என்றாள் அவள். அதற்கு கவிதைக்கண்ணன்,

'பெண்கள் மூண்டு வகை…' என்றான்.

'சொல்லுங்க…' என்றாள் அவள்.

‘முதலாவது வகை பார்த்தோண்ண தெய்வத்தைக் கண்டமாதிரிக் கையெடுத்துக் கும்பிடோணும் போல இருக்கும். இரண்டாவது குடும்பப்பாங்கா இருப்பினம். காமத்தைத் தூண்டாத உருவம் அவர்களுடையது. மூண்டாவது கவர்ச்சியான பெண்கள். ‘செக்சி’ எண்டு சொல்லுவினமே அப்பிடியான பெண்கள். பாத்தா உடம்பு முறுக்கேறத்தான் செய்யும்.’ என்றான்.

‘நான் எந்த ரகம் எண்டு நினைக்கிறியள்?’ என்றாள் அவள்.

கவிதைக்கண்ணன் பொய் சொல்லி இருக்க வேண்டும். கவிதைக்கண்ணனுக்கு தேவைக்கே பொய் ஒழுங்காக வராது. உயிராக நேசிப்பவளோடு எதற்காகப் பொய் என்பது முதலாவது பாடத்தில் இருந்து அவனது நிரந்தரக் கருத்தாகிற்று. அவள் தன்னைப் பற்றிக் கேட்ட போது அவன் எதுவும் யோசியாது,

‘நீ மூண்டாவது ரகமான பெண். கவர்ச்சியானவள். ஆனாலும் என் உள்ளத்தை மட்டும் நேசிப்பவள். நான் சொல்லுறது சரியா செல்லும்? ‘ என்றான்.

‘ம்… அப்ப என்ன கவர்ச்சியானவள் எண்டு சொல்லுறீங்க?’ என்றாள் அவள்.

‘உண்மை அதுதான். நீ கவர்ச்சியா இருக்கிறதோட நல்ல இரக்கம், பண்பு, அறிவு உடைய என் அன்புக் காதலி. என் உயிரானவள்.’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘ம்… சாகும்வரைக்கும் உங்களுக்கு மட்டுமான காதலி.’ என்றாள் அவள்.

‘ம்… என் உயிரிலும் ஊனிலும் கலந்த காதலி.’ என்றான் அவன்.

சிறிது தூரம் நடந்து சென்றதும் பெண்களுக்கான முடிதிருத்தும் நிலையம் ஒன்று வந்தது. அதைப் பார்த்ததும்,

‘முடிய சேப் பண்ணட்டுமா? தனியச் செய்திட்டுப் போனா அம்மா ஏசுவா. இப்ப நீங்களும் நிக்கிறீங்கள்தானே. அப்ப நீங்கள் சம்மதிச்சது எண்டு சொன்னா ஒண்டும் சொல்லமாட்டா.’ எனக் கெஞ்சுவது போல அவனைப் பார்த்துக் கேட்டாள்.

‘ஓ கே. தாராளமாய் பண்ணு. இதெல்லாம் கேட்கவேணுமா? உன்னுடைய சுதந்திரம்.’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘தாங்ஸ் அப்பா.’ என்றாள் அவள்.

அந்த முடிதிருத்தும் நிலையம் நிலமட்டத்திற்குக் கீழே இருந்தது. முடிதிருத்தும் நிலையத்திற்கு அவசியமான தலை கழுவும் சிங், அகலக் கண்ணாடி, காற்றாடி, கதிரை, சூடாக்கி முடியைப் படியவைக்கும் உபகரணங்கள் ஈறாக அந்தத் தொழிலுக்கு வேண்டிய சகல வசதிகளும் அங்கே. அங்கே இரு பெண்கள் வேலை செய்தார்கள். உள்ளே செல்லவும் கவிதைக்கண்ணனுக்கு வியர்த்துக் கொட்டியது. அவர்கள் சிங்களத்தில் கதைத்ததால் கவிதைக்கண்ணனுக்கு எதுவும் புரியவில்லை. அந்தப் பெண்கள் கவிதைக்கண்ணன் இருப்பதற்கு ஆசனத்தையும் காட்டி அந்தப் பக்கம் காற்றாடியையும் திருப்பி விட்டார்கள். பின்பு அவளோடு எப்படி வெட்ட வேண்டும் என்று கதைத்தார்கள்.

ஒரு மணித்தியாலமாக முடி திருத்தும் வேலை நடந்தது. முதலில் அவளின் முடியைக் கழுவினார்கள். பின்பு வெட்டி ஒழுங்கு பண்ணினார்கள். பின்பு சூடு பிடித்துப் படிய வைத்தார்கள். கவிதைக்கண்ணன் ஒரு மணித்தியாலம் காத்திருந்தான். கவிதைக்கண்ணனுக்கு அது பெரும் பிரச்சனையாக இருக்கவில்லை. அவன் அவளைப் பார்த்து இரசித்த வண்ணமே இருந்தான். நேரம் சிட்டாய்ப் பறந்தது. அவளை எத்தனை மணித்தியாலமும் பார்த்துக்கொண்டு இருக்கலாம் என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரிந்தது. அவனுக்கு அது எப்போதும் தெவிட்டுவது இல்லை. அவன் வாழ்க்கையில் தெவிட்டாத விடயங்களில் அது முதன்மையானதென எண்ணினான். அப்படி எண்ணியவனுக்குக் காதலிலே கரைந்துவிட்டால் பூமியே சொர்க்கம் என்று தோன்றியது.

இன்று அவனுக்கு வழி தெரியவில்லை. வெயில் அனலாகத் தொடர்ந்தும் அலையெழுப்பியது. காலிரோட் இரண்டாகத் தெரிந்தது. 'முடிவில்லையா இதுக்கு? ' கவிதைக்கண்ணன் தனக்குள் முணுமுணுத்த வண்ணம் நடந்தான்.

அன்று அலுவல் முடிந்து வெளியே வந்த போது,

'ஒரு மணித்தியாலம் காக்க வைச்சாச்சு. ' என்றாள் அவள் கவிதைக்கண்ணனைப் பார்த்து.

'ஒரு மணித்தியாலம் என்ன உனக்காக ஒரு யுகம்கூடக் காத்திருக்கலாம். இதில என்ன இருக்குது? ' என்றான் கவிதைக்கண்ணன்.

'தாங்ஸ் அப்பா.' என்றாள் அவள்.

இருவரும் வழியில் இருந்த தமிழ்ச் சாப்பாட்டுக் கடையில் ரொட்டி வாங்கினார்கள். அதன் பின்பு சென்று சமைப்பதைக் கவிதைக்கண்ணன் விரும்பவில்லை.

இரவு சாப்பிட்ட பின்பு வழமையான அலவல்கள் முடிந்தாயிற்று. படுக்கையில் இருக்கும் பொழுது தலையிடிப்பதாக அவள் கவிதைக்கண்ணனிடம் கூறினாள்.

வளமையாகத் தலையிடி தொடங்கியவுடன் 'Asprin' போட்டுக்கொள்வாள். இன்று அப்படி 'Asprin' போட்டுக்கொள்ளவில்லை என்பதைக் கவிதைக்கண்ணன் கவனித்தான்.

இந்தத் தலையிடி ஒரு முடிவிலி. அத்தால் கவிதைக்கண்ணன் அவளை அப்பலோ மருத்துவமனைக்குப் போய்த் தலை, வயிற்றுப் பகுதிகளைப் பரிசோதனை செய்யலாம் என்று பலமுறை கேட்டுப் பார்த்தான். மாஜிக் கணவன் அடிவயிற்றில் அடிக்கடி அடிப்பான் என்று சொல்லி இருந்தாள். தலையைச் சுவருடன் அடிப்பான் என்றும் கூறி இருக்கிறாள். அப்படி இருந்தும் அவள் ஏதோ காரணத்தால் மருத்துவ மனைக்குச் செல்வதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. கவிதைக்கண்ணன் எதற்கும் அவளை அதிகமாக வற்புறுத்தக் கூடாது என்கின்ற ஒரு காரணத்திற்காக அதற்கு மேல் தொந்தரவு செய்யாமல் விட்டுவிட்டான்.

அவள் மீண்டும்,

‘தலையிடி தாங்க முடியல்ல அப்பா.’ என்றாள்.

‘கீற்றரைப் பிடிச்சதாக்கும்...’ என்றான் கவிதைக்கண்ணன். அவன் உடல்ரீதியான தலையிடியை மட்டுமே கருத்தில் எடுத்தான். அவள் அதைக் கருதவில்லை என்பது பின்புதான் அவனுக்குப் புரிந்தது. நரம்புகளின் இயக்கத்தில் சோடை போனதை எண்ணித் தன்னைத் தானே கடிந்தான்.

‘அதில்லை?’ என்றாள் அவள்.

‘அப்ப?’

‘இதெல்லாம் சரிவருமா? எனக்குச் சரி வரும் எண்டு தெரியேல்லை. பேசாமல் நான் யாழ்ப்பாணம் வெளிக்கிட்டுப் போறன்.’ என்றாள் அவள் திடீரென.

‘என்ன நடந்தது உனக்கு? நான் ஏதும் தப்புச் செய்தனா?’ என்றான் கவிதைக்கண்ணன் பரிதாபமாக.

‘நீங்கள் தப்புச் செய்தீங்கள் எண்டு நான் சொன்னனா? ஆனா இது சரி வராது எண்டு நினைக்கிறன். எனக்குப் பயமா இருக்குது.’ என்றாள் அவள்.

‘பயப்பிடாத. எல்லாம் நல்லா நடக்கும்.’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘நீங்கள் லேசாச் சொல்லுவியள். நான்தானே எல்லாருக்கும் பதில் சொல்ல வேணும்?’ என்றாள் சுமதா.

‘உண்மைதான். அதைப் பற்றி இப்பவா யோசிக்கிறது? வயித்தில வேற பிள்ளை வந்தப் பிறகா இந்த ஞானம் வாறது?’

‘வந்தா என்ன? அழிச்சுப் போட்டு நான் யாழ்ப்பாணம் போறன். வளர்ந்தா எல்லாருக்கும் நான் பதில் சொல்ல வேணும். எல்லாரும் விடுப்புக் கேட்பினம்.’ என்றாள்.

கவிதைக்கண்ணனுக்கு இவளோடான உறவில் முதன்முறை நெஞ்சு வலித்தது. இதயம் புண்ணாய் நொந்தது. பிள்ளையை அழித்துவிட்டுச் செல்வதென்று கதைக்குமளவுக்கு என்ன நடந்தது இவளுக்கு என்பது அவனுக்குப் புரியவில்லை. அவளை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவள் என்ன பைத்தியமா? அல்லது மற்றவர்களைப் பைத்தியம் ஆக்குகிறாளா? பட்ட துன்பத்தால் திடமாகச் சிந்திக்க முடியாதவளாய் இருக்கிறாளா? என்று எண்ணிக் கவிதைக்கண்ணன் குழம்பினான்.

'ஒரு உயிரை அழிக்கப் போறன் எண்டெல்லாம் என்னிட்டச் சொல்லாத செல்லம். அது கொடுமை. மன்னிக்க முடியாத பாவம்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'அது சரி… அதைத் தங்கவிட்டா நான் எல்லே கஸ்ரப்படோணும்.'

'அப்பிடி யாழ்ப்பாணம் பிரச்சனையெண்டா வேற இடம் மாறு.'

'அப்பிடியெல்லாம் இனி மாறேலாது.'

'அப்ப?'

'பேசாமல் நான் யாழ்ப்பாணம் போறன்.'

'உதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு இருக்காத.'

'சொன்னா?'

'எனக்கும் கோபம் வரும் தெரியுமே?' என்று சூடானான் கவிதைக்கண்ணன்.

கவிதைக்கண்ணனுக்குக் கோபம் வரவில்லை. மாறாகக் கவலையில் அழுகை வந்தது. கவிதைக்கண்ணன் சிறுவயதில் அடிவாங்கும் பொழுது அல்லது வாங்கிய பிறகு அழுது வடிவான். தாயின் மறைவின்போது கலங்கி நின்றான். அதன் பின்பு தனது கருவைக் கலைக்க வேண்டும் என்று தான் உயிரென நினைத்த காதலி சொன்ன போது அவன் மௌனமாகக் கரைந்தான். அத்தோடு கவிதைக்கண்ணன் மறுபுறம் திரும்பிப் படுத்தான். வெகு நேரம் நித்திரை வராது புரண்டு புரண்டு உருண்டான். அவள் அதைக் கூறிவிட்டு சிறிது நேரத்தில் குறட்டை விட்டாள். கவிதைக்கண்ணனுக்கு அவளைப் பார்க்க ஆத்திரம் வந்தது. உலுப்பி எழுப்ப வேண்டும் என்று நினைத்தான். அது தப்பென அந்த எண்ணத்தைக் கைவிட்டான்.

காலையில் அவள் எழுந்து தேநீர் தயாரித்துக் கொடுத்தாள். தேநீர் அருந்தும் பொழுது, 'சொறியப்பா. இராத்திரி நான் ஏதோ பைத்தியத்தில கதைச்சுப் போட்டன். மனசில வைச்சுக்கொள்ளாதேங்க.' என்று அவனைப் பார்த்துக் கெஞ்சுவது போலக் கேட்டாள்.

'கருவைக் கலைப்பன் எண்டு கதைச்சியே செல்லம்?' என்றான் கவிதைக்கண்ணன்.

'உயிரே போனாலும் அப்படிச் செய்வனா? ஏதோ அந்த நேரம் அப்பிடிக் கதைக்கோணும் போல இருந்திச்சு, கதைச்சன். உங்கட மனசை அது நோகடிச்சிருக்கும். சொறியப்பா. அவனில இருக்கிற கோபம் அவனில காட்டமுடியாத இயலாமை, சிலவேளை உங்களில பாயப் பாக்குது. உங்களுக்குக் கோபம் வராதெண்டு சொன்னியள். இராத்திரி எனக்கும் கோபம் வரும் எண்டு சொல்லீட்டியள்.' என்று சமாளிப்பில் முடித்தாள்.

'அப்ப நான் மனிசன் இல்லையா? மனிசன் எண்டாக் கோபம் வரும்தானே? அதுவும் நீ பைத்தியம் மாதிரிக் கருவைக் கலைப்பன் எண்டு சொன்னா? நீ பைத்தியம்தான் இல்லையா?' என்றான் கவிதைக்கண்ணன்.

‘சொறி அப்பா. பைத்தியம் மாதிரி இல்லை. நீங்கள் சொல்லுற மாதிரி உண்மையா நான் ஒரு பைத்தியம்தான். சொறி இனிமேலைக்கு அப்பிடிச் சொல்லமாட்டன்.’ என்றாள் கவிதைக்கண்ணனிடம். அவள் பைத்தியமாக இருந்திருந்தால் பருவாய் இல்லை. மற்றவர்களைப் பைத்தியம் ஆக்குவது அவனுக்கு அப்போது புரியவில்லை.

கவிதைக்கண்ணன் அவளை இறுக அணைத்தான். இந்தப் பைத்தியத்துடன் அப்படியே வாழ்க்கை பூராகவும் இருந்துவிட வேண்டும் என்று நினைத்தான்.

காலம் அவன் கனவு பற்றிய வரலாற்றை எழுதச் சித்தம்கொண்டது.

12

கவிதைக்கண்ணன் மாலைச் சாப்பாட்டிற்குக் கொத்துரொட்டி வாங்கக் ‘காலிரோட்டில்’ இருந்த சாப்பாட்டுக் கடைக்கு இன்றும் சென்றான். ஏற்கனவே வெளியே போய்விட்டு வந்ததில் சற்றுத் தாமதமாகி விட்டது. இப்போது மணி எட்டை நெருங்கிற்று. அவன் அவசரமாக அந்த முஸ்லீம் கடையை நோக்கி நடந்தான். காலிரோட் சனத்தாலும், வாகனத்தாலும் நிறைந்து வழிந்தது. வாகனங்களினதும், மனிதர்களினதும் கடந்து போய்விட்ட நாளைக் கட்டிப்போட முடியுமா என்கின்ற அவசரம். கடைகளில் கடைசி நேர வியாபாரம். இருட்டிற்கு முன்பு அவசரமாகக் கூடடையும் குருவிகளான மனித நடமாட்டம். இரவுத் தொழிலுக்குப் புறப்பட்டதாய் அங்கும் இங்கும் சில பெண்கள். ஆள்த் தேடும் சில ஓட்டோக்கள்.

யாழ்ப்பாணம் கொழும்பு செல்லும் பேருந்து ஒன்று அவன் விடுதிக்கு அருகில் இருந்த தரிப்பில் நின்றது. அதில் யாழ்ப்பாணம் செல்வதற்குக் காத்திருந்த ஒரு பயணியை ஏற்றிக்கொண்டு அது புறப்பட்டது. கடைக்கு நடந்தவனின் ஞாபகத்தில் அவளோடு சென்ற அந்த யாழ்ப்பாணப் பயணம் படம் போல விரியலாகிற்று.

★

கொழும்பில் தங்கிக் குடும்பம் நடத்தியவர்கள் தைப்பொங்கலை ஒட்டி யாழ்ப்பாணம் சென்றார்கள். கவிதைக்கண்ணன் தனது உறவினர்களைப் பார்த்து வருவதற்குத் தனது ஊருக்குச் சென்றான். அவள் தங்கள் வீட்டிற்குச் சென்றாள். மீண்டும் இருவரும் சேர்ந்து கொழும்பு வருவதே அவர்கள் திட்டம்.

கவிதைக்கண்ணன் கொண்டு வந்த இனிப்புப் பொருட்களும் அதற்கேற்ப பங்கிடப்பட்டன. வழமை போல 'See side'இல் நிற்கும் பேருந்தில் ஏறி யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் அவள் தனது வீட்டிற்குச் செல்லக் கவிதைக்கண்ணன் தனது உறவினர் வீட்டிற்குச் சென்றான். கவிதைக்கண்ணனுக்கு எப்போது அவளை மீண்டும் காண்பேன் என்பதான இடைவிடாத ஏக்கம். ஒரு உறவினரிடம் இருந்து இன்னொரு உறவினரிடம் போகும் பொழுது யாழ்ப்பாணம் சந்திப்பாகிறது. அது அவனுக்கு வசதியாகிற்று. யாழ்ப்பாணம் சென்ற இரண்டாவது நாட் காலை கவிதைக்கண்ணன் மற்றைய உறவினர் வீட்டிற்குப் புறப்பட்டான். பேருந்தில் ஏறியதும் தான் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வருவேன் என்று அவளுக்கு அலைபேசியில் செய்தி கூறினான். அவளும் சந்தோஷமாக வீட்டிற்கு வரச்சொன்னாள்.

யாழ்ப்பாண நகரத்தில் இறங்கி ஓட்டோ பிடித்துக்கொண்டு அவள் வீட்டிற்குச் செல்வது அவனது உத்தேசம். அதற்கு முதல் ஏதாவது பழங்கள் வாங்க வேண்டும் எனவும் அவன் நினைத்தான். பழங்கள் வாங்கிய பின்பு யாழ்ப்பாண நகரத்தில் இருந்து ஐந்து சந்திக்கு போவதற்கு நூற்று ஐம்பதுரூபாய் கேட்ட ஓட்டோக்காரனிடம் அவன் அன்று பேரம் பேச விரும்பவில்லை. அவளை மீண்டும் பார்க்க வேண்டும் என்பதுதான் அவனது அப்போதைய தேவை. அதுவே அவனது தியானம்.

யாழ்ப்பாணம் ஐந்து சந்திக்கு வந்த ஓட்டோ நாவலர் 'Road'இல் இறங்கி நாவாந்துறை நோக்கிப் பயணித்தது. அவள் தங்கள் வீடு மசூதிக்கு அருகாமையில் இருக்கிறது என்று ஏற்கனவே கூறியிருக்கிறாள். கவிதைக்கண்ணன் ஒருமுறை கூகிள் வரைபடத்தில் தேடி அடையாளம் கண்டிருந்தான். அதன்படி அந்த இடத்தில் அதிகம் குடிமனைகள் இருக்கவில்லை. அது முன்பு முஸ்லீம் குடியிருப்பாய் இருந்த இடம். அந்த இடம் யுத்தத்தின் போது அழிக்கப்பட்டு அலங்கோலமாய்க் காட்சி தருகிறது. அப்படி அழித்தும் அழியாது இருந்த ஒரு வீட்டில் அவள் குடியிருந்தாள்.

ஓட்டோக்காரன் நேராக மசூதிக்கே சென்றுவிட்டான். மசூதியில் நின்றவர்களை விசாரிக்க அவர்களுக்கு முகவரி தெரியவில்லை. அதற்கிடையில் கவிதைக்கண்ணன் அவளுடன் அலைபேசியிற் கதைத்தான். ஓட்டோக்காரனிடம் கதைத்து வீட்டை அடையாளம் கூறுமாறு சொன்னான். அவள் ஓட்டோக்காரனிடம் கதைத்தாள். ஓட்டோ மீண்டும் வந்த வழியே சிறிது தூரம் திரும்பி வந்தது. அது ஒரு ஊதா நிறமான மதிலைக் கொண்ட வீடு. அவள் படலையில் நின்று கை காட்டினாள். கவிதைக்கண்ணன் ஓட்டோவை அனுப்பிவிட்டு உள்ளே சென்றான்.

அது இரண்டு அறைகள் கொண்ட சிறிய வீடு. வரவேற்பறையில் யாரோ ஒரு தாடி வைத்த மனிதனின் படம் தொங்கியது. ஊதுபத்தி ஒன்றின் அடிக்கட்டை அவரை வழிபட்டதின் செத்த சாட்சியாகியது. அந்தப் படத்தை பார்க்க அவர் ஒரு முஸ்லீம் மனிதர் போலத் தோன்றினார். கவிதைக்கண்ணனுக்கு ஏற்கனவே அவர்கள் மதநம்பிக்கை பற்றிய குழப்பம் உண்டு. அந்த மனிதனைக் கடவுளாய் வணங்குவது வெளிப்படையாகத் தெரிந்தது. கவிதைக்கண்ணன் அதைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்பினான். அவன் அந்தப் படத்தைக் காட்டி 'யாரிது?' என்றான். அதற்கு அவள் அதுதான் ஊரில் உள்ள 'சுபி பாவா'

என்றாள். தாங்கள் அவரைக் கடவுளாகக் கும்பிடுவதாயும், தங்கள் அம்மம்மா அவருக்கு முதல் சீடராக இருந்தவர் என்றும் கூறினாள். கவிதைக்கண்ணன் அதைப் பெரிதாக கிரகிக்கவில்லை. உள்ள கடவுள்களையே நம்ப முடியாது இருக்கும் போது மனிதர்களைவேறு கடவுளாக்கி என்கின்ற மனநிலையில் அவன். 'ம்…' என்றுவிட்டு அதைப்பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டான்.

உள்ளே இரண்டு அறைகள். அதைத் தாண்டினால் சமையல் அறை. நிலத்திற்கு வழமையான யாழ்ப்பாண வீடுகள் போலச் சிவப்புக் காவி. குளியல் அறைக்கும் கழியல் அறைக்கும் இடையில் ஓடை போன்ற ஒரு பாதை. பின்வளவில் இரண்டு வீட்டிற்குமான ஒரு பொதுவான கிணறு. கிணற்று நீர் நன்னீரான அதிஸ்ரம். தோட்டத்தில் வாழை, பப்பாசி என மரங்களின் செழிப்பு. மற்றைய பக்கத்தில் பாழடைந்த முஸ்லீம் வீடு ஒன்று. இவர்கள் வீடு தாண்டினால் பின்னால் வெளியான ஒரு வளவு. அந்த வெளியின் ஒரு மூலையில் சிறிய கோயில். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க கூடாது அல்லவா?

கவிதைக்கண்ணன் உள்ளே பெரிய அறைக்கு முன்னால் இருந்த சாப்பாட்டு மேசையில் இருந்து கதைத்தான். அம்மாவோடு கதைக்கும் போது கவிதைக்கண்ணன் நோர்வேயில் இருந்து தனக்குக் கூறியதையே தொடர்ந்தும் கூறுமாறு அவள் கூறினாள். கவிதைக்கண்ணனோடு அப்போது கதைத்ததை எல்லாம் அவள் தாயிடம் சொல்லி விட்டாள் என்றாள் அவனிடம். அதில் மாற்றம் ஏற்பட்டால் பிரச்சனை வரலாம் என்றும், தற்போது பிரச்சனை வருவதைத் தான் விரும்பவில்லை என்றும் அவள் கவிதைக்கண்ணனிடம் விபரம் கூறினாள்.

தற்போதே உண்மையை அறிந்தால், அம்மா குழம்பிப் போய்விடுவார் என்று அவள் கூறியதை கவிதைக்கண்ணன் நம்பினான். அத்தால் அவன் மாமியோடு அதிகம் கதைக்கவில்லை. கேட்ட கேள்விகளில் சிலவற்றிற்குப் பதிலளித்தான். சிலவற்றிற்குச் சிரித்தே மழுப்பினான். மாமிக்கு மகள் மேல் இருந்த நம்பிக்கையில் கவிதைக்கண்ணனை அதிகம் குடையவில்லை. அது நம்பிக்கை இல்லைப் பயம் என்பது அவனுக்கு அப்போது தெரியாது. மாமி குடையாது விட்டது அவனுக்கு வசதியாகிற்று. அதுவே எதிர்காலத்தில் அவனுக்கு ஆபத்தாகிற்று.

அன்று அவள் பச்சை, வெள்ளை நிறம் கலந்த 'Skirt and Blouse' அணிந்து சாயம் பூசாது தன்னை மென்மையாக அலங்காரம் செய்திருந்தாள். கவிதைக்கண்ணனுக்கு அவளைப் பார்க்க மோகம் சுரந்தது. அவளது தாய் இருந்த இக்கட்டில் பௌவியம் காத்தான். அவளின் தாய் இவளைப் போல் அல்லாது நல்ல நிறமாக இருந்தார். மெலிந்து நோய்வாய்ப்பட்ட உடலில் இருந்து அவ்வப்போது இருமல் தெறித்து விழுந்தது. முன்பு வீட்டில் மரக்கறி பயிரிட்டதுண்டாம். முகமூடி இல்லாது மருந்தடித்ததுண்டாம். பக்கவிளைவாய் இப்பொழுது ஏதோ சுவாசப்பை நோயினால் அவளின் தாய் அவதிப்படுவதாய்க் கவிதைக்கண்ணனுக்கு அவள் கூறியிருந்தாள். ஊழ்வினையென அவன் எண்ணினான்.

யாரோ சொந்தக்காரரின் செத்தவீட்டிற்குக் கொண்டு செல்வதற்குச் சோற்றுப் பொட்டலம் ஒழுங்கு செய்துவிட்டுக் காத்திருந்தார்கள். அது வந்ததும் அவளது அம்மா அதைக் கொடுத்துவிட்டு வருவதற்குப்

புறப்பட்டார். கிடைத்த தனிமையில் அவளைக் கவிதைக்கண்ணன் இறுக்கி ஆலிங்கனம் செய்தான். அவளை அணைத்த வண்ணம் இருந்து கதை பேசினான். அதற்குமேல் போவது அநாகரிகம் என்கின்ற நினைப்பில் வாழாதிருந்தான். கதையின் சுவாரசியத்தில் நேரம் கனவு கண்ட கணங்களாகின.

சாப்பாடு கொடுக்கச் சென்ற அவளின் தாய் திரும்பி வந்து விட்டார். மாமி வந்த பின்பு கவிதைக்கண்ணனைச் சாப்பிடுமாறு கேட்டார்கள். கவிதைக்கண்ணனுக்குச் சாப்பிடுவதா விடுவதா என்று முதலில் சிறு குழப்பமாகிற்று. சிறுவயதில் இருந்து மற்றவர்கள் வீட்டில் அவன் எளிதில் கை நனைப்பது கிடையாது. அவன் ஊர் வாசம் அப்படி. முடிவில் இவ்வளவிற்குப் பின்பும் இங்கே சாப்பிடாமல் போக முடியுமா என்று நினைத்தான். மருமகனாகச் சாப்பிடத் தயாரானான்.

அவர்கள் செத்தவீட்டிற்குக் கொடுக்க வேண்டிய சாப்பாட்டுப் பொட்டலத்தில் ஒன்றை கவிதைக்கண்ணனுக்கும் கொடுத்தார்கள். கவிதைக்கண்ணனுக்கு மனதிற்குள் சப்பென்று போய்விட்டது. முதல் நாள் வீட்டிற்கு வந்த போது கடைச் சாப்பாடு தந்தது அவனுக்கு என்னவோ போலிருந்தது. அதுவும் செத்தவீட்டிற்கு கொடுக்க வாங்கிய சாப்பாட்டை தந்தது அருவருப்பாகிற்று. அவன் தனது அவிப்பிராயங்களைப் பத்திரமாக அடிமனதிற்குள் பூட்டி வைத்துக்கொண்டு தந்த சாப்பாட்டைச் சாப்பிட முயற்சித்தான். சாப்பாட்டைச் சாப்பிடும் போது கல் ஒன்று கடிபட்டது. அத்தோடு சாப்பிடும் ஆசை போய்விட அவர்களை அவமதிக்கக் கூடாது என்பதற்காக மீதம் இருந்ததை ஒருவாறு விழுங்கினான்.

மாலை மூன்று மணி இருக்கும். மாமி கோலில் படுத்திருக்க வேண்டும். கவிதைக்கண்ணன் அவளோடு அறைக்குள் நின்றான். அறைக்குள் வாய்த்த தனிமை அவனை வெறிகொள்ள வைத்தது.

அவன் பொறுமை, அவள் மிகவும் அருகி வந்து அவனைப் பார்த்த தாபத்தோடு தொலைந்து போயிற்று. அவன் அவள் கண்களைப் பார்த்தான். அவள் அவன் கைகளைப் பற்றி இதழை அவன் இதழ் அருகே கொண்டு வந்தாள். இது கவிதைக்கண்ணன் எதிர்பாராதது. எனினும் அவனுக்கு நன்கு இனித்தது. அதற்கு மேல் அவன் பதுங்கவில்லை. அவளை அணைத்து முத்தம் கொடுத்தான். முத்தத்தில் அவர்கள் அக்கம் பக்கத்தை மறந்து போயினர். திடீரென அறைக்கதவைத் திறந்து கொண்டு அவள் மகள் உள்ளே வந்தாள். கவிதைக்கண்ணன் இதை எதிர்பார்க்கவில்லை. அவள் உடனே விலகினாள். அவளது மகள் இருவரும் முத்தமிடுவதைப் பார்த்துவிட்டாள் என்பது அப்பட்டம். இருந்தும் அவள் எதையோ எடுத்துக்கொண்டு பெரிய மனிசியாட்டம் வெளியே சென்றுவிட்டாள். அதன் பின்பு கவிதைக்கண்ணன் அவளிடம் மகள் பார்த்ததைப் பற்றிக் கேட்டான். அவள் பார்த்தால் பருவாய் இல்லை என்கின்ற பதில் அவளிடம் இருந்து வந்தது.

கவிதைக்கண்ணனுக்கும் அதில் குற்ற உணர்வு இருக்கவில்லை. அவளேதான் முதலில் தொடங்கினாள். அத்தால் அவள் மகள் அதைக் கண்டாள். தான் என்ன செய்ய முடியும்? எது என்றாலும் அவளுக்கு இனி அப்பாவும் அம்மாவும் தாங்கள் என்பதில் மாற்றம் இல்லை. அப்பா அம்மா முத்தமிடுவதில் தப்பில்லை என்று கவிதைக்கண்ணன் எண்ணினான்.

மாலைத் தேநீர் அருந்திவிட்டுக் கவிதைக்கண்ணன் புறப்பட்டான். அவள் படலைவரை வந்து வழியனுப்பி வைத்தாள். இரவுப் பேருந்து நிலையத்தில் சந்திப்பதாய் கூறினாள்.

மீண்டும் கொழும்பு வந்து சில நாட்கள் அங்கே தங்கினார்கள். தன்னால் அவள் இல்லாது ஒரு கணமும் வாழ முடியாது என்றும், தான் நோர்வே சென்றதும் விவாகரத்திற்கான ஏற்பாடு செய்வதாயும் கவிதைக்கண்ணன் அவளிடம் கூறினான். இரட்டை வாழ்வு வாழ்வதைவிட உண்மையை உடனடியாக தனது மனைவிக்குக் கவிதைக்கண்ணன் கூறப்போவதாய்ச் சொன்னான். அவனின் அந்தக் கருத்தை அவள் முழுமனதோடு வரவேற்றதாய் அவனுக்குத் தோன்றவில்லை. ஏன் என்பதும் அவனுக்குப் புரியவில்லை. சிறிது நேரம் யோசித்துவிட்டு இப்போதே சொல்ல வேண்டுமா என்று அவள் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

'நாங்கள் செய்வதில் ஓரளவுக்காவது நியாயம் இருக்க வேண்டும். இனியும் சொல்லாமல் இருப்பது மகா துரோகம். நான் இதை அவளிடம் சொல்லியே ஆகவேண்டும்.' என்று கவிதைக்கண்ணன் உறுதியாகக் கூறினான். அவள் அதன் பின்பு அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அடுத்து வந்த நாட்களில் அவளுக்கும் நோர்வேக்கு வருவதில் மிகவும் அக்கறை உள்ளது போலக் காட்டிக்கொண்டாள். கவிதைக்கண்ணனின் முதல் மனைவியால் தனக்கு எந்தப் பிரச்சனையும் வரக்கூடாது என்றும் கவலைப்பட்டாள். அப்படி ஏதாவது பிரச்சனை என்றால் தான் ஐரோப்பாவில் வாழும் தனது அக்காவிடம் போய்விடுவேன் என்றும் கூறினாள். கவிதைக்கண்ணன் அப்படி எந்தப் பிரச்சனையும் வராது என்று உறுதியளித்தான். உண்மையில் முதல் மனைவியிடம் சொல்லும் பொழுது என்ன நடக்கும் என்பது பற்றி அவனுக்கு பெரும் குழப்பமாய் இருந்தது. மனதில் என்றுமே சாந்தி காண முடியாத நடுக்கம். அவன் அதை அவளிடம் காட்டிக்கொள்ளவில்லை. நகமும் சதையுமாக வாழாவிட்டாலும் முதல் மனைவி ஒரு சாதாரண தமிழ்ப்பெண்ணாகத் தனது கடமைகளைச் செய்தவள் என்பதை கவிதைக்கண்ணனால் மறுக்க முடியாது. தன்னை அவள் புரிந்து கொள்ளவில்லை. தங்களுக்கு இடையில் ஒரு ஈர்ப்பு இருக்கவில்லை. தனது கவிதைகள் பற்றி அவள் சிறிதும் அக்கறைப்படுவதில்லை. அதை ஒரு நாள்கூட இரசித்து வாசித்தது இல்லை. ஞான சூனியமான குடும்ப வாழ்க்கை. என்று குறைகளை அவன் வரிசைப்படுத்தினாலும் அதற்குத் தான் செய்வது நியாயம் ஆகாது என்பது அவனுக்குப் புரிந்தது. அவன் காதல் நீதி, அநீதி, சமுக கௌரவம் பற்றிக் கவலைப்பட மறுத்தது. அது சுவர்க்கம் என்பது அவளோடு அல்லது உலக வாழ்வே நரகம் என்றது.

கொழும்பில் உள்ள கடைகள் பலவற்றில் ஏறி இறங்கிப் பொருட்கள் வாங்கினார்கள். கவிதைக்கண்ணன் அவளுக்கு ஒரு அலைபேசி வாங்கிக்கொடுத்தான். மாஜிக் கணவனைப் பற்றிய பயம் அவளுக்கு வரவரக் குறைந்து போயிருந்தது. அதற்குக் கவிதைக்கண்ணனின் வார்த்தைகள், அவனின் பிரசன்னம் காரணமாய் இருந்திருக்க வேண்டுமென அவன் எண்ணினான். கவிதைக்கண்ணன் நோர்வேக்குப் புறப்பட்டான். விமானநிலையத்திற்கு வரும் வழியில் அவளை யாழ்ப்பாணம் போகும் பேருந்தில் பத்திரமாக ஏற்றிவிட்டு அவன் நோர்வே வந்து சேர்ந்தான்.

13

கவிதைக்கண்ணன் மீண்டும் பச்சைநாடு விடுதியின் அறைக்குத் திரும்பி வந்தான். வெளியே போய்விட்டு வந்தால் உடம்பு வியர்வையில் தெப்பமாக நனைந்து விடுகிறது. குளித்தாலும் இடைக்கிடையே மேல் கழுவ வேண்டிய அவஸ்தையின் தொடர். பொழுது சாய்ந்துவிட்டதாற் படுப்பதற்கு முன் கவிதைக்கண்ணன் குளித்தான். குளித்துவிட்டு வளமைபோல மதுவைக் கலக்கி அருந்த ஆரம்பித்தான். தனிமையும், மதுவின் ஏற்றமும், அவன் மனதில் மீண்டும் பழைய நினைவுகளைப் பரவவிட்டன.

★

கவிதைக்கண்ணன் நோர்வேக்குத் திரும்பி வந்து ஒரு மாதமாகியது. அவளோடு அடிக்கடி அலைபேசியில் தொடர்புகொண்டு கதைத்தான். அவள் தான் நலமாய் இருப்பதோடு மருத்துவரிடமும் சென்று மகவின் நலம் பற்றிப் பரிசோதிப்பதாயும் அவனுக்குக் கூறினாள்.

கவிதைக்கண்ணன் தனக்கும் அவளுக்குமான உறவு பற்றித் தன் மனைவியிடம் சொல்ல வேண்டும் என்கின்ற விஷப்பரீட்சையை நிறைவேற்ற முடிவு செய்தான். சொல்லாமல் விடுவது கோழைத்தனம், துரோகம் என்பதாக முடிவுசெய்தான். அவன் முடிவு செய்த வேகத்திற்கு ஏற்ப அதைச் சொல்லும் துணிவு அவனுக்கு இருக்கவில்லை. சொல்லாமல் பிரிந்து போதலோ விவாகரத்திற்காக விண்ணப்பிப்பதோ நடவாத காரியம் என்பதும் அவனுக்கு நன்கு புலப்பட்டது. சொன்னால் அவள் என்ன ஆட்டம் ஆடுவாள் என்கின்ற நினைப்பும் அவனை கதிகலங்க வைத்தது. இருதலைக் கொள்ளி எறும்பாக அவன் அல்லாட வேண்டியதாகிற்று.

சொல்வதா விடுவதா என்கின்ற போராட்டத்தில் சொல்லத் துணிவில்லாத கோழைத்தனம் மேலோங்க ஒரு மாதம் கழிந்துவிட்டது. இனியும் கால தாமதம் பண்ணக்கூடாது என்கின்ற உண்மை அவனை உந்திற்று.

இலங்கைக்கு அலைபேசி செய்து அவளோடு கதைக்கும் பொழுது தான் முதல் மனைவியிடம் இதைப் பற்றிச் சொல்லப் போகிறேன் என்று மறுபடியும் சுமதாவிற்குக் கூறினான். மறுபக்கத்தில் முதலில் சிறு அமைதி நிலவியது. கவிதைக்கண்ணனுக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. இவள் புரிந்து கொள்ளமுடியாத புதிரானவள் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. அந்த அமைதி கலைந்தது, ‘எதுக்கும் அவதிப்படாமல் ஆறுதலாக யோசிச்சு செய்யுங்கோ, எல்லாராலும் எல்லாத்தையும் விளங்கிக்கொள்ள முடியாது எண்டதை நினைவு வைச்சிருங்க.’ என்றாள். கவிதைக்கண்ணனுக்கு எதுவும் விளங்கவில்லை.

எல்லோராலும் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடியாது. இதை எந்தப் பெண்ணும் ஏற்றுக்கொள்ள மாட்டாள். மனது பறிபோன பின்பு உலகை எண்ணி மாய்ந்து என்ன பிரயோசனம்? கவிதைக்கண்ணனுக்கு

இதை விட்டால் வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. அத்தால் அவன் அக்னிப் பரீட்சைக்குத் தயாரானான். அக்கினிப் பரீட்சை என்பது புரிந்தாலும் சுமதா ஒரு பெரிய உண்மையை மறைப்பது அவனுக்குத் தெரியாது.

கவிதைக்கண்ணனுக்குத் தனது இந்த முடிவை நேரே தனது மனைவியின் கண்ணைப்பார்த்துச் சொல்லும் துணிவு இருக்கவில்லை. அவன் எப்படி அவளிடம் இதைச் சொல்வதெனத் தவித்தான். ஈற்றில் அன்று படுக்கும் பொழுது இருட்டில் அவளிடம் மெதுவாக விடயத்தைச் சொன்னான். அவள் அதைக் கேட்டு எப்படி அதிர்ச்சி அடைந்திருப்பாள் என்பதை கவிதைக்கண்ணன் பார்க்க முடியவில்லை. அவன் அதைப் பார்க்கவும் விரும்பவில்லை. கவிதைக்கண்ணன் சொன்னதை அவள் முதலில் நம்பவில்லை. எந்தச் சத்தமும் இல்லாது படுத்திருந்தாள்.

கவிதைக்கண்ணன் அவள் நிலைமையைப் புரிந்து கொண்டாள் என்கின்ற தப்பான கணிப்பில் அவள் கருவுற்று இருப்பதையும் மெதுவாகக் கூறிவிட்டான். அதன் பின்புதான் அவளிடம் இருந்து விசும்பலும், விவாதமும் தொடங்கியது.

விவாகரத்தைத் தமிழர்கள் வாழ்வின் முற்றுப் புள்ளியாக நினைக்கிறார்கள். அவளும் அதை வாழ்வின் முற்றுப்புள்ளியாகவே எடுத்தாள். கவிதைக்கண்ணன் விவாகரத்து என்பது வாழ்வின் அந்தம் இல்லை என்று நினைத்தான். பெண்ணிற்குப் பல வேளைகளில் விவாகரத்து என்பது சுமை என்பதை அவன் புரிந்து கொள்ளவில்லை. அது அவளின் நரகத்தின் தொடக்கமாய் இருக்கும் என்று அவன் கற்பனை செய்யவில்லை. இரணமான போராட்டம் வெடிக்கும் என்பதை அவன் விளங்கிக் கொள்ளவில்லை. இரத்தத்தைக் கண்ணீராகப் பிழியும் கொடுமை தொடங்கப் போவது பற்றி அவனுக்குத் தெளிவிருக்கவில்லை.

அவன் இதைக் கூறியபோது அவள் ஆத்திரப்பட்டுப் பொங்கி எழுந்திருந்தால் அவனுக்குப் பிரிவுக்கான நெருப்பும், நிம்மதியும் கிடைத்திருக்கும். அவள் மாறாக நீயே கதி என்றதால் கவிதைக்கண்ணன் வாயடைத்துப் போனான். யுத்தத்திற்கு வந்தால் வன்மம் காட்டலாம். சரணடைந்தால்? துரோகம் என்னும் குற்ற உணர்வு மட்டும் அவன் மனதை உறுத்தியது. சுமதாமேல் கொண்ட காதல் அதையும் விஞ்சியது. நித்தம் நரகமான இரணம் தொடர்ந்தது. கவிதைக்கண்ணன் தனது நிலையில் இருந்து மாறவில்லை. காதல் மந்திரம் அவனைக் கட்டிப்போட்டது. அவன் முதல் மனைவி வழமை போல் தற்கொலைக்கு முயற்சித்தாள். அது பலனளிக்கவில்லை. கவிதைக்கண்ணனுக்குப் பைத்தியம் பிடித்தது. காதலா குடும்பமா என்கின்ற குழப்பத்தில் தலையைப் பிய்த்தான். மூளை மந்தமாகியது. காதல் என்னும் முலாம் பூசிய காம மாயம் போதைப் பொருளாக அவனை அடிமைப்படுத்தியது. மிருக குணம் திமிர்த்தது. வம்சவிருத்திக்கான வக்கிரம் வென்றது.

துரோகத்தை மன்னிக்க அவள் ஒன்றும் ஞானி இல்லை. அவள் அதை ஊரில் உள்ள தனது தாய் தகப்பனுக்குச் சொல்லிவிட்டாள். அவர்கள் கவிதைக்கண்ணனின் உறவினரிடம் நியாயம் கேட்டார்கள். பிரிவதும் சேருவதும் எங்கள் சமுதாயத்தை பொறுத்தவரை சுயமாக முடிவு செய்யும் காரியம் அல்ல. அது

பரம்பரை பரவணி சம்பந்தப்பட்ட விடயமாக விரிவடையும். கௌரவம் என்னும் சிலந்திவலையை அறுக்க நினைக்கும் மனிதப்பூச்சிகளின் பரிதாப நிலை. குடும்பங்களின் ஓயாத குருச்சேத்திரம்.

கவிதைக்கண்ணனின் உறவினர் ஒருவர் பிரான்சில் வாழ்ந்து வந்தார். அவரும் இதைக் கேள்விப்பட்டார். அவர் உடனே கவிதைக்கண்ணனை அலைபேசியில்த் தொடர்பு கொண்டார். வழமையான உறவினர்கள் சொல்லும் புத்திமதியை அவர் கவிதைக்கண்ணனுக்கு ஓதினார். அவள் கற்பமாய் இருந்தால் காசைக் கொடுத்து கதையை முடித்துக்கொள். அதுதான் உனது குடும்பத்திற்கும் எங்கள் கௌரவத்திற்கும் நல்லது. கலியாணம் செய்து பிரிந்து ஒரு பிள்ளையுடன் இருப்பவளை உனக்கு எதற்கு வேண்டும்? உது காதல் இல்லை. அவள் வெளிநாடு வருவதற்கோ அல்லது காசு பிடுங்குவதற்கோ திட்டம் தீட்டுகிறாள். நீ அதைப் புரிந்து நடந்து கொள். அநியாயமாக உனது குடும்ப வாழ்க்கையை யாரோ தெருவில் நிற்கும் கண்டதுகளுக்காக சீரழித்துக்கொள்ளாதே என்று அறிவுரை கூறினார். ஆனால் வேதாளம் முருங்கைவிட்டு இறங்க மறுத்தது.

காதல் என்பது உலகத்தில் கால்படாத போதை தரும். கவிதைக்கண்ணனை இறந்து போ என்றால் சந்தோஷமாய் இறந்திருப்பான். அவளைத் துறந்து வாழ் என்றால்? காதலை மறந்து போவென்றால்? அந்த உணச்சிக்குள் ஆட்படாதவரை அதன் வலுத் தெரிவதில்லை. அதற்குள் ஆட்பட்டவனால் அதைவிட்டு வெளியேற முடிவதில்லை. யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. மூளை யதார்த்தத்தை மறுத்து உறைந்து போய்விடுகிறது. யாரது சொல்லும் அவன் காதிற்குள் ஏறுவதில்லை. தான் கண்ட சுவர்க்கத்தைப் பறிக்கும் சாத்தான்களாக அவர்கள் தோன்றினார்கள். அந்தச் சுவர்க்கத்திற்காக எங்கு வேண்டும் என்றாலும் தொலைந்து போகச் சித்தமானான். சிலந்தி வலையில் விழுந்த பூச்சியின் இறுதி நிமிடச் சிங்காரக் கனவு தொடர்ந்தது.

கவிதைக்கண்ணன் 'ஆம் ஆம்' என்றுவிட்டு அலைபேசியைத் துண்டித்தான். அதன் பின்பு அவர் அலைபேசி எடுத்தால் அதை எடுக்காது துண்டிப்பான்.

பிரச்சனை முற்றிவிட்டது. கவிதைக்கண்ணன் தனியாக வீடு எடுத்தான். தனிக்குடித்தனம் தொடங்கினான். அவள் நினைவுகளோடே வாழ்வது அவனுக்கு அலாதியான அனுபவமாயிற்று. காதல் என்பது போதைதான். மூளை மரத்துப்போன நிலைதான். போதையின் உச்சத்தில் இருந்த அவனுக்கு இந்த உண்மைகள் புரியவில்லை.

தனது குடும்பம் அழிவது பற்றி கவிதைக்கண்ணனால் சிந்திக்க முடியவில்லை. விரிசல் விகாரமாகியது. கவிதைக்கண்ணன் உலக யதார்த்தம் புரியாது அவளின் மோகத்தில் அள்ளுண்டு போனான். நடந்தால், இருந்தால், எழுந்தால் என்று இடைவிடாத அவளது சிந்தனையோடு வாழலானான்.

முதல் மனைவியோடான வாக்குவாதங்கள் சண்டைகள் வலுத்தன. அவனுக்கு மனது வெறுத்துவிட்டது. வாழ்க்கை சூனியமாகத் தெரிந்தது. அதைச் சில கணங்களிலேயே அவள் நினைவு வென்றது. கவிதைக்கண்ணன் வாழ்வா சாவா என்று கலங்கி நின்றான்.

காலம் புரவியாகும். கவிதைக்கண்ணனுக்கு வாரிசு வரப்போவதில் பெரும் மகிழ்ச்சி. அவன் வேலைக்குப் போய் வந்த பின்பு அவளோடு அலைபேசியில் கதைப்பான். அப்பொழுது அவள் ஒருமுறை வயிறு கல்லாக நோவதாகக் கூறினாள். தொப்புள்கொடி பலமாக இல்லையென மருத்துவர் கூறியதாகவும் தான் கவனமாக இருக்க வேண்டும் என்றும் சொன்னாள். முந்திய வாழ்வின் பின்விளைவு என்பதைக் கவிதைக்கண்ணன் புரிந்துகொண்டான்.

கருக் கலையவில்லை. அது வளர்ந்து வெளியே வருவதற்குத் துடித்தது. அல்லது அவள் கற்பனைக் கதை முடியாது இருந்திருக்க வேண்டும். கவிதைக்கண்ணன் அடிக்கடி அலைபேசியில் தொடர்புகொண்டு அவளோடு கதைத்தான். அவளோடு கதைப்பதுதான் அவனது தனிமைக்கு ஆறுதலாக இருக்கும். அவளும் எல்லாப் புதினங்களும் சொன்னாள். தனக்குச் சத்திரசிகிச்சைதான் செய்வார்கள் என்றும் அதற்கான ஆயுத்தங்கள் செய்வதாயும் கூறினாள். அவளுக்குச் சத்திரசிகிச்சைதான் செய்வார்கள் என்பது ஏற்கனவே கவிதைக்கண்ணனுக்குத் தெரியும். அவளிடம் வங்கிக்கணக்கு இல்லை என்று சொல்லியதால் அவன் மாமியின் பெயருக்கு அதற்காகப் பணம் அனுப்பி வைத்தான். சத்திரசிகிச்சைக்கு முதல் நாளும் அவளோடு கவிதைக்கண்ணன் கதைத்த பின்புதான் படுத்தான். இரவு அவனுக்குக் கெட்ட கனவு வந்தது. அதைக் கெட்ட கனவு என்பதிலும் அசிங்கமான கனவு என்றுதான் அவன் எண்ணினான். அருவருத்தான். மலத்திற்குள் புரள்வதாக அவன் முதன்முதல் கனவு கண்டான். அவன் வாழ்வு பற்றிய ஞானோதயம் அது. அவனுக்கு அந்த நினைவே வயிற்றைப் பிரட்டியது. ஆயிரம் கனவு வந்து போகும். அதைப் பற்றி நினைத்துக்கொண்டு இருக்க முடியுமா என்று எண்ணியவன் வழமை போல வேலைக்குச்சென்றான்.

வேலையிலும் மனது கேட்கவில்லை. அவன் தனது அலைபேசியி மூலம் அவளைத் தொடர்பு கொண்டான். அவளுக்குப் பதிலாக அவன் மாமி அலைபேசியை எடுத்தார்.

மாமி சொன்ன செய்தியை அவனால் நம்பமுடியவில்லை. இதயம் இரணமாக வலித்தது. இப்பிடியும் நடக்குமா என்பது புரியவில்லை. நடந்தது உண்மை என்பது புலப்படலாயிற்று. அவள் வாயில் இருந்து ஏதாவது திருகுதாளம் வந்தாலும் மாமியின் வாயில் இருந்து அப்படி வருவதில்லை என்பதான அவன் தப்புக்கணக்கு. வேலைத்தளத்திலேயே அவனுக்கு ‘ஐயோ’ என்று கத்தி அழவேண்டும் போலத் தோன்றியது. அவன் அந்த உணர்வை வலுவில் அடக்கி மனதில் புதைக்க முயன்றான்.

சுரங்கரதத்தில் வீட்டிற்கு வரும் பொழுது அவனால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்களால் கண்ணீர் பொல பொலவெனக் கண்ணாடி முத்துக்களாய் உதிர்ந்தன. பக்கத்தில் இருந்த நோர்வே பெண் ஒருத்தி கண்ணீர் துடைப்பதற்கு அவனுக்குத் துடைக்கும் காகிதம் கொடுத்தாள். கவிதைக்கண்ணன் கடவுளை நம்பாதவன்தான். இந்தத் துன்பத்திற்குப் பிறகு அது தனது விதிப் பயன் என்பதை நம்பினான். விதியென்று ஒன்று உண்டு. அதை நாம் வெல்வது அரிது. நாம் நினைப்பதில் வென்றாலும் தோற்றாலும் அதுவே அவன் விதி என்று கவிதைக்கண்ணன் நினைத்தான்.

வீட்டிற்கு வந்த கவிதைக்கண்ணனுக்குச் சாப்பிட மனம் வரவில்லை. அவன் போய் படுக்கையில் விழுந்தான். மனது நிம்மதி இன்றி அலைந்தது. மாமி சொன்னது நிஜமாக இல்லாவிட்டால் எப்படி இருந்திருக்கும்? அவன் கற்பனை வாழ்வில் சுகம் கண்டான்.

இரவு கழிப்பறைக்குச் சென்றவள் தவறி வயிறு அடிபட விழுந்து விட்டாளாம்.

இரவு அவள் செல்லும் தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அவர்கள் பரிசோதித்துப் பார்த்துவிட்டு உள்ளே எடுக்கவில்லை. பின்பு யாழ்ப்பாணம் பெரியாஸ்ப்பத்திரிக்குக் கொண்டு சென்றார்களாம். அங்கு இன்னும் பிள்ளை பிறக்கவில்லை என்றும், ஊசி போட்டுப் பிறப்பிக்க முயற்சி செய்யப் போகிறார்கள் என்றும் மாமி கவிதைக்கண்ணனிடம் கூறினார். மாமியிடம் கவிதைக்கண்ணன் பிள்ளை செத்துவிட்டதா இல்லையா என்று பலதரம் கேட்டுப்பார்த்தான். அது உயிருடன் இருக்க வேண்டும் என்கின்ற அவன் ஆசை நிராசையானது.

★

ஐந்து நாள் கழித்து அவள் வீட்டிற்கு வந்தாள். கவிதைக்கண்ணன் அலைபேசியில் தொடர்பு கொண்டான். 'எல்லாம் முடிஞ்சு போச்சுதடா.' என்று அவள் பெரிதாக அலைபேசியில் கதறி அழுதாள். கவிதைக்கண்ணன் அவளுக்கு ஆறுதல் சொன்னான். பார்க்க முடியாது போன அந்தச் சிசுவின் நினைவு அவனைக் கொன்றது. பல மனதுகள் எரியச் சேர்ந்த உறவில் இது முதல் வேதனையாக அமையப் போவதுகூட அவனுக்கு அப்போது தெரியாது. சரி இந்தத்தடவை இல்லாவிட்டால் மறுதடவை என்று மனதைத் தேற்றினான். இருந்தும் அவனைக் கவலை அரித்தது. அது அவளை எவ்வளவு அரிக்கும் என்று எண்ணிப் பார்த்தான். இந்த இழப்புகளுக்கு எல்லாம் ஏதாவது பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென அவனுக்குத் தோன்றியது.

14

கவிதைக்கண்ணன் 'MC'க்கு செல்வதற்காகப் பேருந்தில் ஏறினான். அதற்குள் இருந்த தமிழ்ப் பெண் ஒருத்தி யாருடனோ தனது விவாகரத்துப் பற்றிக் கதைத்த வண்ணம் இருந்தாள். அவளது மூன்று வயது மதிக்கத்தக்க மகன் தாயின் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஆசனத்தில் இருந்தான். கவிதைக்கண்ணன் அவனைப்பார்க்க அவனும் கவிதைக்கண்ணனைப் பார்த்துச் சினேகிதமாகப் புன்னகைத்தான். இறந்த மகன் இருந்திருந்தால் என்கின்ற ஏக்கம் கவிதைக்கண்ணனை வாட்டத் தொடங்கியது. அவன் தனது நினைவுலகில் மீண்டும் காலடி எடுத்துவைத்தான்.

★

சட்டப்படி விவாகரத்துப் பெற்று, அதன் பின்பு விண்ணப்பித்து, அவள் வருவதற்கு மூன்று வருடங்கள் ஆகும் என்பதைக் கவிதைக்கண்ணனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தான் இலங்கைக்குச் சென்றாலும் ஒரு மாதத்திற்கு மேல் தங்கி நிற்க முடியாது என்பதும் புரிந்தது. வேலையில் அதற்குமேல் விடுப்பு தரமாட்டார்கள் என்கின்ற இக்கட்டும் உண்மை. அவள் நோர்வேக்கு வந்தால் மூன்று மாதங்கள் நின்றுவிட்டுப் போகலாம் என்பது அவனுக்கு மகிழ்வைத் தந்தது. அவன் அதை அவளிடம் அலைபேசியில் கதைக்கும் பொழுது கூறினான். அவளும் நோர்வேக்கு வருவதாக ஒப்புக் கொண்டாள்.

கவிதைக்கண்ணன் முதலில் தேவையான அத்தாட்சிப் பத்திரங்களை அனுப்பி வைத்தான். அவளால் அம்முறை கொழும்பிற்குப் போக முடியவில்லை. தாய் சுகம் இல்லாமல் இருந்தமையால் அவளால் பயணம் செய்ய முடியவில்லை. மீண்டும் கொழும்பிற்குச் சென்று விண்ணப்பிக்க் அவர்கள் புதிதாக அத்தாட்சிப் பத்திரங்களை எடுத்து வருமாறு சொல்லிவிட்டார்கள்.

கவிதைக்கண்ணனுக்கு அவளின் பெயர் சுமதா சிவநாதன் என்றே தெரியும். அவளது உண்மையான பெயர் சிவனேஸ்வரி செல்வசிவநாதன் என்பது தெரியாது. அவன் தனக்கு தெரிந்த பெயரை விண்ணப்பப் படிவங்களில் நிரப்பி முதலில் அனுப்பி விட்டான். மகளின் பெயரில் முந்திய கணவனின் சிங்களப் பெயர் வருவதுகூட அவனுக்குத் தெரியாது. அதைப் பற்றியும் அவள் ஒன்றும் கூறவில்லை. இப்போது உண்மைப் பெயர்களை அவனிடம் கூறி அந்தப் பெயர்களை போட்டு அத்தாட்சிப் பத்திரங்களை எடுத்து அனுப்புமாறு கேட்டாள். கவிதைக்கண்ணனுக்கு ஆத்திரம் பொங்கியது. ‘என்னத்துக்குச் சொந்தப் பெயரை எனக்குத் தெரியாமல் மறைச்சாய்? ‘ என்று அலைபேசியில் கத்தினான். ‘மறந்து போயிட்டன். அதுக்கு என்னைக் கிரிமினல் மாதிரி இப்பிடி ஏசுறதா?’ என்று அவள் கேட்டாள். ‘சொந்த பெயரை மறைக்கிறது கிரிமினல் குற்றம்தான்.’ என்று கவிதைக்கண்ணன் தொடர்ந்தான். ‘அந்தப் பெயர் பாவிக்கிறேல்லை. அதால மறந்து போயிட்டன். சும்மா சின்ன விசயத்துக்கு எல்லாம் என்னக் குற்றம் சொல்லிக் கொண்டு நிக்கிறியள்.’ என அவளும் சினந்தாள். அப்பொழுதுகூட அவளது மூளையின் இயக்கம் எப்படி உள்ளது என்பது பற்றிக் கவிதைக்கண்ணன் ஆழமாகச் சிந்திக்கவில்லை.

கவிதைக்கண்ணனுக்கு அவளின் சமாதானத்தில் திருப்தி இல்லை. ஒரு பெயர் அல்ல இரண்டு பெயர்களைப் பற்றிய உண்மையை மறைத்து விட்டாள். எதற்காக இப்படிச் செய்தாள் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. பொய்… பொய்… பொய்… எதற்காக அவள் இப்படி? அவளோடு சில மர்மங்கள் வாழ்வதான அந்தரம் அவனுக்கு. அதற்கு விடை காண முடியாத தனது கையாலாகாத்தனத்தின் மீது மட்டிலாக் கோபம். இருந்தும் அவளோடு கதைத்தான். அவளோடு கதைக்காது தன்னால் உயிர் வாழ முடியாது என்கின்ற தவனம் அவனிடம். சிலந்திவலையில் மாட்டுப்பட்ட ஈயின் சிங்காரக் கனவின் தொடர்ச்சியாக அது தொடர்ந்தும் இழுபட்டது.

இரண்டாவது முறை அத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்பிவிட்டுக் கவிதைக்கண்ணன் ஒரு நாள் மாலை அலைபேசி எடுத்தான். பின்னணியில் தமிழ்ப்பாட்டுப் பாடுவதும், மனிதர்கள் கதைப்பதும் கேட்டது. வீட்டில்

இருந்து கதைத்தால் தமிழ்ப்பாட்டு பாடுவது இல்லை. சில வேளைத் தொலைக்காட்சி சத்தம் கேட்கும். அலைபேசிக்குக் கதைத்தால் அவள் அதை வீட்டிற்குப் பின்புறம் கொண்டு சென்று கதைப்பதுதான் வழக்கம். அப்போது எந்தச் சத்தமும் இருக்காது. கவிதைக்கண்ணனால் அது ஒரு பேருந்திற்குள் இருந்து வரும் சத்தம் என்பதை அடையாளம் காணமுடிந்தது. அவன் உடனேயே 'நீ எங்க நிற்கிறாய்? ' என்று அவளிடம் கேட்டான். அவள் தான் வீட்டில் நிற்பதாயும், பின்பு கதைக்குமாறும் கூறிவிட்டு அலைபேசியைத் துண்டித்தாள். அவனுக்குக் கொழும்பு ஞாபகம் வந்தது.

அவள் தனக்குப் பொய் சொல்லி ஏமாற்றுவது கவிதைக்கண்ணனுக்கு முதன் முதல் அப்பட்டமாய்ப் புரிந்தது. அவனுக்குக் கோபத்தில் இரத்தம் தலைக்கேறியது. ஆத்திரம் மண்டையைப் பிளந்துகொண்டு வெளியே வந்தது. தூரதேசத்தில் இருக்கிற வசதியில் எப்படியெல்லாம் ஏமாற்ற நினைக்கிறாள் என்கின்ற எண்ணம் கொதிப்பைத் தந்தது. அவன் மீண்டும் அவளை அலைபேசியில் தொடர்பு கொண்டான். அவள் அலைபேசியை எடுக்காது துண்டித்து விட்டாள்.

கவிதைக்கண்ணனால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. மீண்டும் தொடர்பு கொண்டான். அவள் இம்முறை எடுத்தாள். அவன் மிகுந்த கோபத்தோடு,

'இப்ப எங்கயடி நிற்கிறா? நீ வஸ்சுக்க எல்லே இருக்கிறா? என்னை நீ பேக்காட்டுறியா? ' என்று கோபத்தில் கத்தினான்.

'ஓமப்பா நான் வஸ்சுக்கதான் இருக்கிறன். தயவு செய்து சத்தம் போடாதேங்க.' என்றாள் அவள்.

'என்ன ஓமப்பா? என்னை பேய்க்காட்டுறியா? ' என்று மீண்டும் கேட்டான்.

அவனுக்கு ஆத்திரத்தில் உடல் நடுங்கியது. ஊரில் நின்றிருந்தால் நிலமை வேறாக இருந்திருக்கும் என்று தோன்றியது.

'எனக்கு இதுவும் வேணும் இன்னும் வேணும். போம் எடுத்து வந்த பிறகு உங்களுக்குச் சப்பிரைஸ் தரலாம் எண்டு நினைச்சதுக்கு, எனக்கு இதுவும் வேணும் இன்னும் வேணும். நான் யாழ்ப்பாணத்தில இருந்து வந்தது தொடக்கம் ஓய்வில்லாமல் அலைஞ்சு அலுவல் முடிச்சிருக்கிறன். நீங்கள் ஒரு அண்டஸ்ராண்டிங் இல்லாமல் என்னை பேசுறியள். ' என்றாள் சுமதா. கவிதைக் கண்ணனுக்கு அதைக் கேட்ட பின்பும் கோபம் அடங்கவில்லை.

'நீ என்ன செய்தா எனக்கு என்ன? எனக்குப் பொய் சொல்லச் சொன்னனா? பொய் சொன்னா என்ன முடிவு எண்டது உனக்குத் தெரியும்தானே? இப்ப மனமறியப் பொய் சொல்லி இருக்கிறா. எதுக்கு நீ பொய் சொன்னாய் எண்டுறது எனக்கு முக்கியம் இல்லை. எனக்கு நீ பொய் சொன்னாய் எண்டதுதான் விஷயம்.

அதுக்குத் தண்டனை எங்கடை உறவு இனி இல்லை எண்டு ஆகீட்டுது. அப்பிடித்தான் நாங்கள் கொழும்பில கதைச்சது. உனக்கு ஞாபகம் இருக்குதோ இல்லையோ எனக்கு நல்லா ஞாபகம் இருக்குது.' என்றான் கவிதைக்கண்ணன்.

'சரி தெரியாமல் சொல்லிப் போட்டன்.' என்று சுமதா இறங்கினாள்.

'என்ன தெரியாமல். அப்படி நாக் கூசாமல் எனக்குப் பொய் சொல்லுறா. இதுக்கு மேலையும் ஆளையாள் ஏமாத்துற உறவு தேவையில்லை.'

அவள் பேசவில்லை. அவளால் பேச முடியவில்லை. கவிதைக்கண்ணன் கோபத்தில் தன் நிலையை இழந்திருந்தான். அதே வேகத்தோடு,

'வாய். வாய் போறெவர்.' என்று கூறிவிட்டு அலைபேசியை வேகமாகத் துண்டித்தான். அவள் இரு முறை கவிதைக்கண்ணனை அலைபேசியில் தொடர்பு கொண்டாள். கவிதைக்கண்ணன் கோபத்தில் அதை எடுக்காது மீண்டும் மீண்டும் துண்டித்தான்.

சிறிது நேரத்தில் கவிதைக்கண்ணனுக்குக் கோபம் அடங்கி விட்டது. அவள்மேல் இருந்த காதல் கோபத்தை வெல்ல இரக்கம் சுரந்தது. பாவம் அவளை இப்படிப் பேசி இருக்கக் கூடாது என்கின்ற எண்ணம் எழுந்தது. என்றாலும் தனக்கும் பொய் சொல்கிறாள் என்பது அடிமனதில் வேதனை தந்தது. அந்த வேதனையைப் புறம் தள்ளிவிட்டுக் கவிதைக்கண்ணன் அலைபேசியில் அவளோடு மீண்டும் தொடர்பு கொண்டான்.

அதன் பின்பு சண்டை போய்ச் சமாதானமான காதலர்களின் கரிசனப் பேச்சு மலர்ந்தது. அன்று இத்தினை சண்டை நடந்த போதும் அவளது மகளின் மூச்சைக்கூடக் கவிதைக்கண்ணன் கேட்கவில்லை. குறு குறு என்று குடையும் அந்தப் பெண் எங்கே? ஏன் பேசாது இருந்தாள்? என்பது அவனுக்குப் புலப்படவில்லை. அவள் தனியே பயணம் செய்தாளா? அல்லது வேறுயாருடனும் பயணம் செய்தாளா? கவிதைக்கண்ணன் அப்போது இருந்த மனநிலையில் அதைப் பற்றிக் கேட்கவில்லை. வேறு அலுவலுக்காக யாருடனும் வந்துவிட்டுக் கதைவிட்டாளா என்பது பற்றியும் அவனுக்கு உறுதியாகத் தெரியாது. தூரதேசத்தில் இருப்பவர்களை எப்படியும் ஏமாற்றலாம். அவர்களால் உடனே வந்து பார்க்கவா முடியும் என்கின்ற துணிவு பலருக்கு. அப்படித்தான் இவளும். அதே நேரம் அலைந்துவிட்டு வந்ததால் மகள் சிலவேளை நித்திரையும் ஆகியிருக்கலாம் என்றும் அவன் எண்ணினான். அப்படி என்றாலும் நீர்கொழும்பில் நின்றுதான் அவள் மாமா அவளைப் பேருந்தில் ஏற்றிவிடுவது வழக்கம். நீர்கொழும்பிற்குக் கொழும்பில் இருந்து பேருந்து செல்வதற்கு எட்டரை அல்லது ஒன்பது மணியாகும். கவிதைக்கண்ணன் அதற்கு முன்பு அலைபேசியில் தொடர்பு கொண்டதாக ஞாபகம்.

காதலின் மயக்கத்தில் அவள் அந்த ஒரு விடயத்தில் மட்டும்தான் பொய் சொன்னாள் என்பதைக் கவிதைக்கண்ணன் உறுதியாக நம்பினான். அந்தச் சண்டையையும், சந்தேகத்தையும் அத்தோடு மறந்து போய்விட்டான். விஷம் விழுந்தும் அமுது என்று அதைப் பருகினான்.

மீண்டும் அவளைக் கொழும்பிற்குக் கூப்பிட்டு நேர்முகப் பரீட்சை வைத்தார்கள்.

அது கிறிஸ்மஸ் நேரம். பலரும் விடுமுறையில் சென்று விடுவதால் நோர்வேயில் அலுவலகங்கள் ஒழுங்காக இயங்காத காலம். அப்படி இருந்தும் கவிதைக்கண்ணன் அவசர அவசரமாகக் கடிதம் எழுதி அத்துடன் சில அத்தாட்சிப்பத்திரங்களும் எடுத்துக் கடுகதிப் பொதியாக மீண்டும் அவளுக்கு அனுப்பி வைத்தான். அவள்மீது இருக்கும் அன்பை எந்தச் சண்டையோ, கோபதாபமோ பலிகொள்ள முடியாது என்பதில் அவனுக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

அதன் பின்பு இரண்டு மாதங்கள் கழிந்திருக்கும். அவளை மீண்டும் கொழும்பிற்கு வருமாறு நோர்வேத் தூதரகத்தினர் அழைத்திருந்தனர். அவள் அதற்கு மகளோடு செல்லாது தனியே செல்வதாகக் கூறினாள். அவள் தனியேதான் சென்றாளா என்பது பற்றி அவனுக்குத் தெரியாது. கொழும்பில் நிற்கும் போது கவிதைக்கண்ணன் குறும்செய்தி அனுப்பினான். அவள் அதற்கு விசா கிடைக்கவில்லை என்றும் வீட்டிற்கு வந்ததும் கதைக்கலாம் என்றும் குறும்செய்தி அனுப்பினாள்.

வீட்டிற்கு வந்ததும் கவிதைக்கண்ணன் அலைபேசியில் கதைத்தான். வேலையில்லாததால் விசா தரவில்லை என்று முதலில் கூறினாள். அத்தோடு கவிதைக்கண்ணன் தான் எப்படி இருக்கிறான் என்று சொல்வதை நம்பவேண்டாம் என்று தூதரகத்தில் வேலைசெய்தவன் கூறியதாக அவனிடமே கூறினாள். கவிதைக்கண்ணனுக்கு அதைக்கேட்கக் கோபம் வந்தது. இதற்குப் பின்பும் தன்னை இவள் நம்பவில்லையே என்று கவலையாகிற்று. கவிதைக்கண்ணன் கோபமாக ‘நீ என்னை இன்னும் விளங்கிக் கொள்ளேல்லை.’ என்று அவளிடம் கூறினான்.

அதன் பின்பு ஒரு நாள் அலைபேசியில் கவிதைக்கண்ணன் தொடர்பு கொண்ட போது தனக்குச் சங்கு என்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில் வேலை கிடைத்திருப்பதாகவும், தான் வேலைக்குப் போகட்டுமா என்றும் அவள் அவனிடம் அனுமதி கேட்பது போல் கேட்டாள். இவ்வளவு விரைவாக வேலை கிடைத்தது கவிதைக்கண்ணனை மலைப்பில் ஆழ்த்தியது. அதன் சூட்சுமம் அப்போது அவனுக்குத் துளியும் எட்டாக்கனி.

‘உனக்கு விருப்பம் எண்டா நீ வேலைக்குப் போ.’ என்று முதல் வாழ்வின் சரித்திரத்தை நினைவில் வைத்துக் கொள்ளாமல் கவிதைக்கண்ணன் கூறினான். பத்திரிக்கைத் துறையில் வேலை செய்தால் வெளிநாட்டிற்குப் போவதற்கு விசாத் தருவார்கள் என்று தூதரகத்தில் கூறியதாக அவள் ஒரு கதை அவனுக்குக் கூறினாள். அவன் அதை நம்பாவிட்டாலும் வேலை செய்தால்தான் வெளிநாடு வரலாம் என்பவளைத் தடுப்பதற்கு அவனுக்கு மனதில்லை. அவள் அங்கு வேலை செய்யப் போக வேண்டும் என்பதற்காகவே அந்தக் காரணங்களை உருவாக்கினாள் என்பதை அவன் எப்படி அறிவான்?

வேலை தொடங்கிய பின்பு கவிதைக்கண்ணனுக்கும் அவளுக்குமான குறும்செய்தி, அலைபேசித் தொடர்புகளில் தளர்வு ஏற்படத் தொடங்கியது. கால ஓட்டத்தில் அவளின் அக்கறையின் சரிவை அவனால் அவதானிக்க முடிந்தாலும் தன் அன்பை அவனால் குறைத்துக் கொள்ள முடியவில்லை. அவள் வேலைப்பளுவில் அவதிப்படுகிறாள் என்று தனக்குத் தானே அவன் சமாதானம் சொன்னான்.

விசாத் தரவில்லை என்பது உறுதியானதும் அவள் இனி நோர்வேக்கு இப்போது வருவது சாத்தியம் இல்லை என்பது உறுதியாயிற்று. அத்தால் கவிதைக்கண்ணன் அவளை யாழ்ப்பாணம் சென்று சந்திப்பதாக முடிவெடுத்தான். அந்த முடிவை அவளிடம் தெரிவித்த போது 'இப்ப நாட்டில் பிரச்சனையா இருக்குது. நீங்கள் வரவேண்டாம். கொஞ்சக் காலம் செல்ல வாங்க.' என்று அவள் தட்டிக்கழித்தாள்.

கவிதைக்கண்ணனுக்கு அவள் சொல்லும் காரணங்கள் சரியாகப்படவில்லை. முதலில் நாட்டுப்பிரச்சனை என்கிறாள். பின்பு அம்மாவிற்குச் சுகம் இல்லை என்கிறாள். நாட்டுப்பிரச்சனை முடிந்து எவ்வளவு நாளாகிவிட்டது? அவனால் அவளை நம்பமுடியவில்லை. அவன் விமான ஆசனப்பதிவு செய்துவிட்டு அவளிடம் வரும் நாளைச் சொன்னான். அவள் அம்மாவுக்குச் சுகமில்லாமல் ஆஸ்பத்திரியில் வைத்திருப்பதாகவும், பயணச்சீட்டை ரத்து செய்யுமாறும் கவிதைக்கண்ணனைக் கேட்டாள். கவிதைக்கண்ணன் எடுத்த அந்தப் பயணச்சீட்டு ரத்து செய்தால் பணம் எதுவும் திரும்பக் கிடைக்காது. அத்தால் தான் வருவேன் என்று உறுதியாகக் கூறினான். அப்படி வந்து அம்மாவிற்குச் சுகம் இல்லாவிட்டால் தான் ஆஸ்பத்திரியில் நிற்க, நீங்கள் தனியே வீட்டில் இருக்க வேண்டும் என்று அவள் அவனிடம் கூறினாள். எது என்றாலும் பருவாய் இல்லை உன்னை நான் வந்து பார்க்க வேண்டும் என்று கவிதைக்கண்ணன் உறுதியாகக் கூறினான்.

அவள் விருப்பம் இல்லாது கவிதைக்கண்ணனின் கட்டாயத்திற்காகச் சம்மதித்தாள். ஏன் அவள் விருப்பம் இல்லாது இப்படி எல்லாம் சாக்குச் சொல்கிறாள் என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை. நேரே சென்றாவது அதைப் புரிந்து கொள்ள முடியுமா என்கின்ற எதிர்பார்ப்போடு அந்தப் பயணத்திற்கு அவன் தயாரானான்.

15

கவிதைக்கண்ணன் 'MC'க்குப் போய் வரும் பொழுது தனக்கு உணவு வாங்கி வந்தான். வழமை போலக் குளித்துவிட்டு மதுவைக் கையில் எடுத்தான். இப்படிக் குடித்தால் ஈரல் கருகிவிடும் என்று ஊரில் சொல்வார்கள் என்கின்ற ஞாபகம் வந்தது. அதற்கு விஞ்ஞான விளக்கமும் உண்டு. ஒவ்வொருநாளும் குடித்தால் பழுதான ஈரல் கலன்கள் தங்களைச் சரி செய்து கொள்வதற்கு நேரம் கிடைப்பதில்லை. அத்தோடு புதிதாக ஈரல் கலன்கள் பழுதாகும். இப்படியே தொடர்ந்து குடித்தால் காலப்போக்கில் ஈரலின் அளவு சுருங்கிச் சுருண்டு குறுகி அதுவே பெரும் வருத்தமாகும். இதையே ஊரில் சுருக்கமாக குடித்து ஈரல் கருகிச்

செத்தவன் என்கிறார்கள். தானும் அப்படிச் சாகவா இந்த ஆரம்பம் என்கின்ற கேள்வி அவனுள் எழுந்தது. தனக்கு விருப்பமான எல்லாமே பறிபோன பின்பு ஈரல் இருந்தால் என்ன இல்லாது போனால் என்ன என்கின்ற எண்ணம் வந்தது. அவன் ஆத்திரமாக மதுவைக் கலந்து பருகத் தொடங்கினான். மதுவைவிடக் காதல் வலுவானது. அதைப் போதை வஸ்த்தோடு ஆராய்ச்சியாளர்கள் ஒப்பிடுகிறார்கள். கவிதைக்கண்ணன் நடப்பு வாழ்வில் அதை அனுபவிக்கிறான். அவள் நினைவு உலகை மறக்க வைத்த போதை. அந்தப் போதையில் அவன் செய்த மடமைகள் பல. எவ்வளவு மது அருந்தினாலும் காதல் போதை அதை மிஞ்சியது. அதன் வீரியம் சுயத்தைக் கொன்றது. காதல் வயத்தால் சுயம் இளக்கும் மனிதன் பைத்தியமே. கவிதைக்கண்ணனை அவளின் நினைவுகள் மீண்டும் ஆட்கொண்டன. அவன் பைத்தியம் போல முகட்டைப் பார்த்த வண்ணம் படுத்தான். அவள் நினைவில் தன்னை மறந்தான்.

★

கவிதைக்கண்ணன் இம்முறை அவளுக்கும் மகளுக்குமாக அன்பளிப்புப் பொருட்கள் வாங்கிச் சென்றான். அவளது வவுனியா மாமா வந்தால் கொடுப்பதற்கு போத்தல் எடுத்து வருமாறு அவள் கூறினாள். கவிதைக்கண்ணன் தனக்கு ஒரு போத்தலும் மாமாவுக்கு ஒரு போத்தலுமாக இரண்டு எடுத்தான். அவளைச் சந்திக்கும் கணங்களை எண்ண அவனுக்குப் போதை ஏறிற்று. அவன் ஆசைகளோடும், நினைவுகளோடும் இலங்கைக்கு மீண்டும் பயணமானான்.

சங்குப் பத்திரிக்கையில் அவள் சிலகாலத்துக்கு முன்புதான் வேலையில் சேர்ந்தாள். அங்கு உடனேயே விடுப்புக் கேட்பது என்பது முதலில் சங்கடமானது. அதுவும் கவிதைக்கண்ணனைப் பார்க்கப் போவதை அவளால் அங்கே சொல்ல முடியாது. அவள் யாருக்கும் கவிதைக்கண்ணனைப் பற்றிச் சொல்வதும் இல்லை. சொல்ல விரும்புவதும் இல்லை. கவிதைக்கண்ணன் தன்னோடு நின்று எடுத்த புகைப் படத்தைப் 'பிறேம்' போட்டு வீட்டில் கொளுவி விடுமாறு பல முறை கேட்டிருக்கிறான். அவள் அப்படிச் செய்யவில்லை. அவனோடான உறவை மறைப்பதில் அவள் அதிக கரிசனை செலுத்துகிறாள் என்பதை அவன் முதலில் புரிந்து கொள்ளவில்லை.

சொந்தச் சகோதரங்களுக்குக்கூடத் தங்களின் உறவு பற்றி அதிகம் தெரிவதை அவள் விரும்பவில்லை. சொந்தச் சகோதரங்கள் பற்றிக் கவிதைக்கண்ணன் அறிந்து கொள்வதையும் அவள் விரும்பவில்லை. அதை மிகவும் இரகசியமாக வைத்திருந்தாள். கவிதைக்கண்ணனிடம் அவர்களின் முகவரி மாத்திரமே இருந்தது.

தான் சங்குப் பத்திரிக்கை அலுவலகத்தில் ஏதாவது பொய்க் காரணத்தைக் கூறிவிட்டு இம்முறை கொழும்பு வருவதாக அவள் கவிதைக்கண்ணனிடம் சொன்னாள். அவள் வாய்திறக்கும் ஒவ்வொரு முறையும் அதைத்தான் செய்தாள். புரிவது வேறு, ஏற்பது வேறு. கவிதைக்கண்ணன் ஏற்கவில்லை.

சங்கில் வேலை செய்யும் ஒரே பட்டதாரி தான் என்பதால் தன்னை வேலையைவிட்டு நீக்கமாட்டார்கள் என்பதாகவும், தனக்கு விசேட சலுகை உண்டு என்றும் கூறினாள். கவிதைக்கண்ணன் அதையெல்லாம் கிளறவில்லை. அவள் பட்டதாரி என்பதற்காகச் சலுகை வழங்கப்பட்டதா? பல்லிளிக்கும் காதல் சரசத்திற்காகச் சலுகை வழங்கப்பட்டதா என்பது அவனுக்கு அப்போது புரியவில்லை.

அவள் கூறியபடியே சங்கு பத்திரிக்கையில் விடுப்பு எடுத்துக்கொண்டு கொழும்பிற்கு வந்தாள். பச்சைநாடு விடுதியில் காலையில் அறையைப் பதிவு செய்துவிட்டு வாகனத்தோடு கவிதைக்கண்ணனை அழைப்பதற்கு விமான நிலையத்திற்கு வந்து காத்திருந்தாள்.

கவிதைக்கண்ணன் விமானத்தால் இறங்கி விரைவாக வெளியே வந்தான். அவன் அவள் பிரயாணிகளுக்காகக் காத்திருக்கும் அறையில் காத்திருப்பதைக் கவனிக்கவில்லை. அவள் வெளியே வளமையாகத் தபால் நிலையத்திற்கு முன்பு நிற்பாள் என்கின்ற எண்ணத்தோடு விரைவாக வெளியே நடந்து சென்றான். அவன் தபால் அலுவலகத்திற்கு வந்த போது அங்கு அவள் இல்லை.

‘என்ன இவ்வளவு அவசரம். என்னைக்கூடக் கவனிக்காமல்?’ எனக் கேட்ட வண்ணம் அவள் பின்னால் அன்னப்பேடு போல் ஆட்டி ஆட்டி வந்தாள். அவள் இம்முறை அவன் குறைசொல்லும் மாதிரியாக உடையணியவில்லை. அது அவனுக்காக அல்ல. அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். அதில் முதன் முதல் பார்த்தபோது இருந்த மோகமும், கண்களில் மின்னிய ஒளியும் எங்கோ தொலைந்ததான பிரமை. அது உண்மையா அல்லது பிரமையா என்கின்ற சிறு விவாதம் அவன் மனதில் எழுந்தது. நிச்சயம் அது பிரமை என்கின்ற முடிவோடு அவன் வாகனத்தில் ஏறி அமர்ந்தான்.

இருவரும் பச்சைநாடு விடுதியை நோக்கிப் பயணித்தனர். எப்போது விடுதியை அடைவோம், எப்போது தனிமை கிடைக்கும் என்கின்ற ஏக்கம் புயலாக அவன் மனதை நொறுக்கியது. வாகனத்திற்கு வெளியே வெயில் அனலாகப் பிரசவமாகி இராவண தேசத்தை எங்கும் எரித்தது. விமானநிலையத்தில் இருந்து கொழும்பிற்கு செல்லும் போது வழியே இல்லாது எங்கும் வாகனங்கள் அடுக்கிவிட்ட பெட்டிகள் போல புகையைத் தள்ளியவண்ணம் அடைத்துக் கொண்டு நின்றன. ஓட்ட வேண்டிய வாகனத்தை உருட்டிச் செல்ல வேண்டிய கட்டமைப்பின் கட்டாயம் சாரதிக்கு.

எதிர்பார்த்ததைவிட காலதாமதமாய்த்தான் கவிதைக்கண்ணனும் அவளும் பச்சைநாடு விடுதியை வந்தடைந்தார்கள். வந்ததும் அவள் செத்த பிள்ளையின் நினைவாக அவனைக் கட்டிப்பிடித்து கதறப் போகிறாள் என்கின்ற பயம் அவன் அடிமனதில். ஒரு முறை அவன் தனது மாமியிடம் போன போது அதுதான் நடந்தது. கவிதைக்கண்ணன் மாமா செத்ததை மறந்து போய்விட்டான். தொடர்புகொண்டு அனுதாபமும் தெரிவிக்கவில்லை. மாமி நினைவு வைத்திருந்து ஒப்புச் சொல்லி அழுத போது தான் எவ்வளவு பெரிய தப்பு செய்துவிட்டேன் என்கின்ற குற்ற உணர்வு அவனை வாட்டியது. அப்படி இவளும் என்ன சொல்லிக் கதறப் போகிறாள் என்கின்ற ஒரு அவஸ்தை அவனுக்கு.

இது அவனது குழந்தை? அது இறந்ததிற்காய் அவன் நிறையவே மனதில் அழுதிருக்கிறான். அவள் சுமந்தவள். அவளுக்கு அதைவிட வேதனை நிறையவே இருக்கும். அவள் அழுவாள். அவளை எப்படிச் சமாதானம் செய்வது என்கின்ற திக்குமுக்காடலில் கவிதைக்கண்ணன் பெட்டிகளோடு அறைக்குள் புகுந்தான்.

அறைக்குள் புகுந்து கதவைச் சாத்தியும் அவள் அழவில்லை. அது கவிதைக்கண்ணனுக்கு நிம்மதியாக இருந்தாலும் எப்படி இவளால் முடிந்தது என்பது ஆச்சரியமாகிற்று. அவன் அதைப் பற்றி ஒன்றும் கதைக்க விரும்பவில்லை. அவள் தனது அலைபேசியில் சங்குப் பத்திரிக்கையில் வேலை செய்பவர்களிடம் இருந்து வரும் குறும்செய்தி பார்ப்பதில் கவிதைக்கண்ணனையே மறந்து போனாள். பொறுக்க முடியாமல் கவிதைக்கண்ணன் அதை வாங்கி மேசையில் வைத்தான். அவளைத் தன்னோடு இழுத்து அணைத்தான். நிறையக் காலம் அவளைப் பார்க்காத, தொடாத ஏக்கத்தில் உறவின் போது அவனுக்குக் கண்களில் முத்துக்களாக சில கண்ணீர்த்துளிகள் புரண்டன. அவள் அவனது கண்ணீரைத் துடைத்தாள். அவனோடு அதிகம் பிணைந்தாள். கவிதைக்கண்ணன் அவளைப் பற்றிய தனது நினைவுகள் அசிங்கமானவை என்று எண்ணினான்.

கவிதைக்கண்ணன் பிள்ளையைப் பற்றிய கதையை அதன் பின்பு அவளிடம் கேட்கவில்லை. அவளும் அதைப்பற்றிப் பேசவில்லை. அவளுக்குத் தற்போது அடிக்கடி குறும்செய்தி வந்ததை அவன் கவனித்தான். அடிக்கடி அவள் அதைப் பார்ப்பதும் பதிலளிப்பதுமாய்க் கவிதைக்கண்ணன் இருப்பை மறந்துபோனாள். புது வேலையில் நிறைய நண்பர்கள் கிடைத்திருந்தார்கள். அவர்கள் இடைக்கிடை அலைபேசியில் தொடர்புகொண்டு புதினம் விசாரித்தார்கள். புதினம் கூறினார்கள். சங்கில் வேலை செய்யும் யாருக்கும் அவள் தனது புதிய காதலனை அல்லது கணவனைப் பார்க்க வந்ததாகத் தெரியாது.

மத்தியானத்திற்குப் பின்பு இருவரும் புறப்பட்டு வெள்ளவத்தைக்குச் சென்றார்கள். அங்கு யாழ்ப்பாணம் செல்வதற்கான பேருந்துப் பயணச்சீட்டை முதலில் பெற்றுக்கொண்டார்கள். கவிதைக்கண்ணன் குரோணர்கள் கொண்டு வந்திருந்தான். அதை பின்பு வெள்ளவத்தையில் மாற்றி இலங்கைப் பணமாக்கினான். அதன் பின்பு மீண்டும் விடுதிக்கு வந்துவிட்டார்கள். தனிமையான கணங்கள் அங்குதான் கிடைக்கும் என்பதில் கவிதைக்கண்ணனுக்கு நிறையவே அக்கறை. எப்பொழுதும் அவளோடு தனிமையாக இருக்க வேண்டும் என்பதே அவனது கனவும் நினைவுமாகியது.

காலம் என்பது மாற்றத்தைச் சலிக்காது தந்து மாயமாகும் நீர்க் குமிளியே. அது தோன்றி மறையும் தொடராக மனித வாழ்வை மனிதனுக்கு உணர்த்துவதாக. அந்த மறைந்த கணங்கள் இனி மீண்டும் மனித வாழ்வில் வராது என்பது மட்டும் நிதர்சனமாக.

மாலை மீண்டும் வந்திற்று. யாழ்ப்பாணப் பேருந்திற்குச் செல்லும் நேரமும் கிட்டிற்று. பேருந்தில் பயணிப்பதற்கு வெள்ளவத்தைக்கு வருமாறு கூறியிருந்தார்கள். அது வெள்ளவத்தை 'றொளேக்ஸ்' விடுதிக்கு அருகில் என்று அவள் கவிதைக்கண்ணனுக்கு விளக்கினாள். தனக்கு அக்கறையானதைத் தவிர கவிதைக்கண்ணனுக்கு எதுவும் நினைவில் நிற்பதில்லை. அவன் அதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புவதும் இல்லை. கவிதைக்கண்ணனைப் பொறுத்தவரை அவன் நினைவில் நிற்பது கவிதையான அவள் நினைவுகள்… அதற்கு அடுத்தது கவிதை என்னும் தமிழின் நர்த்தனம்.

இருவரும் புறப்பட்டு வெள்ளவத்தைக்குச் சென்றார்கள். 'காலிரோட்'டை ஒற்றை வழியாக்கியதில் பலருக்கும் போக்குவரத்துப் பிரச்சனை. ஓட்டோக்காரன் கடற்கரைப் பக்கத்தால் வந்து போகவேண்டிய இடத்திற்கு முன்பாகவே திருப்பிவிட்டான். இனிப் பின்னோக்கிச் செல்ல முடியாது. அப்படித் திரும்பிச் செல்வதென்றால் அதிக தூரம் முன்நோக்கிச் சென்று பின்பு திரும்பி வரவேண்டும். அவன் அதில் நேரத்தைச் செலவு செய்யக் கவிதைக்கண்ணன் அவளின் கையை பிடித்தவண்ணம் அவளைப் பார்த்துக்கொண்டு இருந்தான்.

'காலிரோட்'டில் சுற்றி ஓடிய ஓட்டோக்காரன் இருவரையும் கொண்டு வந்து அந்த 'Van'க்கு முன்பு நிறுத்தினான். 'Van'இல் போய் 'ஆமர்ஸ்ரீற்றில்' நிற்கும் பேருந்தில் ஏறவேண்டும்.

வயது போன பெண்ணொருவர் கவிதைக்கண்ணனும் அவளும் இருந்த இருக்கைக்குப் பக்கத்தில் இருப்பதற்குத் தயங்கிய வண்ணம் முன்னாசனத்தில் அமர்ந்தார். அவள் கவிதைக்கண்ணனுக்குக் கண்ணைக்காட்டி 'நாங்களும் நல்ல ஆட்கள் எண்டு சொன்னாத்தான் பக்கத்தில இருப்பா போல இருக்குது.' என்றாள். கவிதைக்கண்ணன் சிரித்தான். சாதி பற்றி அறிந்தாலும் பிரச்சனை அறியாவிட்டாலும் பிரச்சனை என்று அவனுக்குத் தோன்றியது. அவள் பக்கத்தில் இருப்பதால் காலம் மாலை நேரத்து வாகனத்தின் அவசரத்தில் செல்வதாகக் கவிதைக்கண்ணன் அந்தரப்பட்டான்.

யாழ்ப்பாணம் கொழும்புப் பேருந்துப் பயணம் எப்போதும் சுவாரசியமாக இருக்கும். ஆசனச் சண்டையில்லாது பேருந்து அசைய விரும்புவதில்லை. அந்த வேலிச் சண்டை முடிந்த பின்புதான் பேருந்து நீர்கொழும்பில் இருந்து புறப்படும். பணம் செலுத்திப் பற்றுச்சீட்டு வைத்திருந்தாலும் ஆசனம் கிடைத்ததா கிடைக்கவில்லையா என்பது அதிஸ்ரலாபச் சீட்டு விழுவது போல. நசிந்து கொடுத்தால் பின்னாசனத்தில் இருக்கவேண்டிய நாரி முறிவுக்குத் தயாராக இருக்க வேண்டும். நீர்கொழும்பு தாண்டிச் சிலாபம் இறங்கினால்தான் அமைதி குடிவரும். ஆசனம் யாழ்வரை என்றாகும். இராணுவ அதிகாரம் பார்க்க ஓமந்தை. கச்சான் வாங்க முருகண்டி. கவிதைக்கண்ணன் அவள் கையை தன் கையால் பொத்தி அவளைப் பார்த்தவண்ணம் இருந்தான். அவளும் அவனைப் பார்த்தாள். ஆட்களையும் விடுப்புப் பார்த்தாள். பின்பு திரைப்படம் ஒன்றை ஓடவிடக் கவிதைக்கண்ணன் அவளில் இருந்து தனது பார்வையை நகர்த்தினான். மனதில் ஒரு வெறுமை.

இரவு ஒரு மணி இருக்கும் அவள் தனது அலைபேசியை எடுத்துச் சங்கில் வேலைசெய்யும் ஒவ்வொருவருக்கும் இணைப்பை ஏற்படுத்திவிட்டுப், பின்பு அதைத் துண்டித்தாள். கவிதைக்கண்ணனுக்கு அவள் அலைபேசியைப் பாவிக்கும் முறை சற்றும் பிடிக்கவில்லை. பிடுங்கி அதை வெளியே எறிய வேண்டும் என்கின்ற அந்தரம் மனதிற்குள் முதன்முதற் தோன்றியது. அப்படிச் செய்தால் அது உறவில்படும் அடியாகும் என்கின்ற அச்சத்தில் பேசாது இருந்தான்.

பின்பும் தன்னைக்கட்டுப்படுத்த முடியாதவனாய்,

'உது என்ன புதுப் பழக்கம்? இரவில போன் அடிச்சு இப்பிடி யாரையும் குழப்பிறதா? நித்திரையில இருக்கிறவை கோவிக்க மாட்டினமா?' என்றான்.

'அவையும் அப்பிடித்தான் எனக்கு ஒவ்வொரு நாளும் செய்யினம். எல்லாரும் சங்கில வேலை செய்யிறவைதான். அவை எழுப்புறத்துக்காக நான் கோவிக்கிறேல்லை. இவ்வளவு நாளும் அவை என்ன எழுப்பிச்சினம். இண்டைக்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைச்சிருக்குது. அதுதான் நான் எழுப்புறன்.' என்றாள் சுமதா.

'இது என்ன புதுவிதமான பழக்கம் ஒண்டு?' என்று கவிதைக்கண்ணன் அதை ஒத்துக்கொள்ள முடியாத மனதுடன் கேட்டான்.

'அது உங்களுக்கு விளங்காது. எங்களோடை வேலை செய்யிறவை எல்லாம் இப்பிடித்தான் செய்வினம். இது இங்க பழசான பழக்கம்.' என்றாள் சுமதா.

'ம்... யாழ்ப்பாணத்திலதான் புதுசு புதுசா பழக்கங்கள் எல்லாம் உருவாகுது.' என்றான் கவிதைக்கண்ணன்.

'சும்மா யாழ்ப்பாணத்தை இழுக்காதையுங்க.'

அவள் கோபித்துக் கொண்டாள்.

'சரி நான் யாழ்ப்பாணத்தை இழுக்கேல்லை.'

கவிதைக்கண்ணன் சமாதானம் சொன்னான்.

அவள் தொடர்ந்தும் நடுச்சாமத்தில் அலைபேசியில் தொடர்புகொண்டு அவர்களைக் குழப்பினாள். விளையாட்டுத்தனமா அல்லது விஷமத்தனமா கவிதைக்கண்ணனால் அதைப் பொறுக்க முடியவில்லை. ஐந்து கழுதை வயதில் என்ன விளையாட்டு இது என்பது அவனுக்குச் சற்றும் புரியவில்லை.

'தயவு செய்து என்னோடை இருக்கேக்க இப்பிடி றிங்பண்ணி யாரையும் குழப்பாதையும்.' என்றான் சற்றுக் கடுமையான தொனியில். அவளுக்கு அப்படிச் சொன்னது பிடிக்கவில்லை என்பது அவளது முகத்தைப் பார்க்கக் கவிதைக்கண்ணனுக்குப் புரிந்தது. சிறிது நேரத்தில் கோபம் அடங்கியது. அவளோடு அப்படிக் கதைத்தது தப்பு என்று அவன் எண்ணினான். அவள் அதற்கு மேல் அவர்களோடு தொடர்பு கொள்ளாது அலைபேசியைத் தனது கைப்பைக்குள் வைத்துவிட்டாள். யாரோ தங்களுக்கு இடையில் வந்து குந்தியதான உணர்வு கவிதைக்கண்ணனுக்கு. அதைத் தாங்க முடியாத தவிப்பில் அவன் அந்தரித்தான்.

முருகண்டியில் பேருந்து நின்றது. இருவரும் முதலில் பிள்ளையாரைக் கும்பிடச் சென்றார்கள். அவள் மிகவும் கடவுள் பக்தி நிறைந்தவள். முதலாவது அவளுக்குச் 'சுபி பாவா' என்கின்ற இஸ்லாமிய மனிதக் கடவுள் முக்கியம். இரண்டாவது சகல இந்துக் கடவுள்களும் முக்கியம். மூன்றாவது பிதாசுதனும் முக்கியம். நான்காவதாகப் புத்தம் சரணம் கச்சாமியும் சம்மதம். தன்னில் நம்பிக்கை இல்லாத மனிதன் தன்னைவிட மற்றையவற்றை நம்பும் பேதமை என்று கவிதைக்கண்ணன் எண்ணியது உண்டு. செய்யும் பாவங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் பார்ப்பதை எல்லாம் கும்பிடுவது பற்றி அவனுக்கு அப்போது

தெரியாது. எனினும் கவிதைக்கண்ணன் மற்றவருடைய மத சுதந்திரத்தை மதிப்பவன். அவனும் அவளோடு சென்று பிள்ளையாரைக் கும்பிட்டு விபூதி பூசினான். திரும்பி வந்து அவள் பேருந்தில் அவசரமாக ஏறினாள்.

கவிதைக்கண்ணன் ஏதாவது சாப்பிட வாங்கி வருவதற்குச் சாப்பாட்டுக் கடைக்குச் சென்றான். அவள் அப்பொழுது மீண்டும் அலைபேசியில் எதையோ நோண்டத் தொடங்கிவிட்டாள். கவிதைக்கண்ணன் திரும்பி வந்த போதும் அவள் நோண்டல் நிற்கவில்லை. கவிதைக்கண்ணன் இவ்வளவு விரைவாக வருவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவனைக் காணவும் அவசரமாக அதைத் தனது கைப்பைக்குள் திணித்தாள்.

கவிதைக்கண்ணனுக்குச் சாதுவாக இதயம் வலித்தது. தன் உயிர் என்றவளே தன்னிடம் இருந்து எதையோ மறைப்பது போல நடப்பதை அவனால் தாங்க முடியவில்லை. அலைபேசியைப் பறித்து எறிய வேண்டும் போல மீண்டும் அவனுக்கு ஆத்திரம் பொங்கியது. அவன் அதை வலுவில் அடக்கிப் பௌவியம் காத்தான். எந்த நாகரிகமான மனிதனும் பலர் முன்னிலையில் மற்றைய மனிதரை அவமானப்படுத்த விரும்பமாட்டான். அப்படிச் செய்தால் அதுவே பகையாகிவிடும். அவள் தான் ஒரு ஒற்றை 'ரோட்டு' என்று ஏற்கனவே சொல்லி இருந்தாள். தான் தனது அப்பாவைப் போல எதாவது ஒரு முடிவு எடுத்தால் அதில் இருந்து மாறமாட்டேன் என்றும் பலமுறை அவனிடம் கூறியிருந்தாள். அவளோடு ஏதாவது முரண்பட்டுத் தப்பான முடிவுகளுக்குத் தானே காரணமாகக் கூடாது என்கின்ற எண்ணத்தில் அவன் பேசாது வாங்கி வந்த பற்றீசையும் தண்ணியையும் அவளிடம் கொடுத்தான்.

கவிதைக்கண்ணன் முதல்முறை வந்த போது தன்னை யார் என்று அவளது மகளிடம் அறிமுகம் செய்து கொள்ளவில்லை. அதற்கான அவகாசமும் அப்போது கிடைக்கவில்லை. எப்படி அறிமுகம் செய்வது என்று அவன் ஒரு முறை கேட்ட போது அவள் சிற்றப்பா என்று சொல்வதா அல்லது மாமா என்று சொல்வதா என்று கேட்டாள். அது நக்கலா, மறைப்பா, அல்லது அடிதலை புரியாத உண்மையான தடுமாற்றமா என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை. சொற்களை வளைப்பவனெல்லாம் நுண்ணறிவுடையவனாக முடியாது. கவிதைக்கண்ணனுக்கு இரட்டை அர்த்தமாக அதிகம் பேச வருவதில்லை. அதைப் புரிந்து கொள்வதிலும் அவனுக்கு ஏகப்பட்ட சிரமம். மற்றவர் கதைப்பதை மேலோட்டமாக எடுத்துக்கொள்ளும் பண்பு அவனுடையது. மொழியை வளைக்கத் தெரியாதவர்களில் பலருக்கும் மொழியில் தமது கருத்தைப் புதைக்கத் தெரியும். வேண்டும் என்றால் சொல்லைக் கூராக்கி இதயத்தில் ஏற்றத் தெரியும். அவளின் வல்லமை அவனுக்கு முதலில் புரியவில்லை.

இந்த நுனிப்புல் மேய்தலே கவிதைக்கண்ணனின் கவிதைகளுக்கு ஒரு குறிப்பிட்ட பெயர் கிடைக்காமல் போனதிற்குக் காரணமோ என்று அவன் அடிக்கடி எண்ணுவது உண்டு. அப்படிப் பெயர் கிடைக்காது இருப்பதும் அவனுக்கு ஒரு வகையில் வசதியாகிற்று. பலருக்கும் தெரிந்த மனிதனாய் இருப்பதில் நிறையச் சங்கடம் உண்டு. அப்படிப் பிரபலமாய் இருந்தால் ஒவ்வொரு அசைவையும் கண்காணிக்க ஆயிரம் கண்கள் அகிலம் எங்கும் முளைத்துவிடும். அந்த ஆயிரம் கண்கள் இல்லாத சுதந்திரம் அலாதியானது. கையோடு கைகோர்த்து அவளோடு வலம் வந்தாலும் அவனை யார் என்று யாருக்கும் தெரியாது.

கவிதைக்கண்ணன் அவளை விசித்திரமாகப் பார்த்தான். நான் உனக்குத் துணையென்றால் அவள் எனக்கு என்னவாகும் என்று கேட்டான். அவள் பதில் சொல்லாது சிரித்தாள். கவிதைக்கண்ணன் அமைதியாக உன்னுடைய மகள் எனக்கும் மகள்தான். அவள் என்னை அப்பா என்றே கூப்பிடலாம் என்றான். தான் ஒரு வளர்ப்புத் தகப்பனாய் அவளது மகளுக்கு இருப்பது பற்றி அவன் மகிழ்வுற்றான். அவளும் தனக்கு ஒரு வாரிசென எண்ணினான்.

தனக்குச் சுமதா மனைவி ஆகவேண்டும் என்று எண்ணித்தான் அவளுக்கு அவன் தாலி கட்டினான். தாலி அடிமைச்சின்னமா புனிதச்சின்னமா என்கின்ற விவாதம் அவனிடம் இருக்கவில்லை. தங்களுக்கு இடையேயான அன்புச்சின்னமாய் அதை நினைத்தான். உறவு என்பதைச் சமுதாயத்தின் கண்முன் அது முறையாக்கும் என்று அவன் எண்ணினான். தனியே வாழ்ந்தாலும் ஒழுக்கத்தைத் தக்கவைக்கத் தாலியும், குங்குமமும் உதவுமென நினைத்தான். தாலிகட்டியதால் அவள் தனக்கு மனைவி என்றால் அவள் மகள் தனக்கும் மகள்தான் என்பதில் அவனுக்குத் தடுமாற்றம் இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் பேருந்தால் இறங்கி அவளின் வீட்டிற்குப் போகும் போது காலை எட்டுமணியாகிவிட்டது. அவள் மகள் பாடசாலைச் சென்றுவிட்டாள்.

கவிதைக்கண்ணனுக்கு உயிரே சுமதா என்பதான பிரமை. கூச்சம் அவளைவிட மற்றவர்களை இன்னும் அவனருகில் அண்டவிடாது துரத்தியது. மாமியோடு என்ன கதைப்பது? பாடசாலையால் வந்த பிறகு மகளோடு என்ன கதைப்பது? என்பது அவனுக்குப் புரியவில்லை.

அவளது தாயுடன் அவன் அதிகம் கதைத்ததில்லை. அதை அவளும் ஊக்குவித்தது கிடையாது. கவிதைக்கண்ணனால் அவள் போலப் பொய் சொல்ல முடியாது. அவன் திருவாய் திறந்தால் பொய்கள் அம்பலமாகிவிடும். அந்தப் பயத்தில் அவள் தன்னை அவளது உறவினர்களோடு கதைக்க விடுவதில்லையெனக் கவிதைக்கண்ணன் நினைத்தான். இப்படி எத்தனை நாளைக்குப் பொய் உரைத்து வாழ்வது என்பது அவனுக்குச் சலிப்பை உண்டு பண்ணியது. விரைவில் உண்மை உரைத்து, அதன் பின்பு வருவதை ஏற்றுக்கொண்டு, அவளோடு பயம் இன்றி, கூச்சமின்றி, வாழவேண்டும் என்பது அவனது தணியாத தாகமாகிற்று.

பயணம் செய்த களைப்பைப் போக்க குளித்துவிட்டு இருவரும் படுத்தார்கள். மாமி சமையலைக் கவனித்தார். மாமிக்குச் சுகம் இல்லை என்று சொல்லிப் புரியவேண்டியது இல்லை. அந்த நிலையிலும் சில வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வதைப் பார்க்கும் போது கவிதைக்கண்ணனுக்குப் பரிதாபம் உண்டாகும். தனது அம்மா இப்படிக் கஸ்ரப்பட்டால் என்கின்ற நினைவு வரும். தான் தற்போது வந்தது தவறோ என்கின்ற குற்ற உணர்வு எட்டிப் பார்க்கும். அவளும் தாய் அப்படி வேலை செய்வதை விரும்பவில்லை. அதுவும் புகைக்குள் நின்று வேலை செய்வதை வெறுத்தாள். இயலாது என்று படுத்தால் தான்தான் ஆஸ்பத்திரிக்கு அலைய வேண்டும் என்று புகைந்தாள். சுவாசப்பை வருத்தமும் புகையும் பாம்பும் கீரியும் என்கின்ற அனுபவம் அவளுக்கு.

மாலை மகள் பாடசாலையால் வந்தாள். அவள் முதல் முறை பார்த்ததைவிட இப்பொழுது அதிகம் உடல் பெருத்திருப்பதாகக் கவிதைக்கண்ணனுக்குத் தோன்றியது. அது அவளுக்கு ஒரு பெரும் பிரச்சனையாக வரும் என்கின்ற கவலை அவனை வாட்டியது. கறுப்பு ஆரம் கட்டியதாக அவள் கழுத்து. திருநீலகண்டனின் கழுத்தை மிஞ்சியதான தோற்றம் அது. யார் செய்த பாவத்தை அவள் விழுங்கினாள்? சிரசு தொடக்கம் பாதம்வரை தொங்கும் அபரிமிதமான தசைகள். நடையிலும் கதையிலும் மழலையின் கொஞ்சல். தனித்த பிள்ளைக்கான செல்லத்தில் விளைந்த திமிர். வயதுக்கு மீறிய அவளின் தோற்றம். அழுக்கான வெள்ளைச் சீருடை. கட்டையாக வெட்டப்பட்ட தலைமுடி. கண்களில் தெறித்த கேள்வியும் வெட்கமும். ஏதோ ஒரு நோய் உள்ளிருந்து மேய்வதைத் தடுக்கமுடியாத அவலம்.

இந்த வருத்தம் மாறுவதற்காக ஏதோ குளிசை கொடுப்பதாகவும், அது சிலவேளை பருவம் எய்த மாறிவிடும் என்று மருத்துவர்கள் கூறுவதாயும், அவள் கவிதைக்கண்ணனிடம் கூறினாள். கவிதைக்கண்ணனுக்கு அவளின் நிலையை பார்க்கக் கவலையாகிற்று. சமுதாயம் இப்பொழுது ஒவ்வொருவரிடமும் இருந்து நிறையவே எதிர்பார்க்கிறது. சாதாரணமாக இருக்கும் மனிதர்களாலேயே சமுதாயத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாது திணறவேண்டி உள்ளது. இந்தச் சமுதாயத்தில் எடை கூடிய மனிதர்களாய் இருந்துவிட்டால் அதற்கான தண்டனையே வேறு விதமாகிறது. அதுவும் பெண்ணாக இருந்தால் அந்தப் புறக்கணிப்பின் பாதிப்பு பலமடங்காகிறது. அந்தப் பெண்ணே யாழ்ப்பாணத் தமிழாய் இருந்தால்...? அந்த நிலையில் அவள் இருப்பது கவிதைக்கண்ணனுக்கு மிண்டும் வலியைத் தந்தது.

இந்தக் குறையை நிவர்த்தி செய்யலாம். கவிதைக்கண்ணனைப் பொறுத்தவரை காரணம் இல்லாது காரியம் நடவாது. வினையிருந்தால்தான் எதிர்வினை தோன்றும் என்பது அவன் எண்ணம். மகளது எடைக்கும் உணவுப் பழக்க வழக்கத்திற்கும் தொடர்பு உண்டு என்றே அவன் நம்பினான். அதை தன்னால் எவ்வளவிற்கு மாற்ற முடியும்? தனக்கு இந்தக் குடும்பத்தில் தற்போது எவ்வளவு அதிகாரம் இருக்கிறது? தான் அதிகாரம் பண்ணினால் அவர்கள் அதை எப்படி எடுத்துக் கொள்வார்கள்? எடுத்த எடுப்பிலேயே மாற்ற முயற்சித்தால் அதன் விளைவு என்ன ஆகும்? என்கின்ற பல எண்ண ஓட்டங்கள் அவன் மனதை அலைக்கழித்தன.

மகளிடம் கையில் பணம் புழங்கியது. அவள் அடிக்கடி கடைக்குச் சென்று வீட்டில் தட்டுப்படும் பொருட்கள் வாங்கி வருகிறாள். அப்போது தனக்கு விரும்பியதை வாங்கிச் சாப்பிடும் சுதந்திரம் அவளுக்கு உண்டு. வெளிநாட்டுப் பணத்தில் வாழும் சுகம். கணக்குப் பார்க்கும் யாழ்ப்பாணக் கலாச்சாரம் தொலைந்து போயிற்று. பசிக்கிறது என்றதும் தனது முடிச்சை அவிழ்ப்பதற்கு எப்போதும் சலிக்காது காத்திருக்கும் பாட்டி. கண்டும் காணாமலும் கண்ணை மூடிக்கொள்ளும் கண்டிப்பற்ற அம்மா. தனக்குப் பிடித்த சாப்பாடு கிடைக்கும் போது சாப்பாட்டின் அளவு பற்றிக் கவலைப்படாது சாப்பிடவிடும் சுதந்திரம். சாப்பாடு என்பது அளவுடன் சாப்பிடும் பொழுதுதான் அது உடலுக்கு ஆரோக்கியம் தருகிறது. அதுவே அளவுக்கு மிஞ்சிவிட்டால் ஆபத்தாகிறது. ஆபத்து என்பது புரிந்தும் நிறுத்தாத பாசத்தின் குருட்டுப் பார்வை.

இங்கும் சாப்பாடே ஆபத்தாகிறது என்பது கவிதைக்கண்ணனின் எண்ணம். அதை தன்னால் மாற்ற முடியுமா என்பது அவனுக்குப் புரியவில்லை. சுமதாவிடம் ஒரு மாற்ற முடியாத பழக்கம் இருக்கிறது. தனக்குப் பிடிக்கவில்லை என்றால் செய்கிறேன் செய்கிறேன் என்று சொல்வாளே தவிர அதைச்

செய்யமாட்டாள் என்பது கவிதைக்கண்ணனுக்கு நன்கு தெரியும். இந்தப் பிள்ளையின் விடயத்திலும் அவள் சாப்பாட்டைவிட, வாழ்முறையைவிட, இது ஒரு வருத்தம் என்பதில் உறுதியாக இருந்தாள். கவிதைக்கண்ணனுக்கும் அதில் உடன்பாடு சாதுவாக இருந்தாலும் சாப்பாட்டின் அளவிலும், வகையிலும், வாழ்முறையிலும் இதை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரலாம் என்கின்ற நம்பிக்கை இருந்தது. அதை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது பற்றி முயற்சித்துப் பார்க்க வேண்டும் என்று எண்ணினான்.

மகள் பாடசாலையால் வந்து சாப்பிடத்தொடங்கும் போது கவிதைக்கண்ணன் சாப்பாட்டு மேசையில் இருந்தான். மீனோடு குளம்பும் சேர்த்துச் சோறு பிசையப்பட்டது. அதையே அவள் வேண்டா வெறுப்பாகச் சாப்பிட உட்கார்ந்தாள். கவிதைக்கண்ணன் அதைப் பார்த்துவிட்டு மரக்கறியும் போட்டுக் கொடுப்பதில்லையா என்று கேட்டான். கவிதைக்கண்ணன் சொல்கிறானே என்றுவிட்டுச் சுமதா மரக்கறியும் சேர்த்துப் பிசைந்தாள். அத்தால் பிரச்சனை பூதாகரமாகியது. மகள் தனக்குச் சாப்பாடு வேண்டாம் என்று கூறிக்கொண்டு மேசையால் எழும்பிவிட்டாள். 'சாப்பிடாட்டி தோலுரியும் இப்ப.' என்று தாய் பேசியதைத் தொடர்ந்து கண்ணீரும் கம்பலையுமாக சாப்பாட்டை விழுங்கினாள். கவிதைக்கண்ணனுக்குத் தான் அளவுக்கு அதிகமாகத் தலையை நீட்டுகிறேனோ என்கின்ற குற்ற உணர்வு தோன்றியது.

அவள் சாப்பிட்டு முடிந்ததும் கவிதைக்கண்ணன் தான் வரும்போது கொண்டு வந்த சுவிங்கத்தில் ஒன்றை அவளுக்குக் கொடுத்தான். அவளது கோபம் தணிந்து போயிற்று.

★

அடுத்த நாள் கவிதைக்கண்ணனுக்கு ஏகப்பட்ட வேலை இருந்தது. இணையத்தொடர்பு இல்லாது இருப்பது வேற்றுக்கிரகத்தில் இருப்பதான உணர்வை அவனுக்கு உண்டுபண்ணியது. அவள் கடனாக வாங்கி வைத்திருந்த 'Dongle' ஒழுங்காக வேலை செய்யவில்லை. நாளை 'S.L.T'க்குச் சென்று இணைய இணைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்பது அவன் எண்ணமாகிற்று. அது இருந்தால் நோர்வேக்கு சென்ற பின்பும் பணத்தைப் பற்றிக் கவலை இல்லாது 'Skype'இல் கதைக்கலாம் என்பது அவன் திட்டம். அதற்காக அவன் எவ்வளவு செலவு செய்தாலும் தகும் என்று நினைத்தான்.

கவிதைக்கண்ணன் ஒரு விஷயத்தைக் கவனித்துக்கொண்டு வந்தான். அவள் அவனோடு தொலைக்காட்சி பார்க்கும் போது திடீரென எழும்பிச் சமையல் அறைப் பக்கம் ஓடுவாள். முதலில் அது ஏன் என்பது அவனுக்குப் புரியவில்லை. பின்புதான் அவள் அங்கு அலைபேசியை வைத்திருப்பதைக் கண்டான். அதன் சூட்சுமம் பற்றிய தெளிவு அவனுக்கு முதலில் வரவில்லை. அடிக்கடி அவள் எழும்பி ஓடுவது தொடர்ந்து நடந்தது. அவன் அவளுக்கு வாங்கிக்கொடுத்த அலைபேசி வில்லனாகியதான ஒரு அந்தரம் தொடர்ந்தது.

16

விடிந்து வெயில் உச்சிக்கு ஏறியும் எழுந்து கொள்ள மனமில்லாது படுக்கையில் அசையாது கிடந்தான் கவிதைக்கண்ணன். என்ன செய்வது என்பது தெரியாது ஏன் எழவேண்டும் என்கின்ற அசண்டையீனம் அவனிடம். ஈற்றில் சூரியனையும், குடையும் வயிற்றையும் சபித்த வண்ணம் சலிப்போடு எழுந்து இருந்தான். அவனது நாறும் வாயைத் திறந்து கொட்டாவியோடு கெட்ட ஆவிகளை வெளியே விட்டுக் கைகளை உயர்த்தி அலுப்பு முறித்தான். பின்பு அசதியோடு கட்டிலைவிட்டு எழுந்து காலைக்கடனை முடித்துவிட்டு வயிற்றின் கொதி நிலையைக் குறைக்கச் சென்றான். பச்சைநாடு விடுதியில் இருக்கும் சாப்பாட்டுக்கடையில் பால் கோப்பி குடிப்பதை அவன் நிறுத்தவில்லை. சூடான சாப்பாட்டில் கிருமிகள் இருக்காது என்பதால் அதை அருந்துவது பற்றி அவனுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. பால் கோப்பிக்குச் சொல்லிவிட்டு அவன் காத்திருக்கும் பொழுது ஒரு சிங்களச் சோடி சாப்பிடுவதற்காய் அங்கு வந்தார்கள். கைக்குள் கை கோர்த்த வண்ணம் காற்று புகாத நெருக்கம் அவர்களிடம். அவர்கள் இப்பொழுதுதான் காதலிக்கத் தொடங்கி இருக்க வேண்டும் என்று கவிதைக்கண்ணன் எண்ணினான். அவர்கள் ஒரு மேசையில் எதிர் எதிராக இருந்து அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்பதைத் தொடர்ந்தார்கள். அதைப்பார்த்த கவிதைக்கண்ணனின் நினைவுகள் பின்னோக்கி நகரத்தொடங்கின.

'தெய்வத்தின் மேல் உள்ள பக்தி என்பது தப்புக்களைத் தடுக்கும் ஒரு வேலியா அல்லது தப்புகளில் இருந்து தப்பித்துக்கொள்ளப் பயன்படுத்தும் வேஷமா? சிலர் செய்கின்ற பாவத்திற்குத் தண்டனை கிடைக்காமல் தடுக்கும் வேலி பக்தி என்று எண்ணுகிறார்களா? அல்லது எல்லாப்பாவத்தையும் கூச்சம் இன்றிச் செய்துவிட்டு இறைவனிடம் இறைஞ்சினால் தப்பிக்கலாம் என்று எண்ணுகிறார்களா? அதற்காகக் காணிக்கை என்று கடவுளுக்கும் கையூட்டுக் கொடுக்கிறார்களா? கடவுள் எதை விரும்புகிறார்? மனுநீதி கண்ட சோழனின் நீதியையா? அல்லது உண்டியலில் விழும் பாவப்பட்ட கையூட்டையா? கடவுளை மனிதன் படைத்திருந்தால் அவர் கையூட்டுப் பெற்றுத்தான் ஆகவேண்டும். மனிதனைக் கடவுள் படைத்திருந்தால் அந்தப் பாவப்பட்ட கையூட்டு அவருக்குத் தேவைப்பட்டிருக்காது.' இப்படியான ஆத்ம விசாரணையில் கவிதைக்கண்ணன் இடைக்கிடையே ஈடுபடுவது உண்டு.

★

அவள் அதீத தெய்வ பக்தி நிறைந்தவள். இல்லை நிறைந்தவள் போலக் காட்டிக்கொண்டாள் என்பது அப்போது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை. அப்படிக் கடவுள்மேல் நம்பிக்கை உள்ளவர்களால் எப்படித் தப்பு செய்ய முடியும்? பொய் பேசமுடியும்? நம்பிக்கைத் துரோகம் செய்ய முடியும்? அதை மூடிமறைக்க முடியும்? அவள் பொய் பேசுகிறாளா இல்லையா என்பதை அவனால் இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் அதற்கே பக்தியையும் பாவித்தாள். பொய் பேசுகிறாளோ என்கின்ற ஐயம் அவன் மனதில் முளைக்க வைத்த தானியமாக. அந்த ஐயத்தைச் சமாதானம் செய்து கொள்வதற்காக அவள் ஏதோ சில விடயங்களைத் தன்னிடம் இருந்து மறைப்பதாகத் தன்மனதிற்கு ஆறுதல் சொல்லிக்கொள்வான். காதல் போதை அவள் குறைகளைப் பார்க்காதே என்றது. அவன் ஆறாவது அறிவைத் தின்றது.

அன்று நல்லூர் முருகனிடம் போகவேண்டும் என்று அவளது தாய் வற்புறுத்தினார். மருமகனாக வீட்டிற்கு வந்து நிற்கும் போது அது கடவுளின் சம்மதத்தோடு நடக்க வேண்டும் என்பதாக அவர் அவிப்பிராயப்பட்டார். நல்ல காரியம் செய்ய முதல் கோயிலுக்குப் போய்வாருங்கள் என்று அவதிப்படுத்தினார். கவிதைக்கண்ணனுக்கு அந்த அவதி புரிந்தது. அவன் கடவுள் கருணை பற்றிய அவரின் கரிசனையை ஏற்றான்.

இருவருமாகப் புறப்பட்டு ஓட்டோவில் நல்லூருக்குச் சென்றார்கள். கவிதைக்கண்ணன் இது நல்லூருக்கு அடிக்கடி வந்து போவதற்கான தொடக்கம் என்று எண்ணிப் பூரித்தான். நல்லூர் முருகன் வேறு முடிவு எடுப்பானா?

தடுப்புகளைத்தாண்டி நல்லூர் வீதியில் கால்வைக்கும் போது கனத்த மனது பஞ்சாகிய சுகம். ஆண்டவனா? அகத்தின் நினைவா? கவிதைக்கண்ணன் அதைச் சுகித்தான். சில விடயங்கள் நம்புவதல்ல உணர்தல் வேண்டும் என்று அவன் எண்ணினான். தங்கக் கோயிலாக மின்னும் கந்தன் ஆலயத்தினுள் இருவரும் புகுந்தார்கள்.

உள்ளே அர்ச்சனைக்கு பற்றுச் சீட்டு வாங்கினார்கள். மாற்றங்கள் என்னைமட்டும் மாற்ற முடியாது என்றது ஒரு ரூபாய்ப் பற்றுச் சீட்டு. நல்லூர் கோயிலுக்கு இருந்த தொன்மையை, வரலாற்றை, மகிமையை அந்நியர் அழித்ததாக நினைத்தனர். அது யாழ் சைவர்களின் மனதில் கல்வெட்டாகியதை அவர்கள் அழிக்க முடியாது போய்விட்டது. கட்டிடங்கள் அழிந்தாலும் கந்தன் யாழில் தொடர்ந்து வாழ்கிறான். அது கல்லாகவா அல்லது கடவுளாகவா என்பது பற்றி அவன் அப்போது சிந்திக்கவில்லை.

பூசை தொடங்கியது. கவிதைக்கண்ணன் அவளோடு கோயிலைச் சுற்றி வந்தான். எப்போதும் அவளோடு உன்னைச் சுற்ற வேண்டுமெனக் கந்தனை வேண்டினான். காணிக்கை (கையூட்டு) வழங்கினான். காதலோடு முருகனை உருகி உருகி வணங்கினான். நாங்கள் காலம் பூராகவும் சேர்ந்திருக்க அருள்புரி ஐயா என்று மருகினான். கந்தன் கடவுளாகினார். கவிதைக்கண்ணன் பெண் சிலந்தியிடம் அகப்பட்ட அப்பாவியென்று முருகனுக்குப் புரிந்தது. காலம் வரும் போது உன்னை ஆட்கொள்வேன் என்று கருணை பூண்டான். கவிதைக்கண்ணன் முருகன் சித்தம் அறியாது அவளோடு அவனைச் சுற்றினான்.

கோயிலை விட்டு வெளியே வரும் போது கவிதைக்கண்ணனுக்கு மனது முழுவதும் நிறைந்திருந்தது. இந்த நல்லூர்க் கந்தன் படையெடுப்புகளால் அழியாது இந்துக்களின் மனதில் நிலைத்தது போலத் தங்கள் காதல் வாழ்வும் என்றும் அழியாது நிலைக்கும் என்கின்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அதற்காக அவன் அகத்தில் ஆயிரம் முறை முருகனுக்கு நன்றி சொன்னான். சில வேளை மனிதனின் விதியைக் கடவுள்கூட மாற்ற முடியாது என்பது அப்போது அவனுக்குப் புரியவில்லை.

★

பிள்ளை ஒன்றுடன் சுமதா தனித்து வசித்து வந்ததால் அக்கம் பக்கத்தில் அப்பா வெளிநாட்டில் இருக்கிறார் என்று பொய் சொல்லி வைத்திருந்தாள். அப்படிப் பொய் சொன்னால்தான் தங்களுக்கு ஆக்கினை இல்லாமல் இருக்கும் என்று கவிதைக்கண்ணனிடம் காரணம் கூறினாள். கவிதைக்கண்ணனுக்கும் அது நியாயமான காரணமாகவே பட்டது. ஆண் துணையின்றி வாழ்கிறாள் என்று அறிந்தால் சில நாள் துணையாக்க பல ஆண்கள் அலையலாம். அப்படியான அவஸ்தையை அவள் சாதுரியமாகத் தவிர்த்துக் கொண்டாள் எனக் கவிதைக்கண்ணன் எண்ணினான்.

கவிதைக்கண்ணன் மகளோடு கடைக்கு அல்லது வேறு இடங்களுக்குச் சென்றால் 'நீங்கள்தானே இவளின் அப்பா? ' என்று பலரும் கேட்டார்கள். ஐந்து சந்தியில் இருந்த பலசரக்குக் கடைக்காரர் கவிதைக்கண்ணனின் ஊர்க்காரர். இருந்தும் அவருக்கு அவனைத் தெரியாது. தெரிவதற்கு அது சிறிய ஊரும் இல்லை. அவரும் அது பற்றி அக்கறையாக விசாரித்தார். அவரிடம் கவிதைக்கண்ணன் தான் எந்த ஊர் என்று மட்டும் சொல்வதே இல்லை. சொல்லி இருந்தால் கவிதைக்கண்ணன் ஐந்து சந்தியில் உலாவுவது ஊருக்குச் செய்தியாகப் போயிருக்கும். அவர்களுக்கு கவிதைக்கண்ணன் அப்பா என்பது மாத்திரமே தெரியும். அத்தால் அது அவளுக்கும் மகளுக்கும் பாதுகாப்பாய் அமைந்தது. கவிதைக்கண்ணன் அதில் மகிழ்வுற்றான். பொய்யோடு வாழ்வது புரியாது களிப்புற்றான்.

★

அன்று காலை பத்துமணி போல யாழ்ப்பாணத்தில் உள்ள 'S.L.T'இல் இணைய இணைப்பிற்கான விண்ணப்பம் கொடுப்பதற்குச் சென்றார்கள். அரச நிறுவனம் என்றாலும் தொலைத் தொடர்பு வியாபாரம் செய்தால் பணக்கார நிறுவனமாய்த்தான் இருக்கும் என்பதைக் கவிதைக்கண்ணன் உள்ளே சென்ற போது கண்டுகொண்டான். பெண்களும் ஆண்களும் சந்தோஷமாகச் சம்பாசித்தனர். கவிதைக்கண்ணனும் அவளும் சென்று ஒரு பெண் பணியாளருக்கு முன்பு போடப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார்கள். அவள் சந்தோஷமாகப் பதிந்து விட்டு சில நாட்களில் தாங்கள் ஒழுங்கு செய்வதாகக் கூறினாள். வீட்டில் தொலைப்பேசி இணைப்பு இல்லாததால் அதற்காக 'Wire' இழுக்க வேண்டி வரும் என்று செலவையும் பெருப்பித்தாள். அது 'ADSL' வகையைச் சார்ந்த இணைய இணைப்பு என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரிந்தது. அவள் அதற்கான மூடத்தையும், ஒரு தொலைப்பேசியையும் கொடுத்தாள். பின்பு மொத்தமாக எவ்வளவு பணம் வரும் என்றும் அதைக் கட்டிவிடும்படியும் கேட்டாள். கவிதைக்கண்ணன் பணத்தை கட்டினான். இணைய இணைப்பை விரைவாகத் தருமாறு கேட்டுக்கொண்டு விடைபெற்றான்.

★

கவிதைக்கண்ணனைக் கண்டு மகள் முதல் நாள் வெட்கப்பட்டாள். வளையமுடியாத உடம்பை வளைத்து அச்சத்தையும், மடத்தையும், நாணத்தையும் யாழ்மண்வாசனை என்பதாக நிலை நாட்டினாள். அதன்

தொடராகச் சமையல் அறைக்கு முன்பு போடப்பட்ட கட்டிலில் அமர்ந்து கோலில் இருந்த கவிதைக்கண்ணனை எட்டி எட்டிப் பார்த்தாள். பெற்ற அப்பாவிடம் வாங்கிக்கட்டிய முன்னைய ஞாபகங்களின் அழியாச் சுவடே அவளின் இந்த பின்வாங்கல் என்பது அவனுக்குப் புரிந்தது. அந்தப் புரிதல் சில நாளில் தலை கீழானது. பழகப்பழக கவிதைக்கண்ணனோடு அவள் நன்கு கதைத்தாள். மழலை மாறாத அந்தப் பேச்சு அவனுக்குப் பிடித்திருந்தது. அதுவே சிலநாட்களில் கவிதைக்கண்ணன் ஏதாவது சாட்டுச் சொல்லித் தப்பித்துக்கொள்ள வேண்டிய சம்பாசனையாகி விட்டது. 'நீ பிஸ்னஸ்சுக்கு ஏற்ற ஆள்.' என்று கவிதைக்கண்ணன் அவளைக் கிண்டல் செய்தான். அவள் அம்மாவிடம் போய் அதை முறைப்பாடாக்கினாள். அம்மா அதைக் கேட்காது அசண்டை செய்தால் சுமதா என்கின்ற அவள் பெயரை சொறிநாய் என்றாள்.

நாட்கள் நீரில் நழுவிய மீனாக நகர்ந்தன. அது நகரமுடியாது உறைந்திருந்தாற் கவிதைக்கண்ணன் மகிழ்ந்திருப்பான். வளவு துப்பரவாக்கும் வேலையைச் செய்விக்கும் போது வீட்டில் ஆண்கள் நின்றால்தான் வேலைக்காரர்கள் ஒழுங்காக வேலை செய்வார்கள் என்று மாமி அவதிப்பட்டார். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் நுட்பம் அதில். கவிதைக்கண்ணன் நிற்கும்போது வளவிற்குள் நிற்கும் வாழைகளை வெட்டி ஐது பண்ணுவதோடு, கல்லைக் கிளறும் வேலையைச் செய்வதற்கு ஒரு வேலைக்காரனைப் பிடித்து வந்திருந்தார். கவிதைக்கண்ணன் அந்த வேலைக்காரனோடு சேர்ந்து வேலை செய்தான். தனித்து வாழும் பெண்களுக்குத் தானும் உதவி செய்யாவிட்டால் யார் செய்வதென அவன் நினைத்தான். அதைத் தனது கடமையாக ஏற்றான்.

அன்று வேலைக்கு ஆட்கள் வரவில்லை. அவளை அழைத்துக் கொண்டு கவிதைக்கண்ணன் பின் வளவிற்குச் சென்றான். பக்கத்து வீட்டில் தச்சுவேலை செய்பவர்கள் குடியிருந்தனர். அவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண்பிள்ளையும் உண்டு. ஆண்பிள்ளைதான் கடைசிப் பிள்ளை. என்றாலும் அவன் ஒரு நளப் பெண்ணைக் காதலித்து மற்றவர்களுக்கு முதல் கலியாணம் செய்திருந்தான். தங்களைவிடக் குறைந்த சாதிப்பெண் மருமகளான கதை. எதிரி வீட்டில் குடியிருக்கும் அவஸ்தை அந்த மருமகள் பெண்ணிற்கு. அந்தப் பெண் தான் மிகவும் செல்லமாக வளர்ந்ததாகவும், இவர்கள் தன்னைக் கொடுமை படுத்துவதாகவும் நித்தமும் கத்திச் சண்டை பிடிப்பாள். ஆரோகணத்தில் அவர்கள் சண்டை ஊருக்கே ஒலிபரப்பாகும். இவற்றை கவிதைக்கண்ணன் வீட்டிற்குள் இருந்தே கேட்கக்கூடியதாக இருக்கும். பின் வளவிற்குப் போனாலும் மெதுவாகத்தான் கதைக்க வேண்டும். இரண்டு வீடும் ஒட்டிய வீடுகள். இங்கே கதைப்பது அங்கே கேட்கும். அங்கே கதைப்பது இங்கே கேட்கும்.

சிறிது நேரம் பின் வளவில் நின்று இருவரும் கதைத்தார்கள். அது சங்குப் பத்திரிகையில் வேலை செய்பவர்களைப் பற்றியதாக இருந்தது. விவாகரத்து பெற்ற பின்பு வீட்டில் வேலையில்லாது அலுவலகத்தில் பழியாய்க் கிடக்கும் ஒரு பெண்ணைப் பற்றி அவள் அவனிடம் விவரித்தாள். பின்பு சிறிது மௌனமாக எதையோ யோசித்தாள். ஒரு முடிவுக்கு வந்தவளாக மீண்டும் கதைக்கத் தொடங்கினாள்.

அவள் கவிதைக்கண்ணனிடம் அவனது முதல் மனைவி தன்னை அலைபேசி மூலம் சில தடவைகள் தொடர்பு கொண்டதாகவும், அப்பொழுது தன்னை மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பாவித்துப் பேசியதாகவும் கூறினாள். கவிதைக்கண்ணன் அதை நம்பினான். அவனது முதல் மனைவி அப்படிச் செய்வாள் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இல்லை. அவள் உரிமைக்காக உயிரைக் கொடுக்கும் ரகம் என்பது அவனுக்குத் தெரியும். கவிதைக்கண்ணன் கோபத்தோடு தூரே வெறித்தான். தான் நோர்வேக்குச்

சென்றதும் அவளை அதைப்பற்றிக் கேட்பதாகக் கூறினான். அதற்கு அவள் அதைப் பற்றி முதல் மனைவியோடு கதைக்க வேண்டாம் என்றும், அதை அத்தோடு மறந்துவிடும்படியும் கூறினாள்.

கவிதைக்கண்ணனுக்கு எப்படியும் அதைப் பற்றி ஒருமுறை கேட்க வேண்டும் என்கின்ற வெறி. அதை அவன் மனதில் பூட்டி வைத்தான். அவளுக்காக ஒப்பிற்குச் சரி என்றுவிட்டு அவளின் கையைப் பிடித்துக்கொண்டு 'நீ யார் என்ன சொன்னாலும் கவலைப்படாத. உனக்காக நான் என் உயிர் உள்ளவரையும் எதுவும் செய்வன். என்றைக்கும் உனக்குப் பக்கபலமா இருப்பன்.' என்று தனது உள்ளக்கிடக்கையை வெளியிட்டான். அவளும் அவனது கையை அழுத்திப் பிடித்தாள். முத்தம் கொடுக்க குனிந்த கவிதைக்கண்ணனைப் பார்த்து 'பக்கத்திவீடு' எனக் கண்ணைக் காட்டினாள்.

★

அன்று பின்னேரம் மகளைப் படிப்பிற்கும் வகுப்பு ஆசிரியர் வீட்டிற்கு வந்திருந்தார். கவிதைக்கண்ணன் வந்திருக்கிறான் என்கின்ற தகவலை வியாபாரியான மகள் ஊரில் நிறையவே விற்றுவிட்டாள். அத்தால் ஆசிரியர் ஒன்றைச் சாட்டி இன்னொன்றிற்கு வந்தார். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் நோக்கம். அப்பா என்று அவள் மனதில் பதிந்த பழைய உருவம் ஒரு இராட்சதனைப் போன்றதாகக் கவிதைக்கண்ணனுக்குக் கூறப்பட்டிருந்தது. அதைச் சம்காரம் செய்ய வேண்டும் என்கின்ற வெறி அவளுக்கு. அதைத் தலைகீழாக்கிக் கவிதைக்கண்ணன் அவளோடு புதிய பந்தம் ஏற்படுத்தினான். அவள் அந்தப் புதிய உறவில் மகிழ்ந்தாள். அது நிரந்தரம் என்று நம்பினாள். தந்தையின் அன்பு என்பதைச் சுவைக்காது ஏக்கத்தோடு இருந்தவளுக்கு, அது கிடைத்த புழுகில் எல்லோரிடமும் விற்றுத் திரிகிறாள் என்பதைக் கவிதைக்கண்ணன் புரிந்து கொண்டான்.

அவளது மாஜிக்கணவனின் இம்சையில் இருந்து விடுபட அவனைவிட்டு வவுனியாவுக்கு ஓடிவந்தார்களாம். அதன் பின்பு அப்பா இல்லை என்கின்ற மனவோட்டத்தில் வாழ்ந்து வந்திருக்கிறாள். காலப்போக்கில் நோர்வேயில் இருந்து அப்பா வருவார் என்கின்ற எதிர்பார்ப்பை அவளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவளும் அதை ஏற்றுக் கவிதைக்கண்ணனை அப்பாவாக வரித்தாள். அதை காண்பவர்களிடம் சொல்லித் திரிவதில் படு குசியானாள். கவிதைக்கண்ணனோடு சைக்கிளில் சவாரி போவதில் ஏகப்பட்ட புழுகம் அவளுக்கு.

வகுப்பு ஆசிரியர் இரண்டு நோக்கோடு அவர்களிடம் வந்தார். ஒன்று மகளைத் தலைமை ஆசிரியர் பேசுவது பற்றிய உண்மையை உரைப்பது. இரண்டாவது காசுத் தட்டுப்பாட்டை நீக்கக் கைமாத்தாகப் பணம் கேட்பது. வெளிநாட்டில் இருந்து அப்பா வந்திருந்தால் வீட்டில் நிச்சயமாகப் பணம் புழங்கும் என்கின்ற நம்பிக்கை அவருக்கு.

பணம் கவிதைக்கண்ணனுக்கு ஒருவிடயமாகப் படவில்லை. மகளைத் தலைமையாசிரியர் அவதூறாகப் பேசுகிறார் என்பதை அவனால் நம்பமுடியவில்லை. ஆசிரியர் சிறிது நேரம் இருந்து கதைத்துவிட்டுத் தேநீரும் அருந்திய பின்பு பணமும் பெற்றுக்கொண்டு புறப்பட்டார். அப்படிப் புறப்படும் போது அடுத்த நாள் காலை வந்து தலைமையாசிரியரோடு கதைக்குமாறு கூறிவிட்டுச் சென்றார்.

அடுத்த நாள் கவிதைக்கண்ணனும் அவளும் தலைமை ஆசிரியரை சந்திக்கப் பாடசாலைக்குச் சென்றார்கள். குள்ளமான, கறுப்பான சுறுசுறுப்பான மனிதர் அவர். நெற்றி பூராகவும் திருநீறு அணிந்த பட்டை வெண்மை. வெள்ளை சேட்டும் வேட்டியும் அணிந்திருந்தார். கவிதைக்கண்ணனை எதிர்பார்த்திராத அதிர்ச்சி அவர் கண்களில். மகளுக்கா புது அப்பாவும் பழைய அம்மாவும் கதைக்க வருவார்கள் என்று தலைமையாசிரியர் நினைக்கவில்லைப் போலும். ஆண் துணையோடு வந்ததில் அவருக்கு நடுக்கம் எடுத்த தோரணை. தான் அவளைப் பேசுவதில்லை என்றும், பொதுவாகப் பேசினேன் என்றும் அவசரமாகச் சமாதானம் கூறினார்.

கவிதைக்கண்ணன் அதற்கு 'நீங்கள் பொதுவாகப் பேசினாலும் எல்லாரையும் அது பாதிக்கும் எல்லோ? குற்றம் செய்தவைக்கு மட்டும் அறிவுரை குடுங்க.' என்று கூறினான். அதுவும் சரியே என்ற தலைமையாசிரியர் தான் அப்படிச் செய்வதாக ஒப்புக்கொண்டார். முரண்டு பிடிப்பார் என்று எதிர்பார்த்துச் சென்ற கவிதைக்கண்ணன் எதற்கும் வளைந்து கொடுப்பேன் என்பவரைப் பார்த்துவிட்டு, அதற்குமேல் அவரோடு தர்க்கப்பட விரும்பாதவனாய் வீட்டிற்குத் திரும்பி வந்தான்.

கவிதைக்கண்ணன் வீட்டில் வந்து நிற்பது வவுனியாவில் இருக்கும் மாமாவுக்கு மட்டும் தெரியும் என்று அவள் அவனிடம் கூறியிருந்தாள். பின்பு யாழ்ப்பாணத்தில் இருக்கும் பெரியம்மாவிற்கும் அது தெரிய வந்துவிட்டது. அயலவர்களும் போகும் போதும் வரும்போதும் பார்த்தார்கள். கடைக்காரர்களுக்கும் தெரியும். ஆஸ்தான ஓட்டோச் சாரதிக்கும் அனைத்தும் தெரியும் என்றாலும் அமுசடக்கமாய் அவர்களை ஏற்றி இறக்கும் வேலையை மட்டும் அவன் பார்த்தான். அதைவிட்டால் அந்த விடயம் மற்றவர்கள் அறிந்துவிடாத இராணுவ இரகசியமாகியது. அவள் என்ன மனநிலையில் இருக்கிறாள் என்பது சிலவேளை கவிதைக்கண்ணனுக்குப் பிடிபடுவதில்லை. ஏன் இந்த இரகசியக் காப்பு என்பதை அவன் முழுமையாக அறியவில்லை.

தாலி கட்டிய பின்பும் பரம இரகசியமான உறவு இது. சேர்ந்து குடும்பம் நடத்தும் ஆணை மறைக்க நினைக்கும் மர்மமான நடத்தை அது. அது அவனுக்கு வியப்பையும், அதிர்ச்சியையும் தந்தது. அவர்கள் பயப்படுமளவிற்குக் கவிதைக்கண்ணன் அவளைக் கைவிடப்போவதில்லை. கைவிட்டால் அவன் உயிரே அவனை விட்டுவிடும் என்பது அவளுக்கும், அவனுக்கும் தெரியும். அந்த நினைப்பு வருவதற்கே அவளுக்குச் சந்தர்ப்பம் வாய்த்ததில்லை. அப்படி இருந்தும் அதில் கடைப்பிடித்த மர்மம் அவன் மனதில் இரும்பாய் கனத்தது. பயம் வயிற்றில் புளியைக் கரைத்தது? தீராத அந்த மர்மமும் சாகாது தொடர்ந்தது?

ஆரம்பத்தில் தங்கள் சொந்த ஊருக்குப் போவோம் என்றவள் பின்பு அதில் கரிசனை அற்று இருந்ததைக் கவிதைக்கண்ணன் கவனித்தான். பெண் என்பவள் நிறைய விடயங்களுக்குப் பயப்படத்தான் வேண்டும் என்பதாகக் கவிதைக்கண்ணன் எண்ணினான். அதற்காக உண்மைகளை ஒளித்து வாழவேண்டுமா என்கின்ற குடைச்சல் அவனிடம். இந்த மனவுளைச்சல் கவிதைக்கண்ணனுக்கு மட்டுமே சொந்தமானது.

கவிதைக்கண்ணன் வந்து நிற்பதை அறிந்திருந்த அவளது பெரியம்மா அன்று வீட்டிற்கு வருவதாக இருந்தது. அவர் நிறையக் கதை புடுங்குவார் என்றும், அதிகம் அவரோடு கதைக்க வேண்டாம் என்றும் அவள் கவிதைக்கண்ணனுக்குப் புத்திமதி கூறினாள். தான் அதற்காக அவர் வந்து இருக்கும் பொழுது தொலைக்காட்சியை இயக்கி விடுவதாகவும், அப்படி அதில் பராக்குப் போனால் அவர் அதிகம் கதை புடுங்கமாட்டார் என்றும் அவள் கவிதைக்கண்ணனுக்கு ஓதினாள். பேசாது கொழும்பில் ஒரு வீடு எடுத்து அங்கு நின்றிருக்கலாம் என்று கவிதைக்கண்ணனுக்குத் தோன்றியது. ஒளித்து ஒளித்து என்ன உறவு என்கின்ற சலிப்பு ஏற்பட்டது.

பெரியம்மா வந்தார். மாமி போல ஓமக்குச்சி அல்ல. நல்ல சதைப்பிடிப்பு. வளவளப்பான தேகம். பரந்த வட்டமான முகம். வயதைக்காட்டும் நரைகள் ஊடறுத்த கேசம். மடிப்பு விழுந்த கண்ணிமைகள். ஊதா கரையுடைய பச்சைநிறச் சேலை. அதற்கேற்ப ஊதா நிறத்தில் சட்டை. கழுத்தில் சில வடங்கள். கண்ணில் அதிசயத்தைப் பார்ப்பதான பார்வை. முதுமை அதிகம் பாயாத தோற்றம். முழங்காலில் நோவதாகக் கெந்திய நடை. பண்பான பேச்சு. புதினம் அறியும் அடங்காத ஆவல். கவிதைக்கண்ணனுக்கு மருமகன் என்கின்ற மரியாதை. அவனைக் கண்டதும் மரியாதைக்காக எழுந்ததில் அவனுக்குப் பதட்டம். அவனைப் பார்த்து யாரும் இதுவரை காலமும் எழுந்து மரியாதை செய்தது கிடையாது. இன்று அது அவனுக்கு முதல்முறை. அதுவே அவன் பெரும் சங்கடம்.

கவிதைக்கண்ணன் கோலில் இருந்து அவருடன் கதைத்தான். மகள் வந்து தொலைக்காட்சியை இயக்கிவிட்டு, முன்னுக்கு இருந்து நிகழ்ச்சிகள் பார்க்கத் தொடங்கினாள். அவள் எங்கோ வெளியே செல்வதற்காக வெளிக்கிட்டாள். கவிதைக்கண்ணன் தன்னைப்பற்றிப் பெரியம்மா கேட்டதற்கு உண்மைகளையே சொன்னான். அந்த உண்மைகளை அவர் நம்பவில்லை என்பது அவனுக்குப் புரிந்தது. பொய்களைப் பேசி, பொய்களை கேட்டுக் கேட்டுப் பொய்களையே உண்மை என்று நம்பும் பரிதாபம் அவனுக்கு அருவருப்பை உண்டுபண்ணியது. இந்தப் பெரியம்மாவும் எடுத்ததிற்கு எல்லாம் பொய் சொல்லுவார் என்று அவள் கவிதைக்கண்ணனுக்குக் கூறியிருந்தது அவன் ஞாபகத்தில். பழக்கம் வழக்கமாகி வழக்கம் ஒழுக்கமாகிவிடும் என்பார்கள். பொய்யும் அப்படித்தான். காலப் போக்கில் உண்மை வாயில் வர மறுத்து விடுகிறது. உண்மை சொன்னாலும் நம்ப மறுக்கும் நிலை வருகிறது என்று கவிதைக்கண்ணன் நினைத்தான்.

இடையில் தனது முடியைச் சீர்செய்த வண்ணம் கோலுக்குள் வந்த சுமதா மகள் தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டு இருப்பதைப் பார்த்துவிட்டு, கோபத்தோடு ‘எழும்பிப் போய்ப் படியடி.’ என்று கத்தினாள். அதற்கு அவள் ‘நீங்கள்தானே இப்ப பெரியம்மா பார்க்கட்டும் எண்டு ரீவிய ஓன் பண்ணச் சொன்னனீங்கள்?’ என்று திருப்பிக் கேட்டாள். ‘நான் எங்க சொன்னான்? நீ இதுவும் சொல்லுவாய் இதற்கு மேலையும் சொல்லுவாய்.’ என்று அவள் சடாரெனப் புரட்டிப் போட்டாள். இந்த புரட்டலை மகளோ அல்லது கவிதைக்கண்ணனோ எதிர்பார்க்கவில்லை. இருவரும் வாயடைத்துப் போனார்கள். ‘எழும்பு பாப்பம் முதல்ல.’ என்று மீண்டும் கோபமாகச் சுமதா கத்த மகள் எழுந்து உள்ளே சென்றாள்.

கவிதைக்கண்ணன் பெரியம்மாவின் முகத்தைப் பார்த்தான். பொய்யை மெய்யாகச் சொல்வதில் மிகவும் வீரி என்று கவிதைக்கண்ணனுக்குச் சுமதா அடிக்கடி சொல்லுவாள். அந்த வீரிக்குச் சூரியாக இவள் மாற்றி

மாற்றிக் கதைப்பது கவிதைக்கண்ணனுக்கு வயிற்றில் புளியை மீண்டும் கரைத்தது. அத்தினையும் தங்கள் காதலை வாழவைப்பதற்காக என்பதை வலுவாக நம்பியதால் கவிதைக்கண்ணன் அதைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. விதி தீட்டிய மரத்தில் கூர் பார்க்க வைக்காது என்கின்ற ஒரு மெத்தனம் அவனிடம். பெரியம்மா சிறிது நேரத்தில் தங்கையுடன் கதைப்பதற்கு எழுந்து உள்ளே குசினியைப் பார்க்கச் சென்றார். கவிதைக்கண்ணன் தொலைக்காட்சியைப் பார்த்தான்.

★

சில நாட்களில் சித்திரை வருடப்பிறப்பு வந்தது. அன்று பக்கத்தில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு முதலில் சென்றுவிட்டுப் பின்பு ஊரில் உள்ள பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழாவுக்குச் செல்வதாகச் சுமதா கவிதைக்கண்ணனிடம் கூறினாள். கவிதைக்கண்ணன் அவளின் ஊரைப் பார்க்கவேண்டும் என்கின்ற ஆசையில் காத்திருந்தான். அவன் குளித்து வெளிக்கிட்ட பின்பும் அவள் வெளிக்கிடவில்லை. கவிதைக்கண்ணன் அவசரப்படுத்தச் சலித்த வண்ணம் சென்று குளித்தாள்.

அந்தச் சிறிய பிள்ளையார் கோயில் முடிதிருத்தும் நிலையம் தாண்டி வருகிறது. இந்த முடிதிருத்தும் நிலையத்திற்கு கவிதைக்கண்ணன் சில நாட்களுக்கு முன்பு வந்திருந்தான். கவிதைக்கண்ணன் அப்பா என்பதை மகள் அவருக்கும் பரப்பி விட்டாள். அவர் கதையோடு கதையாக யாழ்ப்பாணத்தில் பெண்கள் தனித்து இப்பொழுது எங்கும் போக முடியாது இருப்பதாகக் கூறினார். தான் மகளைக் கூட்டிக்கொண்டு செல்லவே அசிங்கமாக யாரோ கதைத்தது பற்றிப் பிரஸ்தாபித்தார். எல்லாம் தலை கீழாகப் போய்விட்டதாகவும், ஐந்து சந்தி போதைப் பொருள் மையமாக மாறிவிட்டதாயும் வருந்தினார். புலிகள் இருந்த காலத்தில் இருந்த ஒழுக்கம் இப்போது தொலைந்து விட்டதென அங்கலாயித்தார். அத்தோடு மனைவியையும் பிள்ளையையும் எவ்வளவு சீக்கிரம் நோர்வேக்கு எடுக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் எடுக்கும்படி கவிதைக்கண்ணனுக்கு அறிவுரை கூறினார்.

கவிதைக்கண்ணனும் அதைத்தான் எதிர்பார்த்துக் காத்திருந்தான். எவ்வளவு சீக்கிரம் அவளையும் மகளையும் நோர்வேக்கு எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் எடுக்க வேண்டும் என்று எண்ணினான். தான் அவளை எடுக்க வேண்டும் என்று எண்ணுவது வேறு என்பதும், அந்த முடிதிருத்துபவர் அதையேன் சொன்னார் என்பது வேறு என்பதும் அவனுக்குப் புரிந்தது. அவனுக்குச் முடிதிருத்துபவர் சொன்னதின் அர்த்தம் புரிந்தும் புரியாதது போல ஒரு குழப்பமாகியது. என்ன நடக்கிறது? அவன் தனக்குள் அந்த விசாரணையைப் புதைத்து வைத்திருந்தான்.

இப்போது அந்த முடிதிருத்தும் நிலையம் பூட்டி இருந்தது. வருடத்திற்கு அவருக்கும் விடுமுறை என்பதாகக் கவிதைக்கண்ணன் நினைத்தான். நல்ல ஆட்டிறைச்சியும் சாராயமும் அவரது கொண்டாட்டத்திற்கு இன்று சுதி சேர்க்கும் என்பதாக அவனுக்குத் தோன்றியது.

அந்தக் கோயிலுக்குக் காலையில் கவிதைக்கண்ணனும் மகளும் சென்று மருத்துநீர் வாங்கி வந்திருந்தார்கள். ஊரில் இலவசமாகக் கொடுக்கப்படும் மருத்துநீர் இங்கே பணத்திற்கு விற்கப்படுகிறது.

கவிதைக்கண்ணனுக்கு அது ஒருவித அருவருப்பையே உண்டு பண்ணியது. தமிழ்நாட்டைப் போல் இங்கும் கோயில்கள் வியாபாரமாகிவிடுமோ என்கின்ற அச்சமாகியது. எல்லா மாற்றங்களும் மனமகிழ்ச்சியைத் தந்துவிடுவதில்லை. கோசலத்தையும், கோமயத்தையும் பிள்ளையாரிடம் பணம் கொடுத்து வாங்கிய யதார்த்தம் அவனுக்கு இனிக்கவில்லை.

இவர்கள் சென்ற போது கோயிலில் பூசை நடக்கவில்லை. காலைக் கழுவிய பின்பு மூன்று முறை அதன் சிறிய வீதியைச் சுற்றி வந்தார்கள். திருநீற்றைப் பூசி சந்தனத்தில் பொட்டு வைத்தார்கள். அவரவர் மனதிற்கு விரும்பியதைக் கடவுளிடம் கண்ணை மூடி வேண்டிக் கொண்டார்கள். வழிபாடு முடிந்தது. வந்த வழியே திரும்பினார்கள். ஊரைப் போல மாதப்பிறப்பு என்றால் ஒவ்வொரு கோயிலாக அர்ச்சனை செய்யும் பழக்கம் அவளிடம் இருக்கவில்லை. தமிழ் மாதப்பிறப்பை அவர்கள் பெரிதாகக் கொண்டாடுவதில்லை. முழுசுவளம் பார்ப்பதில்லை. ஊரில் நடக்கும் பழமையான சம்பிரதாயங்கள் இன்னும் அவன் மனதில் பசுமையாக நினைவிருந்தது. கவிதைக்கண்ணனும் அவளோடு அதைப்பற்றிக் கதைக்கவில்லை. இடையில் உருவில்லாத உருவம் ஒன்று புகுந்ததான இடைவெளி அகலித்துச் சென்றது.

கோயிலால் திரும்பி வரும்போது வயிற்றைக் குத்துவதாக அவள் சொல்லிக்கொண்டு வந்தாள். வீட்டிற்குச் சென்ற பின்பு ஊருக்கு போவதாகத் திட்டம். அந்தத் திட்டத்தைத் தீட்டுத் தீண்டியது. கவிதைக்கண்ணனுக்கு மாபெரும் ஏமாற்றம். தனித்து அவளது ஊருக்குச் செல்வது என்பதை நினைக்கவே சங்கடமாகியது. அவள் வருணித்த ஊர் பிள்ளையார் தேர்த் திருவிழா, வெள்ளை கடற்கரை ஆகியன கற்பனையாகவே போயிற்று.

தனக்கு இப்படி ஒருமுறையும் வருவதில்லை, இம்முறை ஏன் இப்படி ஆகிற்று? இது நல்ல சகுனம் இல்லையே என்று சுமதா அவனிடம் அங்கலாயித்தாள். அது அவள் மன அழுக்கால் விளைந்ததோ என்கின்ற சொல்ல முடியாத குற்ற உணர்வு அவளிடம். அவளிடம் இருக்கும் மன அழுக்கைப் பற்றிப் புரியாத கவிதைக்கண்ணன். அவள் சோடி சேர்ந்து போனதில் கண்ணூறு பட்டுவிட்டது என்று ஒரு புறக் காரணத்தைக் கண்டு பிடித்தாள். மாமியும் அதற்கு ஒத்துப் பாடினார். கண்ணூறு கழிக்க தலையைச் சுற்றிய மிளகாயைச் சந்தியில் போட்டு எரிக்க வேண்டும் என்றார்கள். கவிதைக்கண்ணன் அவளைக்கண்ட பின்பு எல்லாவற்றையும் நம்பத் தொடங்கிவிட்டான். அவன் அவர்கள் ஆதங்கம் பற்றி எதுவும் சொல்லவில்லை. அவனுக்குக் காலத்தோடு மன வைராக்கியங்களிலும் மாற்றம் ஏற்படலாகிற்று. நம்பாது விட்டால்கூட மற்றவர்களின் நம்பிக்கைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பது அவன் பண்பாகும். உண்மைக் காரணம் கண்ணூறல்ல அவள் களவு எண்ணம் என்பதை அவன் அறியான்.

ஊருக்கு இன்று இல்லாவிட்டால் என்ன இன்னும் ஒரு நாளைக்குச் செல்லலாம் என்று கவிதைக்கண்ணன் சமாதானமானான். காலதாமதமானாலும் கட்டாயம் செல்ல வேண்டும் என்பது அவன் ஆசையாகிற்று. அது நிராசை ஆகவேண்டியது விதியாகிற்று.

★

அவள் இப்போது நிறையவே மாறிவிட்டாள் என்பதாகக் கவிதைக்கண்ணன் உணர்ந்தான். இணைய இணைப்புக் கிடைத்தவுடன் 'Youtube' தான் பதிந்து வைத்திருந்த தனது கவிதை பற்றிய பேட்டி

நிகழ்வு ஒன்றைக் காட்ட வேண்டும் என்கின்ற ஆசை அவனுக்கு. தனது கவிதைகளைப்பற்றி அவள் நிறைய அக்கறை கொண்டவளாகக் கண்டியில் இருந்து வரும் போது கதைத்தாள். அதே அக்கறை குறைந்திருக்காது என்பது அவன் எதிர்பார்ப்பு. அந்த நிகழ்வு ஒரு மணித்தியால நீளமானது. கவிதைக்கண்ணன் அவளிடம் அந்த நிகழ்வைப் பார்க்கப் போகின்றாயா என்று கேட்டபோதே அவள் ஆர்வம் காட்டியதாக அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. இரவு பார்ப்போம் என்று அவள் நழுவினாள். கவிதைக்கண்ணன் அதைத் தப்பாக நினைக்கவில்லை. அலுவல்கள் காரணம் என்று நினைத்தான். கவிதைக்கண்ணனும் இரவு பார்ப்போம் என்று ஒப்புக்கொண்டான். இரவு வந்தது. அவளாக மீண்டும் அதைப் பற்றிக் கதைக்கவில்லை. படுக்கைக்குப் போக முன்பு கவிதைக்கண்ணன் அந்த நிகழ்வைப் பார்ப்போமா என்று கேட்டான். அவள் அதற்கு முதல் தனது மாஜிக் கணவனின் சில பதிவுகள் 'Youtube'இல் இருப்பதாகவும், அதை முதலில்ப் பார்ப்போம் என்றும் அவனைக் கேட்டாள். இருவரும் அவற்றைச் சேர்ந்து பார்த்தார்கள். அதன் பின்பு கவிதைக்கண்ணனின் நிகழ்வில் ஐந்து நிமிடம் பார்த்திருப்பாள். அதையடுத்து அவள் கொட்டாவி விட்டாள். கொட்டாவிக்கு ஏற்ப விரலை வாயின் முன்பு சொடுக்கினாள். கவிதைக்கண்ணனுக்கு மனதிற்குள் பற்றிக்கொண்டு வந்தது. 'தொடக்கத்தில் உங்கள் எழுத்துப் பிரமாதம் என்று புகழ்ந்தது, விழுந்து விழுந்து வாசிப்பதாய் காட்டியதெல்லாம் பாசாங்கா? சேர்ந்து வாழப்போகிறவனின் முன்னேற்றத்தில் அக்கறை இவளுக்கு இல்லையா?' என்கின்ற கேள்வி அவனைத் துளைத்தன. 'கொழும்பில் பார்த்த சுமதா அல்ல இவள். இவள் மாறிவிட்டாள். இவள் இப்போது மாறாவிட்டால் கொழும்பில் நடித்திருக்கிறாள். காதலிப்பதாய் ஏமாற்றி இருக்கிறாள். பசப்பு நாடகம் ஒன்றை அரங்கேற்றி வெற்றி கண்டுவிட்டாள். எது உண்மை? எப்படி இவளை எடைபோடுவது? மாமி பேத்தியைப் பார்த்து அப்பா என்று தன்னை கூப்பிடுமாறு அடிக்கடி ஞாபகம் ஊட்டுவது… எப்பொழுது இவர்களை நோர்வேக்கு எடுப்பீர்கள் என்றும் தன்னிடம் அடிக்கடி கேட்பது. யார் சொல்வது உண்மை? யார் சொல்வது பொய்?' என்று பலவாறு சிந்தித்துக் கவிதைக்கண்ணன் குழம்பத் தொடங்கினான். ஏதோ ஒரு இடத்தில், எதுவோ பிழைப்பது தெரிகிறது. தெரிந்தும் அது என்னவென்று அவனால் அடையாளம் காணமுடியவில்லை.

அன்புக்குரிய காதலன் வீட்டில் இருக்கும் போது, ஒரு பெண் அடிக்கடி அலைபேசியில் மறைத்து மறைத்துக் கதைப்பதும், குறும்செய்தி பார்ப்பதுமாக அதிக அளவு நேரத்தைச் செலவு செய்தால், அந்தக் காதலனுக்கு எப்படி இருக்கும்? கவிதைக்கண்ணனுக்குள் நிறையவே அனல் பற்றிக்கொண்டது. அவன் அதை வெளியே காட்டிக்கொள்ளாது பௌவியம் காத்தான்.

தன்னை அவள் பேயனென எண்ணிக்கொள்கிறாள் என்பது அவன் ஆதங்கம். அவளோடு அவன் சமையலறைப் பக்கம் போய் நின்றால், அவள் அவனைக் கூட்டிவந்து, தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கி, தானும் சிறிது நேரம் இருந்து பார்த்துவிட்டு, கவிதைக்கண்ணன் இரசித்து நிகழ்ச்சியைப் பார்க்கத் தொடங்கியதும், மெதுவாக எழுந்து சென்று, அலைபேசியை எடுத்துக்கொண்டு பின்னால் செல்வாள். களவும் கற்று மற என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியும். கற்கவேண்டிய காலத்தில் கற்று மறக்க வேண்டிய காலத்தில் மறந்தாகிற்று. அவள் அவனுக்குப் புதிதாக அதைக் கற்பித்துக் காட்டுகிறாள். கவிதைக்கண்ணன் அதைக் கவனித்துக்கொண்டு வந்தான்.

அவளின் இந்தத் திருகுதாளம் புரியத்தொடங்கிய பின்பு கவிதைக்கண்ணன் வரவேற்பறையின் மத்தியில் இருந்த கதிரையில் அமர்ந்து கொள்வான். அதில் இருந்தால் சமையல் அறை, பின்கதவு ஆகியவை நன்றாக அவனுக்குத் தெரியும். அவள் கவிதைக்கண்ணன் வந்த நாளில் இருந்து சமையல் அறையில்தான் அலைபேசியை வைப்பாள். அல்லது தனது கைப்பையுடன் சாமியறைக்குள் வைத்துவிடுவாள். கவிதைக்கண்ணனுக்கு தான் வாங்கிக் கொடுத்த இந்த அலைபேசியில் என்ன மர்மம் பொதிந்து கிடக்கிறது என்பது புரியவில்லை. தனக்கு மறைத்து மறைத்துக் கதைக்க என்ன இருக்கிறது என்பதும் புலப்படவில்லை. சமையல் அறையில் போனைச் சத்தம் மிகவும் குறைத்து வைத்துவிட்டு ஓடி ஓடிப் போய் எடுக்கும் சூட்சுமம் என்ன என்பதும் அவனுக்குச் சுத்தமாக விளங்கவில்லை. ஒன்று மட்டும் மீண்டும் அவனுக்கு விளங்கியது. இவள் கொழும்பில் பார்த்த சுமதா இல்லை. அல்லது கொழும்பில் பார்த்த சுமதா உண்மையில்லை.

கவிதைக்கண்ணனுக்கு இந்தக் குழப்பத்தோடு அண்டலிக்க முடியவில்லை. அவன் மனதில் பட்டதை நேரில் கேட்டுவிடும் அவன் வழக்கம் அவனுக்கு அடிக்கடி தலைதூக்கும்.

அன்று இரவு படுக்கும் போது கவிதைக்கண்ணன் அதைக் கேட்பது என்றே முடிவு செய்துவிட்டான். இந்த உறவில் ஏதோ கண்ணுக்கு தெரியாத பழுது இருப்பதாய் அவன் அடிமனது மீண்டும் மீண்டும் ஆரூடம் சொல்லிற்று. அதுவே அவன் உயிர் குடிக்கும் வேதனையான மலைப்பாம்பாக நெஞ்சிற்குள் புரண்டது. 'என்ன பாவம் செய்தேன் நான்?' என்று அவன் எண்ணி வருந்தினான். வாழ்க்கை ஒருதரம் வெறுக்கலாம். வாழும் ஒவ்வொரு கணமும் வெறுத்துவிட்டால்? கவிதைக்கண்ணனைக் கேளாது ஒரு பெருமூச்சு காற்றில் கலந்து, மனித வாழ்வு பற்றிய தத்துவம் சொல்லிப் போயிற்று.

கவிதைக்கண்ணனும் அவளும் அனேகமாக ஒரே நேரத்தில் வந்து அறைக்குள் படுத்துக் கொள்வார்கள். மகளும் மாமியும் கோலில் படுப்பார்கள். அன்று அவள் படுக்க வருமுன்பே கவிதைக்கண்ணன் அறைக்குள் நின்றான். அவன் தனது அலைபேசியை நோண்டினான். அவனது அலைபேசி எப்பொழுதும் படுக்கை அறையில்தான் இருக்கும். அதற்கும் தொலைக்காட்சி பார்க்கும் கோலுக்கும் நான்கு அல்லது ஐந்து மீற்றர் தூர இடைவெளியே. கோலில் இருந்து சமையல் அறைக்கு பத்து மீற்றர் தூரமாவது இருக்கும். அவள் சமையல் அறையில் அலைபேசி வைப்பதற்கு் மற்றவர்கள் எடுத்துவிடுவார்களோ என்கின்ற பயமாக இருக்க வேண்டும் என்பது கவிதைக்கண்ணனின் ஊகம். கவிதைக்கண்ணனுக்கு அப்படி மறைக்க வேண்டிய சம்பாசனை யாது? அல்லது அந்தச் சம்பாசனையை ஏற்படுத்தும் நபர்கள் யார்? எதற்காக அந்த நபர்களையோ சம்பாசனையையோ மறைக்க வேண்டும்? எதற்காக இந்த அவதி அவளிடம்? என்பதான ஆயிரம் கேள்விகள் அவனிடம். கவிதைக்கண்ணன் தான் முழுமையாகச் சந்தேகப்படுவதாயும் காட்டிக் கொள்ளக்கூடாது என்பதை நினைவில் இருத்தினான். போனை அறைக்குள் வைக்குமாறு கேட்டுப் பார்த்தாலாவது அங்கு வைக்கிறாளா என்று அவளைப் பரிசோதிக்க அவன் எண்ணினான்.

கவிதைக்கண்ணன் அவளை அழைத்துப் பக்கத்தில் இருத்தினான். பின்பு தனது அலைபேசியின் கடவுச்சொல்லை அவளுக்குச் சொல்லி இந்த அலைபேசியை நீ எப்பொழுதும் பாவிக்கலாம் என்று கூறினான். அவளொன்றும் கவிதைக்கண்ணனைப் போல மந்தமல்ல. அவளுக்குக் கவிதைக்கண்ணனின்

திட்டம் நன்கு புரிந்திருக்க வேண்டும். அவள் அதைப் பாவிப்பதில் அக்கறை காட்டவில்லை. பொல்லுக் கொடுத்து அடி வாங்கக்கூடாது என்பதில் அவள் உசாராகிவிட்டாள். அவளின் 'Criminal' மூளை நன்றாகவே வேலை செய்தது. கவிதைக்கண்ணன் விடவில்லை. அலைபேசியைக் காட்டி முடிய,

'உன்னுடைய போனை எடுத்தா.' என்றான்.

'அது சாமியறைக்க வைச்சாச்சு. நாளைக்குப் பாப்பம்.' என்றாள் அவள்.

'சாமியறை என்ன கொழும்பிலையா இருக்குது? இல்லாட்டித் தேவாரம் பாடினாவே திறக்கும்? எட்டி எடுத்தா.' என்றான் கவிதைக்கண்ணன்.

'விடுங்கப்பா, எனக்கு இப்ப நித்திரை வருகுது…' அவள் சினந்து கொண்டாள்.

'ஒரு நடையில போன் எடுத்தாறத்துக்கு இடையில எவ்வளவு நேரம் நித்தரை கொண்டிடுவா. அவதி அவதியா நித்திரைகொண்டு நாளைக்கு எங்க போகப் போறா? சரி நாளையில இருந்து உன்ர போனை இங்க வை. நான் நேரம் கிடைக்கேக்க எடுத்துப் பாக்கிறன். சரியா?' என்றான் கவிதைக்கண்ணன்.

'சரி.' அவனது மக்கு மூளைக்குத் தானே சென்று அதை எடுத்துப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை.

அவள் யோசித்துக் கொண்டுதான் பதில் கூறினாள். முகம் எப்படிப் போனது என்பதை மங்கல் வெளிச்சத்தில் அவனால் அவதானிக்க முடியவில்லை. என்னுடைய போனில் உங்களுக்கு என்ன வேலை என்று அவள் கேட்காததில் கவிதைக்கண்ணனுக்குத் திருப்தி. அப்படிக் கேட்டுவிடுவாளோ என்றுகூடக் கவிதைக்கண்ணன் எண்ணினான்.

மனைவி என்றாலும் சில தனிப்பட்ட எல்லைகளும், உரிமைகளும் உண்டு என்பதைக் கவிதைக்கண்ணன் நம்பினான். அவன் அதை மதிப்பவனே. இவள் அந்தச் சுதந்திரத்தை, உரிமையைத் தவறாகப் பயன்படுத்துகிறாள் என்கின்ற அவிப்பிராயம் அவனுக்கு ஏற்பட்டு விட்டது. கவிதைக்கண்ணன் அவளோடான உறவு பாதிக்கும் என்கின்ற காரியத்தை ஆர்வத்தோடு செய்ய விரும்புவதில்லை. சில வேளைகளில் கோபம் அவனை வெறி கொள்ள வைத்துவிடும். கோபத்தின் வயப்படும் போது அவனுக்குத் தான் என்ன செய்கிறேன் என்பதில் கட்டுப்பாடு இருப்பதில்லை. நிதானம் நின்று பிடிப்பதில்லை. கோபத்தில் பொங்கும் போது வரும் வசனங்கள் மற்றவரைக் காயப்படுத்தியதும் உண்டு.

காமம் ஒரு நோய். அதன் வயப்படும் போதும் அவன் கட்டுப்பாடு இல்லாது அல்லாடுவதை உணர்ந்து கொள்கிறான். காமவயப்பட்ட தானும் ஒரு நோயாளியா? என்பதை அவன் அடிக்கடி தனக்குள் கேட்டுக் கொள்கிறான். அந்தக் கேள்விக்கு ஆம் என்கின்ற விடையை இன்னும் அவனால் ஏற்றுக்கொள்ள முடியாது உள்ளது. அது தப்பு என்றாலும் அவனது சுயநலப் பிடிவாதம் தொடர்கிறது.

கவிதைக்கண்ணன் எதைத் தேடத் தொடங்கினான்? அது எதில் வந்து முடிந்தது? பெண்ணின் உண்மைக் காதலுக்கான ஏக்கம் இன்று காமமாய், விகாரம் பெற்றதாக ஒரு உணர்வு அவனிடம் உண்டு. தன்னைக் காமுகனாக ஒத்துக்கொள்ள முடியாததின் முகமூடியே இந்த உறவு. அதில் வந்த காதல். அதனால் ஏற்பட்ட குடும்பம். காமம் காதலாவது உண்டு. காதல் சிலவேளை காமத்தோடு முடிவதும் உண்டு. ஆண்கள் பொதுவாகக் காமம் சுவைத்த பின்பு பெண்ணைக் கழற்றி விடுவார்கள். கவிதைக்கண்ணனுக்குக் காமம் சுவைத்த பின்பு அவள்மேல் காதல் உண்டானது. அன்று தப்பாக எண்ணத் தெரியாததால் அவன் ஒரு தப்புத் தாளம் போடுவதற்குத் தயாரானான். ஆட்டம் தொடர்ந்தது. அதில் எப்போது அசிங்கம் புகுந்தது என்பது அவனுக்குப் புரியவில்லை. அசிங்கம் வவுனியாவில் ஆரம்பித்து இருக்க வேண்டும். சங்கில் முற்றி இருக்க வேண்டும். மறைக்கப்படும் மனித மர்மங்கள் மரணத்திலும் மரணிக்குமா? இவளுடன் இருப்பதும் அப்படியே என்கின்ற தவிப்பு அவனுக்கு. அவளைப் பற்றிய ஐயங்கள் ஊகங்களாகப் பெருக, விடைகள் கிடைக்காது நாட்கள் நரகமாக நகர்ந்தன.

காமம் என்பதும் மீளமுடியாத நோய் என்பது மட்டுமல்ல, அது தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் வேதனையையும், அவமானத்தையும் உண்டு பண்ணும் நோயும்கூட. கவிதைக்கண்ணன் தன்னைக் குற்றவாளியாக எண்ணினான். மனிதனானவனுக்கு இந்த உணர்வுகள் இருக்கத்தான் செய்கிறது. இருந்தும் அதன் பிடியில் இருந்து மீளமுடியாது… இவளே எனக்கு வேண்டும் என்கின்ற வெறியை அவன் மூளை உண்மைக் காதலெனக் கற்பிதம் செய்து வைத்திருக்கிறது. அந்த மூளை அதை முழுமையாக நம்புகிறது. அவன் அதன்படியே பெரும்பான்மையான நேரம் நடந்து கொள்கிறான். காதல் என்பதும் மூளையை முடமாக்கும் போதை என்னும் ஞானத்தை அவன் இன்னும் பாடமாக ஏற்றுக் கொள்ளவில்லை.

இடைக்கிடையே அவனுக்குப் போதை தணியும். தான் என்ன செய்கிறேன் என்கின்ற கேள்வியும் எழுந்து வரும். பின்பு காதலிடம் அது தோற்கும். காமத்திடம் பலமாக அடிவாங்கிக் கண்காணாத இடம் போய்ச் சேரும்.

கவிதைக்கண்ணன் யாழ்ப்பாணத்தில் நிற்கும் வரைக்கும் அவள் தனது அலைபேசியைப் படுக்கை அறைக்குள் வைத்தது கிடையாது. கடைசி நேரத்தில் அந்த அலைபேசியின் 'Sim lock' ஆகிவிட்டது. அவளுக்கு அது பெரும் அவஸ்தையாகிப் போனது. 'lock' எடுத்து சில நாட்களின் பின்பு மீண்டும் கவிதைக்கண்ணன் கையில் அது 'lock' ஆகியது.

கவிதைக்கண்ணன்தான் வேண்டும் என்றே 'lock' ஆக்கிவிட்டதாக அவள் முதன்முதல் அவன் மீது குறைபட்டுக்கொண்டாள்.

★

அன்று கவிதைக்கண்ணனும் அவளுமாகத் திருநெல்வேலியில் ஒரு அலுவலை முடித்துக்கொண்டு சந்தைக்குச் சென்றார்கள். மகளுக்குச் சுரைக்காய் சமைத்துக் கொடுப்பது நல்லது என்கின்ற தகவலை

மருத்துவர் பிரஸ்தாபித்திருந்தார். அத்தோடு அங்கு வேறு மரக்கறிகளும் மலிவாக வாங்கிவரலாம் என்பது அன்றைய திட்டம். திருநெல்வேலிச் சந்தை ஓயாத பரபரப்போடு அன்றும். நேரம் உச்சிக்கு வந்துவிட்டதால் மரக்கறி வாங்கவரும் கடைக்காரர் யாரும் நிற்பதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்கின்ற துணிவு கவிதைக்கண்ணனுக்கு. அப்படி யாரும் நின்றால் என்கின்ற கற்பனையைக் கவிதைக்கண்ணன் விரும்பவில்லை. இன்னும் அவன் மனதில் சமூகத்திற்கான பயம் மறையவில்லை. தொட்டவளை விடுவதும் விட்டவளைத் தொடுவதும் எங்கள் சமூகத்தால் அங்கீகரிக்கப்படாத பாவங்கள். வெறிகொண்ட காதல் அவள் மேல் இருந்தும் சமூகத்தைப் பார்த்து விழிபிதுங்கி நின்றான். இனியும் சமூகத்தைப் பற்றி எண்ணி நடுங்குவது கோழைத்தனம் என்பது அவனுக்குப் புரியும். புரிந்தாலும் நேருக்கு நேர் போரிடும் தயிரியம் சிலவேளைக் காணாமல் போய்விடுவதாக அவன் உணர்ந்ததுண்டு. நேரே போரிடத் துணிவற்ற கோளையாகச் சிக்கலான சந்தர்ப்பங்களில் நழுவிக்கொள்வதையே அவன் விரும்பினான்.

கவிதைக்கண்ணன் வீட்டில் இருந்து புறப்படும் போது தனது 'Wallet'ஐ எடுத்துக்கொண்டு செல்லவில்லை. பணத்தை எடுத்து அவளிடம் கொடுத்திருந்தான். தேவைப்படும் போது கேட்கலாம் என்கின்ற மெத்தனம் அவனிடம். பொருட்கள் வாங்கும் போது அவள் பணம் கொடுத்துவிட்டு மிச்சத்தை வாங்கிக் கொள்வாள். தான் தெரிவு செய்யும் பொருட்களிற்கு அவள் பணம் கொடுத்தால் யாழ்ப்பாணத்தில் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்கின்ற அடிப்படை அறிவைப் பற்றிக்கூடக் கவிதைக்கண்ணன் சிந்திக்கவில்லை. காதல் குருடுதான். மூளையை முடமாக்குவதும் உண்மைதான். வெறி அல்லது ஞானம் உள்ளவனுக்கு ஏது கௌரவம், மானம், அவமானம்?

வீட்டிற்குப் பக்கத்தில் இருக்கும் கடைகளில் அல்லது அதைத்தாண்டி நாவாந்துறைச் சந்தைக்குச் சென்றாலும் மரக்கறி குதிரை விலைதான் விற்பார்கள். மகளுக்குப் பேரம் பேசத் தெரியாது என்பதாகத் தாயோடு சைக்கிளில் சவாரி போய் வருவார்கள். அத்தால் சந்தையில் இன்று பார்த்துப் பாராமல் மரக்கறி வாங்கிக்கொண்டு புறப்படும் நேரம்தான் பின்னாலே இருந்து 'கண்ணா!' என்கின்ற குரல் கேட்டது. கவிதைக்கண்ணன் திகைத்துப் போய்விட்டான். தன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடும் அளவுக்குத் தெரிந்தவர்களா என்கின்ற நினைப்பே அவனுக்குச் சகிக்கவில்லை. குரல் வந்த திசையைக் கவிதைக்கண்ணன் திரும்பிப் பார்த்தான். அவனது பாடசாலை நண்பனான தவநேசன் சிரித்துக்கொண்டு நின்றான். அதற்கு மேல் முக்காடு போட்டுக்கொண்டு ஓட முடியாது என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரிந்தது.

கவிதைக்கண்ணனும் தவநேசனை நோக்கிச்சென்றான்.

'என்ன நோர்வேயில இருந்து எப்ப வந்தாய்? இப்ப நீங்கள் எங்க இருக்கிறியள்?'

என்று அவன் கேட்டான். பாடசாலை நண்பன் என்பதால் வீட்டு விபரங்கள் அதிகம் தெரியாது. மெதுவாகச் சமாளித்து ஆளை அனுப்பி விடவேண்டும் என்பது கவிதைக்கண்ணனின் கவனமாக இருந்தது.

'நாங்கள் இப்ப சுண்ணாகத்தில இருக்கிறம்.' என்றான்.

'அப்ப இங்க எங்க? அங்கதானே பெரிய சந்தை?' அவன் விடுவதாய் இல்லை.

'பிறண்ட் வீட்ட வந்தன். அவை மரக்கறி வேண்டோணும் எண்டிச்சினம்.'

'அவ்வளவு குளோசான பிறண்டா?'

'தங்கச்சியின்ர பிறண்ட். அதால குளோஸ்தான்.'

கவிதைக்கண்ணனுக்குத் தனது பதிலில் தனக்கே நம்பிக்கை இல்லாதது போல இருந்தது. பொய் சொல்லத் தெரியாத மனிதர்கள் பொய் சொல்ல முயற்சிப்பது அவதியும் அங்கதமும் ஆகிறது.

'ம்… ம்…. சரி… சரி… ஏதோ நடக்கட்டும். அப்ப மனிசி வரேல்லையே?' என்றான் அவன் கவிதைக்கண்ணனைப் பார்த்து.

'இல்ல. சமர்ரைம் வருவினம்.'

'அப்ப திரும்ப வருவாயே?'

'ம்… சிலவேளை…' என்று சொல்ல நினைத்தவன் சொல்லாது அதை விழுங்கிவிட்டான்.

'சரி சந்திப்பம்.' என்று கவிதைக்கண்ணன் அந்தச் சம்பாசனைக்கு முடிவுகட்டினான்.

'சரி… சரி…' என்றான் அவன்.

தவநேசன் தன்னை நம்பவில்லை என்பதை அவன் சரி சரி என்று கூறிய தொனியில் இருந்த இளக்காரம் காட்டிக்கொடுத்தது. தவநேசனைச் சமாளிக்க வேண்டும் என்பதில் அவள் இதை எப்படி எடுத்துக்கொண்டாள் என்பது பற்றிக் கவிதைக்கண்ணன் அப்போது கவனிக்கவில்லை. இருவரும் மீண்டும் ஒட்டோ ஒன்றைப் பிடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

கவிதைக்கண்ணனுக்கு தான் கதைத்ததை அவளிடம் சொல்லிவிட வேண்டும் என்கின்ற பரபரப்பு. வீட்டிற்கு வந்ததும் இருவரும் உடுப்பு மாற்றினார்கள். அவள் கவிதைக்கண்ணனோடு எதுவும் கதைக்கவில்லை. முகம் கடுகடுப்பாய் இருந்தது. கவிதைக்கண்ணனுக்குச் சந்தையில் நடந்ததுதான் அதற்குக் காரணம் என்பதைப் புரிந்து கொள்ளும் ஞானம் அப்போது இல்லாது போயிற்று. அவள் ஆடை களைந்த வண்ணம் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டு நின்றாள். இப்போது அடிக்கடி அவள் அப்படித்தான் செய்வாள். கவிதைக்கண்ணன் அவள் அருகே சென்று,

'அவன் குடையத் தொடங்கீட்டான்.' என்று தொடங்கினான். அப்படித் தொடங்கியது எவ்வளவு பிழை என்பது அப்போது அவனுக்குப் புரியவில்லை. அவள் கொழும்பில் சந்தித்த பதுமை அல்ல. இப்போது அவளுக்கு வாய் நீளுகிறது. இதுதானா அவள் சுயரூபம் என்கின்ற உண்மை அவனை அலறவைக்கிறது. இந்த உண்மை கவிதைக்கண்ணனுக்குக் காலம் கடந்தே புரிந்திற்று.

'உங்களுக்கு ஒரு சின்னப் பொய்கூட ஒழுங்காச் சொல்லத் தெரியேல்ல. உங்கட றிலேசன் எண்டு சொல்லி இருக்கலாம்தானே? காசு வாங்கிக் குடுக்கிறியள். பிறகு பிறணட் எண்டால் நம்புவாரே? சை...' என்றாள். கவிதைக்கண்ணனை அந்த கடைசிச் சொல்லும் அவளின் பார்வையும் கொன்றன. மான அவமானம்? அவன் காதல் ஞானி.

சுமதாவுக்கு மட்டமான பொய் சொன்னதில் கோபம். கவிதைக்கண்ணனுக்குத் துடிக்கப் பதைக்கப் பொய் சொல்ல வராதது அவன் சாபமாகியது. அவள் கோபமாகப் படுக்கை அறைக்குச் சென்றாள். கவிதைக்கண்ணனும் அவள் பின்னே சென்றான். கோபத்தில் கட்டிலில் இருந்தான். அவள் தொடர்ந்தும் உடுப்பு மாற்றினாள். முகத்தைக் கோபத்தில் உர் என்று வைத்திருந்தாள்.

'நான் அப்பிடி நினைக்கேல்லை.' என்றான்.

'ஓ உங்களால என்ன றிலேசனாக்கூட நினைக்க முடியேல்லையே? ம்... தெரியும். இன்னும் பிறண்டாத்தான் நீங்கள் என்னை நினைக்கிறியள். மனசில இருக்கிறதுதானே வாயில வரும். பிறகு கதைக்க வந்திட்டார். கதைக்க...' என்பதாக அவள் குரல் உயர்ந்தது.

'நான் அப்பிடி மீன் பண்ணேல்லை.' கவிதைக்கண்ணன் அதிர்ச்சியோடு பதில் சொன்னான்.

'என்ன அப்பிடி மீன் பண்ணேல்ல? கிப்பிடி மீன் பண்ணேல்லை.' என்றாள் அவள் ஏளனமாக.

'வாய் காட்டின்னி எண்டா அறைஞ்சு போடுவன்.' கோபத்தில் அவனது கட்டுப்பாட்டை மீறி வார்த்தைகள் கொப்பளித்தன.

'ஓ அறைவியள் அறைவியள். அறையிங்க பாப்பம்?' அவள் பயமற்றுத் திமிராக நின்றாள்.

'இப்ப ஏன் கத்துறாய்? இப்ப என்ன நடந்திட்டுது?'

'பிறகென்ன... பொய்யும் சொல்த் தெரியாது. உண்மையும் சொல்லத் தெரியாது.' என்றாள் கோபம் மாறாது.

'எனக்குப் பொய் சொல்லுறது சரிவராது.' என்றான் கவிதைக்கண்ணன் தோல்வியோடு.

'ஓ... நீங்கள் பெரிய அரிச்சந்திரன் வீட்டுப் பிள்ளை. இவர் பொய்யே சொல்லுறேல்லை. துவக்கத்தில எனக்கு மாத்திரம் நல்லாப் பொய் சொல்லத் தெரிஞ்சுது. உங்களுக்கு ஒண்டுக்கும் துணிவில்லை எண்டு சொல்லுங்கோ. இந்த வள்ளல்ல உங்களை நம்பி நாங்கள்.' என்றாள் அவள்.

'இப்ப என்ன செய்யோணும்?' என்றான் கவிதைக்கண்ணன் இயலாமையோடு.

'ஐயோ... எதுவும் செய்ய வேண்டாம். மனிசர் களைச்சுப் போய் வந்திருக்கேக்க பேசாமல் இருந்திருக்கலாம்தானே?' என்றாள் அவள்.

‘உண்மையைச் சொன்னன். அதுக்கு இப்பிடித் துள்ளிப் பாயிறா?’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘பெரிய உண்மை. எங்க என்ன சொல்லுறது எண்டு தெரியாது…’ என்றாள் கோபம் மாறாது.

‘பொய் வாய்க்க வருகுதில்லை.’ என்றான் கவிதைக்கண்ணன் பரிதாபமாக.

‘சீ போங்க.’ அற்பப் புழுவாய்க் கவிதைக்கண்ணனைப் பார்த்துவிட்டு அவள் கோபமாகச் சமையல் அறைப்பக்கம் போனாள். கவிதைக்கண்ணன் விறைத்துப் போய், திகைத்துப் போய் கட்டிலில் இருந்தான். இது இவ்வளவு பிரச்சனையாக வரும் என்று அவன் துளிகூட எதிர்பார்க்கவில்லை. இவள் எப்படி மாறிவிட்டாள் என்பது மீண்டும் அவனுக்கு மலைப்பைத் தந்தது. எது உண்மை ரூபம்? விடை காணமுடியாத அதே கேள்வி மீண்டும் எழுந்தது. அவள் தன்னை எடுத்தெறிந்து பேசியது அவனுக்குக் கோபத்தை, அவமானத்தை உண்டு பண்ணியது. காதல் வசனங்கள் மறந்து போய்விட்டாள். கருக்குமட்டையாக நாக்கை நீட்டுகிறாள். மொத்த வேண்டும் போல அவனுக்குக் கோபம் வந்தது. அதைத் தான் செய்ய முடியாது என்பதும் புரிந்தது. அதற்குப் பதிலாக எதையாவது செய்து தனது கோபத்தைக் காட்ட வேண்டும் என்கின்ற பிடிவாதம் எழுந்தது. கோபம் சத்திராதி. நல்ல மனிதனையும் துஸ்டன் ஆக்கிவிடும்.

சில நாட்களுக்கு முன்பு தி.ஜானகிராமனின் மோகமுள் நாவல் வாங்கி வைத்திருந்தான். கவிதைக்கண்ணன் அந்த நாவலைக் கைப்பற்றினான். இருப்பதற்கு ஒரு கதிரை எடுத்துக்கொண்டான். கதிரையைக் கொண்டு சென்று பின் வளவில் போட்டுவிட்டு அதில் உட்கார்ந்தான். நாவலை வாசிப்பதாய் பாசாங்கு செய்தான். நாவல் வாசிக்க முடியவில்லை. காலை எறும்பு கடித்தது. அவள் மேல் இருந்த கோபம் மனதை இடைவிடாது கடித்தது. இவளையா நான் காதலிக்கிறேன் என்பது அதிர்ச்சியாய்ப் போயிற்று. அதிர்ந்து பேசுவதை அவன் விரும்பியது கிடையாது. மிளகாய் அரைப்பதான கோபம் வந்தால் அவன் வசம் அவனிடம் இருக்காது.

சிறிது நேர அல்லாட்டத்தின் பின்பு கவிதைக்கண்ணன் சிறிது சிறிதாக நாவலை வாசிக்கத் தொடங்கியதும் பிறநினைவை இழந்துவிட்டான். சாப்பாட்டு நேரம் வந்தது. அவள் கவிதைக்கண்ணன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்தாள். அது நடப்பது போலத் தோன்றவில்லை. சாப்பிடாத அளவுக்குச் சண்டை என்பதை அவள் விரும்பவில்லை. அவள் கவிதைக்கண்ணனை நோக்கிச் சென்றாள்.

‘இஞ்ச இருந்து என்ன செய்யிறியள்?’ என்றாள்.

‘வாயில வாழை நடுகிறன். பாக்கத் தெரியேல்லையே?’ அவன் கோபமாக இருப்பது போலக் காட்டிக் கொண்டான்.

‘கோபமா? கோபத்தில வளவுக்க இருந்து வாசிக்கிறியளா? வீட்டுக்க இருந்தும் புத்தகம் வாசிக்கலாம்.’ என்றாள் அவள் கெஞ்சும் தொனியில்.

‘வீட்டுக்க காத்து வராது. மூச்சு முட்டுது. இங்கதான் சுதந்திரமான சுத்தமான காத்துவரும்.’

‘என்ன சொல்லுறியள் எண்டு விளங்குது. சரி இப்ப வந்து சாப்பிட்டிட்டு பிறகு வந்திருந்து வாசியுங்க.’

‘நான் சின்ன விஷயமா நினைச்சன். நீ பெரிசாக்கீட்டா.’

‘சொறி… அதைப்பற்றி இனி கதைக்க வேண்டாமே அப்பா.’

‘சரி.’

கவிதைக்கண்ணன் எழுந்து சாப்பிடச் சென்றான். கோபம் தொலைந்து போனது. மீண்டும் அவள் மேல் மாறாக் காதல் பெருகிற்று. அது அடுத்த சண்டை வரைக்கும்…

சாப்பிட்ட பின்பு வந்து கோலில் மிகவும் அருகருகாக அமர்ந்து தொலைக்காட்சி பார்த்தார்கள். அவளின் அம்மா நித்திரைக்குச் சாய்ந்தது கவிதைக்கண்ணனுக்கு வசதியாயிற்று. தொலைக்காட்சியில் மூன்றாம் பிறை திரைப்படம் போயிற்று. கவிதைக்கண்ணனுக்குத் தங்கள் காதல் எந்த எதிர்ப்பு வந்தாலும் நிலைத்து நிற்கும் என்கின்ற நம்பிக்கை மீண்டும் உண்டாகியது. உறவு என்று ஒன்று இருந்தால் அதில் ஊடலும் இருக்கும் என்று சமாதானம் அடைந்தான். அதன் கலவைதான் தாம்பத்தியம் என்பதை அவன் நம்பினான். காலை நடந்தது ஒரு ஊடல் மட்டுமே என்பதாய் அவன் அதைப் புறக்கணித்தான். படத்தைப் பார்த்துக்கொண்டு இருந்த அவளின் கையைத் தனது கையால் பொத்திப் பிடித்தான். அவள் என்ன என்பது போல் அவனைப் பார்த்தாள்.

‘காதல் எண்டுறது எவ்வளவு உண்மையானது… வலுவானது.’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘அதை இன்னும் நம்பிறியளா? அதெல்லாம் ‘ரீன்ஏஜ்’ காரருக்குத்தான் சரி. அதுக்குப் பிறகு காதல் எல்லாம் வராது. வந்தாலும் ஒரு இரண்டு மூண்டு வருசம்தான்.’ என்றாள் அவள் நிதாட்சண்ணியமாய்.
கவிதைக்கண்ணன் மலைத்துப் போய்விட்டான். தனது கற்பனை உலகம் காலடியில் நொறுங்கும் வேதனை அவனைக் கொன்றது. அந்த வலியைச் சமாளித்த வண்ணம்,

‘அப்ப நீ கொழும்பில கதைச்சது எல்லாம்?’

‘அப்ப ஏதோ அப்படி இருந்திச்சு. இப்ப அதெல்லாம் பைத்தியக்காரத்தனம் போல இருக்குது.’

‘அப்பிடிச் சொல்லாத. நான் இன்னும் நம்புறன். சாகும் வரைக்கும் அந்த உணர்வு இருக்கும். நீயும் அப்பிடித்தான் இருப்பாய் எண்டு நினைச்சன்.’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘பைத்தியக்காரத்தனமாய் கதைக்காதேங்கோ. உங்களுக்கும் எனக்கும் வயது வந்த பிள்ளையள் இருக்கினம். பேசாமல் நாங்கள் பிறண்டா இருந்தா ஒரு பிரச்சனையும் இருக்காது.’ என்றாள் சுமதா.

‘காலமை சண்டை பிடிச்சதால இப்பிடிச் சொல்லுறியா?’ என்றான் கவிதைக்கண்ணன் பரிதாபமாக, நிலமையைப் புரிந்துகொள்ள முடியாதவனாக.

‘இல்லை. நான் இதை நிறையக்காலமா யோசிச்சுக்கொண்டு இருக்கிறன்.’ என்றாள் அவள் திடமாக.

கவிதைக்கண்ணனுக்கு மீண்டும் (அபாயச்) சங்கு ஊதப்பட்டது. கவிதைக்கண்ணன் இந்தத் தருணத்திலாவது உண்மையை உணர்ந்திருக்க வேண்டும். கற்பனை போல வாழ்க்கை அமைந்து விடுவதில்லை என்பது உறைத்திருக்க வேண்டும். காதல் என்பது காமத்திற்கான நடனம் மட்டுமே என்கின்ற தத்துவம் வெளித்திருக்க வேண்டும். பெண்ணானவளே உறவு வேண்டாம் என்கின்ற போது ஆணான உனக்கு என்ன என்கின்ற சுயநலமாவது தலை தூக்கி இருக்க வேண்டும். கவிதைக்கண்ணன் வயது மறந்து, குடும்ப கௌரவம் மறந்து, வாரிசை மறந்து, சமுதாயத்தில் இருக்கும் தனது அந்தஸ்த்தை மறந்து, தொட்டவனை விட்டவளை, காமத்திற்கான நடனமே காதல் என்கின்ற தத்துவத்தின் உள் அர்த்தம் புரியாமல், அவளே கதியென்று, தன் மதியின்றி மீண்டும் அவளுடன் கதைக்கத் தொடங்கினான்.

'அப்பிடிச் சொல்லாத செல்லம். என்னால நீ இல்லாத வாழ்க்கையை எண்ணிப் பாக்கேலாது. அது எனக்குக் கிடைக்கிற நரகமாகத்தான் இருக்கும். அந்த நரகத்தில வாழ்றதிலும் பாக்க நான் கெதியா செத்துப் போயிடுவன். பிளீஸ் என்னோடை இனிமேலைக்கு இப்பிடிக் கதையாத. அதுவும் இவ்வளவு பழகீட்டு இப்பிடிச் சொல்லுறதா? எப்பிடி உன்னால இதைச் சொல்ல முடியுது? உனக்கு என்ன நடந்தது? ஏன் நீ இப்பிடி மாறிப் போயிட்டா?' என்றான் கவிதைக்கண்ணன்.

'நான் அப்படிக் கஸ்ரப்பட்டிருக்கிறன்.' என்றாள் அவள்.

'யாரால? என்னாலையா?'

'இல்லை.'

'அப்ப?'

'கற்பமா இருக்கேக்க… அதுக்கு பதில் சொல்லேக்க… ரெலிபோன் வரேக்க… எல்லாம் போதும் போதும் எண்ட மாதிரிப் போச்சுது.' என்றாள் அவள்.

'ம்… சரி இனி நீ இங்க கற்பம் ஆகாமல் பாத்துப்பம். எல்லாத்தையும் அங்க வைச்சுப்பம்.'

'ம்…'

'நான் ஒண்டு கேக்கட்டா?'

'ம்…'

'நீ வேற யாரையும் லவ்பண்ணுறியா?' கவிதைக்கண்ணன் மனதில் இருந்ததைப் பட்டென்று கேட்டுவிட்டான்.

'என்ன விசர்க் கதை கதைக்கிறியள்? எனக்கு யாரும் தேவையில்லை. நான் தனிய இப்பிடியே இருப்பன். எனக்கு அதிலையும் இன்றஸ்ற் கிடையாது. அது எனக்கு முக்கியமே இல்லை.' என்றாள் அவள்.

'சொறி.' அவமானத்தோடு அதைச் சொன்னான் கவிதைக்கண்ணன்.

மகள் பாடசாலையால் வந்தாள். அவள் எழுந்து மகளுக்கு உணவளிக்கச் சென்றாள். கவிதைக்கண்ணன் சிந்தனையில் மூழ்கினான்.

இயற்கையின் வலுத் தெரியாது அதனோடு விளையாடுவது போல மனித உணர்வுகளின் வலுத் தெரியாது தான் விளையாடத் தொடங்கிய செயல் குற்ற உணர்வாக அவனை ஏறி மிதித்தது. எங்காவது சென்று தனித்திருந்து அழவேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். அவள் மீது ஆசைப்பட்ட நாளில் இருந்து அவன் நிறையவே அழுதுவிட்டான். அதற்கான முற்றுப்புள்ளி இருவரும் நிரந்தரமாக இணைவதால் போடப்படுமென அவன் நினைத்திருந்தான். அது போடப்படுமா?

★

முப்பது நாட்கள் மட்டும் விசாவின் செல்லுபடிக் காலம் என்பதில் கொழும்பு 'Katunayake' சர்வதேச விமான நிலையத்தின் அதிகாரிகள் எந்த விட்டுக்கொடுப்பிற்கும் தயாராக இருக்கவில்லை. கவிதைக்கண்ணன் இந்த முறை கிட்டத்தட்ட நாற்பது நாட்கள் இலங்கையில் தங்கினான். முப்பது நாள் முடியும் போது மீண்டும் கொழும்பு போகவேண்டி வந்தது. கொழும்பிற்கு இருவரும் போவதாக உத்தேசம். இருவருமாகச் சைக்கிளில் சென்று யாழ்ப்பாணம் கொழும்பு பேருந்து பயணச்சீட்டு வாங்கி வந்தார்கள்.

ஏழுமணிக்குப் பேருந்து புறப்படும். நான்கு முப்பது போல் உமா அக்கா வீட்டிற்கு அவரின் கணவனுடன் வந்து சேர்ந்தார். அவர் குள்ளமானவர், தாண்டித் தாண்டி நடப்பார் என்கின்ற விவரணத்தை அவளிடம் இருந்து கவிதைக்கண்ணன் ஏற்கனவே கேட்டிருக்கிறான். ஊர் பள்ளியின் சமையல் காரியதரிசி என்றும் அவள் பகிடி பண்ணுவாள். மனிதர்கள் பற்றி கனிவாக அவள் கண்டியில் மட்டும்தான் கதைத்தாள். இப்போது மனிதர்களின் கூடாத குணங்கள் பற்றியே அவள் அதிகம் கதைக்கிறாள் என்பது அவன் எண்ணம். அதுவும் உலகத்தில் தான் மாத்திரமே ஒரு நல்ல பெண் என்றும், மற்றவர்கள் எல்லோரும் கூடாதவர்கள் என்பதுமாய்க் கதைக்கிறாள். தனது சொந்தச் சகோதரங்களைப் பற்றியே அவள் அசிங்கமாகக் கதைக்கத் தொடங்கிவிட்டாள். தன்னைவிட மற்றவர்கள் எல்லோர் மீதும் அவளுக்குச் சந்தேகம். தான் செய்வது போன்று மற்றவர்களும் திருகுதாளம் செய்வதான நினைப்பு. தேனாக இனித்தவள் இன்று தேளாக மாறியதான அவதி கவிதைக்கண்ணனிடம்.

அந்த அக்காவின் கணவர் எப்படியானவர் என்கின்ற எந்தக் கற்பனையும் அவனிடம் இல்லை. பெரியம்மாவைப் போல் அவர்களையும் அறிமுகம் செய்து வைத்திருக்கலாம். அவளும் மாமியும் கவிதைக்கண்ணனின் அந்த ஆசையை நிறைவேற்ற வில்லை.

அக்கா கவிதைக்கண்ணனைப் பார்த்துவிடக் கூடாது என்று அவனை அறையில் இருக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அவர் பார்த்தால் ஊரெல்லாம் கைகால் முளைத்துக் கதை பரவிவிடும் என்று அவனிடம் சொன்னார்கள். பரவினால் என்ன என்பது கவிதைக்கண்ணனின் வெளிவராத கேள்வி.

கவிதைக்கண்ணன் எவருக்கும் தன்வரவால் சிக்கல் ஏற்படக் கூடாது என்பதை எண்ணி அதற்குச் சம்மதித்தான். இருந்தும் இதில் ஒளிப்பதற்கு என்ன இருக்கிறது என்பது அவனுக்குச் சினத்தை உண்டு பண்ணியது.

அந்த அக்கா இரண்டு மகள்களோடு தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வருகிறார். அவர்கள் ஐந்து சந்தியில் இருந்து சில கிலோமீற்ரர்கள் தள்ளி வாடகை வீடொன்றில் குடியிருப்பதாக அவள் கவிதைக்கண்ணனுக்குக் கூறியிருந்தாள். கவிதைக்கண்ணன் வந்த பின்பு அவர்கள் ஒரு நாள்கூட வீட்டிற்கு வந்ததில்லை. நோர்வேயில் இருந்து அலைபேசியில் கதைக்கும் போது அவர்கள் அடிக்கடி வந்திருப்பதாக அவள் கூறுவது உண்டு. சங்குப் பத்திரிக்கையில் அவள் வேலை தொடங்கிய பின்பு அவர்கள் வருவதில்லை என்றும் கூறி இருந்தது அவனுக்கு ஞாபகம் வந்தது.

அந்த அறைக்குள் இருப்பது கவிதைக்கண்ணனுக்கு அப்பரைச் சுண்ணாம்பு அறைக்குள் பூட்டி வைத்தது போல் ஆகிற்று. அவருக்குத் தேவாரம் கிடைத்தது. அவனுக்கு இப்போது எந்த வரமும் கிடைப்பதாகத் தோன்றவில்லை. அவர்கள் வருடம் பிறந்தபின் வந்ததால் பலகாரம் கொண்டு வந்தார்கள். மகள் அறைக்குள் வருவதும், சன்னை காட்டுவதும், வெளியே போவதுமாக வேடிக்கை காட்டினாள். இடைக்கிடை கவிதைக்கண்ணனுக்காக அவள் வருத்தப்பட்டாள். முகத்தில் கவலை வழியவிட்டுப் பாசமாகத் தலையில் தடவினாள். புயல் வருவது போல வந்து போனாள். அவர்கள் முறுக்கும், புழுங்கல் அரிசியும் கொண்டு வந்தார்கள். சிறிது நேரம் கழித்து அவர்கள் கொண்டு வந்த முறுக்கை எடுத்து வந்து மகள் கவிதைக்கண்ணனுக்குக் கொடுத்தாள்.

அக்காவின் கதிரை கோலின் நடுவில் இருந்ததால் பக்கத்து அறையை எட்டிப் பார்க்க முடியாத சங்கடம். சமையல் அறை அங்கிருந்து பார்த்தால் நன்கு தெரியும். சமையல் அறை தாண்டித்தான் குளியல் அறை வரும். கவிதைக்கண்ணன் குளிப்பது என்றால் அதைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். அப்படிச் சென்றால் யார் போவது என்கின்ற கேள்வி வரும். கவிதைக்கண்ணன் அறைக்குள் தொடர்ந்தும் சிறை இருந்தான். நேரம் ஆறாகிற்று. நேரத்திற்குச் செல்ல முடியாது போய்விட்டால் பேருந்து புறப்பட்டுவிடும். அப்படி பேருந்து புறப்பட்டால் கட்டிய பணம் நட்டம். பயணம் போகும் பொழுது அவர்கள் வருவார்கள் என்று யாரும் எதிர் பார்க்கவில்லை. அல்லது இன்னார் என்று தன்னை அறிமுகம் செய்திருந்தாலும் அவர்களுக்குக் காரணத்தைச் சொல்லி இருக்கலாம் என்பது கவிதைக்கண்ணனின் எண்ணம். எதற்காகப் பலகாரம், அரிசி கொண்டு வந்து கொடுக்கும் ஒரு அக்காவிற்குப் பொய் சொல்ல வேண்டும் என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை.

யாழ்ப்பாணத்தின் வறட்சியின் தொடராய் மின்சாரமும். அது எப்போது வரும் எப்போது நிற்கும் என்பதற்கு நேரகாலம் இருப்பதில்லை. கவிதைக்கண்ணன் அறைக்குள் இருந்த போது மின்சாரம் தடைப்பட்டது. புழுக்கத்தை அவனால் தாங்க முடியவில்லை. எப்போது அவர்கள் போவார்கள் என்பதும் அவனுக்குப் புரியவில்லை. பயணம் வெளிக்கிடுவது என்றால் கவிதைக்கண்ணனுக்கு நேரத்துடன் வெளிக்கிட வேண்டும். அது நடவாது என்பதே அவனுக்கு மனவழுத்தத்தைக் கூட்டியது. அக்கா உள்ளே வந்தால் எல்லாரும் பிடிபட வேண்டியதுதான். அக்கா உள்ளே அதிகம் வருவதில்லைப் போலும். கோலில் இருந்து மாமியோடு ஊர்ப் புதினம் கதைத்தார். கவிதைக்கண்ணன் அவர்கள் என்ன கதைக்கிறார்கள் என்று காது கொடுத்துக்

கேட்டான். அக்காவை இருந்து கதைக்குமாறு கூறிவிட்டு அவரின் கணவர் மீண்டும் மோட்டார் சைக்கிளில் எங்கோ போய்விட்டார். அத்தால் கவிதைக்கண்ணனின் சிறைவாசம் தொடர்ந்தது. அக்கா கில்லாடி என்று கவிதைக்கண்ணனிடம் சுமதா சொல்லுவாள். அந்தக் கில்லாடிக்கே தண்ணி காட்டும் சுமதா எப்படியான விண்ணி என்கின்ற நினைப்பு அவனுக்கு வந்தது. எல்லாம் எமக்காக என்கின்ற சமாதானம் மீண்டும் எழுந்து மண்டையில் குத்துப் போட்டது.

நேரம் ஆறரையைத் தாண்டியும் அக்காவின் கணவர் வரவில்லை. கவிதைக்கண்ணன் அவர்கள் விருப்பை மீறி வெளியே செல்ல விரும்பவில்லை. உள்ளேயும் அவனால் இருக்க முடியவில்லை. 'சீ இது என்ன கூத்து?' என்கின்ற சலிப்பு அவனுக்கு ஏற்பட்டது. மறைப்புக்களினதும், ஒளிப்புக்களினதும் மர்மம் என்ன என்பது அவனுக்குப் புரியவில்லை. மறைப்பும், ஒளிப்பும் செய்வது என்றால் ஒன்றில் அவர்கள் தப்பு செய்ய வேண்டும். அல்லது செய்த தப்பை மறைக்க அப்படிச் செய்ய வேண்டும். இவர்கள் எந்த வகை என்பதைக்கூடக் கவிதைக்கண்ணனால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் பொய்மையை அவன் உடைத்திருக்க வேண்டும். அஃதின்றி அவனும் பொய்க்கு துணையானான். எல்லாம் எமக்காக என்று சமாதானமானான்.

ஆறு ஐம்பதிற்குத்தான் அத்தானின் மோட்டார் சைக்கிள் வந்தது. அக்கா அதன் பின்பு புறப்பட்டார். கவிதைக்கண்ணன் ஓடிச் சென்று குளித்தான். என்ன கோமாளித்தனம் என்கின்ற நினைப்பு அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது. அதேவேளை அவளும் தாயும் கூறும் பொய்கள் இதயம் உறையும் பயத்தை உண்டுபண்ணியது. தனக்கும் அதே மருந்து தரப்படுகிறதா என்கின்ற எண்ணம் அவனை நிலைகுலைய வைத்தது. அப்படி நடந்தால்? கவிதைக்கண்ணனால் அப்படி நடந்தால் என்றுகூட எண்ண முடியவில்லை. அவள் தன்னை உயிருக்குயிராய் காதலிக்கிறாள். அதனால்தான் இத்தினை இம்சைப்படுகிறாள். அப்படி என்றால் அன்று காதல் இல்லை என்று கூறியது?

கவிதைக்கண்ணனுக்கு மண்டை வெடித்துவிடும் போல் இரத்த அழுத்தம் கூடியது. அவன் குளித்துவிட்டு வந்து கொழும்புக்குப் போவதற்கு அவசரமாய் வெளிக்கிட்டான்.

17

கவிதைக்கண்ணன் 'காலிரோட்டின்' மறுகரைக்கு மாறினான். சரஸ்வதியில் மிக்சர் வாங்க வேண்டும் என்பது அவன் திட்டம். அன்று வெள்ளிக்கிழமை. சரஸ்வதியில் ஒரு முறை பொட்டலம் வாங்கிச் சாப்பிட்ட ஞாபகம் வந்தது. வயிற்றுக் கோளாற்றை மறந்து ஒரு சோற்றுப் பொட்டலமும், ஒரு மிக்சர் பொட்டலமும் வாங்கினான். அதன் பின்பு அவனுக்கு அங்கு நிற்கவோ எதையும் பராக்குப் பார்க்கவோ பிடிக்கவில்லை. அன்றும் அப்படித்தான் கவிதைக்கண்ணனும் அவளும் வந்து சோற்றுப் பொட்டலமும்,

நோர்வேக்கு கொண்டு செல்வதற்கு மிக்சரும் வாங்கினார்கள். அந்த நினைவுகளின் துரத்தல் மீண்டும் தொடரலாயின.

★

அம்முறை கொழும்பிற்கு வந்து, அங்கு இரண்டு நாட்கள் தங்கிவிட்டு, கவிதைக்கண்ணன் நோர்வேக்குப் போவதாக முடிவு செய்தான். நோர்வேக்குப் புறப்படும் அன்று காலை தொடக்கம் அவன் மனதில் ஏதோ ஒரு கவலை. உள்ளத்தில் இது கடைசி நாளாகிவிடுமோ என்கின்ற இனம் புரியாத தவிப்பு. சிறு சண்டைகள் தோன்றினாலும் மீண்டும் தான் அவளுடன் அன்னியோன்னியம் ஆகிவிடுவதாக அவன் நினைப்பு. வஞ்சம் தீர்க்கும் நெஞ்சினள் இல்லாது உடனுக்குடன் மறந்து போகும் இரக்கம் கொண்டவள் தான் என்று அவளே சொல்லுவாள். அது நிஜம் என்று அவன் நம்பினான்.

இதயத்தை வருடும் அன்பானவர்களை விட்டுப் பிரிவது என்பது இரணம் தரும். தூரதேசத்தில் இருந்து காதலிக்க தொடங்கினால் அது நித்தம் வலி தரும். அவளை விட்டுப் பிரிந்து போவதை எண்ணவே கவிதைக்கண்ணனுக்கு இதயம் வலித்தது. எங்கோ நடுக்கடலில், பெரும் சுளிக்குள் அகப்பட்டதான அந்தரம் தொடர்ந்தது. இந்த உணர்வுகளில் இருந்து விடுதலை பெறமுடியுமா என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை. விதி வலிது என்பது புரிந்தது. எப்படியோ போயிருக்க வேண்டிய வாழ்க்கை எங்கோ திசைமாறிப் போய்விட்டது. கெட்ட சகுனங்களைக்கூட அவன் ஒரு காலத்தில் நம்பியது இல்லை. அந்தக் கெட்ட சகுனங்களை நம்பாது விட்டது இன்று தான் கெட்டுப் போனதிற்குக் காரணம் என்கின்ற சுடலை ஞானம் பிறந்தது. கால்களைச் சகுனம் பின் இழுக்க, அதையும் மீறிக் கால்கள் காமத்தின் வேட்கையில் நடைபோட்டது. அதுவே அவன் வாழ்வை வேதனைக்குள் நிரந்தரமாகத் தள்ளிவிட்டதென சாமானியனாய் அவன் எண்ணி மருவினான்.

காலைச் சாப்பாடு சாப்பிடுவது அவன் வழக்கம் அல்ல. அன்று சாப்பிடாது முழுகிவிட்டுத்தான் இருவரும் சரஸ்வதி விடுதிக்குச் சென்றார்கள். அங்கு இருப்பதிற்கு இடம் கிடைக்கவில்லை. இரண்டு மரக்கறிச் சாப்பாடும், மிக்சரும் வாங்கிக்கொண்டு பச்சைநாடு விடுதிக்கு மீண்டும் திரும்பி வந்தார்கள்.

அந்த பொட்டலச் சாப்பாடு அவர்கள் எதிர்பார்த்ததைவிட அமர்க்களமாய் இருந்தது. வடை பாயாசத்தோடு விருந்துச் சாப்பாடான பக்குவம். அந்தப் பொட்டலத்திற்குள் வாழைப்பழமும் வைத்திருந்தார்கள். தாம்பூலமும் வைத்திருந்தால் விருந்து நிறைவு பெற்றிருக்கும்.

சாப்பிட்ட பின்பு அவன் அவளின் மடிமீது படுத்துக் கண் கலங்கினான். ஏதோ சொல்ல முடியாத வேதனை உடலுக்குள் உயிருடன் புகுந்த ஜந்து போல் குடைந்தது. அது என்ன வென்று அவனுக்குப் புரியவில்லை. வாழ்க்கையின் விசித்திரமும் சோதனையும் அவனை நோக்கி சண்டமாருதமாய் வீசப் போவது அப்போது அவனுக்குப் புரியவில்லை. அவள் சங்கில் வேலைசெய்யத் தொடங்கிய தொடக்கம் தாளங்கள் தப்புத் தாளங்கள் ஆகியதை அவன் அறியான்.

என்னதான் நடந்தாலும் தனக்குப் பிடித்தவள் இவள் என்பதில் மாற்றம் வரவில்லை. வரவும் முடியாது. அப்படி இருந்தும் இன்று மனதை வருத்துவது என்ன என்பதை அவனாற் கண்டுபிடிக்க முடியவில்லை என்று எண்ணினான்.

அவளுக்கும் அந்தச்சாப்பாடு மிகவும் தித்தித்தது. அத்தோடு மச்சம் சாப்பிடாதது நல்லதாக அமைந்துவிட்டதென அவிப்பிராயம் கூறினாள். இழவு கொடுத்தவள் போல அவள் முகமும் விகாரம் காட்டுவதாகக் கவிதைக்கண்ணனுக்குத் தோன்றியது. அவள் எதையோ பற்றி சிந்திக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது. அவள் முகம் சந்தோஷம் துடைக்கப்பட்டு இருண்டுபோய்க் கிடந்தது. எதற்காகவோ அவதிப்படும் அவளின் உடலின் பாசையை அவளால் மறைக்க முடியவில்லை. அவை பிரிவை எண்ணியதால் வந்த சோகத்தின் வெளிப்பாடு என்று கவிதைக்கண்ணன் எண்ணினான்.

உணவு முடிந்ததும் பிரிய வேண்டும் என்கின்ற சோகத்தோடு ஒருவரை ஒருவர் அணைத்த வண்ணம் படுத்தார்கள். கவிதைக்கண்ணனுக்கு இப்படியான பிரிவுகள் வாராது அவளோடே நிரந்தரமாக இருந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்கின்ற கற்பனை ஓடியது. அது முடியாது என்கின்ற போது கவலையாகிற்று. அவளோடு சேர்ந்து இருக்கும் போது உறவும் உண்டு… ஊடலும் உண்டு. ஊடல் அப்பப்போ தோன்றி மறைபவை. அதுதான் தாம்பத்தியத்தின் மறந்துபோன சுவைகளை மீண்டும் அறிமுகப்படுத்துவது. நல்ல தாம்பத்தியத்தில்கூட சில வேளை ஆணும் பெண்ணும் வளைந்து கொடுக்க மறந்து விடுகிறார்கள். அப்படியான எந்தக் கட்டமும் தங்களுக்குள் வரவே கூடாது என்பது கவிதைக்கண்ணனின் விருப்பம்.

நேரம் தங்களை பிரிப்பதற்காய் வேகமாய் ஓடுவதாய்க் கவிதைக்கண்ணன் அதைச் சபித்தான். நீ என்ன முனிவனா என்பதாக அவன் சாபத்திற்கு அஞ்சாது அது வேகம் காட்டியது. நீ கற்பனையில் வகுப்பது உன் கை வசப்படாது என்றது.

இரவுச் சாப்பாடு சாப்பிட்ட பின்பு மீண்டும் அறைக்கு வந்தார்கள். அப்போது அவர்களால் கவலையோடு ஆளையாள் பார்க்க மட்டுமே முடிந்தது.

கவிதைக்கண்ணனுக்கு இந்த இடைக்காலப் பிரிவைவிட ஏதோ மோசமான கவலை மனதை அழுத்துவதாய்த் தோன்றியது. என்ன அது என்பது புரியவில்லை. அவன் விமான நிலையத்திற்குச் செல்வதற்காய் புறப்படத் தொடங்கினான். அவளும் தன்னை ஒப்பனை செய்தாள். போன முறை புறப்பட முதல் இணைந்து பிரிந்ததான ஞாபகம். இம்முறை அவள் ஒதுங்கிக் கொண்டதான அந்தரம். இரவு விமான நிலையம் போய்விட்டுப் பின்பு தான் வெள்ளவத்தையில் இருக்கும் சினேகிதிகள் வீட்டிற்குப் போகப் போவதாய் கூறினாள். அந்தச் சினேகிதிகளையோ, அல்லது அவளது கொழும்பு மாமாவையோ, அவள் கொழும்பில் வசித்த வீட்டையோ, கவிதைக்கண்ணனுக்கு அறிமுகப்படுத்தியது கிடையாது. மர்மத்தின் மர்மங்கள் அவை. வெள்ளவத்தையில் உள்ள விடுதிகளில் யாழ்ப்பாணத்துப் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதாக ஒரு நாள் திடீரென அவனுக்குச் சொன்னாள். அவளுக்கு அது எப்படித் தெரிய வந்தது என்று கவிதைக்கண்ணன் கேட்கவில்லை.

கவிதைக்கண்ணனுக்கு அவள் என்றும் புரிந்து கொள்ள முடியாத மர்மமான பிறவியாகத் தோன்றினாள். உறவுகளை மறைக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? அவன் தப்பு செய்யப் புறப்பட்டதால், தப்பு செய்வது புரிந்தாலும் தட்டிக்கேட்க முடியாதவனாய் அவளோடு அலைந்தான். அவளாக முன்வந்து அவற்றைச் சொல்ல வேண்டும். அவள் அந்த அக்கறை அற்றுத் தட்டிக்கழித்தாள். மறைத்தாள். மர்மம் காட்டினாள். கவிதைக்கண்ணனும் அதிகம் தோண்ட மனதில்லாது விட்டுவிட்டான்.

முதலில் அவள் அணிந்திருந்த உடுப்பைக் கவிதைக்கண்ணன் ஊன்றிக் கவனிக்கவில்லை. பின்பு அவளைச் சில புகைப்படங்கள் எடுத்தான். அதில் அவளது 'Blouse'ஐப் 'Zoom' பண்ணிப் பார்த்த போது அவனுக்கு அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை. அது ஒரு கறுப்பும் வெள்ளையுமான 'Nylon Blouse'. அதனுடாக அவளது உள்ளாடை தெளிவாகத் தெரிந்தது. இந்த 'Blouse'ஐயே அவள் தனது பிறந்த நாள் அன்றும் அணிந்து புகைப்படம் எடுத்தாள். அன்று அவன் அதை அவதானிக்கவில்லை. இன்று பார்த்த போது அவனுக்கு முதலில் என்ன சொல்வது என்று புரியவில்லை. ஐரோப்பாவில் அதை அணிந்தாலே ஆண்கள் முறைப்பார்கள். இலங்கையில்? முதன் முறை விமான நிலையத்திற்கு அணிந்து வந்த உடுப்பும் அவனுக்கு ஞாபகம் வந்தது. அன்று அவனுக்கு வாய் வரைக்கும் 'இது என்ன உடுப்பு? ' என்கின்ற கேள்வி வந்தது. அவன் அதை அடக்கிக் கொண்டான். அப்படியான துடை தெரியும் 'Nylon' கறுப்புக் கண்ணறைக் குட்டைப் பாவாடையைச் சாமானிய தமிழ் பெண்கள் கண்கொண்டு பார்க்கமாட்டார்கள். கொழும்பு என்கின்ற சுதந்திரத்தை இப்படியா பாவிப்பது என்கின்ற கேள்வி கவிதைக்கண்ணனுக்கு வந்தது. இவளின் இரசனை ஏன் இப்படி மட்டமாகப் போகிறது என்று அவனுக்குப் புரியவில்லை. அதன் பின்பு அவள் அந்த உடையணியவில்லை.

எடுத்த புகைப்படத்தை 'Zoom' பண்ணிவிட்டு அவளைக் கூப்பிட்டுக் காட்டினான். அவள் அதை வந்து பார்த்தாள்.

'ச்... இப்பிடித் தெரியுது.' என்றாள்.

'தெரிஞ்சாப் பருவாய் இல்லை. நீ திரும்பி வரேக்க தனியாய் வருவாய். றைவர் தப்பா நினைப்பான்.' என்றான் கவிதைக்கண்ணன்.

அப்படியான கண்ணறைக் கறுப்பச் சட்டை அணிந்தால் ஆண்கள் அந்தப் பெண்ணைத் தப்பாய்ப் பார்ப்பார்கள் என்பது கவிதைக்கண்ணனின் கணிப்பு.

'உண்மைதான். நீங்கள் முதலே சொல்லி இருக்கலாம்.' என்றாள் அவள்.

'நான் முதல் கவனிக்கேல்லை. போட்டோ பாத்த பிறகுதான் அது வடிவாத் தெரியுது.' என்றான் கவிதைக்கண்ணன். அவன் அவளுக்குக் குற்ற உணர்வு வரக்கூடாது என்று நினைத்தான்.

அவள் அதன் பின்பு 'House of Fashions' இல் அவன் வாங்கிக்கொடுத்த 'Blouse' ஒன்றை அணிந்துகொண்டாள். அது அவனுக்கும் திருப்தியாகிற்று. அவளது மூஞ்சை தொடர்ந்தும் சுருங்கிக்கிடந்தது.

பத்து மணிக்கு விமானநிலையம் செல்வதற்கு வண்டி வந்துவிட்டது. அன்று 'வெசாக்' தினம் ஆதலால் கொழும்பு நகரம் எங்கும் கொண்டாட்டம். போக்குவரத்தில் ஏகப்பட்ட திண்டாட்டம். வண்டி சில இடங்களில் மெதுவாக ஊர்ந்தது. அதற்கு ஏற்ப பராக்கு பார்க்கக் கூடியதாக சனம் அலை மோதியது. கூத்துக்கள்… கேளிக்கைகள்… கண்களுக்குக் குளிர்ச்சியான கொண்டாட்டம் அது. புத்தரைக் கொண்டாடினாலும் அவர் எதைச் சொன்னார் என்பது தற்போதைய உலகின் காதில் ஏறாதவை. இலங்கை அவரின் தத்துவத்தைப் புரட்டிப்போட்டதான வரலாற்றைக் கொண்டது.

கவிதைக்கண்ணன் பராக்குப் பார்க்கும் மனநிலையில் இல்லை. அவளை விட்டு பிரியப் போகும் கவலை அவனை உலுப்பியது. அவள் என்ன எண்ணுகிறாள் என்பதை அவனால் அறிய முடியவில்லை. அவள் கலகலப்பை இழந்து, சுவாரசியம் அற்று இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அன்று அவள் அதிகம் நெருங்கியும் இருக்கவில்லை. ஏதோ பறிகொடுக்கப் போவதான ஒரு பாங்கு அவளிடம். தங்கள் உறவுக்கு என்ன நடந்தது என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை.

அவற்றை எல்லாம் மீறிச் சிறிது நேரத்தில் அவள் நிம்மதியாகக் குறட்டைவிட்டாள். எப்படி இவளால் என்று எண்ணிய போது கவிதைக்கண்ணனுக்குச் சினம் பீறிட்டது. போகும் போது தனிமையில் இப்படித்தான் குறட்டைவிடப் போகிறாளா என்பதை எண்ண அவனுக்கு ஒருவித அருவருப்பாகிற்று. பின்பும் இது மனித இயல்புதானே? தான் இருக்கும் துணிவில்தானே அவள் தூங்குகிறாள். தான் இல்லாவிட்டால் அவள் நிச்சயம் முழிப்பாகத்தான் இருப்பாள். அப்படி முழிப்பு இல்லாவிட்டாலும் இப்படிக் குறட்டையாவது விடமாட்டாள் என்று எண்ணிச் சமாதானமாகினான்.

எப்படித்தான் எண்ணினாலும் மனதில் நிம்மதி இருக்கவில்லை. வாகனம் ஊர்ந்து ஊர்ந்தே சென்றது.

ஒருவாறு விமான நிலையத்தை வந்தடைந்ததும் அவள் அனுமதிச்சீட்டு எடுத்துக்கொண்டு உள்ளே வந்தாள். கவிதைக்கண்ணன் அவளைப் பிரிந்து உள்ளே சென்றான்.

மனிதர்களையும் பொதிகளையும் பரிசோதிப்பதற்கு அதிக நேரம் பிடித்தது. அவன் அவளோடு இரு முறை அலைபேசியிற் தொடர்பு கொண்டான். அவள் அதிக நேரம் ஆகும் என்றால் தான் போவதாகக் கூறினாள். அவளில் நிறைய மாற்றங்கள் என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரிந்தது. கவிதைக்கண்ணன் அவளைக் கவனமாகப் போகுமாறு கூறினான். கவிதைக்கண்ணனுக்கு ஜென்சி பாடிய 'இதயம் போகுதே எனையே பிரிந்து…' என்கின்ற அந்த உருக்கமான பாட்டு ஞாபகம் வந்தது. கண்கள் அவனுக்கும் கட்டுப்படாது வெம்மையாகப் பனித்துக்கொண்டன. என்ன வேதனை? என்ன உணர்வு? இதுதானா காதலின் வலு? சிங்கார ஈக்களாய் சிலந்தி வலையில் மாட்டிக்கொள்ளும் பலி நிலை? ஒரு வாழ்வு முடிந்து இரண்டாவது வாழ்வு

தொடங்கிய போதும், உணர்வின் வலுவான இந்தப் பிடியை அவனாற் தாங்க முடியவில்லை. அவள் தன்னைப் போல இப்போது தவிக்கவில்லை என்பதை அவனாற் தெளிவாகப் பார்க்க முடிந்தாலும் அதை ஒத்துக்கொள்ள அவனால் முடியவில்லை. தானே தப்பாக எண்ணுவதாய் அவன் அடிக்கடி சமாதானம் சொல்லிக்கொண்டான். இன்னும் நான்கு மாதத்தில் மீண்டும் வந்து அவளைச் சந்திக்கலாமென அவன் ஆறுதல் அடைந்தான்.

முதல்முறை இலங்கைக்கு வந்து அவளைச் சந்தித்துவிட்டுத் திரும்பி நோர்வேக்கு போகும் போது விமான நிலையத்தில் நின்று பல மணித்தியாலங்கள் அவளோடு அலைபேசியில் கதைத்தான். இம்முறை அவள் பயணம் செய்தாள். இரண்டு நிமிடத்தோடு அந்த நலன் விசாரிப்பு முடிந்து விட்டது. ஏதோ ஒரு வெறுமை... பேசக்கூட எதுவும் இல்லை என்கின்ற வெறுமை. அவளின் துண்டிக்கப்படும் சம்பாசனை. இது கற்பனையா நிஜமா என்பதுகூட அவனுக்குப் புரியவில்லை. இனி எப்போது என்கின்ற தவிப்பு இப்போதே அவனிடம் எழுந்துவிட்ட பரிதாபம். காதல் பிணி. கசியும் மனது. அவன் தனது விமான எண்ணைச் சரிபார்த்துவிட்டுக் கனத்த இதயத்துடன் நடந்தான். கால்களைத் தூக்கிவைக்க முடியவில்லை. கடவுளே! தன்னையும் மீறிச் சொல்லிக் கொண்டான். அவள் அவனுக்காக வெள்ளவத்தைக்குப் பயணித்தாள்.

18

கவிதைக்கண்ணன் காலை எழுந்து தேநீர் அருந்துவதற்குக் கீழே உள்ள சிற்றுண்டிச் சாலைக்கு வழமை போலச் சென்றான். அந்த சிற்றுண்டிச் சாலைக்கு வெளியாட்கள் பலரும் வருவது உண்டு. இன்று காலையும் அப்படி அமைந்துவிட்டது. பணியாளர்கள் வேலைப் பளுவோடு அங்கும் இங்கும் நிலையில்லாது அலைந்தார்கள். பக்கத்து மேசையில் 'ஐபோன்' வைத்திருந்த யுவதி ஒருத்தி தனது கணவனோடோ அல்லது காதலனோடோ தெரியவில்லை 'Skype'இல் கதைத்தாள். அதைப்பார்த்த கவிதைக்கண்ணனுக்குத் தாங்கள் 'Skype'இல் கதைக்க முயற்சித்ததும், விதி அதற்கு எப்படி வேட்டு வைத்தது என்பதும், நினைவில் ஓடத்தொடங்கியது.

அருகருகாக இருந்து அவளோடு பொழுது போக்க முடியாவிட்டாலும் எதிர் எதிரே பார்த்துக் கதைக்கும் வசதியை அவன் யாழ்ப்பாணத்தில் நிற்கும் போது பரிசோதித்துப் பார்த்துவிட்டு நோர்வேக்கு வந்தான்.

அதற்கு இணைய இணைப்பும், 'Skype' சேவையும் தேவையாகிற்று. அவளிடம் கணினி இருந்தமையால் அதில் எந்தவித சிக்கலும் ஏற்படவில்லை.

நோர்வேக்கு வந்தாலும் ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில் அவளோடு கதைக்கலாம் என்பது அவனது ஏக்கத்திற்கான மருந்தாகிற்று.

★

பின்பு நோர்வேக்கு வந்து சேர்ந்ததும் அவளுக்குக் குறும்செய்தி அனுப்பினான். முதலில் இருவரும் ஒரு நாளிலேயே பல குறும்செய்திகள் பரிமாறுவது உண்டு. அதற்குப் பாவித்த 'Sim'ஏ கவிதைக்கண்ணன் அங்கு நிற்கும் போது 'lock'க்காகியது. அதை யாழ்ப்பாணத்தில் 'lock' எடுக்கப் போவதற்குக் கவிதைக்கண்ணன் கேட்டபோது அவள் வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். கொழும்பிலும் அவன் கேட்டுப் பார்த்தான். அப்போதும் அவள் வேண்டாம் என்றுதான் கூறினாள். அவள் இனி அதைப் பாவிக்கமாட்டாள் என்று கவிதைக்கண்ணன் எண்ணினான்.

கவிதைக்கண்ணன் நோர்வே வந்து இறங்கியதும் அதே எண்ணிற்குத் தொடர்பு கொண்டான். அவள் தனக்குப் பொய் சொல்லுகிறாள் என்பது அவனுக்குத் தெரியும். அந்த எண் வேலை செய்தது. தான் கொழும்பில் பகல் சும்மாய் நின்றதாகவும், அந்த நேரத்தில் போய் 'lock' எடுத்து வந்துவிட்டதாகவும் அவள் கவிதைக்கண்ணனுக்குக் கூறினாள். கவிதைக்கண்ணனுக்கு ஏதோ, எங்கோ, என்னவோ என்பதான உணர்வு. அவன் அதற்காக அப்போது மனதைக் குழப்பிக் கொள்ளவில்லை. சாதாரண விடயங்களைத் திரிபு படுத்திக் கவலைப்படக் கூடாதென அவன் எண்ணினான்.

கவிதைக்கண்ணனுக்குக் குறும்செய்திகள் அவள் உள்ளூர் எண்ணுக்கே அனுப்புவாள். 'Dialog' நிறுவனத்தின் இணையச் சேவை அதை கவிதைக்கண்ணனின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கும். அதைப் போல அவன் இணையத்தில் இருந்து அனுப்புவதை அவளது அலைபேசிக்கு அனுப்பிவைக்கும். இதற்கு உள்ளூர் கட்டணமே அறவிடப்பட்டது. இதைப் பயன்படுத்திக் கவிதைக்கண்ணனும் அவளும் ஒரு நாளைக்கு இருபது முப்பது குறும்செய்திகள் பரிமாறியது உண்டு. அது நாளையளவில் குறைந்துவிட்டது. கவிதைக்கண்ணன் அனுப்பிய குறும்செய்திகளுக்கு அவள் சிலவேளைகளில் பதில் அனுப்புவதில்லை. அது அவனுக்கு எரிச்சலைத் தந்தது. அவளிடம் ஏன் பதில் போடவில்லை என்று கேட்டால் தனக்குக் குறும்செய்தியே கிடைக்கவில்லை என்று அவள் பதில் கூறுவாள். அது உண்மையாகவும் இருந்திருக்கலாம். சிலவேளைகளில் 'Java' என்னும் மென்பொருள் மொழியைப் பாவித்து செய்யும் மென்பொருட்கள் ஒழுங்காக இயங்குவதில்லை. தொலைத் தொடர்பு நிறுவனங்கள் அனேகமாக அந்த மென் பொருளையே பயன் படுத்துவது உண்டு. 'Dialog' பயன்படுத்தியதை அவன் அனுபவபூர்வமாகவே கண்டிருக்கிறான். அவள் மற்றவர்களுக்குக் குறும்செய்தி அனுப்பும் அக்கறையில் அவனை மறந்த உண்மையை அவன் எப்படி அறிவான்? சங்கு இடையில் நுழைந்ததால் வந்த வினை இது என்பது அப்போதும் அவனுக்குப் புரியவில்லை. சிலவேளைகளில் அவள் குறும்செய்தியை மாறி அனுப்பிவிட்டு மன்னிப்புக் கேட்பாள். கவிதைக்கண்ணன் உசாராக வேண்டிய இடங்களில் ஒழுங்காகக் கோட்டைவிட்டான்.

விதியின் கை வலியதாக இருக்கலாம். குறும்செய்திகள் ஒரு விடயமாகவே இல்லாது போய் இருக்கலாம். அதற்கு மாறாகவே நடப்பதாக கவிதைக்கண்ணனுக்கு ஒரு வித அந்தரம். தன்னிடம் இருந்து அவளும் அவளிடம் இருந்து தானும் விலகிவிடுவோமோ என்கின்ற பதைபதைப்பு. குறும்செய்திகள் குறைந்து

குறைந்து எப்போதாவது என்று ஆகிவிட்டது. அப்படி இந்த 'Skype'பும் ஆகக்கூடாது என்கின்ற பதைபதைப்பு கவிதைக்கண்ணனிடம். எதுவாய் இருந்தாலும் இருவரும் கதைக்க வேண்டும் என்றுதான் அவர்களுக்கிடையில் ஒப்பந்தம். கவிதைக்கண்ணன் இங்கிருந்து நான்கு மணிக்கு 'Skype'இல் தொடர்புகொண்டால் அங்கு எட்டரை ஆகிவிடும். அப்போது எல்லா வேலைகளும் முடித்துக் கதைப்பதற்கு வசதியாக இருக்கும் என்பது அவர்கள் கண்டுபிடிப்பு.

நோர்வேக்கு வந்த பின்பு மூன்று நாட்கள் ஒருவாறு அவள் 'Skype'இற்கு ஒழுங்காக வந்தாள். முன்பு போல் எந்த நேரத்திலும் நீங்கள் தொலைபேசி எடுக்கலாம் என்கின்ற நிலை இப்போது மாறிவிட்டது என்பதைக் கவிதைக்கண்ணன் உணர்ந்தான். அதை அவள் வெளிப்படையாச் சொல்லாவிட்டாலும், வீட்டுப் போனின் சத்தத்தை மிகவும் குறைத்து வைத்துவிடுவாள். தொலைபேசி எடுப்பவர்கள் அது அடிக்கும் சத்தத்தை மட்டுமே கேட்பார்கள். அவள் தனது அலைபேசிக்கும் அப்படித்தான் ஒலியை மிகவும் குறைத்தே வைப்பாள் என்பதிலும் அவனுக்கு ஏற்கனவே நல்ல அனுபவம் உண்டு. மற்றவர்களுக்குக் கேட்காத அந்தச் சத்தம் எப்படி அவளுக்குக் கேட்கிறது என்பது எப்போதும் கவிதைக்கண்ணனுக்குத் திகைப்பைத் தரும். அதையே அவள் தனது சுயநலத்திற்குப் பயன்படுத்துவாள் என்கின்ற எண்ணம் அவனிடம் இருந்ததில்லை.

அன்று வெள்ளிக்கிழமை. கவிதைக்கண்ணன் இன்று அவளோடு அதிக நேரம் கதைக்க வேண்டும் என்கின்ற அவாவோடு 'Skype'பில் தொடர்பு கொண்டான். அவள் 'Skype'இல் இல்லை. வேலைக்குப் போய்விட்டு வந்த பின்பு, சமைத்துச் சாப்பிட்ட பின்பு தான் அவளுக்கான நேரத்தை ஒதுக்கும் போது, அவளால் ஏன் அப்படிச் செய்ய முடியவில்லை என்பது கோப அக்கினிச் சுவாலையாக அவன் அடிமனதிற்குள் மூண்டது. சரி எதற்கும் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவளை 'Skype'பிற்கு வருமாறு அழைக்கலாம் என்று எண்ணினான். அவன் வீட்டுத் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தினான். தொலைபேசி அடித்த வண்ணம் இருந்ததே தவிர யாரும் அதை எடுக்கவில்லை.

கவிதைக்கண்ணன் பலமுறை அழைத்துப் பார்த்தான். எல்லோரும் தொலைந்து போய்விட்டதான அமைதி. மீண்டும் மீண்டும் அவன் முயற்சி செய்யவும் அதே அமைதி தொடர்ந்தது. அத்தால் அவன் கோபம் உச்சத்தை அடைந்தது. அவன் இலங்கையில் இருந்து வரும் போது 'Blacklabel' வாங்கி வந்தான். கோபத்திலும், இயலாமையிலும், தனிமையிலும், வெறுப்பிலும் அதை எடுத்துப் பருகத் தொடங்கினான். மது அருந்தி வெறி ஏறிவிட்டால் தொலைக்காட்சியைப் பார்ப்பது அல்லது படுத்துக்கொள்வது அவன் இயல்பு. அன்று அதற்கு மாறாக மீண்டும் அவளைத் தொலைபேசியில் தொடர்புகொள்ள எண்ணினான்.

கடவுளில் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். கடவுளில் அளவுகடந்த நம்பிக்கை இருக்கலாம். நாம் எப்படி இருந்தாலும் சில விடயங்கள் எங்களை மீறி நடந்துவிடுகின்றன. அதை விதி என்றுதானே சொல்ல வேண்டும்?

கடவுள் நம்பிக்கையை மீறி, யாரும் விரும்பாத நிகழ்வுகள், எதிர்பாராத விதமாக நடந்துவிட்டால், கவலையோடு யார் மீது பழிபோடுவது என்று சிந்தித்து, கடைசியில் விதியின் மீது பழியைப்போட்டு, அமைதி காண முயல்வது மனித இயல்பு இல்லையா?

கவிதைக்கண்ணன் தானும் விதியை நம்பும் காலம் வரும் என்று எண்ணியவன் அல்ல. அப்படி நடந்தாலும் தங்கள் காதலுக்காய் அவள் பாசக்கயிறு வீசும் யமனோடு தாலிக்கயிறு கொண்டு போராடி, சாவித்திரியை விட வீறாகத் தன்னை மீட்பாள் என்கின்ற கற்பனையில் அவசர அவசரமாகக் கொழும்பில் தங்கத்தில் தாலிக்கொடி வாங்கிக் கட்டினான். நம்பிக்கைகளும் அவநம்பிக்கைகளும் மாறி மாறிச் சுழலத்தான் செய்தன.

விதி அவன் வாழ்விலும் வலுவாகக் குறுக்கிடும் என்கின்ற எண்ணமே அற்றவனாய், அதீத கோபமும், மதுவின் உந்தலும், அவனைப் பிடரி பிடித்துத் தள்ள, அவன் தொலைபேசியில் அவளோடு மீண்டும் தொடர்பு கொண்டான். மது அருந்தாது இருந்தால்கூட அத்தினை முறை காக்க வைத்தமைக்கு அவன் அவளிற்கு முறையாகக் கொடுத்திருப்பான். எல்லாம் சேர்ந்த சுதியின் ஏற்றத்தில் இப்போது இன்னும் வீறு கொண்டான். அவள் அப்போதும் தொலைபேசியை எடுத்திருக்காது விட்டிருக்கலாம். அப்படி என்றால் இன்னும் அதிக கோபமாய் இருந்திருக்கும். அடுத்த அடுத்த நாள் சில வேளை அது காற்றுப் போன பலூன் ஆகியிருக்கும். விதி வலிது. அவள் நினைவு வேறு.

கவிதைக்கண்ணன் இம்முறை முயற்சித்த போது அவள் தொலைபேசியை எடுத்தாள்.

‘பேயன் விசரன் மாதிரி நான் ரெலிபோன் அடிச்சுக்கொண்டு இருக்கிறன். நேற்று உனக்கு இந்த ரைமுக்கு போன் எடுப்பன் எண்டு சொல்லி இருந்தன். அப்பிடி இருந்தும் நீ ஸ்கைப்புக்கு வரேல்ல. ரெலிபோனும் எடுக்கேல்லை. அப்ப நான் ஒரு பேயன் விசரன் இங்க இருந்து போன் பண்ணிக்கொண்டு இருப்பன். நீங்கள் என்ன வேணும் எண்டாலும் செவியள்? எல்லாம் மாறிப் போச்சுது. உனக்கு இப்ப நான் தேவையில்ல. அப்பிடித்தானே? அதிலதானே இந்த அசண்டையீனம்?’

கவிதைக்கண்ணன் கோபத்தில் அதிக சத்தமாகக் கத்தினான். அவள் அதை எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. அதற்காக அவள் விட்டுக்கொடுத்துப் பேசுபவளாகவும் இல்லை. பிழை செய்தாலும் அவள் வாய் நீண்டு கொண்டே போவதாகக் கவிதைக்கண்ணன் எண்ணினான்.

‘எனக்குக் கேட்கேல்லை. கேட்டாத்தானே எடுக்கிறது. ஏதோ லையின் பிழையாக்கும்.’ என்று தனக்குக் கைவந்த கலையை அவள் பாவித்தாள். கவிதைக்கண்ணனுக்குக் கோபம் அடங்கவில்லை. அவள் சொல்வது எல்லாம் பொய் என்றே தோன்றியது.

‘எப்பிடி கேட்காமல் போகும்? நீ மொபையில் மாதிரிச் சத்தத்தைக் குறைச்சு வைச்சுருப்பா. அதுதான் கேட்கேல்லை.’ என்று கத்தினான்.

‘சரி அப்பிடியே நினைச்சுக் கொள்ளுங்கோ?’ என்றாள் அவள்.

‘என்ன சரி? என்னத்தை அப்பிடியே நினைக்கிறது? உனக்கு இப்ப என்ன பிரச்சனை? உனக்கு வரவர என்னைப் பிடிக்காமல் போகுது போல. நான் உங்க வந்து நிக்கேக்க உனக்கு இப்ப என்மேல காதல் இல்லை எண்டுறா. இரண்டாவது முறை கொழும்புக்கு வரேக்க இருந்த சுமதா இல்லை நீ. நீ இப்ப நிறைய மாறீட்டா. உன்ர மனதில என்னவோ இருக்குது. யாரோ அதுக்க பூந்திட்டினம் போல…’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘என்ர மனதில ஒண்டும் இல்லை. அதுக்க யாரும் பூரவும் இல்லை. நீங்கள்தான் மாறிப்போயிட்டியள்.’ என்றாள் அவள். போட்டியாக அவளும் கத்தினாள். கவிதைக்கண்ணனுக்கு இருந்த கோபத்தில் அவனால் அதை முழுமையாகக் கிரகிக்க முடியவில்லை. அவள் பிழையும் செய்துவிட்டு, கோபமாக எதிர்த்தும் பேசுவதாக எண்ணிய கவிதைக்கண்ணனுக்கு இன்னும் அதிக கோபம் வந்தது.

‘உது சரிவராது. நீ இப்பிடி வாய் காட்டுவாய் எண்டு எனக்கு முதல்ல தெரியாது. நீ கொழும்பில இருந்ததிற்கும் இப்ப இருக்கிறதுக்கும் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம். எது நிஜம் எது பொய் எண்டு விளங்கேல்லை. உனக்கு என்னோடை கதைக்கிறதுக்குக்கூட நேரம் ஒதுக்கேலாது எண்டா, இந்த உறவு எதுக்கு? பேசாமல் தாலிக்கொடியை கழட்டித் தா. நாங்கள் எங்கடை உறவை முடிச்சுக் கொள்ளுவம்.’ என்றான். அதன் தாக்கம் என்ன என்பது அவனுக்கு அப்போது புரியவில்லை.

சொல்லக்கூடாத அந்தவசனம்…

அந்த வசனத்தைச் சொல்லிய பின்பே தான் ஏன் அந்த வசனத்தை அவளுக்குச் சொன்னேன் என்று கவிதைக்கண்ணன் கவலைப்படத் தொடங்கினான். மது வெறியைவிடக் கோப வெறி மிகவும் மோசமானது. அது நாக்கின் பண்பை இளக்கப் பண்ணுகிறது. அவளும் பண்பற்ற சொற்களால் திட்டுவது இன்னும் அதிக கோபத்தை அவனுக்குத் தருகிறது. அவள் தப்பே செய்திருந்தால்கூட ஒரு பெண்ணிடம் கேட்கக்கூடாத ஒரு பொருளைக் கேட்ட உணர்வு கவிதைக்கண்ணனுக்கு ஏற்பட்டது. அவள் கவிதைக்கண்ணன் கேட்டதை தாயிடமும் சொல்லி முறையிடுவது அவனுக்குத் அலைபேசியில் கேட்டது.

கவிதைக்கண்ணனின் கோபம் அத்தோடு அடங்கிப் போய்விட்டது. அவன் அவளிடம் தான் அப்படிக் கேட்டதிற்கு மன்னிப்பு கேட்டான். அவள் அதை பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

‘இப்பிடிக் கேட்டபிறகு எங்களுக்குள் என்ன உறவு வேணும்?’ அவள் எப்படிக் கேட்பது என்று தயங்கியதைக் கேட்பதற்கு இப்போது சந்தர்ப்பம் வந்தது.

கவிதைக்கண்ணன் மீண்டும் மீண்டும் அவளிடம் மன்னிப்புக் கேட்டான். அவளும் சிறிது நேரத்தில் சமாதானமானாள். நாளை 'Skype'க்கு வா கதைப்போம் என்றுவிட்டுக் கவிதைக்கண்ணன் அலைபேசியைத் துண்டித்தான்.

கவிதைக்கண்ணனுக்கு தான் அதிகம் விட்டுக்கொடுப்பதான உணர்வு ஏற்பட்டது. அவன் அவளது மின்னஞ்சலுக்கு நான் தொலைந்து போகிறேன் என்றொரு செய்தியைக் கோபத்தில் அனுப்பினான். அலைபேசிக்கு அவள் எண்ணில் இருந்து அழைப்பு வராது தடை செய்தான்.

அடுத்த நாள் அவள் 'Skype'இற்கு வந்துவிட்டு ஏன் நீங்கள் வரவில்லை என்று கேட்டு மின்னஞ்சல் கவிதைக்கண்ணனுக்கு அனுப்பியிருந்தாள். அதற்கு அடுத்த நாள் கவிதைக்கண்ணன் காத்திருந்தான். அவள் வரவில்லை. அதன் பின்பு கவிதைக்கண்ணனுக்கு அவளோடு 'Skype'இல் கதைக்கலாம் என்கின்ற நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. அவளும் 'Skype'இக்கு வரவில்லை. பின்பு இணைய இணைப்பை அவள் துண்டித்திருக்க வேண்டும் என்பது கவிதை கண்ணனுக்குப் புரிந்தது. அவள் அப்போதே புது வாழ்விற்குள் புகுந்துவிட்டது புரியாது கவிதைக்கண்ணன் காதல் சோகத்தில் தொடர்ந்தும் வாடினான்.

நாட்கள் நகர்ந்தன. சோகம், பிரிவு, ஏக்கம், கோபம், பிடிவாதம் என்கின்ற உணர்வுகள் அவனைப் பந்தாடின. அன்று கவிதைக்கண்ணன் அவளை அலைபேசியில் தொடர்பு கொண்டான். தனக்கு விவாகரத்து வந்துவிட்டதாய் அவளிடம் அவன் கூறினான். அவள் அதை எதிர்பார்க்கவில்லை என்பது புரிந்தது. விவாகரத்து கிடைத்ததிற்காய் அவள் சந்தோஷப்படுவாள் என்று எண்ணியிருந்த கவிதைக்கண்ணனுக்கு அவளின் ஆச்சரியத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் அவனிடம் 'உண்மையாகவா?' என்று கேட்டாள். கவிதைக்கண்ணனுக்கு எரிச்சல் வந்தது. 'இதிலும் யாராவது பொய் சொல்லுவினமா?' என்று அவன் திருப்பிக் கேட்டான். அவள் அதற்குப் பின்பு அதிக நேரம் அவனோடு கதைக்கவில்லை. நான் வைக்கிறன் என்று கவிதைக்கண்ணனிடம் கூறினாள்.

கவிதைக்கண்ணன் சரி என்றுவிட்டு மனமில்லாது அலைபேசியைத் துண்டித்தான்.

அவள் இப்போது புது முறை ஒன்றைத் தொடங்கி இருக்கிறாள் என்பது கவிதைக்கண்ணனின் அனுபவம். இப்போது அவன் அலைபேசி எடுத்தாலும் அவள் அதிக நேரம் கதைப்பதில்லை. இரண்டு நிமிடங்கள் கதைத்தவுடனேயே வைக்கிறன் என்று சொல்லுவாள். அப்படிச் சொல்லும் போது கவிதைக்கண்ணனுக்கு இதயமே வலிக்கும். எதற்காக அவள் அப்படிச் சொல்லுகிறாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. ஒரு காலத்தில் அலைபேசியில் தொடர்பு கொண்டால் அவளாக வைப்பதில்லை. கவிதைக்கண்ணனும் அதிக நேரம் கதைப்பான். 'இப்பிடித் தொடர்ந்து ஒரே நாளில கதைக்காமல், கொஞ்சம் கொஞ்சமாய் ஒவ்வொரு நாளும் கதையுங்க அப்பா.' என்று அவள் கெஞ்சியது உண்டு. அதில் அன்பும், கரிசனையும் வழிந்தன அன்று. இப்போது வைக்கிறேன் என்கின்ற தகவல் மாத்திரம் அவசரமாக வருகிறது. நீ என்ன நினைத்தால் எனக்கு என்ன என்கின்ற அகங்காரம் அதில் தொனிக்கிறது. நீ யாரோ நான் யாரோ என்பதான இடைவெளி தெரிகிறது. கவிதைக்கண்ணனின் சொல்லிற்கு கடுகளவும் மதிப்பிருப்பதில்லை என்பது புரிகிறது. அவள் 'வைக்கிறன்' என்று சொல்வதில்கூடச் சற்றும் கனிவு இருப்பதில்லை. எதற்காக இப்படிச் செய்கிறாள் என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரிவதில்லை. மெல்ல மெல்லத் தன்னைப் புறக்கணிக்க முயல்கிறாளோ

என்கின்ற சந்தேகம் முளை விட்டுப் பயிரானது. அது அவன் மனதைக் குடைந்தது. மரண வேதனை தந்தது. 'கடவுளே அப்படி ஏதும் நடக்கக்கூடாது.' என்கின்ற அவன் இயலாமையின் கெஞ்சல் மெல்ல அவன் சுயத்தை விழுங்கிற்று.

சண்டை பிடிப்பதும் சமாதானம் ஆவதும் காதலிக்க தொடங்கிய காலத்தில் இருந்து நடைபெற்று வருவதுதானே என்பது அவன் எண்ணம். அப்படி இருக்க இப்பொழுது தன்னை புறக்கணிப்பது போலச் செய்வதின் நோக்கம் என்ன என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. புறக்கணிப்பு ஒருபுறம் இருக்க, அதை அறிந்து கொள்வதால் உண்டாகும் வலி மறுபுறம் அவனைக் கொடுமையாக வதைத்தது. 'தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்' என்கின்ற பட்டினத்தாரின் வரிகள் புரியலாகிற்று. தனக்கென்று வரும்போது மட்டும்தான் அதன் தாக்கம் முழுமையாகப் புரிகிறது. கவிதைக்கண்ணன் மன அமைதி இன்றி வேதனையில் துடித்தான். மனதில் இவ்வளவு வேதனை இருக்கிறது என்று யாரிடமும் அவனால் சொல்ல முடியாது. யாரும் அறிந்து கொள்ளாத இரகசியமாய் அவன் அவள் மீது கொண்ட காதல் அவன் அடிமனதில் கல்லாகப் புதைந்து கிடந்தது. யாரும் அறியாத அந்தக் கவலை அவன் இதயத்தை நாளும் ருசி பார்த்தது.

ஏதோ விரிசல் தங்கள் உறவுக்குள் புகுந்துவிட்டது என்பதை அவனால் உணர முடிந்தது. அதை அவளிடம் கேட்பதற்கு அவனுக்குத் தயிரியம் இருக்கவில்லை. கேட்டு அவள் விரிசல் உண்மைதான் என்று ஒப்புக்கொண்டால் அந்த வேதனையைத் தாங்க முடியாது என்கின்ற எண்ணம் அவனைப் பயமுறுத்தியது. அந்த அபாயத்தைவிட அவளிடம் கேட்காமல் இருப்பதே மேல் என்று அவன் எண்ணினான். இப்படி எத்தனை நாட்களுக்கு மர்மங்களைச் சுமந்துகொண்டு அவனால் வாழமுடியும் என்பதும் அவனுக்குப் புரியவில்லை. ஒரு நாள் கேட்டுவிடவேண்டும். தான் கேட்பதை அவள் கெஞ்சுவதாகக்கூட எண்ணலாம். எண்ணினால் என்ன? அவள் மீது இருந்த மயக்கத்தில் கெஞ்சுவதற்குக்கூட அவன் கூச்சப்படவில்லை. அவள் தன்வாழ்வில் இல்லை என்கின்ற கணங்கள் இல்லாது போக வேண்டும் என்பதே அவன் குறிக்கோள். அது நிறைவேறாத இடத்துத் தான் இல்லாது போதல் மேல் என்கின்ற வெறி அவனிடம். அந்த எண்ணம் உள்மனதில் கொதியோடு உறுமிக்கொள்கிறது.

அவள் ஏற்கனவே மூன்று 'Sim Card' வைத்திருந்தாள். சண்டை பிடித்த பின்பு அதில் எந்த எண்ணும் வேலை செய்வதில்லை. கவிதைக்கண்ணன் வீட்டுப் போனிற்கு அழைப்பான். அதுவும் சிலவேளை இரண்டு வசனம் கதைத்துவிட்டு வைக்கிறேன் என்பாள். சிலவேளை குரலைக் கேட்டுவிட்டுத் தொலைபேசியைத் தயவு தாட்சண்ணியம் இல்லாது துண்டித்துவிடுவாள். கவிதைக்கண்ணன் பலமுறை தொடர்புகொண்டு பார்ப்பான். அவள் அதை எடுக்கமாட்டாள்.

கவிதைக்கண்ணனுக்குப் போதும் என்றாகிவிட்டது. இதயம் ஓயாது வலித்தது. இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்று எண்ணினான். அந்த முடிவை தாங்கிக் கொள்ளும் திராணியற்றவனாய்த் துடித்தான். என்ன செய்வது? என்ன செய்வது? அவனுக்கு எதுவும் புரியவில்லை. இந்த அல்லாட்டத்திலும் பார்க்கத் தற்கொலை மேலானது என்கின்ற எண்ணமும் எழுந்தது. எழுந்த வாக்கில் அது மீண்டும் விழுந்தது. கவிஞனான தான் தற்கொலைக்கு உதாரணமாகக்கூடாது என்கின்ற வாதம் மீண்டும் வென்றது.

அவன் தனிமையில் கண்ணீர் விட்டான். படுக்கையில் கண்ணீர்விட்டான். அலுவலகத்தில் கண்ணீர்விட்டான். இருந்தும் வேதனை குறையவில்லை. விரக்தி கூடியது. தன்னை உயிர் என்று சொல்லியவள் தன்னோடு தொலைபேசியில் கதைக்க மறுக்கிறாள். அவனால் அதைக் கடுகளவும் நம்பமுடியவில்லை. வேதனை தாங்க முடியவில்லை. பெண்கள் எதன் அடிப்படையில் உறவை ஏற்படுத்துகிறார்கள்? அன்பு செலுத்துகிறார்கள்? பின்பு அதை முறித்துக் கொள்கிறார்கள்? அதில் காதலுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லையா? கவிதைக்கண்ணனுக்கு அவள் விடையில்லாத குறுக்கெழுத்துப் படிவமான குழப்பமாகிற்று.

இப்போது தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போதெல்லாம் அவள் இடையில் துண்டித்து விடக்கூடாது என்பதே அவன் வேண்டுதல் ஆகிவிடும். அவள் ஒரு காலத்தில் அவனுக்காகப் பழி கிடப்பதாய் காட்டிக் கொண்டவள். இப்பொழுது அவள் தொலைபேசியைத் துண்டிக்கும் போதெல்லாம் இரத்த அழுத்தம் ஏறுவதை அவனால் உணர முடிகிறது. அவள் பழி வாங்குகிறாள். உயிரையே விடுவேன் என்ற காதலி இன்று தெரிந்தே உயிரை எடுக்கிறாள். பெண்களே அப்படித்தானா? அதை எண்ண அவனுக்குக் கண்ணீர் கரைபுரளும். பெண்மீது உண்டான காதல் இவ்வளவு வேதனையைத் தருமா என்கின்ற கேள்வி தொடர் அலையாக அவனைத் தாக்கும். என்ன காரணத்திற்காய் அவள் இப்படி எல்லாம் நடந்து கொள்கிறாள் என்பதை அறிந்து கொள்ளும் முடிவோடு அன்று அவன் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தினான்.

'கலோ!'

'கலோ!'

'தயவு செய்து ரெலிபோனைக் கட்பண்ணாத. முழுசாக் கதைச்சுப்போட்டு வை. மனிசர் ரெலிபோன் எடுத்தாக் கதைக்கோணும். உனக்கு என்னோட கதைக்கிறதுக்கு என்ன பயம்? அதுவும் ரெலிபோனில கதைக்கிறதுக்கு யார் பயப்பிடுவினம்?' என்றான் கவிதைக்கண்ணன்.

மறைப்பவர்களுக்குத்தான் பயம் இருக்க வேண்டும். அவள் எதையாவது, யாருக்காவது மறைக்கிறாளா? கவிதைக்கண்ணனுக்கு குழப்பம்தான் மிஞ்சியது.

'சரி என்ன விஷயம்?' என்றாள் அவள். அதில் தயவு இல்லை. பதிலாக அவசரம் மட்டுமே இருந்தது.

'ஏன் நீ ரெலிபோனில ஒழுங்கா கதைக்கிறாய் இல்லை? நீ என்ன அவொய்ட் பண்ணப் பாக்கிறியா?'

'விளங்குதுதானே. பிறகேன் தொல்லை பண்ணுறியள்?' என்று அவள் சம்மட்டியால் அவனின் தலையில் போட்டாள்.

'நான் உன்னைத் தொல்லை பண்ணுறனா? என்ன நடந்தது உனக்கு? ஏன் இப்பிடிக் கதைக்கிறா? சும்மா மனசப்போட்டுக் குழப்பாமல் அலுவலச் செய்து கொண்டு நீ இங்க வா?' என்றான் கவிதைக்கண்ணன்.

'நான் உங்க வரேல்லை?'

'சும்மா பகிடி விடாத.'

'உண்மையாத்தான் அப்பா சொல்லுறன்.'

'உனக்கு என்ன நடந்தது? நீ ஏன் இங்க வரமாட்டா?'

'பிடிக்கேல்லை எண்டா விடுங்களன். நான் வரேல்லை.'

ஒவ்வொரு நாளும் கற்பனையில் அவளோடு கவிதைக்கண்ணன் குடும்பம் நடத்துகிறான். அவள் தனது வீட்டில் வசிப்பதான பிரமையில் அவன் வாழ்கிறான். அந்தக் கற்பனைக் குடும்பத்தில் அவளோடு உண்டு, உலாவி, மகிழ்ந்து, புணர்ந்து, உறங்கி வாழ்கிறான். அவளும் அதற்கு நிறையவே தீனி போட்டாள். தற்போது தயவு தாட்சணியம் இல்லாது மாற்றிக் கொள்கிறாள். அவன் அவளோடு எப்படி எப்படி எல்லாம் வாழவேண்டும் என்று கற்பனை செய்திருக்கிறான்? அவளுக்காக விவாகரத்து, புது வீடு கொள்முதல், அதற்கான தளபாடங்கள் என்பதாக நிறையச் செலவு செய்திருக்கிறான். அதன் பொருளாதாரச் சுமை பற்றிக்கூட அவளுக்குச் சிறிதும் அக்கறை இல்லை. இரக்கம் இல்லை. கடையில் 'Biscuit' வாங்குவதான அவள் பாவனை அவன் மனதை ரணப்படுத்தியது. காலை எழுந்து ஓய்வின்றி வேலை வேலை என்று ஓடிச் சேர்த்த பணம் அது. வெளிநாட்டுப் பணத்தை உள்நாட்டில் மாற்றிச் செலவு செய்பவர்களுக்கு அதன் அருமை தெரியாது.

இருந்தும் அவள் இல்லாத ஒரு வாழ்வை அவனாற் கற்பனை செய்ய முடியவில்லை. கொழும்பில் அவளும் அப்படித்தான் கதைத்தாள். பெற்றதாயோடு, கூடப்பிறந்த சகோதரத்தோடு, சொந்த மகளோடு உள்ள உறவுக்கும் உங்கள் உடனான உறவுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது என்று அவனிடம் சத்தியம் செய்தாள். நிறைய வித்தியாசம்தான்.

அது என்ன வித்தியாசம் என்று அப்பாவியாக கவிதைக்கண்ணன் அப்போது கேட்டான். அதற்கு அவள் 'ஊனோடு ஊன் கலக்கும் ஒரே ஒரு உறவு இதுதான்.' என்றாள். ம்… ஊனோடு ஊன் கலக்கும். விந்து போய் கருவில் சங்கமித்து அது பிரியும். வளரும். பிறக்கும். ஊனோடு ஊன் சேர்ந்து இன்னொரு ஊன் உருவாகும். அன்று கவிதைக்கண்ணனுக்கும் அது நூறு வீதம் பொருத்தமாகவே தோன்றியது. ஊனோடு ஊன் கலக்கும் இந்த உறவுதான் சிலவேளை இலகுவாக விலகியும் போய்விடும் என்பதை அவன் அன்று புரிந்து கொள்ளவில்லை. இச்சை தீர்ந்தபின் அச்சம் போனபின், இன்னும் ஒன்று தேடுவது போல. தான் தேடியது போல… ஊனோடு ஊன் கலக்கும் உறவு உயிரையும் எடுக்கும் போல? என்பதாக எண்ணிய கவிதைக்கண்ணனுக்கு நெஞ்சு எரிந்தது.

இன்று அப்படி ஒரு நிலை வந்ததா? அவனால் அப்படிக் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. அதைக்கேட்டாலே மயக்கம் வந்துவிடும் போல்த் தோன்றியது. உறவுகள் பிரியும் போது பலரைக் காயப்படுத்துகின்றன. சில கல் நெஞ்சங்கள் மாத்திரம் கலங்காமல் தேறுகின்றன. அல்லது புதிய உறவைத் தேடியதால் திமிறுகின்றன.

இராமன் காட்டிற்குப் போக தசரதன் மயங்கி விழுந்தான் என்பதையும், அவன் அப்படியே மாண்டான் என்பதையும் ஒருவித ஐயத்தோடு கவிதைக்கண்ணன் கிரகித்த காலம் உண்டு. அது சாதாரண தரப் பரீட்சைக்காகக் கம்ப இராமாயணம் பயின்ற வேளை ஏற்பட்ட இலக்கிய அனுபவம். ஆரம்பச் சுவை. புத்திர சோகம் தந்தையின் உயிரைக் குடிக்கும் கம்பனின் காட்சி விரிவு. தசரதன் மாண்டான். இராமன் காடேகினான். புணர்ந்த சோகம் இன்றிக் கைகேகி மனம் மகிழ்ந்தாள். ஊனோடு ஊன் கலந்தது. கழிந்தது. வந்த ஊனுக்காய் தந்த ஊனை வதைத்தது. மகிழ்ந்தது.

இன்று புணர்ந்த சோகத்தால் மயக்கம் வருவதை கவிதைக்கண்ணனால் உணர முடிந்தது. புத்திர சோகம் எவ்வளவு உண்மை என்பது அவனுக்குப் புரிந்தது. அதைவிட உண்மையானது தனது சோகம் என்கின்ற உத்தரிப்பை அவன் உணர்ந்தான். பெண்கள் ஊனிற்குள் ஊன் இழுக்கும் கணவாய்களான தோற்றம் அவன் மனதில் விரிந்தது. சுகத்தை, விந்து கழியும் கணத்தை, மூச்சும் உதடும் கலந்த காந்தலை, சிற்றின்பத்தில் உலகை மறந்த கணங்களை, அவள் எவ்வளவு தந்தாள்? இன்று அவளே உயிரையும் பறிப்பாளோ என்கின்ற பரிதவிப்பு அவனுக்கு ஏற்பட்டது. ஊனோடு ஊன் கலக்கும் இந்த உறவுக்கு அந்த வல்லமை உண்டு என்பது அவனுக்குப் புரிந்தது.

கவிதைக்கண்ணன் வேதனையில் முகத்தைச் சுளித்தான். சோபாவில் சாய்ந்து இருந்தான். வேதனையை அவளுக்குச் சொல்லிப் புரியப் போவதில்லை. எதுவும் ஏறாத வைரமாக அவள் நெஞ்சம். இரக்கம் என்பதே இனி இல்லை என்பதாக அவள் சொற்கள். நரகம் எது என்பது அவனுக்குப் புரியத்தொடங்கியது. புழுக்களாய் நெளியும் வேதனை அவன் மனதெல்லாம் ஊரத் தொடங்கின. நித்திரை கொள்ளாத இரவுகளும், நினைவே நிறைந்த பகல்களும் அவளுக்குப் புரியப் போவதில்லை. இந்த இரணத்தை அவன் தன்னோடு மட்டும் வைத்துக்கொண்டு மேலும் அவளோடு கதைத்தான்.

‘இதை நீ முதல்ல யோசிச்சிருக்கோணும். ஆசை வளராமல் அப்பவே தடைபோட்டிருக்கலாம். இவ்வளவு காலமும் நிறையக் கற்பனைகளை வளர்த்தபிறகு, எங்களுக்கா வீடு வாங்கின பிறகு, டிவோர்சே வந்த பிறகு, இது என்ன கதை கதைக்கிறாய் நீ? ‘ என்றான் கவிதைக்கண்ணன்.

‘சரி இவ்வளவும் நடந்திட்டுது. இப்ப என்ன வீடுதானே வாங்கீங்கள்? அது நல்ல விலைக்கு விக்கலாம் தானே? உங்களுக்கு அதிலும் நல்ல காசு வரும். நான் வரேல்லை. இதுக்கு மேலையும் நான் இதை இழுக்க விரும்பேல்லை.’ என்றாள் அவள்.

‘நீ என்ன சொல்லுறா? நீ இப்பிடி எல்லாம் பேசாத செல்லம். என்னால இதைத் தாங்க முடியாது. நீ என்னக் கொல்லப் போறியா? இதுக்குத்தான் காதலிக்கிறன் எண்டு சொன்னியா?’ என்றான் கவிதைக்கண்ணன்.

‘அதுக்கு இப்ப நான் என்ன செய்யிறது?’ என்று கேட்டாள் அவள்.

‘குழம்பாமல் இரு. இங்க வா.’ என்றான் கெஞ்சலாகக் கவிதைக்கண்ணன்.

'யோசிப்பம். நீங்கள் பேசாமல் வீட்டை விக்கிறது தானே? சரி யாரோ வார மாதிரி இருக்குது. நாளைக்கு எடுங்க கதைப்பம்.' அவள் கவிதைக்கண்ணின் பதிலை எதிர்பார்க்காமல் அவசரமாகத் தொலைபேசியைத் துண்டித்தாள். யாருக்காகவோ பயப்படும் உறவுதான் இது. அவன் பயப்பட்ட போது அவள் கோபித்தாள். அவள் பயப்படும் போது தொலைபேசியைத் துண்டித்தாள். இப்போது யாரோடு கவிதைக்கண்ணன் கோபித்துக் கொள்வது? அவனுக்கு இதயம் வலித்தது.

கவிதைக்கண்ணனுக்கு மனம் கேட்கவில்லை. அதற்கு பின்பும் ஒரு முறை தொடர்புகொண்டு பார்த்தான். அவள் எடுக்கவில்லை. இப்படி ஒரு உறவு இருக்கிறது என்பதை மறைப்பதில் மட்டும் அவள் ஏகப்பட்ட கவனம் எடுத்துக்கொள்கிறாள் என்பதின் நீண்ட தொடர் இது.

கவிதைக்கண்ணனுக்கு வேதனை, கோபம், ஏக்கம், சோகம், அத்தால் விளைந்த கைகால் நடுக்கம். அவனுக்கு அழுகை வந்தது. ஆண்கள் அழுவதில்லையா? காதலித்து, அந்தக் காதலி கிடைக்கமாட்டாள் என்கின்ற ஏக்கம் வரும் போதும் ஆண்கள் அழுவதில்லையா? அழுவார்கள். நிறையவே அழுவார்கள். கவிதைக்கண்ணனுக்கு அழுகை வந்தது. இந்த வேதனே வேண்டாம் என்கின்ற எண்ணம் வந்தது. தான் ஒரு கவிஞன் என்கின்ற நினைவு மீண்டும் பிடரி தட்டியது.

கவிதைக்கண்ணனுக்கு எதுவும் செய்யத் தோன்றவில்லை. சாப்பிடக்கூட மனம் ஏகவில்லை. அவன் போய்ப் படுத்தான். சத்தமில்லாது அவன் கண்ணீர் தலையணைக்குள் சங்கமமாகியது. ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்பதை உணர்ந்து கொண்டாலும் அவள் மீது கொண்ட நேசம் தொலைந்து போக மறுத்தது. இன்று அவன் இருப்புப் பற்றியோ அல்லது இறப்புப் பற்றியோ அக்கறை இல்லாது அவள் கதைப்பதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவு இவ்வளவுதான் என்பதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காதல், காதல் என்று ஜெபித்து வந்தவன் மனதில் வேதனை மாத்திரம் அழியாப் புழுவாய் மிஞ்சின. அவை இடைவிடாது குடைந்து கொண்டு நெளிகின்றன. சுயம் என்னும் ஊனை உண்ணுகின்றன. அவஸ்தை தருகின்றன. இனி என்பதை எண்ணவே அவனுக்குப் பிடிக்கவில்லை. 'நாளைக்குக் கதைக்க வேண்டும். இந்த உறவை எந்தக் காரணத்திற்காகவும் முறிந்து போக விடக்கூடாது.' என்று மீண்டும் அவன் எண்ணினான். வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது. ஏறும். இறங்கும். மீண்டும் ஏறும். பெண் சிலந்தி அவள் என்று புரியாத பேதைமையினால் இது சாகும்வரை தொடரும்.

★

விடிந்ததும் விடியாததுமான பொழுது. கோடைக்காலம் முடிந்ததால் விடிந்தும் இருள் உறவாடும் காலைப் பொழுது. கவிதைக்கண்ணன் வேலைக்குச் சென்றான். காதல் கொள்வது வேதனைக்கு முற்பணம் கொடுப்பதான வேலை. அவனுக்கு நெஞ்சாங் கூட்டிற்குள் நீர் வறண்ட அவதி. அவளோடு கதைக்க போவது என்றால் ஒரு காலத்தில் சந்தோஷப் பரபரப்பு. இன்று அவள் என்ன செய்வாள், என்ன சொல்வாள் என்கின்ற அவஸ்தையான திகைப்பு. பல நேரங்களில் அவள் அலைபேசியைத் துண்டித்துவிடுவாள். அவளுக்கு அதைச்செய்வது இலகுவாக இருந்திருக்கும். கவிதைக்கண்ணனுக்கு இதயம் புண்ணாய் நோகும். அவளா செய்தது என்பது அவனை ஏரியாய் உண்ணும். மாரடைப்பு வந்து விடுமோ என்கின்ற பயம் மேலேகும். இரகசியம் காத்த உறவிது. இப்படி ஒரு உறவு கௌரவக்கேடு என்பதில் எல்லோரிடமும் ஒருவித ஒற்றுமை.

இந்த உறவுக்காக எதையும் இளக்கலாம் என்று எண்ணி அதை முழுமையாக நம்பியவன் கவிதைக்கண்ணன். அவன் என்றும் தனியனே. அவளும் அப்படித்தான் கூறினாள். அப்படி அன்று கூறியவளா இன்று இப்படி மாறினாள்? சொற்கள் மனதில் இருந்து வந்திருந்தால் மாற்றம் என்னும் அலைகள் அடித்துச் சென்றிருக்க முடியாது. நாடகம் என்பதை நம்பாத கவிதைக்கண்ணன் இன்னும் இந்த உறவு நீடிக்கும் என்கின்ற நம்பிக்கை நிறைந்த மனதோடுதான் வாழ்கிறான். அவன் வாழ்விற்கு அது தேவைப்படுகிறது. அந்த நம்பிக்கைக்குக் குந்தகம் விளைவிப்பது போல அவள் ஏதும் சொல்வாளோ என்பதை எண்ண அவனுக்கு நெஞ்செல்லாம் புண்ணாக நொந்தது. குளிரிலும் குப்பென்று வியர்த்தது.

சுரங்கரத நிலையம் இருட்டிடம் இருந்து விடுபடத் திமிறிய அந்த அதிகாலைப் பொழுது. கவிதைக்கண்ணன் சற்று வெள்ளனவே அங்கு வந்துவிட்டான். தனது அலைபேசியை எடுத்து அவளோடு தொடர்பு கொண்டான். நெஞ்சிற்குள் ஏதோ செய்தது. மயக்கம் வருமோ என்கின்ற பயம் பீரிட்டது. நோயா? சாவா? விடுதலையா? அல்லது பிணியான இம்சையா? ஏன் இதற்குள் மாட்டிக்கொண்டேன் என்பது அவனுக்குப் புரியவில்லை. அலைபேசி மறு முனையில் உயிர் பெற்றது. இந்த முனையில் கவிதைக்கண்ணனின் உயிர் போவதான அவஸ்தையில் அல்லாடினான். கால்கள் வலுவில்லாது தள்ளாடின. வாழ்க்கை திசையில்லாது தடுமாறியது.

'கலோ… என்ன யோசிச்சியா…?'

'ம்… நான் வரேல்லை.'

'அப்பிடிச்சொல்லாத… பிளீஸ்.'

'வரேல்லலையெண்டா விடுங்களன்?'

'எப்பிடிச் சுமதா உன்னால இதைச்சொல்ல முடியுது? இதைச் சொல்லுறதுக்கா இவ்வளவு காலமும், இவ்வளவு இழப்புகளையும் தாங்கினது? பிளீஸ் பகிடிக்கும் இப்பிடிக் கதைக்காத.'

'நான் பகிடிக்குக் கதைக்கேல்ல. சீதியஸ் ஆகத்தான் கதைக்கிறன்.' என்றாள் அவள்.

'சும்மா விசர்த்தனமாய் கதைக்காத. அம்மாட்ட குடு நான் கதைக்கிறன்.' என்றான் தோற்றுப்போன காதலைத் தக்க வைத்துக்கொள்ளும் அவதியோடு அவன்.

'யார் கதைச்சா என்ன? நான்தானே வாழ்றது. நான்தானே முடிவெடுக்கிறது. நான் வரேல்லை. அம்மாவோட நீங்கள் கதைக்க வேண்டாம்.' என்றாள் அவள்.

'சரி நீ வரேல்லை. அதுக்கா எங்கடை உறவு விட்டுப் போகோணும் எண்டு இல்லைத்தானே?' என்றான் விடாப்பிடியாகக் கவிதைக்கண்ணன்.

'அதெல்லாம் வேண்டாம்.'

'என்ன சொல்லுறா?'

'உறவு வேண்டாம் எண்டு சொல்லுறன்.'

'அப்ப நான் தாலிகட்டினது?'

'அதை இங்க வரேக்க வாங்கிக்கொண்டு போங்க.'

'உனக்கு என்ன பைத்தியமா?'

'என்னவா இருந்தா என்ன? இனி எங்களுக்க எதுவும் வேண்டாம்.'

'அம்மாட்ட குடு நான் கதைக்க வேணும்.'

'இல்ல வேண்டாம்.'

'குடு... அவ சொன்னா நான் அதோட விட்டிர்றன்.'

'யாரோட கதைச்சாலும் என்ர முடிவு மாறாது.' அலைபேசி கைமாறியது.

'என்ன இது? என்ன கதைக்கிறாள்?' என்று கவிதைக்கண்ணன் கோபத்தோடு கேட்டான்.

'அவளுக்கு விருப்பம் இல்லையெண்டா விடு தம்பி. அவள் செல்லமா வளர்ந்தவள். உங்க வந்து வேலைக்குப் போய் கஸ்ரப்பட்டு வாளேலாது எண்டுறாள்.'

'இது என்ன கதை மாமி? அரச குடும்பத்துப் பிள்ளையளும் இஞ்ச வேலை செய்துதான் வாழுகினம்.'

'என்னவோ அவளுக்குப் பிடிக்கேல்லை. அவள் செல்லமா வளர்ந்தவள். அவளைப் பார்த்துக்கொள்ள ஆட்கள் இருக்கினம். நீங்கள் அவளை இனி ஆக்கினைக்கட்ட வேண்டாம்.'

'அப்ப என்னத்துக்கு எனக்கு இவ்வளவு ஆசைகாட்டி...'

'எல்லாம் நல்லா நடக்கும் எண்டு நினைச்சாள் ஆக்கும். அது நடக்கேல்லை. உங்களுக்கும் பொறுமை இல்லை. பக்குவமா கதைக்கத் தெரியேல்லை.'

'இனி அப்பிடிக் கதைக்கிறன் மாமி.'

'அவள் வேண்டாம் எண்டுறாள். விடுங்க தம்பி.'

மாமியின் குரல் உடைந்தது. மாமி மகளுக்காகத் தாளம் போட வேண்டிய கட்டாயம் கவிதைக்கண்ணனுக்குப் புரியும். அதேவேளை அப்படிச் சொல்வதில் அவர்படும் வருத்தத்தையும் அவனால் உணர முடிந்தது. இங்கிருந்து என்ன செய்ய முடியும்?

'சரி அவளிட்ட குடுங்க.' என்றான் கவிதைக்கண்ணன்.

அலைபேசி மீண்டும் கைமாறியது. கவிதைக்கண்ணனால் அவளை விடுவது பற்றிச் சிந்திக்க முடியவில்லை. போதைவஸ்த்தை விடமுடியுமா? இந்தக்கணமே செத்துப் போய்விட்டால் மேல் என்பதாக அவனுக்குத் தோன்றியது.

'நான் அக்காவோட கதைக்கிறன்.' என்று அவளை மேலும் சங்கடப்படுத்தினான் கவிதைக்கண்ணன்.

'அம்மாவை அழ வைச்சிட்டியள். நீங்கள் யாரோட கதைச்சா என்ன. நான்தானே முடிவெடுக்கிறது.'

'தயவுசெய்து யோசிச்சுப்பார்.'

அவள் அலைபேசியைத் துண்டித்தாள். கவிதைக்கண்ணனுக்கு இதயம் நொந்தது. இதயம் தன் இயக்கத்தை நிறுத்தவில்லை. அது நின்றிருந்தால் கவிதைக்கண்ணனுக்குச் சுகமாய் இருந்திருக்கும். கடவுள் கவிதைக்கண்ணனுக்கு கருணை காட்டுவதில்லை என்று முடிவு செய்திருந்தார். ஒரு ஊன் விட்டு இன்னொரு ஊன் தேடுபவர்களுக்கு கருணையேது?

கவிதைக்கண்ணன் சுரங்கரதத்தில் ஏறினான். அக்காவுக்குச் சொல்லுவேன் என்று கூறினாலும் அவனிடம் அவளின் தொலைபேசியெண் எதுவும் இல்லை என்பதுதான் உண்மை. அவளின் முகவரி கவிதைக்கண்ணனிடம் இருந்தது. அவன் அந்த முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான். கோபத்தால் அறிவு மங்கிப் போன அவன் மூளை. வேண்டாம் என்றால் விட்டிருக்க வேண்டும். கவிதைக்கண்ணனுக்கு வேண்டாம் என்றால் உயிரை விடலாம். அவளை மட்டும் விட முடியாது என்றே தோன்றியது.

கவிதைக்கண்ணன் அவளது அக்காவிற்குக் கடிதம் எழுதி அனுப்பினான். அதற்கு இடையில் அவளோடு மீண்டும், மீண்டும் தொடர்பு கொண்டான். அப்படித் தொடர்பு கொண்ட போது பொறுமையாக இருக்குமாறும், ஆவணிமாதம் மீண்டும் தொடர்பு கொள்ளுமாறும் அவள் கூறினாள். அது காலம் கடத்துவதற்கான தந்திரம் என்பது அவனுக்குப் புரியவில்லை.

கவிதைக்கண்ணன் அதையும் நம்பினான். ஆவணி வரட்டும் என்று காத்திருந்தான். அதற்கிடையில் கவிதைக்கண்ணன் எழுதிய கடிதம் கிடைத்ததும் அவளது அக்கா அவளோடு தொடர்புகொண்டு பேசியிருக்க வேண்டும். கவிதைக்கண்ணனுக்கு ஒரு நாள் காலை அவளிடம் இருந்து குறும்செய்தி வந்திருந்தது. மதியம் அலைபேசியில் தொடர்பு கொண்டான். அவள் கவிதைக்கண்ணனோடு கதைக்காது அலைபேசியைத் துண்டித்துக் கொண்டாள். யாரும் நின்றிருக்க வேண்டும். அல்லது அவள் பைத்தியமாக இருக்க வேண்டும். கவிதைக்கண்ணனுக்கு நோர்வேயில் இருந்து அவளது மனதைப் பார்க்கும் ஞானக்கண் இல்லை. அவன் ஊனக்கண்கள் பனித்தன. மனது இடைவிடாது வலியோடு தவித்தது.

துன்பத்தை வரவாக்கும் காதலென்னும் தொடக்கம். அதில் பிரிவு என்னும் அக்கினிப் புயல் வீசுவது வழக்கம். அதுவே வாழ்க்கையாகிவிட்டால் பூமியில் நரகம் என்பது நித்திய அனுபவம். அது எப்படி இருக்கும் என்பதை கவிதைக்கண்ணன் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் அனுபவிக்கத் தொடங்கினான். இந்த நரகத்தில் இருந்து விடுதலை கிடைப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. அவளுக்கு அலைபேசி எடுத்தால் அனேகமாக அதை அவள் துண்டித்து விடுவாள். கவிதைக்கண்ணன் பல முறை முயற்சித்தால் சிலவேளை காக்கவைத்து எடுப்பாள். அது ஆணுக்கும் பெண்ணுக்குமான அன்பு

மேன்மையானது என்கின்ற அவன் நினைப்பிற்குக் கொடுக்கப்படும் தண்டனையாக. அப்படி எடுத்தாலும் இரண்டு வார்த்தையில் அதை முடித்துக் கொள்வாள். விருப்பம் இல்லாத போது, வேற்று எண்ணங்கள் மனதில் புகும்போது, வார்த்தைகள் தொலைந்து விடும். வார்த்தைகளைக் கொட்டாத வரையில் உள்ளத்து அழுக்குகள் பத்திரப்படுத்தப்படும். கவிதைக்கண்ணனைத் தண்டிக்க, உள்ளத்து அழுக்குகளைக் கொட்டாது தடுக்க, குறைக்கப்படும் அவள் வார்த்தைகள். பகையைவிட்டு அவளோடு சல்லாபிக்கத் துடிக்கும் அவன் ஏக்கம் தொடர்கதையாக…

எங்கே சென்றாலும் அவள் நினைவு நிழலாகத் தொடரும் நிஜமான வாழ்வு. அது அவனை வீரியமாக ஆக்கிரமித்து அடிமை செய்தது. நடைப்பிணமாக வாழவைத்த காதல் நினைவுகள். வழியில், சுரங்கரதத்தில், பேருந்தில் பார்ப்பவர்கள் அவனை 'என்ன கடுமையாக யோசிக்கிறீங்கள்? ' என்று கேட்டதுண்டு. தான் எடுத்துக்கொண்ட இப்பிறப்பில் கவிதைக்கண்ணனுக்கு அந்த நினைவுகளில் இருந்து எப்படி விடுதலை அடைவது என்பது புரியவில்லை. அவளை நினைக்கும் போது அவனையும் மீறிக் கண்ணீர் விடுவது அதைவிடச் சங்கடமானது. கண்ணீர் இடம் காலம் பார்ப்பதில்லை. பொத்துக்கொண்டு வருவதை மூடிக்கொள்ள இமைகளுக்குத் தெரிவதில்லை. ஊனோடு ஊன் உருகி உலகமே அவள் என்கின்ற நினைவு அவனின் ஒவ்வொரு வாழும் கணங்களையும் விழுங்கின. காதல் தோல்வியில் ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. நரகமான ஒவ்வொரு கணங்களோடும் போராடுவதைவிட உலக மாயையில் இருந்து விடுபடும் ஏக்கம் வெளிச்சமாகியது. எனினும் அது கோழைகளின் முடிவு என்பதில் அவன் இன்னும் மாறவில்லை. இந்த நரகத்தை அனுபவிப்பதிலும் ஒருவித சுகம் உண்டு என்கின்ற ஒரு சமாதானத்தோடு அவன் வாழ்வை நகர்த்தலானான்.

ஆவணிமாதம் தான் இலங்கைக்கு வருவதாகக் கவிதைக்கண்ணன் ஒரு முறை அலைபேசி எடுத்த போது அவளிடம் கூறினான். வெளிநாட்டில் இருந்து அங்கே செல்வதென்றால் அவளிடம் அனுமதி கேட்டே போக வேண்டியதாயிற்று. எனக்கு அப்போது வசதிப்படாது… இப்போது வசதிப்படாது என்பது அவளின் தட்டிக்கழிப்பு. கவிதைக்கண்ணன் அதைக் கேட்டபோது அவள் தான் எப்போது ஆவணிக்கு வருமாறு சொன்னேன் என்று திருப்பி அவனைக் கேட்டாள். பொய் அவள் வாயில் எப்போதும் அபாரமாய் நர்த்தனம் ஆடும். அதைக்கேட்டுக் கவிதைக்கண்ணனுக்குப் பேரதிர்ச்சியாகிற்று. அவள் மறக்கவில்லை. மறந்ததாய்க் காட்டிக்கொண்டு மறுக்கிறாள். அதில் எதையோ புதைக்கிறாள். கவிதைக்கண்ணனுக்கு அது முழுமையும் புலப்படவில்லை.

கவிதைக்கண்ணன் தான் வருகிறேன் என்றான். அவள் வந்தால் உங்களுக்கும் எனக்குமான உறவு அத்தோடு இல்லாது போய்விடும் என்றாள். அவனுக்கு முகத்தின் மூன்று துவாரங்களையும் அடைத்துவிட்டுச் சுவாசியுங்கள் என்பது போல் ஆகிற்று. கவிதைக்கண்ணன் இன்னும் அவள் மீது கொண்ட காதலையும், ஆசையையும், நம்பிக்கையையும் கைவிட விரும்பவில்லை. சாதாரண மனிதனின் சஞ்சலங்களும், ஆசைகளும் சாகா வரம் பெற்றதாய்… அவன் அதில் அல்லாட அவள் மார்கழி மாதம் வருமாறு கூறினாள். அது ஒரு காலக் கடத்தல் என்பது பற்றி இப்போது அவனுக்கு ஐயம் இருந்தாலும் பிடிபடும்வரை அவள் குற்றமற்றவள் என்பதாய் எண்ணினான். மார்கழி வருவதாய் ஒப்புக்கொண்டான்.

கணங்கள் நரகமானாலும் காலம் வெடித்ததில் இருந்து நிறுத்தமற்று நகர்கிறது. அதில் சுற்றி வரும் பருவங்களும் தப்பாது வந்து போகின்றன. நிரந்தரமாகக் கடந்து போகும் கணங்களும் கழிந்தே போகின்றன.

அவளுக்கு அலைபேசி எடுப்பதில் ஏற்பட்ட அவமானங்களால் கவிதைக்கண்ணன் ஆவணிமாதம் அவளோடு கதைத்ததோடு கதைப்பதை நிறுத்திவிட்டான். மார்கழி வந்தது. கவிதைக்கண்ணன் அவளைக் கேட்காமலே விமானப் பயணச்சீட்டு எடுத்தான். இம்முறை அவளாக அலைபேசியில் தொடர்பு கொள்ளாதவரை அவளோடு தொடர்பு கொள்வதில்லை என்கின்ற எண்ணத்தில் அவன் அமைதி காத்தான்.

'சோழியன் குடுமி சும்மாய் ஆடாது' என்பார்கள். மார்கழிமாதம் அவளாகத் தொடர்பு கொண்டாள். அது ஒரு தவறிவிட்ட அழைப்பு. அந்த எண்ணிற்குக் கவிதைக்கண்ணன் தொடர்புகொண்டு கதைத்தான். அவள் கவிதைக்கண்ணனின் வரவு பற்றிய செய்தியைக் கேட்டுவிட்டு மீண்டும் இப்போது வரவேண்டாம் என்றாள்.

கவிதைக்கண்ணனுக்கு துவாரங்கள் அத்தினையும் தீப்பற்றி எரிந்தன. கைக்கெட்டாத தூரத்தில் வாழ்ந்தால் எப்படி என்றாலும் தாளம் போடலாம் என்கின்ற இந்தச் சுயநல சுதந்திரத்தை அவன் வேறு யாரிடமும் இப்படிக் கண்டதில்லை. இந்தப் புறக்கணிப்பை, ஏமாற்றத்தை, உயிருக்கும் மேலாக நேசித்தவளிடம் இருந்து அவன் எப்போதும் எதிர்பார்த்ததில்லை

கவிதைக்கண்ணன் ஏன் என்று காரணம் கேட்டான். தனது அக்காள் வேறு யாரோ ஒரு குடும்பத்தை வீட்டில் குடி வைத்த கதையை ஏற்கனவே அவனுக்குச் சொல்லி இருந்தாள். அதைக் கவிதைக்கண்ணன் நம்பவில்லை. தன்னை வரவேண்டாம் என்று சொல்வதற்கு இப்படி ஒரு சாட்டுக் கண்டுபிடித்து இருக்கிறாள் என்பது அவன் ஐயம். வாய்திறந்தாலே அவள் பொய்களை உண்மை போல் சொல்வதால், பொய்யெது மெய்யெது என்கின்ற தடுமாற்றம். அப்படி என்றாலும் அவர்களுக்கு ஒரு அறை கொடுத்திருந்தால் மற்றைய அறையில் தான் நிற்பதில் என்ன பிரச்சனை என்பது அவனுக்குப் புரியவில்லை. எதை யாருக்கு மறைக்கிறார்கள் என்பது அவனுக்கு விளங்கவில்லை. ஊரில் தாங்கள் வீடு திருத்துவதாகவும், அது ஆவணிக்கு முடிந்து விடும் என்றும், அப்போது இலங்கைக்கு வருமாறும் அவள் கவிதைக்கண்ணனிடம் கூறினாள். ஆவணியில் கஸ்ரம் என்றால் மார்கழி வரலாம் என்றும் புத்திமதி சொன்னாள்.

கவிதைக்கண்ணன் கடைசிச் சந்தர்ப்பமாக ஆவணிவரை பொறுத்திருப்பதாக கூறிவிட்டு விமானப் பயணச்சீட்டை ரத்து செய்தான்.

அதன் பின்பு அவளோடு சிலவேளை கதைப்பான். ஒரு கிழமை வில்லங்கத்திற்கு ஒருவாறு கதைத்தாள். பின்பு ஒரு நாள் அவன் தொடர்பு கொண்ட போது அலைபேசியில் அவனது எண்ணைப்பார்த்துவிட்டு அதைத் துண்டிக்கிறாள் என்பதைக் கவிதைக்கண்ணன் உணர்ந்தான். கவிதைக்கண்ணன் பலமுறை தொடர்பு கொண்டான். அவள் எடுக்கவில்லை. பின்பு வீட்டுத் தொலைபேசிக்கு எடுத்தான். அதில் எடுத்துக் கதைத்தாள். எதற்காக அலைபேசியில் கதைக்கவில்லை என்று கவிதைக்கண்ணன் கேட்டான். 'எங்கள் தொடர்பு இனி வேண்டாம் என்பதால் கதைக்கவில்லை.' என்றாள். கவிதைக்கண்ணனுக்கு நெஞ்சு

வெடித்தது. அவளோடு கத்திச் சண்டை பிடித்தான். அவள் தொலைபேசியையும் துண்டித்தாள். 'இவள் என்ன பைத்தியமா? அல்லது என்னைப் பைத்தியமாக்குகிறாளா?' என்று கவிதைக்கண்ணன் வெகுண்டான். 'பைத்தியம்தான். பைத்தியத்திற்கு மந்திகையில் ஒரு முறை வைத்தியம் செய்ததோடு விட்டிருக்கக்கூடாது. விட்டாயிற்று. அது இப்போது முற்றிப் போய்விட்டது. மற்றவர்களைப் பைத்தியம் ஆக்குவதில் வெற்றி காண்கிறது. இதற்கு என்ன செய்வது? ' கவிதைக்கண்ணனுக்கு வேறுவழி தெரியவில்லை.

கவிதைக்கண்ணன் மீண்டும் விமானப் பயணச்சீட்டு எடுத்தான். இம்முறை மறந்தும் அவளைத் தொடர்பு கொள்ளக்கூடாதென எண்ணினான். என்ன நடக்கிறது? எதற்காக அவள் தன்னை வேண்டாம் என்கிறாள்? போலிக் காரணங்களைத் தனது தாய்க்கும் அக்காவுக்கும் எதற்காகச் சொன்னாள்? என்பனவற்றிற்கு சில நாட்கள் அவளோடு தங்கி நின்றால் விடை கண்டுவிடலாம் என்கின்ற எண்ணத்தோடு அடுத்த இலங்கைப் பயணத்திற்கு அவன் தயாராகினான். பாவம் அவன். விதி வலிது. அவனுக்குப் பொய் அறியும் மூளை மிகமிகச் சிறிது.

19

காலைக் கோப்பி குடிப்பதற்காக வழமை போல் பச்சைநாடு விடுதியில் உள்ள உணவகத்திற்குக் கவிதைக்கண்ணன் சென்றான். பிரான்சில் வாழும் சில தமிழர்கள் அப்போதுதான் விமானநிலையத்தால் வந்திருந்தார்கள். அப்படி வந்தவர்கள் தங்களைப் பதிவு செய்ய வரவேற்பறையில் குழுமி நின்றார்கள். அந்த வழியாகத்தான் கவிதைக்கண்ணன் கோப்பி குடிக்க உணவகத்திற்குச் செல்ல வேண்டும். கவிதைக்கண்ணன் வரவேற்பறைக்கு எதிரே உள்ள பலகாரக் கூடாரத்தைப் பார்த்த வண்ணம் அவர்களது அமளி அடங்க அமைதி காத்து நின்றான். அவர்களுக்காக யாரோ உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்துள்ளார்கள். அவர்கள் எல்லோரும் மாலை யாழ்ப்பாணம் போவதாக கதைத்துக் கொண்டார்கள். அதில் வந்தவர்களுக்கு 'AC' உள்ள அறை எடுப்பதா அல்லது 'AC' இல்லாத அறை எடுப்பதா என்கின்ற போராட்டம். கவிதைக்கண்ணனைக் கேட்டால் 'AC' இல்லா அறை என்று சுலபமாகச் சொல்லி இருப்பான். உணவகத்திற்கு மறுபக்கமாக உள்ள வாசல் வழியாக வந்த காதல் சோடி ஒன்று கைகோர்த்த வண்ணம் உள்ளே சென்றார்கள். கவிதைக்கண்ணன் மனதில் மீண்டும் திரைப்படமாக நினைவுகள் விரியத்தொடங்கின.

★

ஒரு காதல் வாழ்வின் முடிவு நெருங்குகிறது என்பதைக் கற்பனை செய்யும் துணிவுகூட இல்லாது கவிதைக்கண்ணன் வாழ்ந்து வந்தான். அவனால் அந்த வாழ்வு முடியும் என்கின்ற ஒரு முடிவைத் தாங்க முடியுமெனத் தோன்றவில்லை. எப்பொழுது கேட்டாலும் இப்போது இங்கே வரவேண்டாம் என்றுதான் அவள் சொல்லுவாள். எதற்காக? கொழும்பில் செய்த ஒப்பந்தத்தை மீறி அவள் பொய் சொல்வதை அவனால் சிலவேளை ஊகிக்க முடிகிறது. ஊகத்தை வைத்துக் கொண்டு ஒருவரைக் குற்றம் சொல்லக்கூடாது

என்பதில் கவிதைக்கண்ணனின் பிடிவாதம் மாறாது தொடர்ந்தது. அத்தால் அந்த ஊகங்கள் பற்றிக் கவிதைக்கண்ணன் எதுவும் கதைக்கவில்லை. முந்திய முறை வீட்டில் நிற்கும் பொழுது அவளிடம் விவாகரத்துப் பத்திரத்தைக் காட்டுமாறு கேட்டான். அவள் தேடுவதாய் நடித்துவிட்டு அது கொழும்பில் உள்ள மாமா வீட்டில் இருக்கிறது என்றாள். அப்போது கவிதைக்கண்ணன் அவளிடம் 'நீ பொய் சொல்லுகிறாய் எண்டு விளங்குது, எதுக்குப் பொய் சொல்லுறாய், எதுக்கு உண்மை சொல்லுறாய் எண்டுறது மட்டும் எனக்குத் தெளிவா விளங்கேல்லை.' என்று கூறினான்.

அவள் அப்படிக் கூறிய பின்பும் தான் செய்வதை உணர்ந்து கொள்ளவில்லை. வருத்தப்படவில்லை. மன்னிப்புக் கேட்கவில்லை. பொய்க்கு மேல் பொய் சொல்லி மறைப்பது, அல்லது வாதத் திறமையால் வாயை அடைப்பது ஆகிய உத்திகளை மாறி மாறிக் கவிதைக்கண்ணன் மேல் பாவித்தாள். நாய் வாலாக அவள் பொய்கள். அதை மெய்யாக்க முடியாத படைத்தவனின் தோல்வி. பழக்கம் வழக்கமாகி வழக்கம் தற்போது அவள் ஒழுக்கமாகிவிட்டது. குற்ற உணர்வு என்கின்ற துடிப்பு அற்ற முண்டமாக அவள்.

அவள் கவிதைக்கண்ணனின் வாயை அடைக்க 'நீங்கள் மாத்திரம் அரிச்சந்திரன் வீட்டுப்பிள்ளையா?' என்று அடிக்கடி கேட்பாள். கவிதைக்கண்ணன் அதற்கு மேல் அந்த விவாதத்தை வளர்ப்பதில்லை. குற்ற உணர்வு அவனைக் கொடுமையாகத் தண்டிக்கும். கொழும்பில் கதைத்தது எல்லாம் ஒருவித மாயையா என்கின்ற பயம் உயிரோடு மெல்லத் தின்னும். கவிதைக்கண்ணன் சாகும் வரைக்கும் கொழும்பில் கதைத்த அந்தக் கற்பனையோடு வாழ்ந்துவிடலாம் என்றிருந்தான். அந்தக் கற்பனையே அவனைச் சாகடிக்கும் என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை.

இம்முறை அதிக பொருட்கள் அவன் கொண்டு செல்லவில்லை. அவளுக்குச் 'Chocolate' பிடிக்கும் என்பதினால் நேர்வே 'Chocolate' சில, சில 'Biscuit' பொதிகளும், அவளுக்குப் பிடித்த முகத்திற்குப் பூசும் 'Cream', மகளுக்குச் சில பள்ளிக்குப் பயன்படுத்தும் உபகரணம், தனது உடுப்புகள், போன்றவற்றோடு அவன் தனது இலக்கை நோக்கி இலங்கை புறப்பட்டான். தன்னை ஏமாற்றுவதாய் உணரத் தொடங்கியதால் அவளோடு நின்று எடுத்த புகைப்படங்களை தனது அலைபேசியில் பதிந்து எடுத்துச் சென்றான். அவள் இனி எதுவும் செய்வாள் என்கின்ற ஒரு எண்ணம் அவன் அடிமனதில் முளைவிட்டிருந்தது. அப்படி ஒரு எண்ணம் முளைவிடுவதையே அவன் வெறுத்தான். அதே அடிமனதின் உணர்வு 'நீ வெறுத்தாலும் அதுதான் உண்மை.' என்று சொல்லியது. 'அவள் உன்னைத் தூக்கி எறிந்து நிறையவே காலமாகியும் அதைப் புரிந்து கொள்ளாத பைத்தியம் நீ.' என்று கவிதைக்கண்ணனை அது அடிக்கடி நையாண்டி பண்ணியது. 'பைத்தியமே உன்னைப் பைத்தியமாக்க நீ பைத்தியமானவன்.' என்றது அது. 'இல்லை அவள் எல்லோரையும் பேய்ப்பட்டம் கட்டி பைத்தியம் ஆக்கும் அதி புத்திசாலி. அந்த அதி புத்திசாலி யாரிடமோ ஒரு நாள் மாட்டிக்கொண்டு முழிக்கப்போகிறாள்? ' என்றது கவிதைக்கண்ணனுக்குச் சார்பான உணர்வு.

கவிதைக்கண்ணனின் மோகம் விழித்துக் கொண்டது. 'அவள் என்றும் தன்மீது அன்பாய் இருப்பாள்.' என்கின்ற தனக்குப் பிடித்த எண்ணத்தை மட்டும் குதிரைக்குக் கிடைத்த பார்வையாய் அது மீண்டும் வளர்க்க விரும்பியது.

இம்முறை கவிதைக்கண்ணன் கொழும்பு வந்து இறங்குவது யாருக்கும் தெரியாது. இதுவே அவன் முதல் முறை தனித்துக் கொழும்பு விமான நிலையத்திற்கு வெளியே செல்வது. அவன் அதற்காகப் பயப்படவில்லை. தெரியாத சினேகிதியைவிட கொழும்பு வாழ் சகோதரங்கள் ஆபத்து இல்லாதவர்களாக அவனுக்குத் தோன்றியது.

கொழும்பு விமான நிலையத்தில் போய் இறங்கியவுடன் அங்கேயே இருந்த 'ATM' இல் பணம் எடுத்துக்கொண்டான். பின்பு விமான நிலையத்தின் வாடகை வண்டி பதிந்து பச்சைநாடு விடுதிக்கு வந்தான். முகத்திலும் மனதிலும் ஏகப்பட்ட சோகம் நிரம்பி வழிந்தன. அவனின் ஒவ்வொரு கணத்திலும் அவள் தன்னோடு சேர்ந்து இருந்த ஞாபகம் விட்டு விலகாது அவனைத் துரத்தியது. இரண்டு முறை அவனை வரவேற்பதற்காக அவள் கொழும்பு விமான நிலையத்திற்கு வந்தாள். இம்முறை கவிதைக்கண்ணன் வருவதே அவளுக்குத் தெரியாது. மார்கழியில் வருகிறேன் என்று கவிதைக்கண்ணன் கூறிய போது வரவேண்டாம் என்று கூறியவள் தான் கொழும்பிற்கும் வரமாட்டேன் என்றும் திட்டவட்டமாய் கூறினாள். அவள் யாருக்கோ பயப்படுவதான உணர்வு கவிதைக்கண்ணனிடம். கொடுமையான புருசனைக் கண்டுகூட ஒரு மனைவி அப்படிப் பயந்து நடுங்கமாட்டாள். இவள் யாருக்குப் பயப்படுகிறாள்? அல்லது பயப்படுவதாய் காட்டி மற்றவர்களைப் பைத்தியமாக்குகிறாளா என்பதும் கவிதைக்கண்ணனுக்குப் புலப்படவில்லை.

அக்காள் குடும்பத்தோடு கதைக்கக்கூடாது என்பதை மீறிக் கவிதைக்கண்ணன் அவர்களோடு அலைபேசியில் கதைத்ததை அடுத்து, அவள் மிகவும் குரூரமாய் அவனோடு நடந்துகொண்டாள். இவள் காதல் என்பதை எதற்காகப் பாவிக்கிறாள் என்பதில் அவனுக்கு மீண்டும் மீண்டும் குழப்பம் உண்டானது. இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட அவனுக்கு எப்போதும் இதயம் நோவதான உணர்வு. உண்மையைச் சொல்வதற்கு என்ன பயம் என்பது கவிதைக்கண்ணனின் எண்ணம். அதற்காகவே இந்தத் தண்டனை என்பதும் அவனுக்குப் புரிந்தது. உயிர் என்றவள் இப்படி உயிரை எடுப்பதை அவனால் தாங்க முடியவில்லை. உலகத்தில் காதல் இவ்வளவு சிறிதா என்பதை அவனால் நம்ப முடியவில்லை. காதல் சிறிது அல்ல. காதல் செய்வதாய் நடித்தால் அதன் ஆயுள் சிறிது. அவளா அப்படி என்பதை அவனால் இந்த ஜென்மத்தில் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

வண்டியில் இருக்கும் பொழுது அவளது ஞாபகம் கணமும் விலகாது அவனை வாட்டியது. போன முறை அவளது கையைப் பிடித்துக்கொண்டு இருந்த நினைவுகள் அவனைப் பந்தாடின. அப்போது வத்தளையில் தங்கள் வீடு இருந்த இடத்தை பொதுவாக அவள் சுட்டிக்காட்டினாள். காலிரோட்டில் அவள் கையோடு கைகோர்த்துப் பயணித்த கணங்கள் அவன் மனதை வருடியது.

கவிதைக்கண்ணனுக்கு வண்டிக்குள் அழுது விடுவேனோ என்கின்ற பயம் வந்தது. அவன் அவளது நினைவில் இருந்து விடுபடுவதற்காக தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் சாரதியோடு கதைக்கத் தொடங்கினான்.

பயணம் பச்சைநாடு விடுதியை நோக்கித் தொடர்ந்தது. கவிதைக்கண்ணன் அன்றே யாழ்ப்பாண பேருந்திற்கு பதிவு செய்தான். ஆசனப் பதிவு செய்தவர்கள் பேருந்தைப் பச்சைநாடு விடுதியில் நிறுத்தி அவனை ஏற்றிச்செல்வதாகக் கூறினார்கள்.

மாலை கவிதைக்கண்ணன் பேருந்திற்காய் காலிரோட்டில் தவம் செய்தான். பேருந்து வந்து அவனை ஏற்றியது. அவள் இல்லாது ஏகாந்தமாய்ப் பேருந்தில் பயணம் செய்வது அன்னியத்தை, அந்தரத்தை, அனாதரவை, அலுப்பை அவனுக்குத் தந்தது. அவளோடு பயணம் செய்வதில் ஆரம்பத்தில் நிறையச் சுகம் தந்தது. பின்பு அவளது அசண்டையீனம், குறும் செய்தியை மறைத்தல் என்பன ஒருவித அரிகண்டத்தை, சினத்தை ஏற்படுத்தின. ஆயினும் அவை அதிக நேரம் நீடிப்பதல்ல. அவன் மீண்டும் அவளோடு விரைவாகக் கலகலப்பாகி விடுவதுண்டு.

நாளை யாழ்ப்பாணத்தில் போய் இறங்கியவுடன் என்ன நடக்கப்போகிறது என்பதைப் பற்றிய பல எண்ணங்கள் அவன் மனதில் திரையேறிற்று.

கவிதைக்கண்ணன் தற்போது இலங்கைக்கு வரக்கூடாது. அதை மீறி வந்தாலும் தங்கள் வீட்டிற்கு வரக்கூடாது என்பதில் அவள் மூர்க்கம் காட்டினாள். முதல் வந்து நின்று குடும்பம் நடத்தியது பற்றி அவள் இப்போது கதைப்பதே இல்லை என்பதை அவனால் தாங்க முடியவில்லை. அத்தால் உருவாகிய பிம்பத்தை பற்றி அவள் கவலைப்படுவதாய் அவனுக்குப் புரியவில்லை. பிஞ்சுமனத்தில் ஏற்படுத்திய சலனம் பற்றி அவள் கடுகளவும் சிந்திப்பது கிடையாது. யாருக்கோ எதையோ மறைப்பதற்காகப் போராடுவது கவிதைக்கண்ணனுக்குப் புரிந்தது.

தனக்கும் அவளுக்கும் இடையில் இப்படியான ஒரு உறவு இருக்கிறது என்பதை மறைப்பதற்கென்றே தான் வந்து நின்றதை இரகசியமாக வைத்திருந்தாளோ என்கின்ற எண்ணம் கவிதைக்கண்ணனுக்கு எழுவது உண்டு. அப்படி இருந்தால் தனது மகளிடம் அவள் கவிதைக்கண்ணனை ஏன் அப்பா என்று அறிமுகம் செய்து வைத்தாள்? அதை ஏன் ஊக்கப்படுத்தினாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. அவளின் மகளுக்குத் தனது சொந்த அப்பா எப்படி இருப்பார் என்பது நன்கு தெரியும். தெரிந்தும் யாராவது அவரைப்பற்றிக் கேட்டால் தனக்கு அப்பா இல்லை என்றே கூறிவிடுவாள். முதல் முறை போன போது கவிதைக்கண்ணன் அவனது புகைப்படத்தை மகளிடம் காட்டி இது யார் என்று கேட்டான். அவள் முகம் சட்டென்று இருண்டு போயிற்று. 'தெரியாது' என்று தயக்கமின்றி மறுமொழி வந்தது. அவள் கவிதைக்கண்ணனை அப்பாவாகப் பாவனை செய்துகொண்டே அவனோடு பழகினாள். அதை அவளது பாட்டியும் ஊக்கப்படுத்தியதையும், கடைக்கு, குழாய் நீர் எடுத்து வருவதற்கு, கவிதைக்கண்ணனோடு அனுப்பி வைத்ததையும் அவன் மறக்கவில்லை. கவிதைக்கண்ணன் தனக்கு ஒரு அழகான புதிய குடும்பம் வாய்த்ததாகவே எண்ணினான். அப்படி அவள் பழகியதை, அல்லது தாங்கள் ஒரு குடும்பம் போல் இருந்தோம் என்பதை இப்போது அவள் சற்றும் கணக்கெடுப்பதாய் கவிதைக்கண்ணனுக்குத் தோன்றவில்லை. அவள் ஒரு மனிதப் பிறவியா என்பதே இப்போது அவனுக்கு விளங்கவில்லை.

இப்போது எதற்காக அவள் தன்னை வரவேண்டாம் என்று கூறினாள்? எதற்காக இந்த உறவைத் துண்டித்துக் கொள்ள முயற்சிக்கிறாள் என்பது அவனுக்குச் சிதம்பரச் சக்கரம் ஆகியது. அதை எப்படியாவது புரிந்து கொள்ள வேண்டும் என்பது கவிதைக்கண்ணனின் எண்ணம். இந்த உறவு முறிந்தால் காலத்திற்கும் தான் தனித்தே வாழ்ந்துவிடுவேன் என்று சத்தியம் செய்திருக்கிறாள். அவள் எதிர்மறையாகத்தான் எதுவும் செய்வாளா? ஐயோ என்று கத்த வேண்டும் போல் இருந்தது கவிதைக்கண்ணனுக்கு.

நாளைக்காலைப் போய் இறங்கும் போது என்ன நடக்கும் என்பது கவிதைக்கண்ணனைத் தொடர்ந்தும் குடைந்தது. அவளோடு ஒருமுறை கதைக்கும் போது தனது அனுமதி இல்லாது அவள் வீட்டிற்கு வந்தால் 'படலையே திறக்கமாட்டேன்.' என்று கூறினாள். அதைக் கவிதைக்கண்ணனுக்கு மட்டும் கூறினாளா? படலையை திறக்கமாட்டாளா? ஏறிக்குதிக்க வேண்டுமா? அவள் அதைக் கருதவில்லை என்றே கவிதைக்கண்ணன் இப்போதும் எண்ணினான். படலையைத் திறக்காவிட்டால்… அவமானம். அதன் பின்பு? சத்தியாகிரகம். அவமானம்… தோல்வியோடு திரும்பல். புகைப் படங்களை காட்டி நியாயம் கேட்டல்? குழப்பம்… குழப்பம்… கவிதைக்கண்ணன் கைகளால் தலையைப் பிடித்தான்.

பேருந்துப் பயணம் கவிதைக்கண்ணன் நினைத்தது போல் வாய்க்கவில்லை. வழியில் பேருந்தின் 'Tire' ஓட்டையாகிவிட்டது. அதை மாற்றி எடுப்பதற்கு ஏகப்பட்ட விவாதங்கள். ஓயாத போராட்டம். செவ்வாயைத் தாண்டும் அதீத திட்டங்கள். மிகக் குறைவான வசதிகள். திட்டத்தோடு நின்றுவிட்ட அசண்டையீனம். மொத்தத்தில் ஏனோ தானோ என்கின்ற மெத்தனம். கவிதைக்கண்ணனின் அந்தரிப்பை அவர்கள் என்னவென்று புரிவார்கள்? மூன்று மணித்தியாலங்கள் பிடித்தன. கவிதைக்கண்ணனுக்குச் சலிப்பாகிற்று. பக்கத்தில் இருந்தவன் இறங்கிச் சென்று வேறு ஒரு பேருந்தில் மாறிச் சென்ற போது தானும் அப்படிச் செய்யாது விட்டது மனவருத்தம் தந்தது. பின்பு வந்த பேருந்துகளில் இடம் கிடைக்கவில்லை. அவளை விரைவாகச் சந்தித்து விடலாம் என்பதை இவர்களே கெடுத்துவிட்டார்கள் என்பதில் அவனுக்கு ஒருவித ஊமைக்கோபம். கவிதைக்கண்ணன் பொறுமை இல்லாது துடித்தான்.

பேருந்து யாழ்ப்பாணம் சென்ற போது பத்துமணியாகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் இறங்கி ஓட்டோ ஒன்றைக் கவிதைக்கண்ணன் பிடித்தான். ஐந்து சந்திவரை செல்ல வேண்டும் என்று அப்போது பேரம் பேசவும் அவன் மறக்கவில்லை. சிலவேளைகளின் அவன் செயலே அவனுக்கு நகைப்பை உண்டுபண்ணும். பேரம் முடிந்த பின்பு அவளின் வீட்டிற்கு ஓட்டோ புறப்பட்டது.

கவிதைக்கண்ணனுக்கு என்ன நடக்கப்போகிறது என்பதை எண்ணும் போதெல்லாம் ஒருவித அவஸ்தை. அவள் எப்படிக் கதைப்பாள்? என்ன செய்வாள்? அவள் வதனம் என்ன கோணத்திற்குச் செல்லும்? வாசலில் நிற்பாளா? கண்டதும் உள்ளே செல்வாளா? எதிரே வந்து குறுக்கே நிற்பாளா? என்கின்ற எண்ணங்களில் பிறந்த அவஸ்தை திரணையாகித் தொண்டையில் சிக்கியதாக அவனுக்கு மூச்சு முட்டியது.

ஐந்து சந்தியை அடைந்த போது அது இன்று அமைதி காப்பதாய் அவனுக்குத் தோன்றியது. ஐந்து சந்தியும் நாவாந்துறையும் அடிக்கடி பத்திரிக்கைகளில் வரத்தான் செய்கின்றன. போதைப்பொருளும் அதைவிற்கும் தாதாக்களும், குண்டர்களும் புழங்கும் இடம் என்பதான ஒரு விம்பம் உருவாகிவிட்டது.

இதை எல்லாம் காண்பதற்கு 'Criminal' கண்கள் வேண்டும். அப்பாவியாகப் பார்த்தால் எதுவும்

புரியாது. கவிதைக்கண்ணனுக்கு 'Criminal' கண் வேலை செய்வதில்லை. அவள் கதைப்பதே அவனுக்குப் புரிவதில்லை. தையல் கடைக்காரன் சொன்ன போது வழிந்த ஞாபகம் இன்னும் இருக்கிறது. இந்த நரிக் குணத்தால் இவள் என்ன செய்யப் போகிறாள்? அதை எண்ண அவனுக்கு அருவருப்பாய்ப் போயிற்று.

கவிதைக்கண்ணன் வாழ்க்கையில் தான் கண்ட பெண்களில் அவள் மிகவும் நல்லவளாக, அறிவானவளாக, பண்பானவளாக, விட்டுக்கொடுப்பவளாக, மானிட தேவதையாக அவனுக்கு ஆரம்பத்தில் தோன்றினாள். அந்தத் தேவதை அவனோடு ஆரம்பத்தில் தேனொழுகக் கதைத்தாள். காதில் காதல் வசனம் கலந்தோதினாள். அவன் அந்த மயக்கத்தில் இந்திர உலகைப் பூவுலகில் கண்டான். பிசாசு தேவதை வேடம் பூண்டதை அப்போது அவன் புரிந்துகொள்ளவே இல்லை.

இந்தப் பாரில் தான் கண்ட மாதரில் அவளே மிகவும் நல்லவளாக அவனுக்குத் தோன்றினாள். இன்றும் அவள் தனக்காகவே இந்தத் தியாகங்களைச் செய்ய வேண்டி இருக்கிறது என்கின்ற மூடநம்பிக்கையின் தொடர் அவனிடம் மீதம் இருக்கிறது. தனது வருங்காலம், தனது பெயர், தனது புகழ் போன்றவற்றை அவள் கெடுக்க விரும்பாமலே இப்படி நடந்து கொள்கிறாள் என்கின்ற நினைப்பு அவனிடம்.

சிலவேளை அவள் மாறி இருந்தால் என்கின்ற நினைவும் எட்டிப் பார்த்தது. அது அவனைக் கதிகலங்க வைத்தது. அவள் கூறியது போலப் படலையை திறக்காது விட்டால் என்ன செய்வது என்று ஒரு கணம் அவன் மீண்டும் எண்ணிப்பார்த்தான். அப்படித் திறவாது விட்டால் படலைக்கு முன்பே இருந்து விடுவது என்பதாகவும் அவன் எண்ணினான். ஏறிக் குதித்து உள்ளே போவது அவன் திட்டம் அல்ல. இதற்கு ஒரு முடிவு தெரிய வேண்டும் என்கின்ற கோபம் வந்தது. அதைத்தானே அவள் பல முறை சொல்லிவிட்டாளே... இன்னுமா விளங்கவில்லை என்கின்ற கேள்வி அவன் உள்ளத்தில் எழுந்தது. அது ஏதோ கட்டாயத்தில் சொல்கிறாள். அவள் தன்மீது உயிரையே வைத்திருந்தாள். வைத்திருப்பாள் என்று தனக்குத் தானே அவன் மூடனைப் போலச் சமாதானம் சொன்னான்.

அவனது இந்த அலமலக்கத்தை நினைக்க அவனுக்கே நகைச்சுவை எழுந்தது. அப்படி எதுவும் நடக்காது என்கின்ற பெரும் நம்பிக்கை அவனது அந்த எண்ணங்களை துரத்திக் கலைத்தன. ஓட்டோ ஐந்து சந்தி தாண்டி நாவாந்துறைக்குப் போகும் ஒழுங்கைக்குள் புகுந்தது.

மனது என்தான் சமாதானம் செய்து கொண்டாலும் ஏதோ ஒருவித அன்னிய உணர்வு அவனை வாட்டியது. இப்படி ஒரு பயணம் தேவைதானா என்று ஒருகணம் எண்ணத் தோன்றியது.

கவிதைக்கண்ணன் கண்ணை மூடிக்கொண்டான். அவள் அவமதிப்பது போல எதுவும் நடக்கக்கூடாது என்பதே அவனது பெரும் பிரார்த்தனை ஆகிற்று. நல்லூர் முருகன்தான் இனித் துணை என்கின்ற எண்ணம் வந்தது. யாரும் உதவிசெய்ய மாட்டார்கள் என்கின்ற போது கடவுள் கைகொடுக்க வேண்டும் என்கின்ற மனித மனங்கள். கவிதைக்கண்ணன் கடவுளை நம்புபவன் அல்ல. இன்று அவனுக்கு வேறு யாரும் நம்புவதற்கு இல்லை. கடைசியாக அவன் கந்தனிடம் சரணாகதி அடைந்தது உண்மை. கந்தன் கருணை காட்டுவானா? அவன்மேல் கவி பாடுவதாய், காணிக்கையாய் தங்க மோதிரம் கொடுப்பதாய், கவிதைக்கண்ணன் மன்றாடிவிட்டான். அவள் இனி எங்களுக்குள் உறவு வேண்டாமே என்று சொன்னதில் இருந்து கண்ணீரும், கவலையும், கடவுள் நினைப்பும், அவனைக் கைவிடவில்லை. அவன் கடவுள் நினைப்பைக் கைவிடாவிட்டாலும் கடவுள் அவனைக்கைவிடாது அருள் பாலிப்பாரா? இரத்த வெள்ளத்தில் மனிதப் பிணங்களுக்கு மேல் பிணமாகப் போகின்றவை துடித்த போது கந்தன் கண்ணை மூடிக்கொண்ட வரலாறு மாறுமா? கவிதைக்கண்ணனுக்கு நல்லூரான் என்ன நினைத்திருக்கிறான் என்பது புரியவில்லை. நா வறண்டது. போத்தல் நீரை எடுத்துக் குடித்தான்.

ஒழுங்கைக்குள் திரும்பும் இடத்தில் இருந்த முஸ்லீம் கொத்துரொட்டிக் கடை திறந்தாயிற்று. முதல்முறை கவிதைக்கண்ணன் வந்து நின்ற போது மகளோடு இங்கு வந்து கொத்துரொட்டி, றோள்ஸ் வாங்குவான். அவர்களுக்கு அதில் இருந்து அவனோடு பழக்கம் உண்டு. மகளின் பெயர் அந்தத் தெருவெல்லாம் பிரபலமான ஒன்று. அவள் ஒரு குட்டி வியாபாரி. விற்பதற்கு எதுவும் கிடைக்காவிட்டால் வாயை விற்றுவிட்டு வருவாள். வயதை மீறிய உருவம். நாணம் மறந்த பேச்சு. அவளின் அப்பாவா என்று கவிதைக்கண்ணனை பலர் கேட்டு அறிமுகம் செய்து கொள்வார்கள். ஐந்து சந்தியில் இருந்த கொத்துரொட்டிக் கடைக்காரர், பலசரக்குக் கடைக்காரர், முடி திருத்துபவர், சலவைத் தொழிலாளி என்று அந்தப் பட்டியல் நீண்டு செல்லும். சில நாட்கள் பழகிய தனக்கே இவ்வளவு ஏக்கமாக இருக்கும் என்றால் அப்பாவைத்தொலைத்து, அப்பாவைத்தேடும் அந்தப் பிஞ்சுக்கு எவ்வளவு ஏக்கம் இருக்கும்? பாவம் அவள் என்று எண்ணிய கவிதைக்கண்ணனின் கட்டுப்பாட்டிற்கு பணியாது பெருமூச்சொன்று சட்டென வெளியேறிற்று. அவள் எதையுமே கருத்தில் கொள்ளமாட்டாளா? அப்படி எதையாவது எண்ணி இருந்தால் எப்படி அவளால் எங்களுக்குள் உள்ள உறவை வேண்டாம் என்று சொல்ல முடியும்? என்ன கல் நெஞ்சம் இவளுக்கு? கவிதைக்கண்ணன் எண்ணி எண்ணிக் குறுக்கெழுத்தாய்க் குழம்பினான்.

சில மனித உறவுகள் இரத்தமும் சதையும் தாண்டி அவன் இருப்பையே கேள்விக்குறியாக்கும் பிணைப்பு. அது சிலவேளை ஆத்ம உணர்வுகளைச் சீண்டி கொந்தளிக்க வைத்துவிடும். கவிதைக்கண்ணனும் தனது சுயநலத்தில் அவன் மனைவியின் உணர்ச்சிகளைப் புரியாதிருந்தான். வாழ்ந்தவளைவிட்டு வந்தவளோடு போவதாகக் கூறியபோது அவள் எப்படித் துடித்திருப்பாள்? கவிதைக்கண்ணனுக்கு தான் துரோகியாகிவிட்டதாகச் சிலகணம் தோன்றும். பின்பும் சுயநலம் மேலிட விவாகரத்து நடவாத உலகமா இது என்று எண்ணிக்கொள்வான். தன்னை முழுமையாகப் புரிந்து கொள்ளாதவளோடு இரவுக்கும் படுக்கைக்கும் இருட்டினில் சாட்சியாவதை அவன் விரும்பவில்லை.

எப்படித்தான் கவிதைக்கண்ணன் சமாதானம் செய்து கொண்டாலும் உத்தரிப்பிற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் என்கின்ற நடுக்கம் அவனிடம் சிலவேளை ஏற்படுவது உண்டு. அதை அவன் கடந்த ஆறுமாத காலத்தில் அனுபவித்தான். அது முடிந்ததா? ஆண்டவன் மன்னித்தானா? அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்பது தொடருமா? கவிதைக்கண்ணன் ஓயாத அலையாகக் குழம்பினான்.

ஐந்து சந்தியில் இருந்து நாவாந்துறைக்குப் போகும் பாதையில் அதிகமான முஸ்லீம் மக்கள் குடி இருக்கிறார்கள். சிலவேளைகளில் வாகனங்கள் பாதையை முழுமையாக அடைத்துக்கொண்டு நிற்கும். இன்றும் சில வாகனங்கள் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. சிலர் வாசலில் இருந்து இளைப்பாறினார்கள். சிறுவர்கள் அங்கும் இங்கும் ஓடிவிளையாடினார்கள்.

கவிதைக்கண்ணனால் இதையெல்லாம் சற்றும் இரசிக்க முடியவில்லை. என்ன நடக்கும்?

ஓட்டோ அந்தப் பழக்கமான மதில் வீட்டின் முன்பு நின்றது. கவிதைக்கண்ணன் ஆறு கிழமைகள் அவளோடு கணவன் மனைவியாக, பிள்ளையோன்றோடு வாழ்ந்த வீடது. அதன் முன்பு அவனது சிசு வளர்ந்து மடிந்த வீடு என்றார்கள். அவன் இதயத்தை யாரோ இறுக்குவதான ஒரு வேதனை. அதை காட்டிக் கொள்ளாது ஓட்டோச் சாரதிக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பெட்டிகளை இறக்கி வைத்தான்.

யாரும் ஓடி வந்து படலையைத் திறக்கவில்லை. வீடு மயான அமைதியில் அரவமற்றுக் கிடந்தது. கவிதைக்கண்ணன் படலையை தட்டினான். தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு காத்திருந்தான். அவன் எதிர்பார்த்தது போல அவள் வரவில்லை. அவள் நின்றிருந்தால் சிலவேளை படலையில் சண்டை தொடங்கியிருக்குமோ என்கின்ற நினைப்பு. அவளில்லாதது ஒருவிதத்தில் நல்லதாயிற்று. மாமி வந்து படலையைத் திறந்தது அவனுக்கு அவகாசத்தைத் தந்தது. மாமி அவனைக் கண்டவுடன் ‘இதென்ன சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கிறியள்? ‘ என்கின்ற கோரோசுடன் படலையைத் திறந்தார். மாமியின் முகம் இருண்டு போயிற்று. ஒப்புக்கு அந்த வசனம் கூறுவதாய் கவிதைக்கண்ணனுக்குத் தோன்றியது. கவிதைக்கண்ணன் பெட்டியோடு உள்ளே சென்றான்.

போன முறை போன போது வீடு இருந்தது போல் இப்போது இல்லை. கோலில் இருந்த குட்டி தொலைக்காட்சி தொலைந்து போயிற்று. அதற்குப் பதிலாக புதிய தட்டைத் தொலைக்காட்சி ஒன்றைச் சுவரில் பொருத்தி இருந்தார்கள். கோலிற்குப் புதிதாகப் பூச்சு அடித்திருந்தனர். அரைவாசிக் கோலை அலுவலகமாக மாற்றி இருந்தார்கள். அலுவலகத்தில் மேசைகள், கதிரைகள், கணினி, தொலைநகல் அனுப்பி என்பன இருந்தன. இந்தத் தொலைநகல் அனுப்பியைத்தானா அவள் சிலவேளைகளில் தான் மீண்டும் மீண்டும் அழைத்தால் தனது தொலைபேசி இணைப்பில் கொளுவி விடுபவள் என்கின்ற எண்ணம் கவிதைக்கண்ணனுக்கு ஏற்பட்டது. கவிதைக்கண்ணன் எதுவும் பேசவில்லை. தொலைபேசி அவன் அவளுக்கு எடுத்துக் கொடுத்தது அவளோடு கதைக்க வேண்டும் என்பதற்காக. அவள் அவனோடு கதைப்பதில்லை. அவன் வாங்கிக் கொடுத்த பொருட்களை எந்தக் கூச்சமும் இன்றி யாருக்காகவோ பாவிக்கிறாள். இந்தச் சின்ன எண்ணம் அவனுள் விசுவரூபம் காட்டியது. கவிதைக்கண்ணனாய் இருந்தால் அப்படிச் செய்திருக்கமாட்டான். கதைப்பதில்லை என்று முடிவெடுத்திருந்தால் அவர்கள் கொடுத்த அலைபேசியைப் பாவித்திருக்கமாட்டான். மாமி போன முறை போகும் போது கொடுத்துவிட்ட மிளகாய்த் தூள் அவனுக்கு ஞாபகம் இருக்கிறது. அது அவள் வந்து பாவிக்காதவரை கன்னிகழியாது என்பது அவனுக்கு நன்கு தெரியும்.

மனிதர்கள் பலவிதம்தான். எனினும் அவளின் அசைவுகள் மிகவும் அன்னியமானவை. கவிதைக்கண்ணன் உள்ளே சென்று அமர்ந்தான். மாமி ஒரு முக்கு முக்கி அவனைப் பரிதாபமாகப் பார்த்தார்.

'நீங்கள் இங்க தங்க ஏலாது. அவன் வந்தாப் பிரச்சனை? ' என்று தொடங்கினார். கவிதைக்கண்ணனை அதிர்ச்சி தாக்கியது. அதைக் காட்டிக் கொள்ளாது,

'யாரவன்?' என்றான்.

'வீட்டில குடியிருக்கிறவன் தம்பி.'

வீட்டில் ஒரு குடும்பம் குடியிருப்பதாகத்தான் அவள் கவிதைக்கண்ணனுக்குக் கூறியிருந்தாள். ஒரு ஆண் குடியிருப்பது இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.

'யார் வீட்டில இப்ப குடியிருக்கிறது? யாரோ ஒரு குடும்பம் குடியிருக்குது எண்டு எல்லோ அவள் சொன்னவள்.'

'இல்ல அது மருமகன்ர சொந்தக்காரர்தான் குடியிருக்கிறார். அவற்ற தம்பிமுறையாம்.'

'அதுக்கும் நான் இங்க தங்கிறதுக்கும் என்ன பிரச்சனை?'

'அவர் பிறகு மருமகனிட்ட நீங்கள் வந்து நிக்கிறியள் எண்டு சொல்லுவார். அது பெரும் பிரச்சனையாயிடும். நாங்கள் குடியெழும்ப வேணும்.'

'இது என்ன புதுக்கதை. அப்பிடி ஏன் சொன்னவர்?' என்றான் கவிதைக்கண்ணன்.

'கண்டவை எல்லாம் தன்ர வீட்டில வந்து நிற்கப்படாது எண்டு அவர் நிற்கிறார். அப்பிடி யாரும் வந்து நிக்கிறத அறிஞ்சா நாங்கள் குடி எழும்போணும் எண்டு சொல்லிப்போட்டுப் போயிருக்கிறார்.'

'ம்.... இப்பிடி ஒருபிரச்சனை இருக்குதா? அப்பிடி எண்டா அதுக்கு என்ன செய்யோணும் எண்டு என்னை முதல்ல கேட்டு இருக்கலாம்தானே?' என்றான் கவிதைக்கண்ணன் அப்பாவியாக.

'அதுதானே அவள் அதுக்கு முதல் தலைகீழா ஆடத் தொடங்கீட்டாள். காரணம் கேட்டா நீங்கள் நெடுகப் பொய் சொன்னனீங்கள் எண்டு சொல்லுறாள்.' அதுகூடக் கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை.

'நான் நெடுகப் பொய் சொன்னனா இல்லை அவள் சொல்லுறாளா? நான் கொழும்பில அவளச் சந்திச்ச பிறகு பொய் சொன்னது கிடையாது. அவள் என்னத்தை மனசில வைச்சுக்கொண்டு இப்பிடிக் கதைக்கிறாள் எண்டு எனக்குத் தெரியாது.' என்றான் அவன்.

'அப்பிடியே. அந்த நாய் வரட்டும் கேட்கிறன். எல்லாருக்கும் பொய் சொல்லுறதுதான் அவளின்ர வேலை போல இருக்குது.'

கவிதைக்கண்ணன் எழுந்து பின்னே சென்றான். அவன் முதலில் அவளோடு நின்ற சின்ன அறையின் கதவில் அவள் உடுப்புகள் தொங்கின. பின்பக்கம் அதிகமாக எந்த மாற்றமும் இன்றி அப்படியே இருந்தது.

கவிதைக்கண்ணன் சிறுநீர் கழித்துவிட்டு மீண்டும் உள்ளே வந்தான். சொந்த வீடாய் போன முறை தோன்றியது இப்போது அன்னிய வீடு போல் இருந்தது. அவன் வந்ததும் அவனைப் பார்த்து,

'அவளை நீங்கள் எடுப்பியளா? ' என்று கேட்டார் மாமி.

'நான் எப்பவாவது எடுக்கமாட்டன் எண்டு சொல்லி இருக்கிறனா? அதுக்குத்தான் வந்தனான். நான் இப்ப றியிஸ்ரர் பண்ணீட்டுப் போறன்.'

'அவளுக்கு இன்னும் டிவோர்ஸ் வரேல்ல.'

கவிதைக்கண்ணன் இந்த உலகில் இருக்கவில்லை. அவளை எப்போது பார்க்கலாம் என்றிருந்தது.

'ஏன்?' என்று மட்டும் கேட்டான். கதை கதையாக அவள் சொல்லி இருந்தது அப்போது அவன் நினைவுக்கு வரவில்லை. மண்டை மரத்துப்போய் கிடந்தது.

'டிவோர்ஸ் அப்பிளிகேசனை மாமாவிட்ட கொடுத்தவள். அவர் அதைப் போடாமல் விட்டிட்டார். அதோட அவள் அங்க உங்கட முதல் மனிசி இருக்கெண்டும் பயப்பிர்றாள்.'

கவிதைக்கண்ணன் அவளின் நினைவில் மாமியின் கதையைக் கோட்டைவிட்டான். மாமி என்ன சொன்னார்? அதற்கு என்ன அர்த்தம் என்பதை அப்போதும் அவனால் கிரகிக்க முடியவில்லை. அவளைப் பார்க்கவேண்டும் என்று அவன் மனது கிடந்து துடித்தது.

'அது நெடுகத்தானே அவளுக்குத் தெரியும். அதை அவள் ஆரம்பத்தில எல்லோ யோசிச்சு இருக்கோணும்.' என்றான்.

'நீங்கள் அவள எடுக்கிறது எண்டா நான் பேசி ஒரு முடிவு சொல்லுறன்.'

'ம்… இப்ப அவள் எங்க?'

'அவள் ஊர்ப் பள்ளிக்குப் போட்டாள்.'

'அப்ப நான் அங்க போய்க் கூட்டிக்கொண்டு வாறன்.' என்று கவிதைக்கண்ணன் புறப்படத் தயாரானான்.

'ஐயோ நீங்கள் அங்க போக வேண்டாம். இப்ப உங்களை யார் எண்டு சனத்துக்குச் சொல்லுறது? எல்லாரும் விடுப்பு கேட்பினம்.' கவிதைக்கண்ணன் கோட்டைவிடப் பிறந்தவன்.

'இதில என்ன விடுப்பிருக்கு? முதல் வந்து நிக்கேக்க, இந்த வீட்டில நிண்டு குடும்பம்தானே நடத்திப்போட்டுப் போனனான்?' என்றான்.

'அது என்னவோ… இப்ப நீங்கள் அங்க போகவேண்டாம். நான் அவளுக்குப் போன் பண்ணுறன்.' அதன் சூட்சுமத்தை அவன் புரிந்து கொள்ளவில்லை.

தாயின் அழைப்பை அவள் முதலில் எடுக்கவில்லை. கவிதைக்கண்ணனுக்கு இது பழக்கப்பட்ட விடயம். சிறிது நேரம் இருந்துவிட்டு கவிதைக்கண்ணன் தான் ஊருக்குப் போய் பார்த்து விட்டு வருவதாக எழும்பினான்.

'இல்ல நீங்கள் போகவேண்டாம். நான் போன் பண்ணுறன்.' என்று பதறியடித்த மாமி மீண்டும் போன் செய்தார். ஏன் அவனை அங்க செல்ல விடக்கூடாது என்று மாமி பதறுகிறார் என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. வேறு சாட்டுச் சொல்லிக்கொண்டு நழுவும் மூளையும் அவனிடம் இருக்கவில்லை. போனமுறை வந்த போது மாமிதானே பேத்திக்கு அப்பா அப்பா என்று கூப்பிட சொல்லிக் கொடுத்தார். ஊர்ப் பிள்ளையார் கோயில் வருடப்பிறப்பன்று நடந்த தேர்த்திருவிழாவிற்குக் குடும்பமாய் போய் வருமாறு கூறினார். கவிதைக்கண்ணனுக்கு ஊமைக்கோபம். அப்பொழுதுகூட வயது மூத்த பெண்ணை மரியாதை இல்லாது பேச அவனுக்கு மனம் ஏகவில்லை.

அவள் முதலில் வரவில்லை என்று சொன்னாள். கவிதைக்கண்ணன் ஊருக்குச்சென்று அந்த மசூதியில் அப்படி என்ன நடக்கிறது என்பதையும் பார்த்துக்கொண்டு, அவளது ஒன்றுவிட்ட அக்காளையும் கண்டு கதைத்துவிட்டு வருவோம் என்கின்ற எண்ணத்தோடு எழுந்தான். அதற்கிடையில் மாமி 'நீ இப்ப வந்தாகவேணும்.' என்று மூர்க்கமாக நிற்க, அவள் மசியத்தொடங்கினாள். கடைசியாக ஓட்டோ பிடித்துக்கொண்டு வருவதற்கு அவள் சம்மதித்தாள்.

அரிய சந்தர்ப்பம் ஒன்று அவன் கைநழுவிப் போயிற்று. அதையறியாது கவிதைக்கண்ணன் சற்று அமைதியாகினான். மாமி அவனுக்குத் தேநீர் தயாரித்துக் கொடுத்தார். அதைக் குடித்துக்கொண்டு இருக்கும் போதுதான்,

'எந்த அறை அவருக்கு? ' என்று கவிதைக்கண்ணன் கேட்டான். மாமி சின்ன அறையில் அவர் இருக்கிறார் என்று கூறினார். கவிதைக்கண்ணனுக்கு தேநீர் நாக்கைச் சுட்டது. தலை சுற்றியது. எதற்காக இங்கு வந்தான் என்பது அவனுக்குப் புரியவில்லை. சிறிது நேரம் கண்ணை மூடியவண்ணம் அமைதியாக இருந்தான். காதல் என்பது இதுதானா?

மீண்டும் அவள் இல்லாது தன்னால் வாழமுடியாது என்கின்ற உயிரையும் வெறுக்கும் காதலின் பிடி எழுந்தது. வாழ்க்கை முடிந்து விடும் என்கின்ற சூனியம் தெரிந்தது. அற்பத்தனமாய் எண்ணிப் பார்த்ததை விட்டொழிக்க வேண்டும் என்று மனதிற்குள் தனக்குத்தானே புத்திமதி சொல்லிக்கொண்டான்.

மாமி கதைத்துக் கொண்டிருந்தார். கவிதைக்கண்ணன் ஏதோ பதில் சொன்னான். மனது மாத்திரம் எங்கோ சஞ்சரித்தது.

அவள் வந்தாள். தோற்றத்திலும் இப்படி மாறி இருப்பாள் என்கின்ற கற்பனை அவனிடம் இருந்ததில்லை. பொது நிறமான அவள் வெளிறிப் போனாள். வயிறு பெருத்துத் தள்ளிக்கொண்டு நின்றது. தலைமுடி ஜதாகிப் போயிருந்தது. என்றும் குங்குமப் பொட்டில்லாத அந்த நெற்றியில் இன்று சுபி பாவாவின் சந்தனம் இருந்தது. அது என்ன மதம் என்பது கவிதைக்கண்ணனுக்கு இன்னும் புரியவில்லை. எம்மதமும் சம்மதம் என்கின்ற உயர்ந்த நிலையா? அல்லது அடையாளம் இல்லாதவர்களின் அவஸ்தையைப் போக்குமிடமா? அது ஒரு புதுவிதமான மதக்குழு. சமைப்பதும் சாப்பிடுவதும் அதில் முக்கிய சடங்கு. கொண்டாட்டம்.

இவ்வளவு குறுகிய காலத்தில் அவளது முகம் வெளிறி, உடல் பருத்தது எப்படி என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை. கவிதைக்கண்ணனின் கருவைச் சுமக்கும்போது ஒரு படம் அனுப்பி வைத்தாள். அந்தப் படத்திற்கும் அவளின் இன்றைய தோற்றத்திற்கும் அவனுக்கு வித்தியாசம் தெரியவில்லை. அவள் வரும்போதே சத்தம்போட்டுக்கொண்டு வருவாளோ என்கின்ற நினைப்பில் இருந்தான். அவள் அப்படிச் செய்யவில்லை.

வீட்டிற்குள் வந்த பிறகுதான்,

‘வேண்டாம் எண்டா விடுங்களன். என்னையேன் இப்பிடி ஆக்கினைக்கட்டுறியள்? ‘ என்றாள் அவனைப் பார்த்து.

கவிதைக்கண்ணனுக்கு அவளைப்பார்க்கச் சோகம் தாங்க முடியவில்லை. இப்படி உறவில் விரிசல் விழும் என்று அவன் கற்பனை செய்தவனும் இல்லை. கண்கள் கலங்கியதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

‘நான் என்ன பாவம் செய்தன்? ஏன் எனக்கு இந்தத் தண்டனை சொல்லு? இதையெல்லாம் நீ முதல்ல யோசிச்சு இருக்கோணும். இப்ப எல்லாம் குழம்பினபிறகு, நிறையக் கற்பனைகளை மனதில வளர்த்த பிறகு, இப்பிடிச் சொன்னா நான் என்ன செய்யிறது?’ கவிதைக்கண்ணன் அவள் கையைப் பிடித்தான்.

அவள் அதை மெதுவாக இழுத்துக் கொண்டாள். அவனுக்கு மீண்டும் மனது வலித்தது. சந்தோஷமாய் அவனை நாடிவந்து தானே தழுவி முத்தம் தந்தவள் இன்று தன்னை விரோதியாய் பார்ப்பது புரிந்தது.

அவள் அவனைப் பார்த்துக் கரையவில்லை. கசியவில்லை. இரக்கம் காட்டியதாக அவனுக்குப் புரியவில்லை. இவளுக்குள் இப்படி ஒரு இரும்பு மனிசி இருந்திருப்பாள் என்கின்ற ஊகம்கூட அவனிடம் இருந்ததில்லை. கவிதைக்கண்ணன் வாயடைத்துப் போனான். மனது சுருண்டு போயிற்று. அவள் வாய்திறந்தாள்.

‘அது ஒண்டும் குழம்பேல்லை. பேசாமல் போய் அங்க இருங்க.’ என்றாள்.

மாமி இடையில் புகுந்தார்.

'நீ அவரோட போ சுமதா. நான் இப்ப சொல்லி இருக்கிறன். அவர் ஓகஸ்ட் வந்து கலியாணம் செய்து கூட்டிக்கொண்டு போவார். நீ சும்மா எல்லாருக்கும் பொய் சொல்லிக்கொண்டு திரிய வேண்டாம்.'

'சரி இப்ப அம்மாவே சொல்லீட்டா தானே. நீங்க வெளிக்கிடுங்க.' அவள் அவனை அப்புறப்படுத்துவதில் அவசரமும் அக்கறையும் காட்டினாள்.

'நான் எங்க போறது?' என்றான் கவிதைக்கண்ணன்.

'உங்கட சொந்தங்களிட்டைப் போங்க.' என்றாள் அவள்.

'உனக்கே இது சரியாப்படுகுதா?' என்றான் கவிதைக்கண்ணன்.

'நான் உங்கள வரச்சொன்னனா? அதோட, அவைய மீறி உங்களோட தொடர்பு வைச்சிருக்கிறதெண்டா செலவுக்குக் காசு அனுப்பமாட்டினம். நீங்கள் அந்தச் செலவையும் தரவேணும்.' என்று அவள் வியாபாரம் பேசினாள்.

'அது பிரச்சனை இல்லை. நீ அங்க வரோணும். நானும் நீயும் ஒண்டா இருக்கோணும்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'சரி இருப்பம். நீங்கள் இப்ப மினக்கெடாமல் வெளிக்கிடுங்க. எங்கயாவது ஹோட்டலில நிண்டிட்டுப் போய்ச் சேருங்க.' என்றாள் அவள் தொடர்ந்தும்.

அவள் கூறிவிட்டு அவன் பதிலை எதிர்பாராது ஓட்டோக்காரனைத் தொலைபேசியில் தொடர்புகொண்டாள். கவிதைக்கண்ணனுக்கு இதயம் நொந்தது. என்ன செய்வது என்று புரியவில்லை. இதற்கு மேல் தன்னால் எதுவும் செய்யமுடியாது என்பதை அவன் மெல்ல உணரத் தொடங்கினான்.

சிறிது நேரத்தில் ஓட்டோ வந்தது. கவிதைக்கண்ணன் அவளுக்காக வாங்கிவந்த பொருட்களை அவசரமாக எடுத்துக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான். எங்காவது ஒரு ஹோட்டலில் தங்குவதாய் உத்தேசித்துக் கொண்டே அவன் புறப்பட்டான். அவள் கவிதைக்கண்ணன் வந்ததற்கோ, அல்லது இப்படிப் போவதற்கோ கவலைப்படுவதாய்த் தெரியவில்லை. ஊர் பள்ளியில் இருந்து இடையில் வந்த கவலைதான் அவளை ஆட்கொண்டது. முகம் மாரிகாலமாய் இருண்டு கிடந்தது. இவளெல்லாம் என்னையும் கொக்கென்று நினைத்தாயா என்று மட்டும் கேட்க முடியாது என்பது அவனுக்குப் புரிந்தது.

பல விடுதிகள் தேடித்திரிந்தும் ஒரு இடத்திலும் அறை கிடைக்கவில்லை. கவிதைக்கண்ணன் தனது உறவினரிடம் செல்ல முடிவு செய்தான். அவளை வீட்டில் விட்டுவிட்டுத் தான் போவதாகக் கூறினான். அவள் தன்னைப் பேருந்து நிலையத்தில் விட்டு விடுமாறு கூறினாள். தாய் திரும்பத் திரும்ப வீட்டிற்கு வருமாறு கூறியது கவிதைக்கண்ணனுக்கு ஞாபகம் வந்தது. கவிதைக்கண்ணன் எதுவும் பேசவில்லை. பேசப் பிடிக்கவில்லை. என்ன பிறப்பு இவள் என்பதான ஒரு கசப்பு. என்றாலும் அவள் நினைவு நெஞ்சை விட்டகலாப் பிசாசு. கவிதைக்கண்ணன் கண்ணை மூடிக்கொள்ள ஓட்டோ காற்றைப் பிரித்துக்கொண்டு முன்னேறியது.

காதல் இவ்வளவு வலுவாக இருக்கும் என்று கவிதைக்கண்ணன் நினைத்திருக்கவில்லை. அவளை வெறுக்க நினைத்தாலும் வெறுக்க முடியாது என்பதை அவன் புரிந்து கொண்டான். சில நாட்கள் கழிந்தது. மீண்டும் கொழும்பிற்குப் பயணம் போக முதல் அவளை ஒரு முறை சந்தித்துவிட்டுப் போக வேண்டும் என்று அவன் மனது கிடந்து துடித்தது. அன்று மதியம்தான் கவிதைக்கண்ணன் நேர்த்தியாகக் கொடுக்க வேண்டிய மோதிரத்தை நல்லூர்க் கந்தனுக்குக் கொடுத்து, மனதில் எனக்கு ஏன் இந்த வேதனை என்று அழுதுவிட்டு வந்தான். அந்தக் கந்தன் இனியாவது அருள் புரிவான் என்கிற நப்பாசையோடு, அவளை ஒரு முறை நல்லூர்க் கந்தன் கோயிலுக்காவது அழைத்துச் சந்தித்துவிட வேண்டும் என்று எண்ணினான்.

மூன்றுமணி இருக்கும். கவிதைக்கண்ணன் அலைபேசியில் தொடர்பு கொண்டு நல்லூருக்கு வரச்சொன்னான். முதலில் ஓம் என்று சம்மதித்தாள். அப்படிச் செய்வது அவளின் பழக்கம். கேட்டால் உடனே மறுப்பதில்லை. எல்லாவற்றிற்கும் ஓம் என்று சொல்வது. பின்பு அதைச் செய்யாது விடுவது. அல்லது 'நான் ஓம் என்று சொன்னனா?' என்று புரட்டிக் கேட்பது. மாற்றிக் கதைப்பது. மற்றவர்களை பேய்ப்பட்டம் கட்டும் அவளது தொடர் முயற்சி. கவிதைக்கண்ணன் அவள் வருவாள் என்று இன்னும் நம்பினான். இத்தினை ஆயிரம் மயில்கள் கடந்து வந்தது பற்றி, பத்து மாதங்களுக்கு முன்பு கணவனாய் வாழ்ந்துவிட்டுப் போனவன் என்பது பற்றி அவளிடம் எந்தக் கரிசனையும் கிடையாது என்பது உறைத்தாலும், ஏற்றுக்கொள்ளும் மனநிலை அவனிடம் இருக்கவில்லை. கோயிலுக்கு வரச்சொல்லிக் கூப்பிட்டால் அவள் வருவாள் என்று நினைத்தான்.

கவிதைக்கண்ணன் நல்லூரில் பத்தர்கள் கால்கழுவும் இடத்திற்குப் பக்கத்தில் நின்ற மரத்தின் நிழலில் சில கணங்கள் காத்திருந்தான். அவளைக் காணவில்லை. காதல் சோடிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்து கதைத்தனர். சில சிறுவர்கள் ஓடி விளையாடினர். சில பக்தர்கள் கால்கழுவிவிட்டுக் கோயிலுக்குச் சென்றார்கள். கந்தன் கோயில் பொன்னாய் மினுங்கியது. கவிதைக்கண்ணன் மனது இருண்டே கிடந்தது.

தொடர்ந்து காத்திருந்தும் அவள் வரவில்லை. கவிதைக்கண்ணன் அலைபேசியில் தொடர்பு கொண்டான். அவள் தான் வரவில்லை என்றும் தனது நிலையைப் புரிந்து கொள்ளுமாறும் கேட்டாள். அப்படி என்ன நிலை என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை. அதுவும் தன்னை வந்து கோயிலில் சந்திப்பதற்கு என்ன தடை என்பது அவனுக்குப் புரியவில்லை. கற்பமாய் இருக்கும் பெண்கள்தான் கோயிலுக்கு வரக்கூடாது. இவள் எதற்காக வர மறுக்கிறாள். கவிதைக்கண்ணனுக்கு எதுவும் புரியவில்லை. இன்னும் அவள் மீது இருக்கும் மோகம் அவனுக்குச் சற்றும் மறையவில்லை.

அவள் கோயிலுக்கு வரவில்லை என்ற போதும் கவிதைக்கண்ணன் பேசவில்லை. தான் கொண்டுவந்த பொருட்களைக்கூட ஒழுங்காகத் தந்துவிட்டுப் போக நேரம் கிடைக்கவில்லை என்று கூறினான். அப்போது அவள் அப்படித் தரவேண்டிய பொருள் என்ன இருக்கிறது என்று அவனைக் கேட்டாள். கவிதைக்கண்ணன் அவளுக்காக முகத்திற்குப் பூசும் 'Cream' வாங்கிச் சென்றிருந்தான். அதை அவளிடம் கூறினான். அவள் அதற்கு அதைப் பெரியம்மா வீட்டில் கொண்டுவந்து தரும்படி கூறினாள். அவள் சுயநலமோ சுத்துமாத்தோ அவனுக்கு அப்போதும் புரியவில்லை. அங்கு எதற்கு உங்கள் வீட்டிற்குக் கொண்டு வந்து தருகிறேனே என்று கவிதைக்கண்ணன் கேட்டான். அப்படியாவது அவளைச் சந்தித்துவிடும் அவன் நப்பாசை. இல்லை

வேண்டாம். தயவு செய்து என்னைப் புரிந்து கொள்ளுங்கள் என்று மறுபடியும் கூறினாள். கவிதைக்கண்ணனுக்கு அதற்கு மேல் அவளை வற்புறுத்த மனம் வரவில்லை. ஓட்டோ ஒன்று பிடித்துக்கொண்டு பெரியம்மா வீட்டிற்குச் சென்று அதைக் கொடுத்துவிட்டு வந்தான்.

கவிதைக்கண்ணன் அவளோடு வாழ்ந்ததை நேரில் கண்ட ஒரே ஒரு சொந்தம் பெரியம்மா. பல்லன் என்று கவிதைக்கண்ணனிடம் அவள் சொன்ன அவளது மச்சான். அவன் போன முறை கவிதைக்கண்ணன் வந்து வீட்டில் நிற்கும் போது வீட்டிற்குத் திடீரென்று வந்ததால் கவிதைக்கண்ணனைச் சந்தித்தான். அவன் வந்த போது 'அப்பா' என்று மகள் கவிதைக்கண்ணனை அழைத்தாள். சுமதாவின் முழு வரலாறும் அவனுக்குத் தெரியும். தாயும் மகளும் போடும் தப்புத் தாளம் பற்றியும் அவன் அறிந்திருந்தான். ஏதோ ஒரு விடயத்தில் அவனை மாமி பேசியதாகக் கவிதைக்கண்ணனிடம் கூறியிருந்தார். மகளுக்கு உயிரியல் அப்பா யார் என்பதும் அவன் அறிவான். உயிரியல் அப்பா இல்லாத ஒருவனை அப்பா என்றால் அவனுக்கும் சுமதாவுக்கும் என்ன முறை இருக்கும் என்பதும் அவனுக்குப் புரியும். கவிதைக்கண்ணனை யார் என்று சுமதா மச்சானுக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை. பின்பு தான் வேறு ஒரு ஆளை வீட்டில் பார்த்தது பற்றி மச்சான் சுமதாவின் தமக்கைக்குப் போன் பண்ணிக் கூறினான். அத்தால் இவள் அவனைக் கொலை செய்ய வேண்டும் என்று கவிதைக்கண்ணனோடு ஆத்திரப்பட்டாள். கவிதைக்கண்ணன் அவனுக்குத் தான் யார் என்று அறிமுகம் செய்யாது விட்டது பற்றி இப்போது மிகவும் வருத்தப்பட்டான். அவன் பெயர்கூட என்னவென்று கவிதைக்கண்ணனுக்குத் தெரியாது.

20

கவிதைக்கண்ணன் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு ஒற்றையாக வந்தான். அவன் வழமை போல பச்சைநாடு விடுதியில் அறை எடுத்துக்கொண்டான். அந்த ஒப்பந்தத்திற்குப் பின்பும் கவிதைக்கண்ணன் அலைபேசியில் தொடர்பு கொண்டால் அவள் ஓரளவு நேரம் அவனோடு கதைப்பாள். சிலவேளை கதைப்பதற்குப் பயப்படுவது போலவோ அல்லது பேசுவதற்கு விடயம் இல்லாதது போனதாகவோ இருக்கும். கொழும்பிற்கு வந்த நான்காம் நாள் அவளோடு கதைத்த பொழுது தனக்கு இப்போது கதைக்க நேரமில்லை என்று கூறி அலைபேசியைத் துண்டித்தாள். கவிதைக்கண்ணனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மீண்டும் திரும்பிப் போவதா? போக வேண்டும் போல் வெறி. போவதா விடுவதா என்பது புரியாது துடித்தான். கவலையும் ஏக்கமும் அவன் உயிரைத் தின்றன. 'நீ தொடர்ந்தும் மாறாமல்தான் இருக்கிறாயா?" என்று கேட்டு அவளுடைய அலைபேசிக்குக் குறும்செய்தி இரவு அனுப்பி விட்டு அவன் படுத்தான். நாளைக்கு நல்ல பொழுதாகப் புலர வேண்டும் என்கின்ற பிரார்த்தனை அவனிடம். அவளோடு சமாதானமாய் நிறைய நேரம் கதைக்க வேண்டும் என்கின்ற கற்பனை.

அடுத்த நாள் காலை எழுந்து பல்லுத் தீட்டிக் கொண்டு நின்ற போது குறும்செய்தி ஒன்று வந்தது. அது என்னவென்று பார்க்க முதல் அடுத்தது ஒன்று வந்தது. கவிதைக்கண்ணன் அவை இரண்டையும் பார்த்தான். அவளது அலைபேசியில் இருந்து வந்த அந்தக் குறும்செய்தியில், 'ஓமடா, ஓமடா நாயே.' என்றிருந்தது. கவிதைக்கண்ணனுக்கு கோபத்தில் கைகால் நடுங்கின. இரத்தம் உச்சிக்கு ஏறி முகம்

தலையெல்லாம் அனல் பறந்தது. திரும்பிப் போய்க் கொலை செய்தால் என்ன என்கின்ற எண்ணம் ஒரு கணம் எட்டிப் பார்த்தது. அதற்கு மேல் அவனால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அவன் அவளை அலைபேசியில் தொடர்பு கொண்டு கோபமாகப் பேசினான். அவளும் கோபமாகப் பேசினாள். பின்பு கோபத்தோடு கவிதைக்கண்ணன் அலைபேசியைத் துண்டித்தான்.

சிறிது நேரத்தில் கவிதைக்கண்ணனுக்கு வேறு ஒரு அலைபேசியில் இருந்து அழைப்பு வந்தது. 'கலோ.' என்றான் கவிதைக்கண்ணன். அது ஒரு ஆணின் குரல். அது தொடர்ந்தது. 'நீங்கள் எதுக்கு என்ர போனுக்குப் போன் பண்ணுறியள்? 'எஸ்.எம்.எஸ்' அனுப்பிறியள்? இப்பிடிச் செய்தா நான் பொலிசில என்றி போட்டிடுவன்.' என்றது. கவிதைக்கண்ணனுக்குத் திகைப்பாகிற்று? யார் அவன் என்பது முதலில் புரியவில்லை. எதற்காக இப்படிக் கதைத்தான் என்பதும் புரியவில்லை.

'உன்ர போனுக்கா? நான் ஏன் உன்ர போனுக்குப் போன் பண்ணுறன். உன்ர போன் நம்பர் என்ன?' என்று கேட்டான் கவிதைக்கண்ணன்.

அவன் சுமதாவின் தொலைபேசி எண்ணைக் கவிதைக்கண்ணனுக்குக் கூறினான். கவிதைக்கண்ணனுக்குத் தலை சுற்றியது. கோபம் வெறி கொள்ள வைத்தது.

'இது சுமதாவின்ர நம்பரெல்லோ? ' என்றான்.

'ஓ… ஆனா நீ யார் சுமதாவுக்குப் போன் செய்து தொந்தரவு குடுக்கிறதுக்கு?' என்றான் அவன்.

'நான் அவளின்ர புருசன். நான் போன் பண்ணாமல் வேற யார் பண்ணுறது?' என்றான் கவிதைக்கண்ணன்.

'என்ன நீங்கள் சொல்லுறியள்? நான் அவளோட ஆறுமாதமா குடும்பம் நடத்துறன். உங்களை அத்தான்ர றிலேசன் எண்டுதான் எனக்குச் சொன்னவை.' என்றான் அவன்.

'எனக்கும் உம்மை அத்தான்ர றீலேசன் எண்டு சொல்லிச்சினம்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'அப்ப எல்லாருக்கும் அப்பிடியா சொல்லி இருக்கினம். நான் பொலிசுக்கு போறன். அப்ப தெரியும்.' என்றான் அவன்.

'நல்லாப் போ. நான் அவளோட குடும்பம் நடத்தினதுக்கு என்னிட்ட நிறைய ஆதாரம் இருக்குது.' என்றான் கவிதைக்கண்ணன்.

அவன் அத்தோடு அலைபேசியைத் துண்டித்துவிட்டான். பின்பு கவிதைக்கண்ணன் தொடர்புகொள்ள அவன் அதை எடுக்கவில்லை.

அதன் பின்பு மீண்டும் கவிதைக்கண்ணன் அவளை அலைபேசியில் தொடர்பு கொண்டான். அப்பொழுது மாமிதான் அலைபேசியை எடுத்தார்.

'யார் உங்கட வீட்டில இருக்கிறவன்?' என்று கவிதைக்கண்ணன் கோபமாகக் கேட்டான்.

'அவன் மருமகன்ர சொந்தக்காரன் தம்பி.'

‘அப்ப அவன் சுமதாவோட குடும்பம் நடத்துறன் எண்டு சொல்லுறான்?’

‘அட கடவுளே. அப்பிடிச் சொல்லுறானே?’ அது உண்மையான அதிர்ச்சியா அல்ல ஒப்புக்கான கோரோசா என்பதில் கவிதைக்கண்ணனுக்குக் குழப்பம்.

‘ஓ எங்கையவன். கூப்பிடுங்க ஆளைக் கேட்பம்.’ என்றான் கவிதைக்கண்ணன் தொடர்ந்து.

‘அவன் இல்லைத் தம்பி. அவன் வீட்ட வரேல்லை.’

‘சுமதா எங்க?’

அவள் வந்தாள்.

‘அவன் சொன்னா நீங்களும் நம்புறதே? அவனுக்கு என்னைவிட எட்டு வயது குறைவு. கொஞ்சம் எண்டாலும் யோசிக்க மாட்டியளா? உங்களிட்ட இருந்து கதை புடுங்கிறத்துக்கு அவன் அப்பிடிச் சொல்லி இருக்கிறான்.’ என்று அவள் பிரட்டிப் போட்டாள்.

‘சும்மா ஆரும் சொல்லுவாங்களே? சரி அவனிட்ட உன்ர மெபையில் எப்பிடி போனது?’ கவிதைக்கண்ணனுக்குத் தான் புத்திசாலியான நினைப்பு.

‘நான் மேசையில வைக்கிறனான். அவன் எடுத்துப் பார்த்திருக்கிறான்.’ என்று அவள் தொடர்ந்தாள்.

‘நான் நிக்கேக்கையே நீ போனை மேசையில வைக்கிறேல்லை. என்னப் பார்க்க விடுறேல்ல. இப்ப யாரோ ஒருத்தனைப் பார்க்க விட்டியா? அவன் சொன்ன உடன மேசையில வைச்சியா? என்ன கதைவிர்றா?’ முதன்முறை புத்திசாலியாகக் கவிதைக்கண்ணன் ஒரு கேள்வி கேட்டான்.

‘அது அவன்ர ‘சிம்காட்’. அதுதான் ஒண்டும் செய்ய முடியயேல்லை.’ அவள் புரட்டுவதில் பெரிய கில்லாடி.

‘அவனுடைய சிம்மோ?’

‘ம்… என்ர துலைஞ்சு போச்சுது. அதுதான் அவனிட்ட கடனா வேண்டினான்.’

‘உன்ர துலைஞ்சு போச்சா? உன்னிட்ட எத்தின ‘சிம்காட்’ இருந்தது? சரி அவன் வந்த உடன எனக்குப் போன் பண்ணு. நான் அவனோட கதைக்க வேணும். அதோட அவன் இப்பிடி சொன்னதை உன்ர அக்காவுக்குப் போன் எடுத்துச் சொல்லு. அவைதானே குடிவைச்சவை. அவன் வீண்பழி சொன்னதுக்கு இப்ப அவைதானே பொறுப்பு? அப்ப அவை முதல்ல இதை அறிய வேணும். சரியே?’ கவிதைக்கண்ணனின் குழப்பமான கதை தொடர்ந்தது.

‘சரி.’ என்றாள் அவள்.

அந்தச் சரி என்பதை அவள் விரும்பிச் சொல்லவில்லை. கட்டாயத்திற்குச் சொன்னாள் என்பதை அவளின் குரலில் இருந்து கவிதைக்கண்ணன் அறிந்து கொண்டான்.

'நான் அடிச்சுச் சொல்லவா?' என்று கேட்டான்.

'நீங்கள் திரும்பவும் குழப்பாதையுங்க. பிறகு நான் கதைக்க மாட்டன்.' அவள் நாகக்கணையைக் கையிலெடுத்தாள்.

'இதைச் சொல்லறதில உனக்கு என்ன பயம்? இதை நீ கட்டாயம் சொல்ல வேணும். அவை குடிவைச்சவையெண்டா இப்ப அவைதான் உன்ர மானத்தைக் கெடுத்ததுக்கும் பொறுப்பு. அதை அவை அறிய வேணும்.' என்றான் முட்டாளான கவிதைக்கண்ணன்.

'சரி இப்ப நீங்க கொஞ்சம் அமைதியா இருங்க. நாங்கள் முதல்ல அவனைக் கேட்கிறம்.' என்றாள் அவள்.

கவிதைக்கண்ணன் அடுத்த நாள் காலை தொடர்பு கொண்டான். அவன் வரவில்லை என்றும் அவனது தாயோடு தாங்கள் கதைத்ததாகவும் அவள் கூறினாள். 'அக்காவுக்குச் சொன்னியா?' என்று கவிதைக்கண்ணன் கேட்ட போது 'வேண்டாம் அவளுக்குத் தெரிந்தால் இன்னும் பிரச்சனையாகும்.' என்று அவனுக்குக் கூறினாள்.

கவிதைக்கண்ணனுக்கு அது புரியவில்லை. அவர்கள் குடிவைத்த ஒருவனால் இவளது மானம் போயிருந்தால், அதை அவர்களுக்குச் சொல்வதில் என்ன தயக்கம்? என்று அவன் எண்ணினான். 'நீ கட்டாயம் அக்காவிற்குச் சொல்ல வேணும்.' என்று வற்புறுத்திக் கூறிவிட்டு அலைபேசியைத் துண்டித்தான்.

அடுத்த நாள் கவிதைக்கண்ணன் தொடர்பு கொண்டபோது அவள் அலைபேசியை எடுக்கவில்லை. மாமி அலைபேசியை எடுத்தார்.

'மூத்த மகளுக்கு நடந்ததைச் சொல்லியாச்சே? ' என்று கவிதைக்கண்ணன் மீண்டும் கேட்டான்.

'அவளுக்குத் தெரியவேண்டாம் தம்பி.' என்று மாமியும் அதே பதிலைக் கூறினார். கவிதைக்கண்ணனால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

'இல்ல அவளுக்குத் தெரிய வேணும். நான் போன் பண்ணிச் சொல்லுறன்.' என்றான் அவன்.

'சொன்னா உங்களுக்கு இப்ப இருக்கிற தொடர்பும் இல்லாமல் போகும். நீங்கள் சுத்தி சுத்தியும் இங்கதான் வரவேணும்.' என்றார் கவிதைக்கண்ணனின் மாமி.

'பருவாய் இல்லை.' கவிதைக்கண்ணன் அத்தோடு அலைபேசியைத் துண்டித்தான். இம்முறை உண்மை சொல்லி இந்த உறவு இனி இல்லை என்று ஆனாலும் பருவாய் இல்லை என்று அவன் எண்ணினான்.

அவளது தமக்கைக்குப் போன் செய்ய வேண்டும் என்று எண்ணினாலும் தயக்கம் அவனைப் பிடித்து இழுத்தது. சுமதாவைப் பற்றி அறிந்ததை நினைக்கும் போது நெஞ்சு நோவெடுத்தது. இப்படியும் நடக்குமா?

எடுத்ததிற்கு எல்லாம் பொய் சொல்பவள் அவள். இதில் எது உண்மை? எது பொய்? தமக்கைக்குச் சொல்வதற்கு பயப்படுவதை எண்ணும் போது அவனுக்கு மர்மமாகவும் பயமாகவும் இருந்தது.

அன்று பிற்பகல் கவிதைக்கண்ணன் சாப்பிடுவதற்காய் 'MC'யின் கீழ்த்தளத்தில் வலம் வந்தான். அவள் அப்போது அலைபேசியில் தொடர்புகொண்டு அவளின் வீட்டில் குடியிருப்பவன் கவிதைக்கண்ணனை நேரில் சந்தித்துக் கதைப்பதற்கு கொழும்பிற்கு வருவதாகக் கூறினாள். கவிதைக்கண்ணன் 'கதைக்கிறது எண்டா இப்பவே போனில கதைக்கலாமே? எதுக்கு நேரே வரோணும்?' என்று கேட்டான். அதற்கு அவள் 'தெரியாது. அவன் நேரே சந்திச்சுக் கதைக்க வேணுமாம்.' என்று கூறினாள். அவனைத் தனக்குத் தெரியாது போன்று காட்டிக் கொள்வதில் அவளுக்கு ஏக அக்கறை. 'சரி வரச்சொல்லு.' என்று கவிதைக்கண்ணன் கூறவும் அவள் அலைபேசியைத் துண்டித்தாள்.

முன்பு மாதிரிக் கவிதைக்கண்ணன் சம்பந்தப்பட்ட தொடர்பில் அவள் அதிகம் பணம் செலவிடுவதில்லை. வரவு செலவுக் கணக்குப் பார்க்கிறாள் என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரிந்தது. கவிதைக்கண்ணனும் கோபத்தில் தான் கொடுத்தது எல்லாம் தரவேண்டும் என்று கேட்டாகிற்று.

அன்றும் வழமை போல் கொத்துரொட்டி வாங்கி வந்தான். அவன் கொண்டு வந்த மதுவும் அன்றோடு முடிந்துவிட்டது. பயணம் போகும் நாளும் நெருங்கியது. அன்றும் அவன் வழமை போல மது அருந்தத் தொடங்கினான். சிறிது நேரம் மது அருந்திய பின்பு சற்று உசார் வந்தது. 'எதற்காக இந்த ஒளிப்பு மறைப்பு? சொந்த அக்காவுக்குச் சொல்வதில் என்ன பின்னடிப்பு? ' என்கின்ற எண்ணம் எழுந்தது. சுமதாவின் வீட்டுத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அக்காவோடு கதைத்தாளா என்று கேட்பதற்கு முயற்சித்தான். அது தொலைநகல் அனுப்பிக்குப் போனது. எப்போது அவள் அதைத் தொலைநகல் அனுப்பியில் கொளுவுவாள் எப்போது எடுப்பாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. சிலவேளை அவன் நிற்கும் போது அப்படிச் செய்வாளோ என்கின்ற சந்தேகம் எழுந்தது. மனது வெறுத்துப் போயிற்று. அவனது அலைபேசியில் போதிய பணம் இருந்தது. கவிதைக்கண்ணன் சுமதாவின் தமக்கையை அலைபேசியில் தொடர்புகொண்டான். அங்கு அவளது தமக்கை சிலவேளைகளில் எடுக்கலாம். சிலவேளைகளில் அவளது கணவன் எடுக்கலாம். யார் எடுத்தாலும் விடயத்தைச் சொல்ல வேண்டும் என்கிற வெறியை மதுவெறி வேகமூட்டிற்று.

'கலோ.' என்றவண்ணம் மறுமுனை உயிர் பெற்றது. அவளது மெல்லிய சிறு கரகரப்பான குரல். அவள் கோபக்காரி என்பதைச் சுமதா கவிதைக்கண்ணனுக்கு ஆயிரம் முறை சொல்லி இருக்கிறாள். அதையெல்லாம் மீறிக் கவிதைக்கண்ணன் இப்போது தமக்கையுடன் கதைத்தான்.

'நான் கவிதைக்கண்ணன்.' என்றான்.

'ஓ தெரியும், சொல்லுங்கோ.' என்றாள் அவள்.

'உங்களோடை கதைக்கக்கூடாது. கதைச்சா எனக்கும் தனக்குமிடையில இருக்கிற உறவு இல்லாமல் போயிடும் எண்டு நெடுகச் சுமதா சொல்லுறவள். இப்ப என்ன நடந்தாலும் சரி எண்ட முடிவோடதான் உங்களோடை கதைக்கிறன். அவள் மாத்திரம் இல்லை, அம்மாவும் அப்பிடித்தான் நிற்கிறா. உங்களோடை கதைக்கக் கூடாது எண்டு ஒரு சட்டம். ஏன் எண்டு எனக்கு விளங்கேல்லை.' என்றான் கவிதைக்கண்ணன்.

'ம் சொல்லுங்கோ.' என்றாள் அவள் தொடர்ந்து.

'நான் இப்ப இலங்கையில நிக்கிறன். அதுவும் கொழும்பில நிக்கிறன். நீங்கள் உங்கட வீட்டுக்க விடக்கூடாது எண்டு சொன்னீங்களாம். நான் உங்கட வீட்டில நிக்க அவை விடேல்லை. திரும்பி வந்திட்டன். நான் இங்க நிண்டு ஒண்டும் செய்ய இயலாது. திரும்பி நோர்வேக்குப் போகப் போறன். அது பிரச்சனை இல்ல. நீங்கள் அங்க ஒருத்தரைக் குடிவைச்ச நீங்கள் தானே? உங்கட மனிசன்ர சொந்தக்காரர்...' என்று கவிதைக்கண்ணன் நிறுத்தினான்.

'அவர் சொந்தமில்லை. எங்கடை அவருக்குப் பழக்கம் மட்டும்தான்.' என்றாள் அவள்.

'ஆ... சொந்தம் எண்டு இரண்டு பேரும் சொல்லிச்சினம்?' என்று வாயைப் பிளந்தான் கவிதைக்கண்ணன். பின்பு தொடர்ந்தான்.

'அதுவும் பருவாய் இல்லை. நான் சுமதாவின்ர போனுக்குப் போன் பண்ணிக் கதைக்கிறனான் தானே... அது உங்கள் எல்லாருக்கும் தெரியும் எண்டு நினைக்கிறன். கொழும்பில நிக்கேக்கையும் கதைச்சன். அண்டைக்கு காலைமை உங்கடை வீட்டில குடியிருக்கிறவர் எனக்குப் போன் எடுத்து 'நான் சுமதாவோட குடும்பம் நடத்திறன், நீ யார் அவளுக்குப் போன் எடுக்கிறதுக்கு?' எண்டு கேட்கிறார். எப்பிடி இருக்கும் எனக்குச் சொல்லுங்க பாப்பம்?'

'எனக்கு உங்களோடை கதைச்சதில இருந்து உங்களைத் தெரியும். நீங்கள் எங்களைப் போல உழைச்சு வாழுற ஆட்கள். பொய்யும் பிரட்டும் செய்யிறதே தொழிலா வைச்சிருக்கிறேல்ல. உங்களுக்குத் தெரியாது அவளைப் பற்றி, அவள் ஒரு நடத்தை கெட்டவள். மற்றவையப் பேப்பட்டம் கட்டுறதுதான் அவளின்ர வேலை. (சொந்த அக்காவிடம் இருந்து இப்படிக் கேட்டதை கவிதைக்கண்ணனால் நம்பமுடியவில்லை. ஒரு அக்காவே தங்கையைப்பற்றி இப்படிச் சொல்லுவாளா?) அவள் முந்தியும் அப்பிடித்தான். நான் சொல்லுறதைக் கேட்கமாட்டாள். எப்பிடியும் வாழலாம் எண்ட நினைப்பு அவளுக்கு. யாரும் அவளைக் கட்டுப்படுத்த முடியாது. அவள் தன்ர ஆட்டம் ஆடுறாள். நான் என்ன செய்ய முடியும்? வேணும் எண்டா ஊருக்குப் போய் அவளைக் கொலைதான் செய்ய வேணும்.' என்றாள்.

'இல்லை... ஒரு ஆம்பிளை தன்னோடை இவள் குடும்பம் நடத்துறாள் எண்டு சும்மா சொல்ல முடியுமா?' என்றான் கவிதைக்கண்ணன்.

'அவள் அப்பிடித்தான். உங்களுக்குப் பெம்பிளையளா கிடைக்காது. பேசாமல் நோர்வேக்குப் போய் சேருங்க. எங்கடை மானத்தை வேண்டோணும் எண்டு அவள் இருக்கிறாள். எனக்கு வாற கோபத்திற்குப் போய் அவளைக் கொலை செய்ய வேணும். உந்த நாயின்ர சீர்கேட்டால எங்களுக்கு எப்பவும் அவமானம்தான்.' என்று கோபமானாள் சுமதாவின் தமக்கை.

'ஐரோப்பாவில இருந்தாலும் நாங்கள் மானம் மரியாதைக்குப் பயப்பிர்றம்? அவள் அப்பிடிச் செய்திருப்பாளா தெரியேல்லை. அவன் போன் பண்ணி அப்பிடிச் சொல்லுறான். அதுவும் வீட்டுக்க ஒண்டா இருந்தவன் சொல்லேக்க ஒரு மாதிரி இருக்குது.' என்று கவிதைக்கண்ணனின் நாய்வால் மீண்டும் சுருண்டது.

'அவள் செய்திருப்பாள். அவளின்ர நடத்தை அப்பிடி.' என்றாள் சுமதாவின் தமக்கை உறுதியாக.

'நான் என்ன செய்யிறது?' என்றான் கவிதைக்கண்ணன் பரிதாபமாக.

'பேசாமல் நோர்வேக்குப் போங்க. வேற யாராவது நல்ல பெம்பிளையாப் பார்த்துக் கலியாணம் செய்யுங்க. ஆயிரம்பேர் இங்க அலைவாளவை.' என்றாள் அவள்.

'கலியாணம் பெரிய விஷயம் இல்லை. என்ர நெஞ்சுவலி வாழ்க்கை முழுவதும் மாறாது.' என்றான் கவிதைக்கண்ணன்.

'அதுக்கு இப்ப நாங்கள் என்ன செய்ய முடியம்? நீங்கள் ஆரம்பத்தில சொல்லி இருந்தா, நாங்கள் அப்பவே ஏதாவது ஒழுங்கு செய்திருக்கலாம். சரி நீங்கள் நோர்வேக்கு வாங்க. நான் போன் எடுக்கிறன். என்னிட்ட உங்கட நம்பர் இருக்குது.' என்றாள் அவள்.

கவிதைக்கண்ணன் அலைபேசியைத் துண்டித்தான். தலை சுற்றியது. மது அருந்தும் பழக்கத்தைக்கூட அவன் எப்போதும் தன்கட்டுப்பாட்டில் வைத்திருப்பவன். தான் பெண் மோகத்தால் அழிந்து போனதை எண்ண மனம் எல்லாம் இரணமாக வலித்தது. யாராவது சொந்தத் தங்கையைப் பார்த்து நடத்தை கெட்டவள் என்று சொல்வார்களா? இங்கே சொந்த அக்காளே சுமதாவை நடத்தை கெட்டவள் என்று கூறியாகிற்று. இதைவிட… அவன் இதயம் வெடிக்கக் கட்டிலில் விழுந்தான். இந்தக்கணமே இறந்தால் அதுவே சொர்க்கவாசல் என்று அவனுக்குத் தோன்றியது.

நடந்தவையெல்லாம் அவன் நினைவில் தொடர்ந்து படமாக ஓடின. மனது ஆறாப் புண்ணாக வலித்தது. பொய்யாக வேண்டும் என்று எண்ணியது எல்லாம் நிஜமாகி அவனைச் சாகடித்தது. கண்களில் கரைபுரண்டு ஓடும் ஆறாகக் கண்ணீருக்குப் பஞ்சம் அற்றவனாய் படுக்கையில் வீழ்ந்தான். விடியும் வரை அவன் அழுது கொண்டு படுத்தான். விடிந்த பின்பு தூங்கிப்போனான்.

அடுத்த நாள்… அது ஏன் வருகிறது?

கவிதைக்கண்ணனால் இன்னும் அவள் அக்கா சொல்லியதை முழுமையாக நம்ப முடியவில்லை. தன்னிடம் எதற்காக விவாகரத்து செய்துவிட்டேன் என்று வருடக்கணக்கில் பொய் சொன்னாள் என்று கேட்க வேண்டும். அதுவும் சட்டத்தரணியிடம் போனது, கதைத்தது, விவாகரத்துப் பெற்றது, என்று ஏன் கதையளந்தாள்? கொழும்பில் மாமா வீட்டில் விவாகரத்துப் பத்திரம் இருப்பதாக எதற்காகச் சத்தியம் செய்தாள்? அவற்றைப்பற்றி அறிய வேண்டும் என்று கவிதைக்கண்ணன் இப்போது முடிவு செய்தான்.

தமக்கை தொலைபேசி எடுத்துச் சுமதாவைப் பேசி இருக்க வேண்டும். கவிதைக்கண்ணன் பலமுறை முயற்சி செய்து பார்த்துவிட்டான். அழைப்புத் தொலைநகல் அனுப்பிக்கே போயிற்று. அவர்கள் வீட்டில் குடியிருப்பவன் வருவான் என்று கவிதைக்கண்ணன் காத்திருந்தான். அலைபேசியில் கதைக்கத் துணிவில்லாதவன் நேரே வருவானா என்கின்ற சந்தேகம் எழுந்தது. அதுவே கடைசியில் உண்மையாகியது.

விமான நிலையத்திற்கு செல்வதற்காய்ப் பச்சைநாடு விடுதிக்கு முன்பு கவிதைக்கண்ணன் வந்து நின்றான். அவனை விமானநிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு வண்டி வந்தது. அப்போதுதான் அந்தப் பெண் பிள்ளையோடு அவனைக் கடந்து சென்றாள். அப்படிச் செல்லும் போது அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். கவிதைக்கண்ணனுக்குச் சிரிப்பு வரவில்லை. அவள் மீண்டும் அவனை நிதானமாகப் பார்த்து நீட்சியாகச் சிரித்தாள். சிரிப்பைத் தொலைத்த கவிதைக்கண்ணனின் கண்கள் கண்ணீர் உகுத்தன. அவன் முகத்தை மறுதிசை திருப்பினான். வாகனம் புறப்பட்டது. சுட்டாலும் அழியா ஆழ வடு மனதில் நிலைக்க அவன் நோர்வேக்குப் பயணித்தான்.

21

கவிதைக்கண்ணன் நோர்வேக்கு வந்த பின்பு இந்த உறவு இனி முடிந்ததாக எண்ணினான். எண்ணுவது சுலபம். அதைத் தன்னைத் தானே நம்பவைக்க அரும்பாடுபட்டான். அதை நிரூபிப்பது போல அவளது அக்காவிற்கு, தங்களுக்குள் ஏற்பட்ட உறவு, அதன் அழிவு பற்றிச் சுருக்கமாக ஒரு கடிதம் எழுதினான். அதில் அவளைத் தான் இனி வாழ்நாளில் சந்திப்பது இல்லையென உறுதியளித்தான். மனித உறுதிகளை அவன் மனிதக் காதலே வெல்லுமா?

பின்பு கோப ஆவேசத்தோடு அவளைத் அலைபேசியில் தொடர்பு கொண்டான். அவள் அப்போது கனிவாகத்தான் தொடங்கினாள். கவிதைக்கண்ணன் பாய்ந்த பாச்சலுக்கு அவளும் எதிர்த்துப் பாய்ந்தாள். காதல் வசனங்கள் ஆளையாள் தூற்றும் வசனங்களாகத் திரிந்து ஈட்டிகளாய் இரண்டு திசையிலும் பாய்ந்தன. அவள் தொலைபேசியைத் துண்டித்தாள். கவிதைக்கண்ணன் மீண்டும் எடுத்துப் பேசினான். மீண்டும் அவள் துண்டித்தாள்.

சிறிது நேரம் பேசாது இருந்தான். கோபம் தணிந்தது. மீண்டும் அவளைத் தொடர்பு கொண்டான்.

'கலோ...' என்றாள் சுமதா.

'நீ என்னத்துக்காக டிவோர்ஸ் பண்ணீட்டன் எண்டு எனக்குப் பொய் சொன்னாய்? அதுவும் கதை மாதிரிப் பொய் சொன்னாய்?' என்று கவிதைக்கண்ணன் தொடங்க அவள் தொலைபேசியைத் துண்டித்தாள். கவிதைக்கண்ணனுக்குச் சிரிப்பு வந்தது. ஊனோடு ஊன் சேரும் உறவல்லவா இது என்று எண்ணினான்.

அதன் பின்பு கிட்டத்தட்ட மூன்று மாதங்களாய் அவன் போனில் அவளோடு தொடர்பு கொள்ளாது சாதனை படைத்தான். நினைவு அவனை நித்தம் கொல்லும். அவள் படங்களைப் பார்த்தால் அது நெஞ்சில் இரத்தத்தை வரவளைக்கும். காதல் வந்தால் மறக்க முடியாது. மறப்பவன் காதலித்திருக்க முடியாது என்பதை அவன் மனசாரப் புரிந்தான். அவளது புகைப்படங்களை அலைபேசியில் இருந்து அழித்தாலும் நினைவுகளைச் சுடுகாடு செல்லும்வரை தன்மனதில் இருந்து அழிக்க முடியாது என்பது அவனுக்குப் புரிந்தது.

சாதனை படைத்ததாக நினைத்த அவன், அவள் நினைவுகளில் தோற்றுக்கொண்டு போவது விளங்கியது. ஊனோடு ஊன் சேரும் அந்த உறவின் வலிமை அவனை நிலைகுலைய வைத்தது. விதி வலிது. நினைவு அதைவிட வலிது. அவள் பிறந்தநாள் வந்தது. வாழ்த்துத் தெரிவிப்பதா இல்லையா? என்கின்ற போராட்டம் தொடங்கியது. அவள் அவனது பிறந்த நாளிற்கு வாழ்த்துத் தெரிவிக்கவில்லை. போன முறை அவளது பிறந்தநாளிற்கு யாழ்ப்பாணம் றொளெக்ஸ்சில் 'Cack' வாங்கி வந்து வெட்டி, அன்பளிப்பாகப் பணமும் கொடுத்து, புகைப்படமும் எடுத்தான். மனம் மகிழ்தான். இம்முறை? கவிதைக்கண்ணன் அவளுக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிப்பதாய் முடிவு செய்தான். காதலில் ஏது மான அவமானம் அல்லது தன்மானம்?

கவிதைக்கண்ணன் அலைபேசியில் அவளைத் தொடர்பு கொண்டான்.

'கலோ' என்ற அவள் குரல் அவனுக்குக் கேட்டது.

'எப்பிடி இருக்கிறா?' என்று கவிதைக்கண்ணன் கேட்டான்.

'நீங்கள் யார் கதைக்கிறது?' என்று அவள் கேட்டாள்.

'நான்தான்'

'யார்?'

அவள் வேண்டும் என்றே கேட்கிறாள் என்பது அவன் நினைவு.

'என்ன விளங்கேல்லையா?' என்று உரத்துக் கேட்டான்.

'ஓ விளங்குது.' என்றாள்.

'கப்பி வேத்டே, சொறி அட்வான்ஸ் கப்பி வேத்டே.'

'ஓ… இப்ப அதுதான் இல்லாத குறை.'

'ஏதோ சொல்ல வேணும் எண்டு நினைச்சன்… எடுத்துச் சொன்னன். வேத்டே கூடச் சொல்லக்கூடாதே? நீ எப்பிடி இருக்கிறா?' கவிதைக்கண்ணன் மீண்டும் கேட்டான்.

'ஏதோ இருக்கிறன்.'

'மகள்?'

'இருக்கிறாள்.'

'அம்மா எப்பிடிச் சுகமா இருக்கிறாவா?' என்று கவிதைக்கண்ணன் கேட்டான்.

'என்ன?' என்றாள் குரலை உயர்த்தி.

'அம்மா சுகமா இருக்கிறாவா?'

'உங்களுக்குத் தெரியாதா?'

'என்ன?'

'அம்மா செத்துப் போயிட்டா. உங்களுக்குத் தெரியாதே?' அவள் மீண்டும் கேட்டாள்.

மற்றவர்கள் என்றால் தொலைபேசியில் குளறி அழுதிருப்பார்கள். எடுத்தவுடனேயே குளறி அழுதிருப்பார்கள். கல் நெஞ்சா? பைத்தியமா? கவிதைக்கண்ணனுக்கும் அவளுக்கும் உருவான பிள்ளை செத்தபோது எடுத்ததிற்கு அழுதாள். அது உண்மையா என்பது அவனுக்குத் தெரியாது. ஆனால் குளறி அழுதாள். சங்கு பத்திரிக்கையில் வேலைசெய்யத் தொடங்கிய பின்பு எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. அவள் தாய் செத்ததைத் தகவலாக மட்டும், எந்த உணர்ச்சியும் இல்லாது கூறியதாய் கவிதைக்கண்ணனுக்குத் தோன்றியது.

'இல்லை.' என்றான் கவிதைக்கண்ணன்.

'சும்மா சொல்லுறியள். பேப்பரில எல்லாம் குடுத்தநாங்கள்.' என்றாள் அவள்.

'நான் ஏன் சும்மா பொய் சொல்லுறன். எனக்கு என்ன பொய் சொல்லுற வருத்தமே? நான் அதை வெறுக்கிறது உனக்கு நல்லாத் தெரியும். நீ பொய் சொல்லுறதால மற்றவையும் அப்பிடி செய்வினமே? நான் உங்கத்தே பேப்பர் பாக்கிறேல்ல. எனக்குத் தெரியாது. அதுமாத்திரம் சத்தியம்? எனக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பி இருக்கலாம். அல்லது சொல்லி இருக்கலாம்.' என்றான் கவிதைக்கண்ணன் கோபத்தோடு.

'செத்தவீட்டிற்கும் அறிவிக்காமல் விடுவது ஒரு நல்ல பெண்ணிற்கு அழகா? இல்லை ஒரு நல்ல மனிதருக்கு அழகா? என்ன மனித ஜென்மம் இவள்?' எனக் கவிதைக்கண்ணன் மனதிற்குள் வெகுண்டான்.

வீட்டில் குடியிருந்தவனுக்கு மறைப்பதற்காக அவனுக்கு அறிவிக்காது விட்டது பற்றி அவன் எப்படி அறிவான்?

கவிதைக்கண்ணன் அவளை அதுபற்றிக் கேட்கவில்லை.

'ம்... அதுதான் இல்லாத குறை.' என அவள் பதில் கூறினாள்.

'யார் கொள்ளி வைச்சது?' என்றான் கவிதைக்கண்ணன்.

'நான்தான் கொள்ளி வைச்சன். ஏன் நான் வைக்கக் கூடாதே?' என்றாள் கோபமாக.

கவிதைக்கண்ணன் அதை நம்பவில்லை. மற்றவர்களைப் பேப்பட்டம் கட்டுவதுதானே அவள் தொழில்.

'மாமா கொள்ளி வைச்சவரே?' என்றான்.

அவளுக்கு கோவம் வந்துவிட்டது. ஏன் என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை. வீட்டில் இருந்தவனிடம் ஆட்களுக்கு முன்பு அடி வாங்கிய கடுப்பு என்பது கவிதைக்கண்ணனுக்கு அப்போது தெரியாது.

'யார் வைச்சா உங்களுக்கு என்ன? என்ர வாய இப்ப கிளறவேண்டாம். அம்மா செத்ததுக்கு நீங்கள்தான் அரைவாசிக் காரணம்.' என்று அவள் கவிதைக்கண்ணனைப் பேசினாள்.

'நான் இல்ல உன்ர ஆட்டம்தான் காரணம். கொம்மா டொக்ரர் குடுத்த கெடுவைவிட ஆறுமாதம் கூட இருந்துட்டுச் செத்திருக்கிறா. நீ ஒழுங்காய் இருந்திருந்தா இன்னும் அவ உயிரோட இருந்திருப்பா. நீ ஆடுற ஆட்டம் எல்லாம் ஆடிப் போட்டு மற்றவையில பழிபோடுறியா?' என்று கவிதைக்கண்ணன் வெகுண்டான்.

அவள் போனைத் துண்டித்தாள். அவனுக்கு மனது வலித்தது. அவளை அவனால் மறக்கமுடியுமா?

கவிதைக்கண்ணன் முதல் வேலையாக அவளது தமக்கை வீட்டிற்குப் போன் பண்ணி அனுதாபம் தெரிவித்தான்.

பின்பு மீண்டும் அவளைத் தொடர்பு கொண்டான். அவள் இப்போது அவனோடு கதைக்க விரும்பவில்லை என்றாள். கவிதைக்கண்ணன் சுருண்டு போனான்.

பின்பு அந்த மரண அறிவித்தலை இணையத்தில் தேடிப்பிடித்தான்.

அதில் அவள் வீட்டில் குடியிருந்த, தன்னை அவளது மூன்றாவது கணவன் என்று உரிமைகோரியவனைத் தொடர்பாளராய்ப் போடப்பட்டிருந்தது. கவிதைக்கண்ணனுக்கு அவனின் பெயர் என்னவென்று தெரியாது. விளம்பரத்தில் இருப்பது சுமதாவின் ஒன்றுவிட்ட அக்காளின் புருசன் என்பதே கவிதைக்கண்ணனின் நினைப்பு. அவருக்கு அலைபேசியில் தொடர்புகொண்டு இரங்கல் தெரிவிக்கக் கவிதைக்கண்ணன் எண்ணினான். அவருடன் தொடர்பு கொண்டபோது முதலில் அவர் அலைபேசியை எடுக்கவில்லை. சிறிது நேரத்தில் தானே கவிதைக்கண்ணனை அலைபேசியில் தொடர்பு கொண்டார். கவிதைக்கண்ணன் இரங்கல் தெரிவித்துவிட்டு நீங்கள் யார் என்று அவரிடம் கேட்டான். அவன் அலைபேசியைத் துண்டித்தான்.

கவிதைக்கண்ணன் அதன் பின்பு பலமுறை தொடர்பு கொண்டான். அந்த எண் பாவனையில் இல்லை என்கின்ற தகவல் வந்தது.

இணையத்தில் அவன் பெயரை தேடினான். கிடைத்தது. அவன் சங்கு பத்திரிக்கையில் துணையாசிரியராக வேலை செய்திருக்கிறான். எங்கோ இவர்களுக்குள் பழக்கமாக இருக்கவேண்டும். அத்தால் சுமதாவுக்கு அங்கு வேலை கிடைத்ததா? அல்லது வேலையில் சேர்ந்த பின்பு அவனோடு பழக்கமா? முதலாவதிற்குத்தான் சாத்தியம் அதிகம் என்பது கவிதைக்கண்ணனின் நினைப்பு. அவனைத் தெரியாது என்பதாக எத்தனை நடிப்பு? வேலையில் சரசமாடி வீடுவரை இழுத்துக்கொண்டு வந்திருக்கிறாள். அதை முற்றாக மறைத்திருக்கிறாள். மாமியும் மகளுமாக மறைத்திருக்கின்றனர். முழுப்பூசனிக்காயை முக்கி முக்கி சோற்றால் மூடி இருக்கிறார்களென கவிதைக்கண்ணன் கொதித்தான்.

அவனிடம் ஒரு நிறுவனம் இருந்திருக்கிறது. அதற்கு அவன் நிர்வாகி. அதில் பாவிக்கப்பட்டது கவிதைக்கண்ணன் அவளுக்கு எடுத்துக் கொடுத்த தொலைபேசி எண். கவிதைக்கண்ணனுக்கு உண்மையும் வலியைத் தரும் என்பது புரிந்தது.

கவிதைக்கண்ணன் அவனுடைய எண்ணிற்குத் தொடர்பு கொண்டான். அவன் அதைப் பாவிக்காது விட்டுவிட்டான். அதன் காரணமாக கவிதைக்கண்ணனால் அவனோடு கதைக்க முடியவில்லை. கவிதைக்கண்ணன் விடாமுயற்சியாக மற்றைய எண்ணிற்கும் தொடர்பு கொண்டு பார்த்தான். அது உயிர் பெற்றுக்கொண்டது.

'கலோ நான் கவிதைக்கண்ணன் கதைக்கிறன். ' என்றான். மறுமுனையில் பெண்குரல். ஏகப்பட்ட தடுமாற்றம். அது அவனது தங்கை. அவனுக்கு மூன்று தங்கைகள்.

'நீங்கள் யார்?'

'நான் கவிதைக்கண்ணன் நோர்வேயில இருந்து கதைக்கிறன்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'இருங்க் அம்மாட்டக் குடுக்கிறன்.' போன் கைமாறியது.

'நான் கவிதைக்கண்ணன். சுமதாவைக் கலியாணம் செய்யவெண்டு இருக்கிறன். உங்கடை மகன் எடுத்து அவள் தன்னோடை குடும்பம் நடத்திறாள் எண்டு சொல்லுறார்.' என்றான் கவிதைக்கண்ணன் அவனின் தாயிடம்.

'அப்பிடி அவன் சொல்லியிருக்க மாட்டான். யாரோ சொல்லி இருப்பினம்.' என அவனது தாய் நம்ப மறுத்தார்.

'இல்ல உங்கடை மகன் எனக்கு நேரடியாச் சொன்னவர். நான் கொழும்பில நிற்க எனக்குப் போன் பண்ணி அவர்தான் இதைச் சொன்னவர்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'ஐயோ தம்பி அவன் அவளை அக்கா அக்கா எண்டு தானே கூப்பிடுகிறவன். பிள்ளை மாமா மாமா எண்டெல்லே அவனைக் கூப்பிடுகிறவள்?'

'இப்ப யாழ்ப்பாணத்தில பெத்த தகப்பனே பிள்ளையைக் கெடுக்கிற காலம். யார் எப்பிடிக் கூப்பிடுகினம், என்ன உறவு சொல்லுகினம் எண்டது வெறும் கண்துடைப்பு. மாமா எண்டு பிள்ளையைக் கூப்பிடச்சொன்ன கதை எனக்கு ஏற்கனவே தெரியும். சித்தப்பாவை மாமா எண்டுறதும் எனக்குத் தெரியும்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'யாழ்ப்பாணம் கெட்டுக்கிடக்கிறது உண்மைதான் தம்பி. ஆனா அவையிக்க அப்பிடி ஒண்டும் இல்லை. அவன் ஒரு பெம்பிளைய விரும்பி இருக்கிறான். வாற மாதம் கலியாணம். அவனுக்கு யாழ்ப்பாணத்தில நல்ல பெயர் இருக்குது. அது கெட்டுப் போகக்கூடாது தம்பி.'

'பெம்பிளைச் சகோதரங்களோட பிறந்த அவர் இப்பிடியா செய்யிறது? நான் வெளிநாட்டில இருக்கிறன். நான் என்னத்தை நம்புறது சொல்லுங்க பாப்பம்?'

'என்ன சொல்லுறது எண்டு தெரியேல்லை. அவன் இப்பிடி செய்தானா? கடவுளே…'

'சரி எதுக்கும் நீங்கள் மகனைக் கண்டிச்சு வையுங்க.'

'நான் கேட்கிறன். நீங்கள் அவளைக் கலியாணம் செய்து கொண்டு போங்க. எங்கையெண்டாலும் அதுகள் தாயும் மகளுமாய்ச் சந்தோஷமா இருந்தாச் சரி.'

'ம்… உண்மை. பொய். துரோகம்… தூரதேசத்தில் இருந்துகொண்டு உன்னால் என்ன தெரிந்து கொள்ள முடியும் என்கின்ற துணிவு? கடைப்படியில் இருக்கும் கடவுளுக்கே தெரியுமா அதன் சூட்சுமம்?' கவிதைக்கண்ணன் மனதில் குமுறினான்.

அதன் பின்பு அவனின் தாய் எடுத்து அவளோடு கதைத்திருக்க வேண்டும். கதைத்த போது அப்படி ஏதும் தொடர்பிருந்தால் தாங்கள் குடும்பத்தோடு தற்கொலை செய்ய வேண்டும் என்று கூறி இருக்க வேண்டும்.

சில மன மாற்றங்கள். அவள் கவிதைக்கண்ணனோடு மறுபடியும் கதைக்கத் தொடங்கினாள். அவர்களுக்குள் உள்ள உறவு தொடர முடியாது என்பதால் கதைக்கத் தொடங்கினாளா அல்லது தனக்கு இனி பொருளாதார உதவி வேண்டும் என்பதால் கதைக்கத் தொடங்கினாளா என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை. அவளுக்கு எந்த உதவிகளும் செய்ய மாட்டோம் என்பதில் அவளது அத்தான் உறுதி காட்டினார். யாருக்கும் அவளில் துளிகூட நம்பிக்கை கிடையாது. யாரும் பொருளாதார உதவி செய்வார்களா இல்லையா என்பது கவிதைக்கண்ணனுக்குத் தெரியாது. அப்படித்தான் அவர்கள் கவிதைக்கண்ணனோடு கதைத்தார்கள். அவர்களும் சேர்ந்து நடிக்கிறார்கள் என்பதை அவன் அப்போது புரிந்திருக்கவில்லை.

அவனோடு எந்த உறவும் இல்லை என்று உன்னால் மகள் மீது சத்தியம் செய்ய முடியுமா என்று கவிதைக்கண்ணன் அவளைக்கேட்டான். அதற்கு அவள் இல்லை என்று மறுத்துவிட்டாள். கவிதைக்கண்ணன் மீண்டும் ஊருக்கு வரும்போது அவன் வீட்டிற்குப் போய் விசாரிப்போம் என்றான். அவள் அதற்கு மனமின்றிச் சம்மதித்தாள். அப்படி ஒரு சந்தர்ப்பம் வராது என்கின்ற நம்பிக்கையில் சொன்னாளா என்பது அவனுக்கு அப்போது புரியவில்லை.

அன்று கவிதைக்கண்ணன் மீண்டும் அவளின் மூன்றாவது கணவனுக்குப் போன் செய்தான். அவன் எடுத்து முதலில் கதைத்தான். அதில் தான் அவளோடு குடும்பம் நடத்தியதாக மீண்டும் அவன் கூறினான். சங்குப் பத்திரிக்கையில்தான் தங்களுக்குள் பழக்கம் உண்டானது என்றும் கவிதைக்கண்ணனிடம் ஒப்புக்கொண்டான். ஒரு வருடமாக தங்களுக்குள் தொடர்பிருப்பதாக அவனுக்குக் கூறினான்.

விருப்பத்தை யார் முதலில் சொன்னது என்று கவிதைக்கண்ணன் அவனிடம் கேட்டான். அது உங்களுக்குச் சொல்ல முடியாது என்று கூறிவிட்டு அலைபேசியைத் துண்டித்துவிட்டான். கவிதைக்கண்ணன் மீண்டும் அலைபேசி அழைப்பை ஏற்படுத்த 'இங்க ஆயுதம் வைக்கேலாது. நீங்கள் எல்ரீற்றிக்காக எங்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது.' என்று அடிக்கடி அலைபேசியில் கூறிவிட்டு துண்டித்தான். யாரை மாட்டிவிடப் போகிறான்? அவளுக்கே இத்தால் ஆபத்து என்பதைப் புரிந்துகொண்ட கவிதைக்கண்ணன் அவனோடு அலைபேசியில் தொடர்பு கொள்வதை நிறுத்திவிட்டான். நல்ல மனது உள்ளவர்களால் அப்படிச் செய்ய முடியாது. எப்படிப்பட்டவனாய் இருந்தால் இப்படியான கீழ்த்தரமான எண்ணம் வரும்? அவனது முகத்தைப் போலவே மனம் இருப்பதாய் கவிதைக்கண்ணன் நினைத்தான். இப்படிப்பட்டவனோடு எதற்காக இவள்… கடவுளுக்கும் புரியுமா என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை.

ஒரு உறவோடு கற்பமான காரிகை அவள். ஒரு வருடம் உறவு கொண்டால். கொள்ளலாம். மாத்திரை. உறை… கருக்கலைப்பு… ஏதோ செய்திருக்கிறாள். அவளின் பொய்கள்… ஊருக்குப் போனபோது அவனைச் சந்திக்க விடாது தடுத்ததில் இருந்த ஆக்ரோசம்… கவிதைக்கண்ணன் தனது ஆராட்சியை நிறுத்தினான்.

கவிதைக்கண்ணன் அவளை மீண்டும் அலைபேசியில் தொடர்புகொண்டு கதைத்தான். அவள் தான் சுத்தமானவள் என்றும், தனக்கும் அவனுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் சாதித்தாள். சத்தியம் செய் என்று கவிதைக்கண்ணன் மீண்டும் கேட்டான். அவள் அதற்குத் திட்டவட்டமாக மறுத்தாள். சத்தியம் பண்ணாதவரை அவள் உடலாலும், மனதாலும் களங்கமானவளே. பொய்யே உருவான அவளை இனியும் அவன் நம்பத் தயார் இல்லை. இருந்தும் அவள்மேற் கொண்ட காதல் அப்படியே என்றும் அழியாது அவன் மனதில்… அவள் களங்கப்பட்டாலும், அவள்மீது கொண்ட அவன் காதல் என்றும் களங்கம் ஏறமுடியாத வைரமாக…

★

நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பது மீண்டும் அவனுக்குப் புரியலாயிற்று. கவிதைக்கண்ணன் அன்று அவளோடு நீண்ட நேரம் கதைத்தான். இடையில் யாரிடமோ இருந்தோ தொலைபேசி அழைப்பு வந்தது. அவன் அவளுடனான சம்பாசனையை அதற்காக நிறுத்தவில்லை. மூன்றாவது நபர் அடித்துப் பார்க்கிறானோ என்கின்ற சந்தேகம் அவனுக்கு. கவிதைக்கண்ணன் தொடர்ந்து சுமதாவோடு கதைத்தான்.

திடீரென மூன்றாவது நபர் தொலைபேசியை அவளிடம் இருந்து பிடுங்கி 'இந்தா முத்தம் கொடுக்கிறன் பார்.' என்று கூறி முத்தம் கொடுத்தான். அதன் பின்பு இரண்டு மூன்று முறைகள் கவிதைக்கண்ணன் தொடர்பு கொள்ள அவன் தொலைபேசியை எடுத்து, எடுத்துத் துண்டித்தான்.

பின்பும் அவனது அலைபேசிக்கு எடுத்து அவளைக் கதைக்க விடுமாறு கவிதைக்கண்ணன் கேட்டான். அப்போது அவன் வெளியே நின்று கதைப்பதை உணர முடிந்தது. கடைசியாகக் கவிதைக்கண்ணனை பயணம் அனுப்பிவிட்டு அவள் வெள்ளவத்தையில் உள்ள சினேகிதிகள் வீட்டிற்கு செல்வதாகக் கூறினாள். அது என்றும் அவன் மனதை விட்டு அழியாத நினைவு. அவள் அன்று கடுமையாக யோசித்த வண்ணம் பொழுதை போக்கியதும் அவனுக்குத் தெரியும். அப்படி விமான நிலையத்தால் திரும்பி வந்த போது வெள்ளவத்தையில் இருந்து தானே கூட்டிச்சென்றதாக அவன் கூறினான். அத்தோடு அவளோடு தான் பலமுறை உறவு கொண்டதாகவும் தனது நிறமூகூர்த்தங்களை, அவளைப் பரிசோதித்தால் காணலாம் என்றும் விவரித்தான்.

அவளாக உண்மை சொன்னால் தவிர அவளைப் பரிசோதித்து உண்மை காணவேண்டும் என்கின்ற அவசியம் கவிதைக்கண்ணனுக்கு இல்லை. காதலிப்பவள் களங்கப்படாதவள் என்பது யாருக்குத் தெரியும்? காதலிப்பவள் களங்கப்பட்டாலும் உண்மையாகக் காதலிப்பவனால் அவளை விடமுடியுமா? அவள் அவனோடு மட்டும் களங்கப்பட்டவள் இல்லை என்பது அப்பொழுதுகூட கவிதைக்கண்ணனுக்கு ஏறவில்லை.

அவன் தொலைபேசித் தொடர்பைத் துண்டித்ததால் சுமதாவின் வீட்டில் என்ன நடந்திருக்கும் என்பதை கவிதைக்கண்ணனால் அறிய முடியவில்லை. அதை எப்படியாவது அறிய வேண்டும், அவளுக்கு ஆபத்து வராது பாதுகாக்க வேண்டும் என்று அவன் துடித்தான்.

கவிதைக்கண்ணன் அவளது உறவினருடன் கதைத்து, அவளைப் போய் பார்க்குமாறு கேட்டான். அவளது உறவினர் அதற்கு சுமதாவின் அக்காளைத் தொடர்பு கொண்டு கேட்குமாறு கூறினார்கள். 'சே என்ன உறவுகள்? ' என்கின்ற வெறுப்பு ஒருபக்கம், அதை இவளே உண்டாக்கினாள் என்பது இன்னொருபக்கமாக அவனுக்கு அந்தரமாய் இருந்தது. தனியே இருக்கும் பெண்ணொருத்தி யாராவது ஆணைக் கூட்டிச்சென்று குடிவைப்பாளா? குடிவைத்தால் அதற்கு என்ன அர்த்தம்? சமுகம் எப்படி எடுத்துக்கொள்ளும். எதுவும் நடக்காமலே அவளது நடத்தைபற்றிய தப்பவிப்பிராயம் கால் பெற்று நடக்கத் தொடங்கிவிடும். இன்று அவனே தான் அவளோடு புணர்ந்ததாய் ஊரெல்லாம் சொல்லித் திரிந்தால்? அவள் மிகவும் அழுத்தசாலி. கவிதைக்கண்ணன் மீண்டும் அவளது அக்காளைத் தொடர்புகொள்ள விரும்பவில்லை. முகப்புத்தகத்தில் அக்காளின் பிள்ளைக்குத் தகவல் அனுப்பினான். அத்தோடு அதை முடித்துக்கொண்டான்.

தொலைபேசி தொடர்ந்தும் அடித்ததே தவிர யாரும் எடுப்பார் இல்லை. என்ன நடந்திருக்கும் என்பது அவனுக்குப் புரியவில்லை. ஏதாவது ஏடாகூடமாய் நடந்திருக்குமா என்கின்ற கற்பனை வளர்ந்தது.

அடுத்த நாள் இரவு முயற்சித்த போது அவள் எடுத்தாள். தொலைபேசியை அவன் உடைத்துவிட்டுச் சென்றுவிட்டதாகக் கூறினாள். அதற்குள் கவிதைக்கண்ணன் யாழ்பொலிசோடு தான் தொடர்பு கொண்டதைப் பற்றி அவளுக்குக் கூறினான். அவள் யாரும் வரவில்லை என்றாள். பஞ்சி முறித்தாள். என்ன நடந்தது என்பதைப் பிடுங்குவதில் அவளுக்கு விருப்பம் இல்லை என்பது அவனுக்குப் புரிந்தது. கவிதைக்கண்ணன் அலைபேசியைத் துண்டித்தான்.

பொலிஸ் கவிதைக்கண்ணனின் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டு அங்கே சென்ற போது அவள் கவிதைக்கண்ணனை யாரென்று தெரியாது என்றும், அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும் கூறிவிட்டாள்.

கவிதைக்கண்ணன் அவளை மீண்டும் அலைபேசியில் தொடர்பு கொண்டான். 'பொலிசுக்கே பொய் சொல்லுகிறாயா?" என்று கேட்டான். அவள் அவனைக் கீழ்த்தரமாய் பேசினாள். தாங்கள் பொலிசுக்கு அலைய முடியுமா? எங்களுக்கு முறையிடத்தெரியாதா? என்று கேட்டாள். அவள் சுயரூபம் முழுமையாக அன்று அவிழ்ந்தது. இப்படியெல்லாம் பேசுவாள் என்பதை அவன் கனவிலும் கற்பனை செய்தது இல்லை.

கவிதைக்கண்ணன் தான் எல்லோரிடமும் தொடர்பு கொண்டதையும், அவர்கள் உதவி செய்ய மறுத்ததையும், அதனாலேயே பொலிசோடு தொடர்பு கொள்ள வேண்டி வந்ததையும், கூறினான். அதன் பின்பு அவள் அநாகரிகமாக அவனோடு கதைப்பதை நிறுத்தினாள். கவிதைக்கண்ணன் தூரதேசத்தில் இருக்கும் வசதியில்தானே இவள் இப்படிக் கதைக்கிறாள். அல்லது மூஞ்சை பெயர்ந்திருக்கும் என்று எண்ணினான்.

அவன் அதைப் பற்றி எதுவும் பேசவில்லை. தனக்கும் ஒரு காலம் வரும் என்று நினைத்தான். பாவம் கவிதைக்கண்ணன்.

கவிதைக்கண்ணனின் காமம் செத்த நாற்றத்தில் நாய் வாலை நிமிர்த்த முடியாது என்கின்ற வாழ்வின் தத்துவம் அவனுக்குப் புரியலாயிற்று. அதில் தானும் அடக்கம் என்பதைத்தான் அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

22

கொடுத்த வாக்கை மீறக்கூடாது. தீரவிசாரிக்காது தீர்ப்பு வழங்கக் கூடாது. துரோகி ஆனாலும் காதலித்த பெண்ணின் முகத்தை மறக்க முடியாது. வேசியானாலும் உண்மை சொல்லிப் பிழைக்க வேண்டும். அவள் உண்மை மாத்திரம் சொல்வதே இல்லை என்பது கவிதைக்கண்ணனுக்கு கல்வெட்டாய் புரிந்தது.

அவள் கொடுத்த வாக்கை எப்போதும் மீறுபவள். தொலைபேசி இணைப்பைத் துண்டித்தாள். புதிய எண்ணைக் கவிதைக்கண்ணனுக்குத் தராது விட்டாள். தொடர்புகள் எல்லாம் அறுந்து போயிற்று. ஆனிமாதம் ஓட்டோச் சாரதியிடம் கேட்டபோது அவள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் வசிப்பதாய் தகவல் வந்தது. கவிதைக்கண்ணனால் அதை நம்ப முடியவில்லை. ஓடியிருப்பாள் என்று நினைத்தான். அவள் ஓடவில்லை. தொலைபேசியை மட்டும் துண்டித்து இருக்கிறாள். புதிதாக வீட்டிற்குக் குடிவந்தவர்களிடம் கவிதைக்கண்ணன் கதைத்துவிடுவான் என்கின்ற பயமாக இருக்க வேண்டும் என்று எண்ணினான். அவளிடம் வேறு திட்டம் இருந்தது. கவிதைக்கண்ணன் பத்தடி பாய நினைத்தால் அவள் நூறடி பாய்ந்தாள்.

★

அன்று காலை யாழ்ப்பாணம் வந்தடைந்த கவிதைக்கண்ணன் இம்முறை அவள் குடியிருந்த வீட்டிற்கு நேரடியாகச் செல்லவில்லை. அது சரிவராது என்பது அவன் ஊகம். முதலில் ஒரு விடுதிக்குச் சென்றான். காலைக்கடன்களை முடித்துக் குளித்தான். பின்பு ஒரு தேநீரும் அருந்திவிட்டு ஓட்டோ ஒன்றைப் பிடித்துக்கொண்டு அவள் குடியிருந்த வீட்டிற்குச் சென்றான்.

ஓட்டோ அவன் காட்டிய வீட்டிற்கு முன்பு நின்றது. முதலில் ஓட்டோவிற்குக் காசு கொடுத்து அனுப்பி வைத்தான். படலை சாத்தி இருந்தது. கவிதைக்கண்ணன் படலையில் சத்தம் செய்து உள்ளே இருந்தவர்களைக் கூப்பிட்டான். உள்ளே இருந்து முதலில் ஒரு மெல்லிய சிறுவன் வந்தான். அவன் அரைக்காற்சட்டையும் சட்டையும் அணிந்திருந்தான். நெற்றியில் விபூதி பளிச்சிட்டது. அவன் படலையை திறந்துவிட்டு தாயிடம் 'யாரோ வந்திருக்கினம்.' என்று அறிவித்தான். அதையடுத்து அனுபவம் முதிர்ந்த ஒரு அம்மா வெளியே வந்தார். ஐம்பத்து ஐந்து வயது மதிக்கலாம். நெற்றியில் பட்டையாக திருநீறு. கண்களில் கேள்வி. சராசரி மொத்தம். சராசரியைவிடக் குறைந்த நிறம்.

அவர்கள் அந்த வீட்டிற்குப் புதிய மனிதர்கள். அவர்களுக்குக் கவிதைக்கண்ணனை யார் என்று தெரியவில்லை. கவிதைக்கண்ணனுக்கும் தன்னை எப்படி அறிமுகம் செய்வது என்று புரியவில்லை. அந்த அம்மா அவனைப்பார்த்து பண்பாக,

'யார் நீங்கள்?' என்று கேட்டார்.

'நான் சுமாதாவின்ர கஸ்பெண்ட்… சுமதா இங்க இருக்கிறாளா?' என்று கேட்டான் கவிதைக்கண்ணன்.

'உண்மையாவா?' என்று அந்த அம்மா கவிதைக்கண்ணனைப் பார்த்து வியப்போடு கேட்டார். அவளுக்கு எத்தனை புருசன் என்று அவர் மனதிற்குள் நினைத்திருப்பார்.

'சரி உள்ள வாங்க.' என்று கூறிப் படலையைத் திறந்தபடி,

'உங்களை நாங்கள் எப்பிடிச் சுமதாவின்ர கஸ்பெண்ட் எண்டு நம்புறது? அவ வேற இப்ப இங்க இல்லை. கொழும்புக்குப் போறன் எண்டு சொல்லிப் போட்டு போயிருக்கிறா.' என்றார் அந்த அம்மா.

கவிதைக்கண்ணன் தனது பையைத் திறந்தான். அவளோடு நின்று எடுத்த புகைப்படங்களை அந்த அம்மாவிடம் கொடுத்தான். அவர் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. கவிதைக்கண்ணனை உள்ளே வந்து அமருமாறு கேட்டுக்கொண்டார். கவிதைக்கண்ணன் உள்ளே சென்று அமர்ந்தான். வீடு பல் விழுந்த கிழவியாட்டம் பழைய நிலைமைக்கு வந்திருந்தது. அந்த அம்மா பேசத் தொடங்கினார்.

'அவளைப் பற்றி இங்க எல்லாரும் வந்து கேட்டுக்கொண்டு திரியினம். அவள் நல்ல மாதிரி இல்லைப் போல இருக்குது. கடைசியா ஒரு ரிப்போட்டரோடை குடும்பம் நடத்தினவள் எண்டு சொல்லுகினம். அவர் இடைக்கிடை வந்து படலையில நிண்டு கதைச்சுப் போட்டுப் போகிறவராம். உங்களோடை இப்பிடியெல்லாம் படமெடுத்து இருக்குது. இது என்ன அநியாயம்? ஒருத்திக்கு எத்தினை புருசன்? என்ன குணமிது? ஏன் தம்பி உங்கடை வாழ்க்கையை இப்பிடி சிக்கலில மாட்டினீயள்?' என்றார் அந்த அம்மா கவிதைக்கண்ணனைப் பார்த்து.

'அது பெரிய ஸ்ரோறி. இவளாலா என்ரை குடும்பம் அழிஞ்சுது. நான் இவளுக்காக டிவோஸ் எடுத்தன். கடைசியில என்னை ஏமாத்திக் கொண்டு அவனோட குடும்பம் நடத்தி இருக்கிறாள். அது பிடிபட்டுப் போயிடும் எண்டு இப்ப ஓடியிட்டாள் போல இருக்குது.' என்றான் கவிதைக்கண்ணன்.

'வெளிநாட்டை போகப்போறன் எண்டுதான் கதை தம்பி. சிலவேளை வெளிநாட்டிலையோ இல்லாட்டிக் கொழும்பிலையோ யாருக்குத் தெரியும்?' என்றார் அந்த அம்மா.

'அவ ரெலிபோன் எடுத்தா உடன எடுக்க மாட்டா. ஐஞ்சாறுதரம் அடிச்ச பிறகு எடுத்தாலும் தான் இப்ப விசி பிறகு எடுங்க எண்டுவா.' என்று அந்தச் சிறுவன் இடையில் புகுந்தான்.

வெள்ளவத்தை பற்றி சுமதா சொன்னது கவிதைக்கண்ணனுக்கு ஞாபகம் வந்தது.

'ம்... இப்பிடி எல்லாம் உலகத்தில... சீ யாழ்ப்பாணத்தில நடக்குது. யாரை நம்ப முடியும் இப்ப? நீங்கள் ஏன் இப்பிடிப் போய் மாண்டநீங்கள்? நல்ல குடும்பத்தில பிறந்துபோட்டு இப்பிடி ஆடியிருக்கிறாள் அந்த நாய்.'

'ம்... விதிதான்... வேற என்ன சொல்ல முடியும்.' என்றான் கவிதைக்கண்ணன். விதியல்ல காமம் என்று அவனது மனது இடித்துரைத்தது.

'இனியாவது உங்கடை வாழ்க்கையை ஒழுங்காப் பாருங்க.' என்றார் அந்த அம்மா.

'ம்...' என்றான் கவிதைக்கண்ணன்.

‘நாங்கள் இப்ப புதுசாத்தானே வந்த நாங்கள். எங்களுக்கு அவளைப் பற்றி பெரிசாத் தெரியாது. முன் வீட்டு அன்ரி நிறையக் காலம் இங்க இருந்தவா. அவவைக் கூப்பிட்டா நிறைய விஷயம் தெரியும்.’ என்றார் அந்த அம்மா.

‘ம்… கூப்பிடுங்க.’ என்றான் கவிதைக்கண்ணன்.

கவிதைக்கண்ணனுக்கு அவரைத் தெரியும். சுமதாவோடு இந்த வீட்டில் குடும்பம் நடத்திய அந்த நாற்பத்து ஐந்து நாட்களில் அவர் பலமுறை வந்து போயிருக்கிறார். நிறமான, கட்டான உடம்பு. கவிதைக்கண்ணனைவிட ஐந்து வயது மூப்பாக இருக்க வேண்டும். கணவனோடு சிறு மனஸ்தாபம் என்று சுமதா ஒரு முறை கூறினாள். அவள் கூறியதில் எது உண்மை எது பொய் என்பது கவிதைக்கண்ணனுக்குப் புரியவில்லை. நெற்றியில் எப்போதும் திருநீறு இருக்கும். அதற்கு நடுவே குங்குமப் பொட்டு பளிச்சிடும்.

முன்பு வந்து நிற்கும் போது கவிதைக்கண்ணன் நேரடியாகக் கதைக்காவிட்டாலும் அறிமுகமாகச் சிரித்து இருக்கிறான்.

அவர் வந்ததும், ‘இந்தத் தம்பிய இப்பிடி ஏமாத்திப் போட்டுப் போயிருக்கிறாள் பாருங்கோ. ஞாபகம் இருக்கா இவரை?’ என்றார் அந்த அம்மா.

‘ஞாபகம் இல்லாமல் இல்லை. போன முறை வரேக்க நல்ல நிறமாய் இருந்தார்’ என்றார் முன்வீட்டுப் பெண்மணி.

புகைப்படங்கள் முன்வீட்டுப் பெண்மணியின் கைக்கு மாறின. அந்த அம்மா கவிதைக்கண்ணன் கொண்டுசென்ற அவளின் குறும்செய்திகளை வாசித்தார். பின்பு,

‘இவ்வளவு பக்கத்தையும் எப்பிடி வாசிக்கிறது தம்பி…?’ என்று அலுத்துக் கொண்டார்.

முன்வீட்டு அக்கா,

‘இவளை நம்பி ஏன் தம்பி உங்கடை வாழ்க்கையைச் சீரளிச்சனீங்கள்?’ என்றார் கவிதைக்கண்ணனைப் பார்த்து.

‘என்ன சொல்லுறியள்?’ என்ற வண்ணம் அந்த அக்காவைப் பார்த்தான் கவிதைக்கண்ணன்.

‘அவள் உன்னோடை அவன் சங்கனோடை மாத்திரம் இல்லை… அது பெரிய சீர்கேடு. எப்பிடி அதையெல்லாம் கதைக்கிறது?’ என்றார் அந்த அக்கா.

‘சொல்லுங்க. நான் இனியும் அவளை நம்பிக்கொண்டு இருக்காமல் உண்மையை அறியோணும். எனக்கும் சில ஐமிச்சங்கள் இருக்குது. ஓட்டோக்காரரும் நிறையச் சொன்னவர். நீங்களும் சொன்னா அது கிளியராகிடும்.’ என்றான் கவிதைக்கண்ணன்.

'ம்… சொல்லுறன். கொழும்பில யாரைக் கலியாணம் செய்திருந்தவள்?'

'கொழும்பு தமிழ் ஆள். இந்திய வம்சாவழியா இருக்கோணும்.'

'சிங்களவர் இல்லையா?'

'சீச்சீ….'

'இங்க முதல்ல அப்பா வெளிநாட்டில இருக்கிறார் எண்டுதான் கதை விட்டவை. அதை நீங்களும் வந்து நிண்டு நிரூபிக்கிற மாதிரித்தானே காட்டீட்டுப் போனியள். குறுக்கால போனவள் நீங்கள் போன கையோட அவனைக் கூட்டிக்கொண்டு வந்திட்டாள். அவன் சொல்லித்தான் வேலையையும் விட்டவளாம்.'

கவிதைக்கண்ணனுக்கு வயிற்றைப் பிரட்டியது. இதயம் நொந்தது. அவன் அதைக் காட்டிக்கொள்ளாது,

'ம்… நான் முதல்ல வேலையை விடச்சொல்ல விடமுடியாது எண்டிட்டாள். பிறகு போனில கதைக்கேக்க உங்களுக்காகவும், அம்மாவுக்காகவும் வேலையை விடுறன் எண்டு திடீர் எண்டு சொன்னாள். அவன் சொல்ல வேலையை விட்டிட்டு எனக்கு விலாங்கு மீன்மாதிரி வாலைக்காட்டி இருக்கிறாள். பிறகு தான் இரண்டு மாதம் கற்பம் எண்டும், டொக்ரரிட்ட செக்பண்ணினது எண்டும் சொன்னாள். பிறசர் கூடிப் போயிட்டுது எண்டும் சொன்னவள். சில கிழமைக்குப் பிறகு கேட்க அப்பிடி ஒண்டும் தான் கற்பம் இல்லை எண்டிட்டாள். அதை என்ன செய்தாள் எண்டு கடவுளுக்குத்தான் தெரியும்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'அவள் வவுனியாவிலையும் பிரச்சனைப்பட்டுக் கொண்டுதான் இங்க வந்தவளாக்கும்?' என்றா முன்வீட்டு அக்கா.

'அது உண்மையா இருக்கோணும். வவுனியாவில இவளுக்கு யாரோ ரவுணுக்க வைச்சுப் பின்னுக்குத் தட்டிப்போட்டு போனவனாம். குடும்ப பெம்பிளையள்ள ரவுணுக்க வைச்சு யாரும் கைவைப்பாங்களே? அவளின்ர சொந்தங்களுக்கு அப்பவே சந்தேகம். போன முறை வந்து நிக்கேக்க இவளோடை யாழ்ப்பாண ரவுணக்க சேர்ந்து போனன். அப்ப ஒரு ஓட்டோக்காரன் மறிச்சு நீங்கள் யார் எண்டு ஒரு மாதிரிக் கேட்டான். அவள் கஸ்பெண் எண்டு சொல்ல, அப்ப முதல் வந்தவர் யார் எண்டும் கேட்டான். அவள் அவனுக்குப் பதில் சொல்லேல்லை. எனக்கு அது அத்தான் எண்டாள். அப்ப அது எனக்கு விளங்கேல்லை. நான் ஒரு பேயன்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'ம்… உதைவிட நிறைய இருக்குது… இஞ்ச இவ்வளவும் செய்தவள் வவுனியாவில செய்யாமல் இருந்திருப்பாளே?' என்றார் முன்வீட்டு அக்கா.

'இங்க உதைவிட என்ன செய்தவள்?' என்றான் கவிதைக்கண்ணன்.

'ஐயோ அதையேன் கேட்கிறியள்? முதல்லயே அடிக்கடி பின்நேரங்களில கொழும்புக்கு வெளிக்கிட்டிடுவாள். திரும்பிவர இரண்டு முண்டு நாள் செல்லும். இங்க இந்தத் தெருப் பெடியள் நிச்சயம் ஒரு பெடியனோடதான் வஸ்சில போவாள் எண்டு கிண்டல் பண்ணுவாங்கள். இந்த தெருப்பெடியள் கிண்டல் செய்யிறது தமிழ்

ஆட்களுக்கே அவமானம் எண்டு எல்லாருக்கும் தெரியும். தாயும் அவளின்ர பெட்டையும் வவுனியா போனா வீட்டை யார் யாரோ எல்லாம் வருவாங்கள். தெருப்பெடியள் முன்வீட்டில பிறியாச் சோவோடுது நீங்கள் பாக்கிறேல்லையோ எண்டு என்னைக் கிண்டல் செய்வாங்கள். அவங்கள் கேட்கிறது தமிழரே இப்பிடித்தானோ எண்ட மாதிரி இருக்கும்.' என்றார் அந்த முன்வீட்டு அக்கா.

கவிதைக்கண்ணன் நிற்கும் போதே யாரோ வீடுதேடிவர மாமி அவனை அவசர அவசரமாகத் திருப்பி அனுப்பி வைத்தது அவனுக்கு ஞாபகம் வந்தது.

'அவன் சங்குக்காரன் இவளை அசைய விடுறேல்லை. எங்க போறதெண்டாலும் மோட்டார் சைக்கிளில்தான் கூட்டிக்கொண்டு போவான். தனிய இவளை ஒரு இடமும் போகவர விடுறேல்லை. பெட்டையையும் அவன்தான் கூட்டிக்கொண்டு போறதும் வாறதும். அவனுக்குக் கொஞ்சம் எண்டாப் பெரும் கோவம் வந்திடும். அவனுக்கு இவள் நல்ல பயம்.' என்று தொடர்ந்தார் முன்வீட்டு அக்கா.

அவளும் மாமியும் நடுங்கிய நடுக்கத்தின் அர்த்தம் கவிதைக்கண்ணனுக்கு இப்போது முழுமையாகப் புரிந்தது.

'உன்னோடை, சங்கனோடை மாத்திரம் இல்லைத் தம்பி இந்த ஆட்டம். கலியாணம் செய்து குடும்பமா இருந்த முஸ்லீம் ஒருத்தருக்கு எஸ்.எம்.எஸ்

அனுப்பிக் கூப்பிட்டு இருக்கிறாள். இவளுக்கு என்ன வருத்தமோ தெரியாது. அதை அவர் தன்ர மனிசிக்குக் காட்டிப் போட்டார். அவளவை விடுறம் எண்டவளையே? வீடு தேடிவந்து தாயோடை சண்டைபிடிச்சுப் போட்டு, இவள் இப்பிடி எல்லாம் செய்யிறாள் எண்டு என்னிட்டையும் சொல்லிப்போட்டு போனாளவை. அதைவிட வேற ஆம்பிளையளுக்கும் இவள் இப்பிடிச் செய்திருக்கிறாள். இடையில ஒருக்காப் பேத்திக்குக் குட்டிப்பாப்பா வரப் போகுது எண்டு தாய்க்காரி சொன்னா. பிறகு அவசரமா வவுனியா போயிட்டினம். அங்க என்ன நடந்ததோ? அதுக்குப் பிறகு அதைப்பற்றிக் கதையில்லை.'

கவிதைக்கண்ணன் 'கடவுளே!' என்றான்.

'உனக்குத் தெரியுமே தம்பி?' என்றார் முன்வீட்டு அக்கா.

'எல்லாம் தெரியும். எனக்கு அவை வேற கதை சொல்லி இருந்திச்சினம்.' என்றான் கவிதைக்கண்ணன்.

'வாய் திறந்தாலே பொய்தானே தம்பி? பிறகு ஒரு நாள் மத்தியானம், அவனை யார் எண்டே எங்களுக்குத் தெரியாது... இவளைத்தேடி அவன் மோட்டார் சைக்கிளில் வந்தவன். இவள் நெடுகவும் ஆளை மாத்துறதுதானே வேலை? அவனையும் மாத்த நினைச்சிருக்கோணும். இரண்டு பேருக்கும் இடையில பிரச்சனை சூடேறிட்டுது. இவள் கேற்றையும் முன் கதவையும் பூட்டிக்கொண்டு உள்ள போட்டாள். அவனுக்கு அது இன்னும் கோபமாய் போயிட்டுது. நடுரோட்டில மோட்டார் சைக்கிளைப் போட்டிட்டு மதில் ஏறிக்குதிச்சு உள்ளே யோய் பின்கதவால் வீட்டிற்குள்ள புகுந்து இவளைப் பிடிச்சிட்டான். பிறகு கனநேரமா இரண்டு பேரும் உள்ள என்ன கூத்தடிச்சினமோ? இஞ்ச ரோட்டில றபிக் புளக்காயிட்டு. யாராவது மோட்டார் சைக்கிளையும் கெல்மெட்டையும் தூக்கிகொண்டு போங்கோ எண்டு நான் கத்த வேண்டி

இருந்திச்சு. பிறகு யாரோ மோட்டார் சைக்கிளை இழுத்துப் போட்டாப் பிறகுதான் உதால வாகனம் போக முடிஞ்சுது.

ம்… என்னத்தைச் சொலுறது? இவள் போடுற குட்டைடப்பாவடையை பாக்கிற தெருச்சனத்துக்கு எல்லாத்துக்கும் எரிச்சல். இந்தத் தெருவுக்கு இவள் குட்டைப்பாவாடை ஒத்து வருமே? உதைப் போடுறதிலும் போடாமல் போகலாமே எண்டு கதைப்பாங்கள். இவளுக்கு உங்க பெடியள் வைச்ச பெயர் அயிட்டம். ஆம்பிளையள அயிட்டம் அயிட்டமா மாத்துறவள் எண்டு அதுக்கு அர்த்தமாம்.

இன்னும் நிறைய விஷயம். எல்லாம் சொல்லிக்கொண்டு இருக்கேலாது தம்பி. அவளை மறந்திடுங்க… அவள் ஒரு குடும்ப பெம்பிளை கிடையாது. இதுக்கு மேல நாங்கள் உங்களுக்கு உரிச்சுத் தீத்தேலாது.' என்றா முன்வீட்டு அக்கா.

கவிதைக்கண்ணன் கலங்கிய கண்களோடு எழுந்தான். பெற்றோல் ஊற்றித் தன் உடலைக் கொழுத்த வேண்டும் என்கின்ற அருவருப்போடு அந்த வீட்டை விட்டு வெளியே சென்றான். மனது நிரந்தரமாய் காயப்பட்டதும் உடல் காசுபட்டதுமாய் அவன் துடித்தான். தனது துடிப்பு எப்போது அடங்கும் என்பது புரியாவிட்டாலும் காமத்தைக் கட்டிப் போடத் தெரியாது, அதைத் திரிபு படுத்தி, அறம் உடைத்து, அதையே காதலாக எண்ணியதால் காமமே சாபமானதை அறிந்தவனாய் வந்த ஓட்டோ ஒன்றை மறித்து ஏறினான்.

--முற்றும்--